கடுக்காய்க்கரி துணியைச்சுட்டசாம்பல் விளாம்பிசின்இலவம்பிசின் இவைகளையோர்நிறையாய் வத்திப்பட்டைச்சாற்றாலரைத்துதான்றிக்காய்ப்பிரமாணம உண்டைசெய்துதேனிற்கொடுக்கத்தீரும,

மலைதாங்கிவேர்கோரைக்கிழங்கு ஆத்திவேர்ப்பட்டை நீர்ப்புலாவேர்ப்பட்டைநாவல்வேர்ப்பட்டை மாதுளம்பிஞ்சுசித்தேசல்வபின் ஆத்திப்பிஞ்சு மாம்பருப்புவதிமதுரமகோஷ்டமசுக்குசீரகம-சாதிக்காய் இவைகள்யோர்நிறையாய்த்தென்னம்பாளைச்சாற்றால் மூன்றுநாளாட்டிதேற்றுவிரைப்பிரமாணமவுண்டைசெய்துவாழைப்பூச்சாற்றில்ஒருண்டைகொடுக்கத்தீரும.

மாதுளமவேர்ப்பட்டைக்கூவிளைவேர்ப்பட்டை. மாங்கொட்டைப்பருப்புலவங்க குருசாணியோமமசாதிக்காய் சாதிப்பத்திரிவதிவிடையமலவங்கம திரிகடுகு கஞ்சாவெட்பாலையரிசிகடுக்காய்க்கரி-கோஷ்டமநற்சீரகமகாயமகொன்றைவேர்ப்பட்டைதிப்பிலிமூலமவெந்தயமசித்திரமூலமகாட்டாத்திப்பூபுளியவிரைத்தோல் ஊமத்தைவிரைகழற்பருப்

பு இவைகள்சமமாய்ப்பொடித்துத்திரிகடிப்பிரயாணம்தேனிற்கொள்ள தீரும்

ஓமத்தைவெதுப்பித்தேய்த்துஉமிப்போக்கிஅதற்குமிகர்காட்டாத்திப்பூகூட்டி திரிகடி இஞ்சிச்சாற்றிற்கொள்ளத்தீரும்

சாதிக்காய்சாதிப்பத்திரிகிராம்புகோஷ்டம் சீரகம்அதிமதுரமஅதிவிடையம்அபின்கோரோசனை வகைக்குவிராகனிடை-உ- மூலைப்பாலாலரைத்துச் சுண்டைக்காய்ப்பிரமாணமஉண்டைசெய்துக்கொண்டு ஒருசட்டியில்சுக்குஓமம்மிளகுவகைக்குவிராகனிடை-க-வறுத்துக்கொட்டிக்கொண்டு அந்தச்சட்டியில்இலந்தையிலைஒருபிடிபோட்டுவதக்கி மேற்படிமூன்றுவகைமருந்தையும்தட்டிப்போட்டுஒருபடிதண்ணீர்விட்டுஅரைக்காற்படியாய்வற்றவைத்து அதில்மேற்படி மாத்திரையொன்றுஉரைத்துக்கொடுக்கவும்இப்படி-௩-நாள்கொடுக்க அதிசாரந்தீரும்

ஆவாரையிலையைவதக்கி மேற்படி-மூன்று-வகைமருந்தையும்முன்போல்வெதுப்பிகியாழஞ்செய்து மாத்திரைஒன்றுஉரைத்துக்கொடுத்தாலும்அல்லதுவிடத்திலையையும் மேற்படிமருந்தையும்முன்போற்கியாழஞ்செய்து மாத்திரைஒன்று உரைத்துக்கொடுத்தாலுமவயிற்றுக்கடுப்புத்தீரும்

அதிசாரரோகப்படலம்-முற்றிற்று.

உ

சிவமயம்.

கிராணிரோகப்படலம்.

அதாவதுகுடலில்வாயுஅதிகரித்துப்வனவாயில்கடுப்புண்டாகிபலவிதமானகழிச்சல் அதிகரித்தலாம்

விருத்தம்.

கூறுமூலக்கிராணியெனக்குறிக்கும்வாதக்கிராணியென்றும்
தேறும்பித்தக்கிராணியென்றும்தெளியும்சிலேத்மக்கிராணியென்றும்
கோறுஞ்சீழுக்கிராணியென்றும் குறிக்கும்நீரின்கிராணியென்றும
ஆறுங்கிராணிபிறர்தவிதம்அறைந்தார்முனிவரறைந்தாரே

மூலக்கிராணிசீய்க்கிராணி நீர்க்கிராணிவாயுக்கிராணிகுசிகா
கிராணிஅஜீரண்கிராணிமூலக்கிராணிக்குணம்.

கீழ்வயிறுகடுத்துனொந்து குருதிவிழும் அபானவாயுகீழ்நோக்கிஉறப்புதன்னும்மலங்கழியும்நாளுக்குநாள்உடல்வற்றும்வயிறுரோகும்நாவரளும இளைப்புசோபதாபமுண்டாகும

வாதமூலக்கிராணிக்குணம்.

மலங்கழியும்சிதமஜீரத்தமவிழுமதொபபுளில்சுருக்கென்றுவலிக்கும்நோவும்

பித்தமூலக்கிராணிக்குணம்.

மலமசிறுத்துகழியும் பலவிதமாய்நாறும்,

சிலேத்தமமூலக்கிராணிக்குணம்,

வுதிரமாயுமவெண்மலமாயுமகழியுமகாற்றுபரியும்,

இவைகட்குசிவர்த்தி.

இப்பிலிசுக்குமிள்குசாதிக்காய்சிராம்புஇந்துப்புஏலமசீரகமபெருங்காயமவேலமபிசின்மாமபிசின்இலவமபிசின் மூதததககாசுபுளியவிதைத்தோல்மாதுளந்தோல்அபின்வகைக்குவிராகனிடை க-பொடித்தயிதற்குசிகர்சுத்திசெய்தகஞ்சாத்தூள்கூட்டி நாழியொன்றுக்கு ஒருவிராகனிடைவீதம்தேனிற்கொள்ளமூலக்கிராணிதீரும்,

மஞ்சள்பிரண்டைவெள்ளப்பூண்டுசுக்குமிளகுவகைக்குவிராகனெடை ௨-மைப்போற்பொடித்து ஒருகோழிமுட்டைக்கருவிற்பொரித்துச்சாப்பிடததீரும்

அதிவிடையமகிராமபுசுக்குதிப்பிலிசீரகமஓமம்யானைத்திப்பிலிவலமலவங்கப்பட்டைஅதிமதுரமஅபின்இநதுப்பு அக்கிவிரைகழற்பருப்புகோஷ்டமநெல்லிமுள்ளிமாமபருப்புகாசுக்கட்டி கருங்குங்கிலியமகளிப்பாக்குவில்வப்பழச்சதை விளாவிரைபெருமரத்துப்பட்டைபலதாங்கிவேர்சிறுகாஞ்சோரிவேர்கொடிவமுதலைவேர் சிறுவமுதலைவேர்புளியவிரைத்தோல்வில்வப்பிசின் விளாம்பிசின்வெளிச்சிப்பிசின்கமபிப்பிசின்மருதமபிசின்வுதியம்பிசின் கிளுவைப்பிசின் வத்திப்பிசின் சண்பகப்பூவகைக்குப்பலம-க-பொடிததுக்கொண்டுஇலவமபட்டைமாம்பட்டை வேலமபட்டை வத்திப்பட்டைவுதியமபட்டை மருதமபட்டைவகைக்குப்பலம-க-இடித்து-அ-படிதண்ணிரிற்போட்டு அரைப்படிபாய்வற்றவைத்து வடித்தகஷாயத்தாலாட்டி கழற்காய்ப்பிரமாணமவுண்டைசெய்து-௬-நாழிகைசென்ற எருமைத்தயிராவடிகட்டி வதில்ஒருண்டைகொடுக்க மூலக்கிராணிதீரும் வெள்ளாட்டுநெய்யிற சலக்கிராணிதீரும ஒருபிடிகாரையிலையிலஒருப்படிஎருமைமோர்விட்டுவுழக்காய்க்காய்ச்சிவடித்துவதிலோருண்டையைத்தூல்லெண்ணெய ஒருகாசிடைவிட்டுக்கொடுக்கசகலக்கிராணியும்நீங்கும்

வுப்பையரைத்துஒருதலைவெள்ளைப்பூண்டின்மேற்பூசி வுமிக்காந்தலில்வெதுப்பிவுபபையுமதொலியையுமநூலையும்நீக்கியரைத்துதயிரிற்கலக்கிக்கொள்ளத்தீரும்கடுப்புமிறகும்

பிரண்டை வேர்ப்பொடி, சுக்கு மிளகு கடுகு வெள்ளப் பூண்டு ஓமம் கருஞ்சீரகம் கருவேப்பிலை பெருங்காயம் இந்துப்பு வகைக்குப்பலம்-௨-ஒருகருங்கோழியை இறகு குடல் தலை கால் நீக்கிச்சற

வேகவைத்து எலும்புகளைத்தமாமிசம் இவைகளைத் தனித்தனி யோகிரண்டைச்சாற்றுலமைப்போலவரைத்து ஒன்றாய்ப்பிசரிபிலவை தட்டி நல்லெண்ணெயில் வேகவைத்து அக்கினசந்திசாப்பிட்டுவரத்தீரும்

கொட்டாங்கரந்தையுஞ் சிகழும்யோர்நிறையாயவரைத்து வில்லை தட்டி நல்லெண்ணெயில் வேகவைத்துண்ணத்தீரும்

அக்கிப்பட்டை ஆயிற்பட்டைவரப்பூலாவேர்பட்டை நாவற்பட்டைநெல்லிப்பட்டை இவைகளைச்சமமாயிடித்துப் பிழிந்தசாறுபடி-(வ) சாதிக்காயவநவாசி கிராம்புதிப்பிலிவகைக்கு விராகனெடை-(க ஏலம் விராகனெடை-(ரு)சுக்குமிளகுவகைக்குப்பலம்(வ) இவைகள்மேற்படி சாற்றுலரைத்துகலக்கி ஆவினெய்படி(வ)கூட விட்டுவேகவைத்துலே கியமாய்செய்துகொண்டுநாழியொன்றிற்குஒருகொட்டைப்பாக்குப்பிர மாணம் கொள்ளத்தீரும்

பாவட்டையிலைபலம்(சு)வெள்ளப்பூண்டுசுக்கு வகைக்குப்பலம் ௲-மிளகுபலம்(வ)வட்டத்திருப்பி வெப்பாலையரிசி திப்பிலிதேசாவரம் அக்கிதிப்பிலிகொடுவேலிவேர்பெருங்காயம்கிராம்புசாதிக்காய் இந்துப் புவெடியுப்புபொட்டிலுப்பு எவச்சாரம்வகைக்குப்பலம்-த-ஓமம்பலம் அரைக்கால் இவைகள் பாவட்டையிலையை நல்லெண்ணெயி லரைத் துமற்றச்சரக்குகள்மோர்விட்டரைத்தும்ஒன்றாய்க்கலந்துகொதிக்க வைத்து நல்லெண்ணெய்ப்படி அரைக்கால்கூட விட்டுலேகியம்செய்துஒ ருகொட்டைப்பாக்குப் பிரமாணம் இருபோது சாப்பிட்டுவரத் தீரும்.

புளியாரைச்சாறுகுறுணி ஆவினெய்ப்படி-உ-தயிர்நாழி அதிவிடை யம்திரிகடுகு இந்துப்புபெருங்காயம் எவச்சாரம்சாதிக்காய்வெட்பாலை யரிசிதிப்பிலிமூலம்கிராம்புமாதுளம்பூ மாமஞ்சள்லவங்கம்வகைக்குக கழஞ்சு -சு- அரைத்துப்போட்டுக்காய்ச்சி ஒருகாண்டிவீதம் கொள் ளத்தீரும்

மூலககிராணி அதிசாரத்திற்கு.

பூனைக்காலிவிததுசயமற்பம்அதிவிடையம்அத்திப்பூகழற்காய்ப ருப்பு சாதிக்காய்லூமத்தம்வித்து சுக்குநாவிகஞ்சாவித்து மாங்கொட் டைப்பருப்புஅரிவில்வப்பழச்சதை கொன்றைவேர்ப்பட்டைமாது ளந்தோடுபொன்முசுட்டைவேர்ப்பட்டையேலம் ஓர்நிறையாய்ச்சிந்தி சாற்றுலாட்டிச் சுண்டைக்காய்ப்பிரமாணம்உண்டைசெய்து தேனிற் கொள்ளத்தீரும்

வாயுகிராணிக்குணம்.

உண்ட அசனஞ்சமியாது வயிறுநோகும்பொருமும்இரைந்துகழி யும்புளித்தேப்பம்விடும் இருமும்வாயுபரியும் நாட்சென்றால் புறந்தா ள்அதைத்துவற்றும்அசனஞ்செல்லாதுஉடல்வாண்டுவற்றிவரும்வாவ ரளும் தாகமிகும்கனவுகாணும்வெருவும்

நிவர்த்தி.

மேற்றோல்சீவியுலர்த்தின இஞ்சிபலம்-ம-ஏலம்லவங்கம்மதுரம்

திரிகடுகு திரிசாதம் இந்துப்புஓமம் அதிவிடையம்வகைக்குக் கழஞ்சு
க- இவைகள் ஆவினெய்விட்டுப் பொன்னிறமாய்வெதுப்பிச் சூரணித்
து அதில்பாதிவெள்ளை சர்க்கரைக்கூட்டித் திரிகடிப்பிரமாணம்சாப்பிட
த்தீரும் புளியும்காரப்பான்பதார்த்தமுந்தள்ளவும்

சேங்கொட்டை திரிப்லை கொடிவேலிவேர்வகைக்குக் கழஞ்சு-உ-
இந்துப்புகழஞ்சு-ல-இவைகள்பிடித்துச்சருசட்டியிற்போட்டுமூடி-எ,
சீலமண்செய்து குக்குடபுடம்போட்டுப்பொடித்துக்காசிடை ஆவின்
வெண்ணெயிற்குழைத்துக்கொள்ளத்தீரும் பத்தியமாயிருக்கவும்

அதிவிடையம்பெருங்காயம் சிறுநாகப்பூ திப்பிலிசாதிப்பத்திரிவ
கைக்குக்கழஞ்சுமூனு ஆனைதிப்பிலிகழஞ்சு-ச-சுக்குகடுகுவெள்ளுள்
ளிவகைக்குக்கழஞ்சு-அ-நாய்க்கடுகு- திப்பிலிமூலம்வகைக்குக்கழஞ்சு
பத்து அபின்கழஞ்சு-உ-இவைகள்வெதுப்பிதூள்செய்து வெள்ளைச்
சர்க்கரைபலம்(ரு) கூட்டிக்கலந்துகொண்டுஅந்திசந்திதிரிகடிப்பிரமாண
ம்மூத்தக்காசும் சுக்கும்சேர்த்துச்செய்தகியாழத்திலாவது இஞ்சிசாற்
றிலாவதுகொள்ள ஆறுவகைகிராணியுந்தீரும்

சுக்குமிளகுவெள்ளைப்பூண்டுகஸ்தூரிமஞ்சள்சீரகம் ஓமம்சத்திச்
சாரணைவேர்குப்பைமேனிவேர்வகைக்குப்பலம்(க)பிரண்டைச்சாற்று
லாட்டிநல்லெண்ணெவிட்டுலேகியஞ்செய்து ஒருகொட்டைப்பாக்குப்
பிரமாணஞ்சாப்பிட்டுவரத்தீரும்

சுக்குபலம்-ஐ-திப்பிலிபலம்-வ-மிளகுபலம்அரைக்கால் ஓமம்பல
ம்(க)பூண்டுபலம்-க- இவைகள்யொன்றாய் வெதுப்பியிடித்து அவைக
ண்டஇடைக்குப்பாதி ஆடுதின்டாப்பாளைச்சூரணங்கூட்டி கழற்காய்
ப்பிரமாணம் இரண்டுநேரமும்சாப்பிட்டுவரத்தீரும்

கொடிவேலி திரிகடுகுஓமம்சிறுதேக்கு ஆனைத்திப்பிலி கோஷ்ட
ம்இருவகைஉப்புவகைக்குப்பலம்-க- பெருங்காயம்வசம்பு சுட்டகரிவ
கைக்குப்பலம்-வ-கடுகுபலம்-ஐ-இளவறுப்பாய்ச்சூரணித்து அதற்குநி
கர்வெள்ளைசர்க்கரைக்கூட்டி திரிகடிப்பிரமாணம் வெந்நீரிற்கொள்ளத்
தீரும்.

சட்டியையன்றாய்க்காயவைத்து ஒருபிடிஉப்பிட்டுக்கருகவறுத்து
க்கொட்டிபோட்டு அதில்ஒருபிடிபிரண்டைக்கொழுந்தையரிந்துபோ
ட்டுகருகவறுத்து ஒருபடிஎருமைமோர்விட்டுவற்றவைத்திறுத்து அதி
விடையம்உள்ளிதிரிகடுகு ஓமம்வசம்பு இவைகள் வகைக்கு விராகனி
டை-க-வெதுப்பிப்பொடித்துப்போட்டுக் கொடுக்கத்தீரும்

வோமத்தைக் கருகவறுத்துத்தேய்த்து உமிபோக்கிப்பொடித்து
த்திரிகடிப்பிரமாணம் தேனிற்கொள்ளத்தீரும்

வாயுகிராணிக்கும் ஷ்ணத்தின்பேரிற்காணும்பேதிக்கும்

நூறுவருஷஞ்சென்ற வேப்பம்பட்டை விராகனிடை-சும-மிளகு
விராகனெடை-உம-இடித்துச்சூரணஞ்செய்து சர்க்கரைவிராகனிடை
(கூம) இவைகள்ஒன்றாய்க்கலந்து நாழிபொன்றிறகு இரண்டுவிராகனி
டைவீதம்-எ நாள்கொள்ளத்தீரும

சங்கிரகிராணிக்குணம்.

வயிறூதும்சீப்போலும் சீதப்போலுமநெய்போலும் வெண்ணீர்போலும்புலாலகழுவினதண்ணீர்போலும் பலவிதமாயககழியும அபானங்கடுக்கும

நிவர்த்தி.

அத்திப்பிஞ்சுவாழைப்பிஞ்சு மல்லிசீரகம்மூத்தக்காசுவில்வவேர் போராமூட்டிவேர் இவைகள்யோர் நிறையாயிடித்து கியாழஞ்செய்து கொடுக்கததீரும வாதங்கநித்திருந்தால் சுக்கும்திப்பிலியும்மேற்படிகியாழத்துடன் கூட்டிக்கொள்ளவேணும்

திரிகடுகுதிரிபலைவாய்விளங்கம்கடுகுரோகணி அதிவிடையம் ஓமம்குரூசாணியோமம்நற்சீரகம்கருஞ்சீரகம இந்துப்புஏலம் செங்கழுநீக்கிழங்குகோஷ்டமகிராம்பு காசுகட்டிவெள்ளுள்ளி சாரணைவேர்பட்டைசாதிக்காய் சாதிபத்திரிவசவாசி அமதாம வகைக்குவிராகனெடை-௨-பெருங்காயம் விராகனெடை-௬- இவைகள் இளவறுப்பாய்ச்சூரணித்துதிரிகடிப்பிரமாணம் தேனில்எழுநாள்கொள்ளத் தீராகழிச்சலுந்தீரும்

பிரத்தகிராணிக்குணம்.

அடிவயிறுவலிக்கும்நெஞ்செரியுமயேப்பம்பரியும்தாகிக்கும் சலமாயும்இரத்தமாயும்தண்ணியாயுங்கழியும் உண்ட அசனம்சமியாது அபானங்கடுக்கும் உடல்கடுக்கும் கால்கைவோயும்

நிவர்த்தி.

பெருமரத்துப்பட்டைமூத்தக்காசு வகைக்குப்பலம்-வ- வீதம்இடித்து-௨-படி தண்ணீரிற்போட்டு அரைக்கால்படியாய் வற்றவைத்துக்கொடுக்கவும்இந்தப்படி-௯-போதுகொடுக்கத்தீரும்.

சாதிக்காய்சாதிலிங்கம் சீரகம்சுக்குகிராம்புஇல்வம்பிசின் அபின் இந்துப்புகழற்சிப்பருப்பு ஊமத்தின்வித்து இவைகயோர்நிறையாய வெதுப்பிஎலுமிச்சம்பழச்சாற்றாலாட்டி மாதுளங்காய்க்குள்வைத்தடவிபுடம்போட்டுத் தோலுடன்தயிர்வார்த்தரைத்து குன்றிபோலுண்டைசெய்துவான்மழப்பூச்சாற்றிலிடத்தீரும்

கிராணியின்பேரிற்காணு பாண்டுவிஷபாகவிக்கத்திற்கு

அரப்பொடி இட்டம்காந்தம்கடுக்காய்மேற்றோல்நெல்லிமுள்ளிக்குருஞ்சீரகம் நற்சீரகப்பூண்டு பெருங்காயம்திரிகடுகு வகைக்கு விராகனிடை-௩-இவைகள்வறுத்துச் சூரணித்துதிரிகடிப்பிரமாணம் அந்திசந்தி-ல-நாள்கொள்ளத்தீரும

அஜீரணகிராணிக்கு.

வேப்பீர்க்குஓதிபீர்க்கு சுக்குசீரகம்ஓமம் இவைகள்வகைக்குப்பலம்-வ-வீதம்வெதுப்பி ஒருபடிதண்ணீரிற்போட்டு அரைக்காற்படியாய்வற்றவைத்துக்கொடுக்கவும்இந்தப்படி-௯-போதுகொடுக்கத்தீரும்.

திரிகடுகு கருஞ்சீரகம் நற்சீரகம் யவாச்சாரம் அதிவிடையம் இவை
கள் யோர்நிறையாய் வெதுப்பிக் கல்வத்திலிட்டுப்பொடித்து நல்லெண்ணெ
விட்டு லேகியம் போலரைத்துக்கொண்டு நாழியொன்றிற்கு ஒருகொட்
டைப்பாக்குப்பிரமாணம் சாப்பிட்டுவரத்தீரும்

வெள்ளறுகும் குப்பைமேனியும் சமனாய்ச்சூரணித்துத்திரிகடி
ப்பிரமாணம் ஆவின்வெண்ணெயிற்கொள்ளத்தீரும்

சகலகிராணிக்கும்

இந்துப்புகாயம்வளையலுப்பு வெள்ளுள்ளிசுக்குதிப்பிலிஓமம்மிள
குசவுட்டுப்பு சித்திரமூலம்இவைகள்பிரமிசசாற்றிலாவது எலுமிச்சம்
பழச்சாற்றிலாவது அரைத்துக்கொண்டு ஒருஉடும்பைப்பத்தலைகால்குடல்
தோல்நீக்கி அதின்வயிற்றுக்குள்வைத்துத்தைத்து மடக்கிக்கட்டிப்பு
ட்டுபோலவித்துக்காயவைத்து இடித்துச்சூரணம்பண்ணி திரிகடிப்பி
ரமாணம்ஒருமண்டலம் கொள்ளத்தீரும்

கோவைத்தண்டை இடித்து மேற்றோலையத்தள்ளிநீர்சுவரவறு
த்துத்தூள்செய்து வோமத்தைவறுத்துத்தேய்த்துச்சூரணித்து இருவ
கையையும் யோர்நிறையாய்க்கலந்து நல்லெண்ணெயிற் கொட்டைப்பா
க்குப்பிரமாணம் கொள்ளத்தீரும் பத்தியம்பால்சோறுகொடுக்கவும்

ஒருவிராகனெடை காரியத்தைச்சட்டியில்உருக்கிரசம் விராகனெ
டை-ச கூட்டித்தொங்கித்து க்கல்வத்திட்டுக்காந்தம்விராகனெடை-கூ
கெந்திவிராகனெடை உ, வெள்ளத்துத்தம்விராகனெடை ச, சேர்த்து
ச-சாமம் அரைத்துவைத்துக்கொண்டு பஞ்சமூலகியாழத்திலும் மற்ற
அனுபானங்களிலுங் கொடுக்கத்தீரும்

காந்தம்லிங்கம்கல்மதம்சாதிக்காய்சாதிப்பத்திரிகருவாப்பிசின்மா
துளம்பிஞ்சு இவைகள்யோர்நிறையாய் அத்திப்பால்விட்டரைத்துக்கா
சிடையாக உண்டைசெய்து வெல்லத்திற்கொடுக்கத்தீரும்

சாதிக்காய்சாஸ்திரபேதிகல்மதம்அபின் இவைகள் யோர்நிறையா
ய்அத்திப்பால்விட்டரைத்துக்குன்றிபோலுண்டைசெய்து வெந்நீரில்
உரைத்துக்கொடுக்கத்தீரும்

நாவற்பட்டை அரசம்பட்டை அத்திப்பட்டை கருங்காலிப்பட்டை
ஒதியம்பட்டை வகைக்குப்பலம்-ய- இடித்துஐந்துமரக்கால் தண்ணீ
ரிற்போட்டு எட்டொன்றாய வற்றவைத்து அதிலடனேவெல்லம்பலம்
ய-தட்டிப்போட்டு பாகுசெய்துசுக்குசீரகம்மிளகுவோமம் யேலம்கோ
ரோசனை குறுசாணியோமம் கற்கடகச்சிங்கி கிராம்புமல்லி திப்பிலிசா
திபத்திரி சாதிக்காய் அதிவிடையம் வகைக்குப்பலம்-க- அரைத்துப்போ
ட்டுசகிண்டி ஆவினெய் தேன்விட்டு லேகியஞ்செய்துகொண்டு நேர
மொன்றுக்குக்கொட்டைப்பாக்குப்பிரமாணஞ் சாப்பிட்டுவரத்தீரும்.

சிதப்பிழுவதற்கு.

அமுக்கிறாவேரும் இந்துப்புஞ்சமமாய்ப்பொடித்துத்தேனில்மத்தி
த்துக்கொடுக்கத்தீரும்

{ இரத்தக்கிராணி சலக்கிராணி உறுப்புக் கன்றுநோ மூலக்கடு
வயிரிரைதல்வாயு அன்னத்துவேஷமயக்கம் பொருமல்
விஷநீர் தொப்புள்சுற்றிவலித்தலுக்கும். }

திரிபலை மூத்தக்காசு வெள்ளைக்குங்கிலியம் திரிகடுகு கோஷ்டம் சீரகம் அதிமதுரம் சாதிக்காய்கஞ்சாசிராம்புயேலம் வெட்பாலையரிசி அபின் தேவதாரம்கூகைநீர்வில்வப்பிஞ்சுபரித்திவிரைப்பருப்பு அத்திப்பிஞ்சு நல்லவல்லிவிரைப்பருப்புமாம்பருப்பு புளியங்கொட்டை மேற்றோல் மாதுளம்பிஞ்சு பொன்முசுட்டைவேர் ஆவாரைவித்து கஞ்சாவித்து கற்கடகசிங்கி அதிவிடையம் இலவம்பிசின் விளாம்பிசின் நன்னாரிவேர்ப்பட்டை சிலப்பனைக்கிழங்குகடலிராஞ்சிப்பட்டை பெருமரத்துப்பட்டை மரமஞ்சள் வகைக்குக்கழஞ்சு-க-வெதுப்பி பொடித்துக்கொண்டு வெள்ளாட்டுப்பால் எருமைத்தயிர் வகைக்குப்படி-க- ஒன்றாய்க்கலந்து அதில்கருப்புக்கட்டிபலம்பத்து பொடித்துப்போட்டுபாகுசெய்துமேற்படிபொடியைத்தூவிக்கிண்டிநல்லெண்ணெய்படி(உ) விட்டுலேகியஞ்செய்து கொட்டைக்காயப்பிரமாணம லேகியத்தில் ஆயக்காந்தசெந்தூரத்தை வைத்து(சு)நாள்கொள்ளத்தீரும்.

மேற்படிகருப்புக்கட்டியைப் பாகுசெய்யும்போது ஒருபடிகஞ்சாச்சாறுவிட்டுக்கொள்ளலாமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது அகத்தியமானாலவிட்டுக்கொள்ளலாம்

{ சகலகிராணிகழிச்சல் வயிற்றுகடுப்புஉளைவு அசிரணம்
பித்தம்நீர்ச்சிறுப்புபிரமேகத்திற்கு. }

செங்கழுநீர்கொட்டி நெய்தல் அல்லிதாமரைசிலப்பனை அமுக்கரா நீர்வள்ளிநன்னாரிவேரிலைத்தாமரைவில்வம்மாதுளை வாழைகாணவெருகுமலைதாங்கிகற்றாழைசங்குசித்திரமூலம், இவைகளின்மூலமுந்தக்காசு அதிவிடையமகசசோலம் அதிமதுரம்கோஷ்டம ஆவாரைப்பஞ்சாங்கம்வகைக்குப்பலம்(க) இவைகள்உலர்த்திஇடித்துச்சூரணித்துஇரண்டுபடி ஆவின்பாலில் கருப்புக்கட்டிபலம்பத்துபோட்டுப்பாகுசெய்துஇதில்மேற்படிசூரணங்கள்தூவிக்கிண்டி நெய்படி(க)தேன்படி(உ) கூடவிட்டுலேகியஞ்செய்து நாழியொன்றிற்கு யொருகொட்டைப்பாககுப்பிரமாணம சாப்பிட்டுவரநீங்கும்

{ கிராணிகழிச்சல் அசாரணகடுப்புஎரிபபு உறுப்பு
சுவாசகாசம்பிரமியம் எலும்புருக்கிஉள்
ளுருக்கி தாதுபுஷ்டி இவைகட்கு }

கூவிளைமாதுளை அத்தி ஆத்திமருது ஆல் அரசு இத்திபரித்தி ஆவாரை இலவு இலந்தைகொன்றைமூருங்கை அகத்திமாகோவைவேம்புமுசுட்டைகதலி அழிஞ்சிதாமரை அணிச்சை ஆதளைவிளாத்தி இவைகளின்பிஞ்சுசிரம் அதிமதுரம்வகைக்குப்பலம் க, இவைகள்உலர்த்தி இடித்துச்சூரணித்துஇரண்டுபடி ஆவின்பாலில்சர்க்கரைகற்கண்டு வகைக்குப்ப

லம்(அரை)தேன்படி அரை)விட்டுலேகியஞ்செய்துவைத்துக்கொண்டுகொட்டைப்பாக்குப்பிரமாணம்சாப்பிட்டுவரநீங்கும், தாதுபுஷ்டியுண்டாகும்.

வெளுமைக்கழிச்சலுக்கு.

வெண்குன்றிபருப்புபுளியவிரைத்தோல்வகைக்குவிராகனெடை (௧)வீதமமைபோற்பொடித்து எருமைவெண்ணெயிற்குழைத் துண்ணவும்இப்படி ௬,போதுகொள்ளநீங்கும்.

நீர்க்கழிச்சலுக்கு.

சாதிக்காய்சாதிப்த்திரிகிராம்புசாதிலிங்கம் ஊசிக்காந்தம் அபின் வகைக்குகழஞ்சு(௨)மூன்றுநாளாட்டி செப்பிலடைத்துக்கொண்டு அனுபானங்களில் நாழியொன்றிற்கு அரைவிராகனிடைவீதங்கொள்ளநீங்கும.

சலக்கழிச்சலுக்கு.

ஆவாம்பூ ஆவரையல்லி ஆவரையரிசி ஆவாரங்கொழுந்து ஆவாரைவேர்பட்டைவகைக்குபலம்,அரை,இவைகளைதசிதைத்து இரண்டுபடிதண்ணீரிற்போட்டு ஓரிரவில்ஊறவைத்துக்காலையில்அரைக்காற்படியாயவற்றவைத்து அதில்கல்நார்கல்மதம்கிராமபுசாதிப்பத்திரிவகைக்குக்கழஞ்சு ௧, அரைத்துக்கலக்கிக்கொடுக்கநீங்கும்,

அத்திப்பிஞ்சுவதிமதுரம்ஓமம்இந்துப்புசருள்ளி மிளகுசுக்குசீரகம் வேர்கிறையாய்ஆவினெய்யில் வேகவைத்துப் பதத்தில்வடித்துக்கொள்ளத்தீரும்,

விளாம்பிசின் இலவம்பிசின்கருவேம்பிசின் தேற்றாவிரைநெல்லிமுள்ளிகாசுக்கட்டிபுளியவிரைத்தோல் வாகைவிரை, அமிர்தசர்க்கரை அல்லிவிரைவகைக்குக்கழஞ்சு ௧,சந்தனம் விராகனெடை ஆறுஆவாரைவிரை சீனிசர்க்கரைவகைக்கு விராகனிடை ௰௨,இவைகளை யிடித்துதாமரைவிழுதுச் சாற்றிலும வாழைப்பூச் சாற்றிலு மரைத்து இலந்தைக்கொட்டைப்பிரமாணம்உண்டைசெய்து தேனிலாவது எருமைமோரிலாவது கொள்ளஉட்காமச்சல்தாகம் மேகசலககழிச்சல்நீங்கும.

வயிறுஇரைந்துகழிதலுக்கு,

திரிகடிவெந்தயத்தைநல்லெண்ணெயவிட்டுவறுத்துச்சிவந்துவருகிறபருவத்தில்ஆவரையிலையொருபிடிகூடப்போட்டுவறுத்துக்கருகிவருகிறபதத்தில்எருமைமோர் ஒருபடிவிட்டுக் காய்ச்சியிறுத்துக்கொடுக்கநீங்கும்.

மூலக்கழிச்சலுக்கு.

ஒருகலைவெள்ளைப்பூண்டுமகஞ்சாவிரையும்வேர்கிறையாயவெதுப்பிநல்லெண்ணெயும்கொஞ்சமதென்னை கருப்புக்கட்டியுஞ்சேர்த்துலேகியம்போலரைத்துஎலுமிச்சங்காயப்பிரமாணம மூன்றுநாள்காலையிற்கொள்ளநீங்கும,

கழிச்சல்சுரத்திற்கு அபின்மாத்திரை

அபின்விராகனெடை(௬)சுக்குவிராகனெடை-௭-திப்பிலிவிராகனெடை-௮-சீரகமவிராகனிடை(௯)மிளகுவிராகனிடை-௧, இவைகளை விஷ்ணுமூலிக்கியாழத்தால் நாலுசாமம்அரைத்துக் குன்றிபோலுண்டை-செய்துகொண்டு வில்வம்விஷ்ணுமூலி சீரகம்வெற்றிலைக்காம்பு இவைகளையோரிறையாயகக்கியாழஞ்செய்து அதில் ஒருகுளிகைவிதம ஆறுவேளைகொடுக்கசுரம்கழிச்சல தாபசுரம்நீங்குமபுளிதள்ளவும இவைச்சிறியோருக்கும்பெரியோருக்கும் உபயோகப்படும்.

கழிச்சலுக்கு.

விளாமபிசினைப்பொடித்து எருமைத்தயிரில்மூன்றுநாள் கொடுக்கத்தீரும.

மந்தம்அதிசாரம்கிராணிக்கு.

இந்துப்புஓமம்கிராம்பு சுண்டைவற்றல்சாதிக்காய் சாதிப்பத்திரி அபின்காந்தமலிங்கம் நற்சீரகம்ஏலம் திரிகடுகுஇலவங்கப்பட்டை கருஞ்சீரகம் மாங்கொட்டைப்பருப்பு அதிவிடையம் வகைக்குவிராகனெடை ௧,கோரக்கர்மூலிவிராகனெடை-௧௮, இவைகளில்காந்தமலிங்கமகஞ்சாயிம்மூன்றையும சுத்திசெய்துமற்றமருந்துகளைவெதுப்பிப்பொடித்துச்சினிபலம்-௫. கூட்டித்தேன்விட்டுப்பிசைந்து கொட்டைப்பாக்குப்பிரமாணம்சாப்பிட்டுவெந்நீரிற்குடிக்கத்தீரும.

சகலகழிச்சலுக்குங்காந்தசெந்தூரம

காந்தம்பலம்-௪, ஆவாரைவேர்ப்பட்டைபலம்-௪-யிவைகளைப்பொடித்துக்கற்றாழைமடல்தண்ணீர்வார்த்தரைத்துவில்லைதட்டிக்காயவைத்துச்சட்டியிலிட்டுச் சீலைமண்செய்து நாலுசாமம் தீயெரித்துஆற்றியெடுக்கச்செந்தூரமாகும அதில்பணவிடைவீதம அனுபானங்களிற்கொடுக்கத்தீரும், பத்தியம்எருமைப்பால் மோர்மூட்டிக்கொள்ளலாம

வயிற்றுக்கடுப்பின்குணம.

மூன்றுமலங்கழிந்தடங்கும சீதமரத்தமவிழும இடுப்புக்கடுக்குமவயிறுநோயுமஅன்னஞ்செல்லாது அகமமெலிந்துவரும.

நிவர்த்தி.

வெடத்தலைவெட்பாலாசீர்ப்பாலா இவைகளின்வேர்த்தோல்-ஆலவிழுதின்கொழுந்துவகைக்குஒருபிடிவீதம ஒன்றாய்ச்சிதைத்துக்கியாழஞ்செய்தாவது அல்லதுஇவைகளையரைத்துஎருமைமோரிலாவதுதயிரிலாவது கலக்கிக்கொடுக்கத்தீரும

மூத்தக்காரையிடித்துமாவாக்கிப்பிட்டவித்துப்பிழிந்ததண்ணீர்படி அரைக்காலில் ஒருவிராகனெடை ஓமத்தைவறுத்துப்பொடித்துப்போட்டுக்கொடுக்கத்தீரும

நற்சீரகமபலம-௭, இளவறுப்புச்செய்துபொடித்துவடிகட்டிசர்க்கரைபல ௧, கூட்டித்திரிகடிப்பிரமாணம ஏரண்டதெண்ணெயிலாவது ஆவினெய்யிலாவது மத்தித்துக்கொள்ளத்தீரும.

இளநீரில் எலுமிச்சம்பழச்சாறுபிழிந்து கொடுத்தாலுமெலுமிச்சம்பழச்சாற்றில் சர்க்கரைகலந்துசாப்பிட்டாலும் நெல்லிக்காய்ச்சாற்றில்சர்க்கரை கலந்துகொடுத்தாலும் வெந்தயமும்நெல்லிப்பருப்பும் வறுத்துப்பொடித்துத்திரிகடிபுளித்த பழந்தயிரிலாவது நல்லெண்ணெயிலாவதுகொடுத்தாலும்நெல்லிப்பருப்பை எலுமிச்சம்பழச்சாற்றிலரைத்துச்சர்க்கரைகூட்டிக் கொடுத்தாலுந்தீரும்.

வில்வம்பிஞ்சு திப்பிலி சாதிக்காய்லவங்கம்சுக்கு இவைகளோர்நிறையாய்வறுத்துப்பொடித்துசில்லுக்கருப்புக்கட்டியும்வெண்ணெயுங்கூட்டிமெழுகுபோலரைத்து ஒரு கொட்டைப்பாக்குப்பிரமாணங்கொள்ளத்தீரும்.

மாதுளங்காயைவட்டமாக நறுக்கிவிரையெடுத்துப்போட்டு அதற்குள்வெந்தயமோமஞ்சீரகம்வகைக்கொருவிராகனெடைவைத்துமூடித்துணிசுற்றிசாணிக்குட்பொதிந்து சாணிவெந்தபின் எடுத்துக்கவசம்நீக்கிஒருவிராகனெடை சீந்திற்சர்க்கரைகூட்டி அரைத்துத்தயிரிற்கலக்கிக்கொடுக்கத்தீரும்.

திரிகடுகு சாதிக்காய் சாதிப்பத்திரி அதிவிடையம் அபின் களிப்பாக்கு மாம்பருப்பு முள்ளி இலவம்பிசின் இலவம்பிஞ்சின்மேற்றோல் நெல்லிவற்றல் காட்டாத்திப்பூ கருவேப்பிலை மாதுளம்பூ விளாம்பிசின் காசுக்கட்டி புளியவிரையின்மேற்றோல் தான்றிக்காய்வகைக்கு விராகனெடை ௧, நற்சீரகம்விராகனெடை (௧௰) இவைகளைவெதுப்பிச் சூரணித்துத்திரிகடியளவு தேனிலாவது தயிரிலாவதுகொள்ளநீங்கும்.

கற்கடகச்சிங்கிவிராகனெடை-௨-கருள்ளிவிராகனெடை-௧-நற்சீரகம்விராகனெடை -அரை- இவைகளைவெதுப்பியரைத்து எருமைத்தயிரிற்கலக்கிக் கொடுக்கநீங்கும்.

துத்தம்வாப்பூலா மூத்தங்காசுக்குலும் அதிவிடையம் பொன்மூசட்டைவேர் நற்சீரகம் குங்கிலியம் இவைகளையோர் நிறையாயரைத்து ஆவினெய்யில் வேகவைத்துண்ணநீங்கும்.

ஒருகழஞ்சு பிஞ்சை ஆவின்மோரில் மூன்றுநாளூறவைத்தெடுத்து அதனுடன்கீழ்க்காய்நெல்லி வாப்பூலாக்கொழுந்து வகைக்கொருபாக்களவு அரைத்துமேற்படி மோரிற்கலக்கிக்கொடுக்கநீங்கும்.

அக்கிவேரையொரு எலுமிச்சங்காய்ப்பிரமாணம் அரைத்து எருமைத்தயிற்கலந்துகொடுக்கநீங்கும்.

ஒருவெலுமிச்சம்பழத்தையெருமைத்தயிற்பிழிந்துகொடுக்க நீங்கும்.

வெள்ளைக்குங்கிலியம்விராகனெடை-௧, பொடித்துமோரிற்போட்டுயெத்தாமநேரங்கடந்துவடிகட்டி அரைவீசம்படி தேங்காய்ப்பாலிற்கலந்துகொடுக்கநீங்கும்.

வெள்ளைக்குங்கிலியம்மாதுளம்பூ ஓமம்சாதிக்காய்நெல்லிமுள்ளி சீரகஞ்சுக்குவகைக்குவிராகனெடை-௧, வெதுப்பிப்பொடித்துத்திரிகடித்தூளுஞ்சர்க்கரையுங்கலந்தெருமைத்தயிரிற் கொடுக்கநீங்கும்.

வெண்கிழுனைவ அத்திநாவல் இவைகளின் பட்டையைச் சமமாய இடித்துப்பிட்டவித்துப் பிழிந்தசாறுபடி அரைக்காலில் ஒருகொட்டைப்பாக்குப்பிரமாணம வெண்ணெயிற்கலந்து கொடுக்கநீங்கும,

சாதிக்காய் காசுக்கட்டி வசவாசிவோமம இலவங்கபிசின் லவங்கம் அதிவிடையம் குங்கிலியம் வகைக்கு கழஞ்சு க அபின் கழஞ்சு ௯, பரித்தி இலைச்சாற்றிலரைத்துத்தேற்றுவிலாப்பிரமாணமும் பரிதிக்காய் இரைவத்தம் பலம் இவைகளயரைத்துவகைக்கு ஒருகொட்டைப்பாக்குப்பிரமாணம் வெண்ணெயிற்குழைத்துக்கொடுக்கவும்.

வெந்தயம் பெருங்காயம் வெள்ளைப்பூண்டு வகைக்குவிராகனிடை -க- முருங்கையீர்க்குவிராகனெடை -௰- சிவக்கவறுத்து ஒருபடி தண்ணீர்விட்டு ஒருசிரங்கையாய்வற்றவைத்துக்கொடுக்கவாயுகழிச்சல் தீரும.

காசுக்கட்டி வசம்பு வெள்ளுள்ளி பெருமாத்துப்பட்டை இவைகளையரைத்து நல்லெண்ணெயிற்பொரித்து மூன்றுநாள் கொடுக்கநீங்கும

சாதிக்காய் அபின் நீர்ப்பூவாவேர்ப்பட்டை வகைக்கு விராகனிடை (க) பொடித்துக்கோழிமுட்டைக்கருவிற்கலந்து பொரித்து ஆறுபோது கொடுக்கநீங்கும்.

ஓமம்படி அரைக்கால் நற்சீரகம்படி மாகாணி சுக்கு மஞ்சள் அபின் சாதிக்காய்வகைக்குவிராகனெடை (க) கஞ்சாவிராகனிடை ௨ வறுத்துப்பொடித்துத்திரிகடிப்பிரமாணம இளவெந்நீரிற்கொடுக்கநீங்கும.

வெட்பாலமருது-விடத்தலைநீர்ப்பூலா இவைகளின் வேர்ப்பட்டை-அதிவிடையம் நெல்லிமுள்ளி-விளம்பிஞ்சு இவைகள் யோர்நிறையாயுலர்த்திப்பொடித்து ஆவின்தயிரில் திரிகடிப்பிரமாணம்கொடுக்கநீங்கும்.

கெந்தகம் விராகனிடை-க-நாலு கடுக்காயைவிரைநீக்கிப்பொடித்துக்கோழிமுட்டை வெள்ளைக்கருவிற்போட்டுப்பொரித்துக்கொடுக்கத்தீரும்.

எலுமிச்சங்காய்ப்பிரமாணம் நாவற்கொழுந்தையரைத்து எருமைத்தயிரிற்கலக்கி மூன்றுநாள்கொடுக்கத்திரும வெள்ளாட்டுப்பாலில் எலுமிச்சம்பழச்சாறுபிழிந்து மூன்றுநாள் உதையத்திற்கொடுக்கத்தீரும்.

கோழிமுட்டை வெள்ளைக்கருவில்கடுக்காய்ப்பூவைப்பொடித்துப்போட்டு கொஞ்சம் நல்லெண்ணெய் விட்டுப் பொரித்துக்கொடுக்கத்தீரும்.

அரைப்படிகருக்குருவைமாவில்விடத்தலையிலையை விளாங்காய்ப்பிரமாணம் அரைத்துவிரவிப்பிட்டவித்து (௬) நாள்தின்னநீங்கும்.

முற்றினதேங்காய்ப்பூவில் சீனிகூட்டி யுண்ணத்தீரும்.

அனிச்சை துத்திமலைதாங்கிவாட்பூலா இவைகளின்வேர்முத்தக்காசுக்கு அதிவிடையம் நற்சீரகம் வெள்ளைக்குங்கிலியம் ஓமம் இர்துப்

புவகைக்குக்கழஞ்சு(௧) இவைகளை ஆவின்பாலில்வேகவைத்துக்கொள்ளத்தீரும.

அரைக்காற்படி எருமைமோரில் ஒருஎலுமிச்சங்காய்ப் பிரமாணம் இலவங்கப்பட்டையை அரைத்துக்கலக்கிக்கொடுக்கநீங்கும்.

ஆழாக்குஎருமைப்பாலிற்கறந்தவுடனே ஒருதுளிபுளியிலைச்சாறு பிழிந்துகொடுக்கவும் இந்தப்படி(௩)நாள்கொடுக்கத்தீரும.

நாவிருகம கெந்தகம் சித்திரமூலம் சாதிக்காய் அதிவிடையம் தான்றிக்காய் இரசம்புபெருமரத்துப்பட்டை மூத்தக்காசு-பொரித்தவெங்காரம் காயம் பற்படாகம் இலவம்பிசின் சுக்கு நெல்லிவற்றல் சாதிப்பத்திரி அபின் திப்பிலி கஞ்சா இவைசமன் கூட்டி கஞ்சாச்சாற்றாலாட்டிக் குன்றிப்பிரமாணம் உண்டைசெய்து தயிரில்விட வயிற்றுக்கடுப்பும் தேனில்விட கிராணியும் தண்ணீரில்விட அதிசாரமும் மூலக்கடுப்புந்தீரும்.

{ வயிறறுக்கடுப்பு மூலமுளை குன்மம் கைகால் ஊறலுக்கு நாகபஸ்பம். }

ஒருபலம் நாகத்தைத்தகுகையில் வைத்துருக்கி அதில்கிழ்க்காய்நெல்லிசமூலத்தை தஉலர்த்திப்பொடித்ததுள்பலம-௧-தூவிவறுக்கப்பற்பமாகும் அந்தப்பற்பத்திடை சூதமசேர்த்துப்பனைமட்டைச்சாற்றாலாட்டி வில்லைதட்டிக்காயவைத்து குக்குடபுடமபோடக்கொடிய சுண்ணமாமாகும் அதைவெண்ணெயிலுமவியாதிகருத்தக்கமற்றஅனுபானங்களிலுங்கொடுக்கமேற்படிவியாதிகள்தீரும்,

வயிற்றுக்கடுப்புகழிச்சலுக்கு.

ஓமம் மிளகுலவங்கக்கருப்பலம் (௧) ஓர்நிறையாய்வெதுப்பிப்பொடித்துவெல்லம்பலம் (௧) கூட்டியரைத்துத்திரிகடிப்பிரமாணம் (௰)நாள் கொடுக்கத்தீரும்.

வயிற்றுக்கடுப்புவாயுவுக்கு.

சுக்கு திப்பிலிமிளகு ஓமம் உப்புகருவேப்பிலை பெருங்காயம்சுண்டைவற்றல் இவைகளையோர்நிறையாய்வெதுப்பிப்பொடித்துச் சுடுசோற்றில் திரிகடிப்பிரமாணந்தூவிநெய்வார்த்துண்ணத்தீரும.

ஆசனக்கடுப்புக்குப்புகை,

ஆமையோட்டைப் பொடித்துத்தணலிற்றூவி அபானவாயிற்புகைபிடிக்கக்கடுப்புடனே தீரும.

இரண்டுவிராகனிடைசுக்கை மோர்விட்டுமைபோலரைத்து அரசிலையில்வைத்துத்தைத்துமோரில்(௭)தபாவேகவைத்து வடிகட்டினதயிரிற்குழைத்துண்ணத்தீரும்.

சுரத்தின்பேரிற்காணுங்கடுப்புக்கு,

நெற்பொரிமாஆவின் வெண்ணெய்கற்கண்டுநற்சீரகத்தூள் இவைகள்யோர்நிறையாய் ஒன்றாய்ப்பிசைந்துவிளாங்காய்ப் பிரமாணம -௩-நாழிசாப்பிடத்தீரும.

சகலகிராணி அதிசாரம் வயிற்றிரைச்சல் கழிச்சல் சீதம்

இரத்தம் விழுதல் மூலக்கடுப்பு வயிற்றுக்கடுப்புக்கு,

சுண்டைவற்றல் கருவேப்பிலை மாம்பருப்பு வோமம் மாதுளம்பழத்தோடு நெல்லிமுள்ளி வெந்தயம் இவைகளைச் சமமாய் வெதுப்பிப் பொடித்துத் திரிகடிப்பிரமாணம் தயிரிற்கொள்ளநீங்கும்.

செவியம் முத்தக்காசு சுக்கு திப்பிலி திப்பிலிமூலம் மல்லி வாய்விளங்கம் சீரகம் கருஞ்சீரகம் வோமம் அரத்தை பேரரத்தை மிளகு வெந்தயம் குருசாணி வோமம் மதககோலம் லவங்கப்பட்டை சன்னலவங்கப்பட்டை இலவங்கப்பத்திரி சிறுநாகப்பூ கிராம்பு ஏலம் சாதிக்காய் சாதிப்பத்திரி வகைக்குவிராகனெடை (க) துதுவளை கண்டங்கத்திரி சிறுவழுதலை வழுதலை சித்திரமூலம் ஈசுரமூலி முக்காவேளை சிறுகாஞ்சோரி நன்னாரி சிறுமுட்டி வட்டத்திருப்பி சிறுகுறிஞ்சா விலாமிச்சு சுண்ணகிவில்வம் மாதுளம் இவைகளின் வேர் வில்வப்பிஞ்சு மாதுளம்பிஞ்சு கருவேப்பிலை கருநெற்பொரி வகைக்குப்பலம்-வ- இவையெல்லா மிடித்து-ச-படி தண்ணீரிற்போட்டு எட்டொன்றாய் வற்றவைத்து வேளையொன்றுக்கு அரைக்காற்படி வீதங் கொள்ளநீங்கும்.

வெந்தயம் வால்மிளகு கருஞ்சீரகம் அதிவில் சாதிப்பத்திரி வோமம் சாதிக்காய் கிராம்பு லவங்கப்பத்திரி திரிகடுகு திரிவலை மாதுளம்பழத்தோல் அதிமதுரம் குருசாணி ஓமம் அதிவிடையம் சிறுநாகப்பூ வாய்விளங்கம் கோஷ்டம் சடாமாஞ்சில் கடுக்காய்ப்பிஞ்சு சிரகம் மல்லி தாளிசபத்திரி முத்தக்காசு சன்னலவங்கப்பட்டை காட்டாத்திப்பூ கற்கடகச்சிங்கி கசகசா ஏழுவிசை புடம்போட்ட கஞ்சா பெருமாத்துப்பட்டை கூவிளத்தின் பழம் அபின் புளியவிரைத்தோல் மாங்கொட்டைப்பருப்பு வகைக்குப்பலம் (வ) பெருங்காயம் விராகனெடை (க) இவைகள் யாவும் வறுப்புச்செய்து கலுவத்திட்டு ஆல் அரசு நாவல் அத்தி நீர்ப்பூலா ஓதி ஆவாரை விடத்தலை நெல்லி இலந்தை இவைகளின் வேர்ப்பட்டை வகைக்குப்பலம் (உ) இடித்து எட்டுப்படி தண்ணீரிற்போட்டு எட்டொன்றாய் வற்றவைத்து வடித்துக் குழம்பாய்க் காய்ச்சி அதனால் மைப்போலாட்டி நாவல் ஏழுதொன்னை செய்து ஒன்றின்மேலொன்றாயடுக்கி அதின்மேல் மருந்தை வைத்து ஏழுதொன்னையால் மூடிக்கதைத்து மண் றவில்லை வைத்து மூடித் தீயெரித்து இலை அவிந்த பருவத்தில் மருந்தையெடுத்து அரைத்துச் சுண்டைக்காய்ப்பிரமாணம் உண்டை செய்துகொண்டு அந்தந்த வியாதிகளுக்குத் தக்கதுந்தப்படி பொன்னாங்காணிச்சாறு கிராம்பு ஆவாரம்பட்டைக் கியாழம் கோரைக்கிழங்குச்சாறு எருமைத்தயிர் மோர் தேன் பச்சரிசிக் கழுநீர் இவைகளிலொன்றில் ஒருண்டை கொடுக்கத்தீரும்,

பெருமாத்துப்பட்டை கொழுந்து மருதம்பட்டை உசிலம்பட்டை வகைக்கொருதேங்காய்ப்பிரமாணம் சிதைத்து வெண்சோளம் கலந்த கழுநீரிற்போட்டுப்பிசைந்து பிழிந்து வேளையொன்றிற்கு அரைக்காற்படி

வீதங்கொடுத்துக்கோழிமிளகுநீருமஅன்னமுங்கொள்ளத்தீரும்.

மாதுளம்பிஞ்சுவில்வம்பிஞ்சுவிளாம்பிஞ்சுமாம்பருப்பு இலவம்பிசின்னெருஞ்சிக்காய் அத்திப்பிஞ்சு பெருமாத்துப்பட்டை - புளியவிளாத்தோல் பொன்முசுட்டைவேர் நாவறபட்டை நாயக்கடுகுசாதிக்காய்சாதிப்பத்திரிகுருசாணிஓமமபெருங்காயம்இவைகள் வெயிலுலர்த்தித்தூள்செய்துஎருமைமோரில்திரிகடிவீதங்கொண்டுவரத்தீரும,

அகத்திவேல் அரசு அத்தி ஆவாரை இவைகளின்பிஞ்சு மாதுளவேர் கோவைத்தண்டுசுரைத்தண்டுதான்றிவேல்விகடுககாய் சாதிக்காய்கிராம்புபத்திரிஓமம்வெந்தயமதிரிகடுகுயேலமலவங்கமசடாமாஞ்சில்குருசாணிஓமம அதிமதுரமவாய்விளஙகம் சீரகம்மல்லிநறுக்குமூலம் வகைக்குககழஞ்சு(க)இவைகள்சிதைத்துமூன்றுபடிதண்ணீரிறபோட்டுக்காற்படியாயவற்றவைத்துவடிகட்டி அதில்கோட்டைப் பாக்குப்பிரமாணம்ஆவின்வெண்ணெயபோட்டுஉருகினபின்கொடுக்கவும்இந்தப்படிமூன்றுநாள்கொள்ளநீங்கும்.

சாதிக்காய்சாதிப்பத்திரி-மாசக்காய்கிராம்புகோஷ்டம் அதிமதுரம்அதிவிடையம்லவங்கப்பட்டை இலவம்பிசின் விளாம்பிசின் இவைகள்யோர்நிறையாயரைத்துமாதுளங்காய்க்குள்வைத்து வெள்ளைத்துணிசுற்றிஅதின்மேற்சாணமஅப்பிக காட்டெருவிற்புடம் போட்டுசாணிவெந்தபருவத்திலெடுத்துக்கவசநீக்கிகஞ்சாச்சாற்றாலாட்டிச சிறுசுண்டைக்காயப்போலுண்டைசெய்துவடிதயிரிற்கொடுத்தால் கடுப்புசீதம இரத்தமூலம்நீங்கும,தேனிலிட அதிசாரமநீங்குமபுளிகூட்டிமிளகாயதள்ளவும.

சாதிக்காயசாதிப்பத்திரிபெருங்காயமசீரகம அதிவிடையம்கிராம்புவபின் கஞ்சாவெந்தயம கழற்சிவித்து குருசாணிஇவைகள் யோர்நிறையாயக்கஞ்சாயிலைச்சாற்றால்நாலுசாமமஅரைத்து இலந்தைவிரைப்பிரமாணமஉண்டைசெயதுதயிரிலமூன்றுநாள்கொடுக்கத்தீரும.

கிராமபுதிரிகடுகு ஓமமசிற்றரத்தை பொன்னாவரைவேர் அன்னபேதிசமுத்திராபழமசாதிக்காயபெருங்காயமவகைக்கு விராகனெடை (க)வெள்ளுள்ளிதோல்நீக்கிபலமக(௨)வெற்றிலைக்காமபுவிராகனெடை -௨-இவையெல்லாமவறுத்துமைப்போலரைத்துவெற்றிலையில்வைத்துசகட்டிஒருசட்டியில்வைத்துத்தீயெரித்துவெற்றிலைகருகிவருதிரசமயத்திலெடுத்துஅரைத்துமறுபடியுமவெற்றிலையிலவைத்துச் சுருட்டிமுன்போல்வெதுப்பியெடுக்கவும இந்தப்படி-யேழு-விசை வேகவைத்து அரைத்துச் சுண்டைககாயப்பிரமாணம உண்டைசெயது வெந்நீரிற்கொள்ளத்தீரும.

திரிகடுகு-வோமம-சாதிக்காய-சாதிப்பத்திரி அதிவிடையம - கிராமபு - அக்கிராகாரம- வகைக்குவிராகனிடை-க- அபின்விராகனிடை

(௬) எலுமிச்சம்பழச்சாற்றுலரைத்துச் சுண்டைக்காய்ப்பிரமாணமுண்டைசெய்து எருமைதயிரிலிடத்தீரும்

சாதிக்காய்சாதிப்பத்திரிகிராம்பு அதிவிடையம்குருசாணியோமம்விளாம்பிசின்மாதுளம்பிஞ்சு இலவம்பிசின்வகைக்குக்கழஞ்சு-௧-இவைகண்டயிடைக்கு அபின்கூட்டி கஞ்சாயிலைச்சாற்றில்ஒருசாமமும் ஊமத்திலைச்சாற்றிலொருசாமமும் ஆட்டிப்பரித்திவிரைப்பிரமாணமுண்டைசெய்துநிழலுலர்த்தியெருமைத்தயிரில் நாழியொன்றிற்குயோருண்டையாக(௫)நாள்கொடுக்கத்தீரும்

இரதம்சாதிக்காய்சாதிப்பத்திரிகிராம்புஅதிவிடையம்குராசாணியோமம்சாதிலிங்கம்ஊமத்தம்விரைவிளாம்பிசின்மாதுளம்பிஞ்சுவகைக்குவிராகனெடை(௧)இவைகண்டயிடைக்கு அபின்கூட்டிக்கஞ்சாயிலைச்சாற்றிலும் ஊமத்தம்யிலைச்சாற்றிலும் வகைக்கொருசாமமாட்டிப்பரித்திவிரைப்பிரமாணம் உண்டைசெய்துகொண்டுதேனிற்கொள்ளகிராணிகள்நீங்கும் எருமைத்தயிரிலிடவயிற்றுக்கடுப்புநீங்கும்

சாதிக்காய்சாதிப்பத்திரிகிராம்புலவங்கப்பத்திரி ஆனைத்திப்பிலிஓமம்அதிவிடையம்கோஷ்டம்கசகசாசீரகம்கருஞ்சீரகம் வால்மிளகுகுருசாணியோமம்திரிகடுகுதிரிபலை அதிமதுரம்வெந்தயம் மல்லிகடுக்காயமொக்கு அபின்சுத்திசெய்தகஞ்சா அதில்காட்டாதமொக்குதாமரைக்கிழங்குவிளாவரிசி நீர்முள்ளிவித்துகார்கோலரிசி முத்தக்காசுதென்னமொக்குமாதுளைவித்துபூலாவேர்ப்பட்டை கருவேல்வித்துபெருமரத்தின்வேற்பட்டைகாட்டுக்காணைகறிக்காணை புளியவிரைத்தோல்மாங்கொட்டைபருப்புவகைக்குபலம்-௨- இவைகள்நிழலிலுலர்த்திச் சூரணஞ்செய்து ஆல் அரசு நாவல்இத்திமுள்ளிலவு ஒதியம்பட்டைமுடக்கொத்தான் வெட்பூலா இவைகளின்வேர்கள் யோர்நிறையாயிடித்து (அ)படிசலத்திற்போட்டுஒருபடியாய் வற்றவைத்திறுத்து அதில்ஆவினபால்படி (௨) பனைவெல்லம்பலம்பத்து கூடச்சேர்த்து பாகுசெய்துமேற்படிசூரணத்தைத்தூவிக்கிண்டி ஆவினெய்படி-௧-விட்டுலேகியஞ்செய்துஇறக்கி தேன்படி-௨-கெந்தகச்செந்தூரம் லோகசெந்தூரம் வகைக்குஒருபலம்போட்டுக்கிண்டி வைத்துக்கொண்டுகழற்சிக்காயளவு அந்திசந்தி ஒருமண்டலங்கொள்ளத்தீரும்

மாதுளம்பழத்தோல் வில்வப்பிஞ்சு காட்டாத்திமொக்கு கடுகுரோகணி முசுட்டைவேர் முத்தக்காசுபுளியவிரைத்தோல்லவங்கம் இலவம்பிசின் ஓமம்குருசாணியோமம் திரிகடுகுவெட்பாலையரிசி ஆனைத்திப்பிலிநாவற்பட்டைபெருமரத்துப்பட்டை லவங்கப்பட்டைமாம்பருப்புகழற்பருப்பு கருங்காலிவயிரம்வெள்ளிலோத்திரம்நீர்முள்ளிவிரைஅதிவிடையம்கருஞ்சீரகம்நற்சீரகம்காசுக்கட்டி இவைகளையோர்நிறையாய்ப்பொடித்துநெல்லிக்காய்ச்சாற்றுலாட்டிக் கழற்காய்ப்பிரமாணமுண்டைசெய்துகொண்டு தயிரிற்கொள்ளத்தீரும்இவைகளெல்லாம்இச்சாபத்தியம்

சிராணிரோகப்படலம்-முற்றிற்று.

உ

சிவமயம்.

வாயுரோகப்படலம்.

அதாவது நரம்புவழியாய்வாதநீர் அதிகரித்து அபானத்தில்விரைகளில்நரம்புவழியாயும் இன்னும்பலபலவழியாயும் அந்நீர்களால்சகலவியாதிகளையும் அதிகரித்தலாம் அதுமேகசம்மந்தத்தில்சேர்ந்தவியாதியென்னப்படும் இதுவாயுரோகப்படலமெனபெயர்வகுக்கப்பட்டது.

விருத்தம்.

உரைத்தோம்வாயுவெண்பதிற்குமூக்ந்தவாதந்தன்னறிந்து
விரைதந்தருட்சவிதமனைத்தும நேருமபல நூல்தனையாயந்து
குரைத்தமொழியந்தானபகுத்துக் கூறப்பிணியுந்தானகல
திரைத்தமுனிவர்தன்னருளால் தெளியவுரைத்ததிதுவாமே

அண்டவாயுக்குணம்.

வாயுகுடலிற்றங்கி நரம்புவழியாய்விரையிலொன்றிலிறங்கிப் பொருமிவலிக்கும் அதுமேல்நோக்கி உடலுள்வாங்கும் அதனநரம்புபுடைத்துக்காணும

நிவர்த்தி.

நொச்சிகழற்கொடி சாரணை ஆடாதோடை வேலைவேலிப்பரித்திகோழியவரை இவைகளின்கொழுந்து எருக்கமமொக்கு வகைக்குபிடி(க)வசம்புசித்திரமூலம்மிளகுதிப்பிலிமூலம் வகைக்குவிராகனெடை-ங-வெள்ளுள்ளிகழற்சிபருப்பு விராகனெடை-ரு-பெருங்காயம்விராகனிடை-க-இவைகள் வேலிப்பரித்திச் சாற்றிலரைத்து -க- கழஞ்சுவிதம் உண்டைசெய்துநிழலிலுலர்த்திக்கொண்டு சங்கங்குப்பிநொச்சிஉத்தாமணிமுருங்கைசாரணைகொடுவேலிவகைக்குபலம்-உ- விதம்ஒன்றாய்ச்சிதைத்துக்கியாழஞ்செய்து அதில்வோருண்டையரைத்துக்கொடுக்கவும் இந்தப்படி பதிமூன்றுநாள் புளிதள்ளிச்சாப்பிடத்தீரும்

கொடுவேலிசங்கங்குப்பி செங்கத்தாரி காத்தொட்டி இவைகளின்வேர்ப்பட்டைவகைக்குபலம்-ச-கருப்புக்கட்டிபலம்-ரு- எள்ளுப்பொடி-உ-மிளகுஓமம்வகைக்குப்பலம்-க- வெள்ளைப்பூண்டுபலம்-உ-சீரகம்பலம்-உ-இந்துப்புவெடியுப்புநவாச்சாரம் அதிவிடையம்வகைக்குவிராகனெடை-உ-தேங்காய்-க-இவைகளை மெழுகுபோலிடித்துகொட்டைபாக்குப்பிரமாணம் இருபோது-உய-நாள் உட்கொள்ளபுகையிலைதள்ளவும

குறுணிக்கழுதைப்புட்டையை நாலுமரக்கால்தண்ணீரிற்கரைத்துவேடுகட்டி அதின்மேல்-௯-எருக்கங்காயில் பஞ்சுவிரைநீக்கிநாட்பட்டவரகரிசிமாவை வைத்துமூடிநூலாற்கட்டிபிட்டவித்துக்காய வெந்தபதத்திலெடுத்துநாழி-௧-க்கு ஒருகாய்ப்பிட்டைசாப்பிடத்தீரும்பத்தியம் கைப்பு புளிப்புதள்ளவும்

சத்திச்சாரணைவேர் முடக்கொத்தான்கொழுந்துகழற்கொழுந்து உள்ளிபெருங்காயம் சுக்குஇவைகள்யோர்நிறையாய் அரைத்து ஒருஎலுமிச்சங்காய்ப்பிரமாணம்-௯-போதுகொடுக்கத்தீரும்

வெள்ளுள்ளிசுக்குநாவற்பட்டைவகைக்குபலம்-௧-இடித்துநாழிநீரிற்போட்டுசரியாகவற்றவைத்து அதில்மூன்று கழற்பருப்பைப்பொடித்துபோட்டுமூன்றுநாள்கொடுத்து முருங்கையிலையை அதில்வதக்கிக்கட்டவிரையேறி இறங்கிறதுந்தீரும் இச்சாபத்தியம்

ஒருதேங்காய்ப்பூவின்மத்தியில்தோல்நீக்கின ஒருபலம்வெள்ளப்பூண்டைவைத்துபிட்டவித்து பூவைப்பால்பிழிந்துபூண்டையுமொருபலம்முருங்கப்பட்டையும் நன்றாயரைத்துச்சாறுபிழிந்து ஒன்றாய்க்கலந்துசாப்பிட்டுக்காற்றுப்படாத அறையிற்படுத்துக்கொள்ளவும் இப்படி (௩)நாள் செய்யத்தீரும்

கழற்சிபருப்பு வெள்ளுள்ளிமுருங்கைப்பட்டைசுக்குசருங்காணம்வகைக்குக்கழஞ்சு-௨-ஒருபடிசலத்திற்போட்டு அரைக்காற்படியாய்வற்றவைத்துக்கொடுக்கவும் இந்தப்படி-௬-போதுகொடுக்கத்தீரும்

புரசவிரைமிளகுவகைக்குவிராகனெடை-௩-வெள்ளப்பூண்டுவிராகனிடை(௩)அரைத்துகொட்டைப்பாக்குப்பிரமாணம் மூன்றுநாள் உதயத்திகொடுக்கத்திரும் புளிபுகையிலைதள்ளவும்

கழற்பருப்புசித்திரமூலம் மாவிலிங்குஇவைகளின் வேர்ப்பட்டைவகைக்குவிராகனிடை-௰-அண்டவெள்ளைக்கருவில் விரவிப்பொரித்துண்ணத்தீரும்

கோழிமுட்டைவெள்ளைக்கருவில்ஒருகழற்பருப்புகொட்டைப்பாக்குப்பிரமாணம் சிற்றாமுட்டிக் கொழுந்தும் அரைத்துப்போட்டுப்பொரித்துக்கொடுக்கத்தீரும்

கருவலையலமிளகு பெருங்காயம் இவைகள்யோர் நிறையாய்மைபோற்பொடித்து திரிகடிப்பிரமாணங்கொள்ளத்தீரும்

திருகுகள்ளியைவாட்டிச் சாறுபிழிந்து அதற்குநிகர் நல்லெண்ணெயகூட்டி ஆள்பலத்துக்குத்தக்கபடிமூன்றுநாள்கொடுத்துஆறுநாள்பத்தியம்வைக்கத்தீரும்

கழற்சிபருப்பு சத்திசாரணைக்கிழங்கு மிளகு இந்துப்பு பெருங்காயம்வெள்ளுள்ளிவசம்பு இவைகள்யோர்நிறையாயவெள்ளாட்டுப்பாலிலரைத்துக்கொடுக்கநீங்கும்

புளியிலையையிடித்து-௩-படிசலத்திற்போட்டுஅதில்திரிகடுகுஇந்துப்பு ஓமம் சாரந்தம் காயம் வெங்காரம் வெள்ளுள்ளி வகைக்குவிராக

விடை-க-வாளம்விராகனெடை-ம-கழற்சிபருப்பு விராகனிடை-ரு-இவைகள் கிழிகட்டிவேகவைத்து மருந்துகள்கழுவி எருக்கம்பூச்சாற்றாலாட்டிதேற்றான்விதைப்பிரமாணமடண்டைசெய்து விளக்கெண்ணெயில்ஒருகுளிகைகலய உணாத்துமூன்றுநாள் கடும்பத்தியமாய்க்கொடுக்கநீங்கும

பெருங்காயம் கழற்பருப்புமிளகு இவைகள்ஊமத்தியிலைச்சாற்றாலரைத்துபரித்திவிதைப்பிரமாணமடண்டைசெய்து இருபோதுமூன்றுநாள்ஒருகாசிடை ஊமத்தியிலைச்சாற்றிலரைத்துக்கொடுத்து மேற்படிசாற்றை ரவிணாயிற்பூசிதவிட்டைவறுத்துஒத்தணஞ்செய்யத்தீரும்.

இலுப்பைப்பிண்ணாக்கும் சிவந்த கோழிக்காரமும் இரண்டுசுண்டைக்காயப்பிரமாணம் அரைத்துக கருப்புகட்டியில் பொதிந்துகொடுக்கநீங்கும

அண்டவாதத்திற்கு.

குட்டித் தக்காளியிலையும் தைவேளையிலையும்வதக்கி ஒத்தணஞ்செய்துகட்டவும் வசம்பு பூண்டுகழற்சியிலைவறுத்துஒத்தணஞ்செய்துகட்டவும்

கழுதைலத்தியும கழற்சியிலையும்வறுத்து ஒத்தணஞ்செய்துகட்டவும்

ஆனைகுதிரைஒட்டை கழுதைவெள்ளாடு இவைகளின்லத்தியும் தேட்கொடுக்குயிலையும்தேங்காயைத்திருகின பூவும்பூவரசம்பூவும்கொடிக்கள்ளிப் பட்டையும் ஓர்சிறையாயிடித்து வறுத்து ஒத்தணங் கொடுக்கவும

மந்தாக்கினிவாயுகுணம்.

பசிமிக உண்டாகிமந்திக்கும்சிந்தையில்நினைத்ததெல்லாந்தின்னவிரும்பும்கொள்ளஒட்டாதுவயிற்றிறங்காமல் வாந்தியாகும்பலங்கருகும கிறுகிறுக்கும்வயிறுவலிக்கும்மலத்தில்சிறு இரத்தமுமமிகுந்தசலமும்விழும் பலங்குறையும்நயனம் முகமவெளுக்கும்

நிவர்த்தி.

மேற்றோல்நீக்கின எட்டுப்பலஇஞ்சியைசிறு வில்லையாகநறுக்கிஅதில்-ம-ரு-எலுமிச்சம்பழம்பிழிந்து சூரியனில்வைத்துலர்த்தி சரிகெயவிட்டுவறுத்துக்கூகைநீர்பலம(க)சீரகம்பலம்-உ-சதுர்ச்சாதம்திரிசாதம்திரிகடுகுதாளிசபத்திரிகுருசாணிவோமம்வாய்விளங்கம்வனக்குக்கழுஞ்சு-கூ-இவைகள்யிடித்துச்சூரணஞ்செய்து சீனிபலம்-ரு-கூட்டித்திரிகடிப்பிரமாணங் கொள்ளத்தீரும

மேற்றோல் நீக்கி அரிந்த இஞ்சிபலம்-ம- உமிபோக்கின சீரகம்பலம்-உ-இவைகளை யெலுமிச்சம்பழச்சாற்றில் மூன்றுநாள்ஊறவைத்துலர்த்தி ஆவினெய் தெளித்துச் சூரணஞ் செய்துக் கொண்டு திப்பிலி மிளகு கோஷ்டம்சிராம்பு தாளிசப்பத்திரி திரிபலை வாய்விளங்கம் சடாமாஞ்சில அதிமதுரம் கொத்தமல்லிவோமம் திப்பிலிமூலம்ரூ

க்கானைவேர் சந்தனம் ஏலம் கழுதாழைவேர்த்தோல் இவைகள் யோர்சிறையாய்க் கரிசாலைச்சாற்றில் மூன்றுநாளூறவைத்து உலர்த்தி இடித்துச்சூரணஞ்செய்துகொண்டு யிருவகைசூரணத்தையும் ஒன்றாய்க் கலந்து அதில்நெற்பொரி மூந்திரிப்பழம்சலாசத்துபற்பம் வகைக்குபலம்௧, சீனிபலம்-௰-கூட்டித்திரிகடிப்பிரமாணம் சாப்பிட்டுவரத்தீரும்.

கருஞ்சீரகம் நற்சீரகம் இந்துப்புதிரிகடு கருவேப்பிலைக்கு வகைக்குப்பலம்-௧-இவைகட்கு எட்டிலொன்றுகாயம்வெதுப்பிச்சூரணித்து திரிகடிப்பிரமாணம் அன்னத்திற்றாவி நெய்விட்டுப்பிசைந்துசாப்பிடத்தீரும் மலசுத்தியாகும்

அக்கினிமந்தம் வாயுபொருமலுக்கு.

கண்டங்கத்தரி முள்ளிசத்திச்சாரணை ஓமம்கொடிவேலி திரிகடுகு ளவாச்சாரம் இரிபலைபஞ்சலவணம் சத்திச்சாரம் சீரகம்கருஞ்சீரகம்வகைக்குப்பலம்-௪-வீதம்பொடித்து அதற்குசரிகர்அசுவகெந்திச்சூரணங் கூட்டித் தேனிலாவது இஞ்சிச்சாற்றிலாவது கொள்ளத்தீரும்

இந்துப்புவிராகனெடை-௧-சீரகம்விராகனிடை-௨- ஓமம்விராகனிடை(௩)சுக்குவிராகனெடை(௪)திப்பிலி விராகனெடை(௫) மிளகுவிராகனெடை(௬)பொடித்து அதற்குசரிகர்கடுக்காய்ப்பொடிகூட்டித் திரிகடிவெந்நீரிற்கொள்ளத்தீரும்

ஓமம்சுக்குகொடிவேலிவேர் இவைகள்யோர்சிறையாய்ப்பொடித்து அதற்குசரிகர்கடுக்காய்ப்பொடிகூட்டித் திரிகடிப்பிரமாணம் மோரிற்கொள்ளத்தீரும்

பச்சைகருவேப்பிலையை ஒருதேங்காப்பிரமாணம் அரைத்துஒன்றரைப்படிதண்ணீரிற்கலக்கி (௨)படியாய்வற்றவைத்து வடிகட்டி அதில்கருப்புக்கட்டிபலம்(௩)போட்டுப்பாகுசெய்து கரியுப்புவெடியுப்புஇந்துப்பு சீனிக்காரம்வெள்ளுள்ளிகருஞ்சீரகம்சுக்குஓமம்திப்பிலிபெருங்காயம் சவுக்காரம் நவாச்சாரம் வகைக்குக்கழஞ்சு மூன்று நெற்பொரிபடி அரைக்கால் இவைகள் தனித் தனியே சூரணித்துத் தூவிக்கிண்டி வைத்துக்கொண்டு ஒருகொட்டைப்பாக்குப்பிரமாணஞ் சாப்பிட்டுவரத்தீரும்.

பித்தவாயுவுஷ்ணவாயு-மந்தத்திற்கு

தோல்நீக்கின இஞ்சிபலம்(௩௰) அரைப்படிநெய்தெளித்துப்பொன்நிறமாய்வறுத்துச்சூரணித்துக்கொண்டு கடுகுரோகணிதேசாவரம்சுக்கு சீரகம்வகைக்குப்பலம்(௧)ஏலம்மிளகு வகைக்குப்பலம் முக்கால் லவங்கப்பட்டைலவங்கபத்திரிநெல்லிமுள்ளிவகைக்குப்பலம்(௨)சாதிக்காய்அதிமதுரம்சிறுநாகப்பூ லவங்கம்தாளிசப்பத்திரி கூகைநீர்வகைக்குப்பலம்(௪)இடித்துச்சூரணஞ்செய்துக்கொண்டுயிருவகைச்சூரணத்தையும்ஒன்றாய்க்கலந்து சர்க்கரைபலம்பத்துகூட்டித் திரிகடிப்பிரமாணம் கொள்ளத்தீரும்

வாயுத்திரட்சி அரோசியம்மலக்கட்டுக்கு,

ஆவின்பாலில்அவித்துச்சுத்திசெய்தசிவதைபலம் ௬, திரிபலைசுக்குதிப்பிலிபூண்டு வகைக்குபபலம்-௧-லவங்கப்பட்டை லவங்கப்பத்திரி சிறுநாகப்பூயேலம்இந்துப்புவகைக்குப்பலம்அரை இவைகள்யிடித்துச்சூரணித்து அதற்குநிகர்சர்க்கரைகூட்டித்திரிகடிப் பிரமாணம்தேனிலாவது நெய்யிலாவதுவெந்நீரிலாவது கொள்ளத்தீரும்

பித்தவாயுஅரோசியம்அக்கினிமந்தமவயிற்றெரிவுக்கு.

ஆவாரைப்பஞ்சாங்கசூரணம்படி-௧-இஞ்சி எலுமிச்சம்பழம்முசுமுசுக்கை இவைகளின்சாறுஆவின்பால்வகைக்குப்படி-௨-சீனிபலம பதினைந்து ஒன்றாய்க்கலந்துபாகுசெய்து அதில்சீரகம்அதிமதுரம் வகைக்குப்பலம் -௧- கோஷ்டம் திப்பிலி மிளகு சுக்குநீர வகைக்குப் பலம்-௪- விலாமிச்சம்வேர் சிறுநாகப்பூ தாளிசபத்திரி வகைக்குப் பலம் ௮, இவைகள் யிடித்துச் சூரணஞ் செய்து தூவிக் கிண்டி ஆவினெய்ப்படி-௨-தேன்படி-௧-கூடவிட்டு லேகியஞ்செய்து கொட்டைப்பாக்குப்பிரமாணஞ் சாப்பிட்டுவரத்தீரும் இச்சாபத்தியம்

புளித்தேப்பத்திற்கு.

வசம்புசுட்டசாம்பல்வறுத்தகரியுப்புபெருங்காயம்இவைகள் யோர்நிறையாய்ப்பொடிததுத்திரிகடிபபிரமாணம்மோரிலாவதுவெந்நீரிலாவது கொள்ளதீரும்

ஊஷ்ணவாயுவுக்கு

பிரண்டைஓமம் கருவேப்பிலைக்கு கரியுப்புவகைக்குப்பலம்-௧- வறுத்துமூன்றுபடிஎருமைமோர்விட்டுஒருகொதிவந்தபிறகுஇறக்கிவைத்துக்கொண்டு சாப்பிட்டுவரத்தீரும்

அஜீரணவாயுநக்கு.

சுக்குதிப்பிலிமிளகுஅசமதாகம்இந்துப்புநற்சீரகம்பெருங்காயம் இவைகள்யோர்நிறையாய்ச் சூரணித்துத்திரிகடிப்பிரமாணம் அசனத்திற்பிசைந்து ஆவினெய்விட்டுஉண்ணத்தீரும்

சத்திச்சாரணை கண்டங்கத்திரி வில்வம் இவைகளின்வேர்வகைக்குப்பலம்-௨-சுக்குபலம்-௧-பூண்டுபலம் மூன்றுகாயம்பலம்-௮-இந்துப்புபலம-௧௦-இவைகள்சிதைத்து ஒருபடிதண்ணீரிற்போட்டுஅரைக்காற்படியாய்வற்றவைத்து அசனத்தின்பின்னுட்கொள்ளததீரும

மிளகைவறுத்துப் பொடித்துத்திரிகடிப்பிரமாணம் தேனிற்கொள்ள, தீரும்

கருவேப்பிலைக்குசுக்குசீரகம்ஓமம்வகைக்குவிராகனிடைமூன்றுஒருப்படிதண்ணீரிறபோட்டு அரைக்காற்படியாய் வற்றவைத்து உட்கொள்ளதீரும்

மந்தவாயுவுக்கு.

சீரகம்யேலம்பச்சைக்கர்ப்பூரம், இவைகள்யோர்நிறையாய்ச் சூரணித்துஅதற்குநிகர்சர்க்கரைகூட்டி திரிகடி அந்திசந்திகொள்ளமந்தம

மேற்சொல்லிவின இஞ்சி பலம்-௰-யேலம் திரிகடுகு சிறாம்புளுமம் வாலுளுவையரிசி சாதிக்காய ஆனைத்திப்பிலி சீரகம் அதிமதுரம் குருசாணி ஓமம அமுக்கரு கசகசா லவங்கபபத்திரி மோடி மல்லி இவைகள் மூந்திரிப்பழம் பேரீச்சம்பழம் இவைகள் நெய்விட்டு வறுத்துச் சூரணித்துத் திரிகடிப்பிரமாணம முட்கொள்ளத்தீரும்,

பித்தவாயுவுக்கு,

லவங்கம் திரிகடுகு மூத்தக்காசு சிறுநாகப்பூ திரிபலை இவைகளையோர் நிறையாய்ச் சூரணித்து அதற்கு நாலிலொன்று ஆவின்பாலிற் சுத்திசெய்த சிவதைச் சூரணங்கூட்டி வேளையொன்றுக்குக் கழஞ்சு தேனிற்கொள்ளத்தீரும,

நற்சீரகம் அதிமதுரம கருஞ்சீரகம் சோம்பு சன்னலவங்கப்பட்டை சதகுப்பை வகைக்குப்பலம(௯)மல்லி பலம(௯)இவைகள் இடித்துச் சூரணஞ்செய்து சர்க்கரை கற்கண்டு வகைக்குப்பலம ஆறுகூட்டித் திரிகடிப்பிரமாணம வெந்நீரிலிரண்டுநேரம் மும்பத்துநாள் கொள்ளத்தீரும்.

கடுக்காய் திப்பிலி சுக்கு சீரகம ஓமம் இந்துப்பு நறுக்குமூலம் வகைக்குப்பலம(௧) இவைகள் பொடித்து ஒருபலம கருப்புக்கட்டியைப்பாகு செய்து அதிற்றூவிக்கிண்டி நாழியொன்றிற்கொரு கழற்காய்ப்பிரமாணங்கொள்ளத்தீரும்.

வாயுச்சூலைக்கு.

திரிகடுகு இந்துப்பு ஓமம் இவைகள் வெதுப்பிப் பொடித்துத் திரிகடிப்பிரமாணந் தேனிற்கொள்ளத்தீரும்;

ஆனந்தவாயுவுக்கு,

தும்பையிலையை எலுமிச்சங்காயளவு அரைத்துப்பழச் சாற்றிற்கலக்கிக்கொடுக்கத்தீரும.

பதினாறு எருக்கிலைக்குள் தோல்நீக்கின அரைப்பலம வெள்ளைப் பூண்டை வைத்துக்கட்டிப்பிட்டவித்து இலைவெந்தபருவத்தில் எடுத்துச்சாறுபிழிந்து அந்தச்சாற்றில் பூண்டையரைத்துக்கொடுக்கவும் இந்தப்படி மூன்றுபோது கொடுக்கத்தீரும்.

ஒரு எலுமிச்சங்காயளவு இலுப்பைப் பிண்ணாக்கை ஆழாக்கு கருள்ளிச்சாற்றில் ஊறப்போட்டு வெதுப்பிக்கொடுக்கத்தீரும்

வாயுக்குத்துக்கு.

கொடிவேலிப்பட்டை சுக்கு பறங்கிப்பட்டைப்பிரப்பங் கிழங்கு வகைக்குவிராகனெடை-௩- வீதஞ் சிதைத்து நாலுபடி சலத்திற்போட்டு எட்டொன்றாய்வற்றக்கியாழஞ்செய்து நாளொன்றிற்கு மூன்றுநாழி கொடுக்கத்தீரும்.

வாயுப்பொருமலின் குணம்.

வாயுப்பொருமி அக்கினிமந்தித்து உண்ட அசனத்தை வாந்திக்கும் புளித்தேப்பமிடுங் காற்றுப்பரியும்,

நிவர்த்தி.

பத்துவிராகனிடை சுக்கைவேலிப்பரித்திச்சாற்றால் மைபோலனா
த்துவில்லைதட்டி இருசட்டியில்இரண்டுவிரற்கனம்உப்பைபரத்தி அதி
ன்மேல்வில்லையை வைத்து அதின்மேல்முன்போல்உப்பைப்பரத்தி
வோடுமூடி உ, சீலைமண்செய்துநாலுஎருவிற்புடம்போட்டுப்பொடித்து
த்தேகிறகொள்ளத்தீரும.

சீனிபலம(யசு)ஒன்றனாப்படி ஆவின்பாலிற்பாகுசெய்து அதிலகரி
சாலைச்சூரணம்பலம(க)யேலமனாயவிளங்கம்மிளகு வோமம்லவங்கப
பட்டைவெள்ளுள்ளிவாலுழுவைதிப்பிலிநற்சிரகாவண ககுப்பலம்-௫
சதகுப்பைபபலம(உ)மல்லிபலம்-௩-சுக்குபலம-சு-கிராம்பு விராகனிடை
உ-யிளவறுப்பாய்ச் சூரணித்துதூவிக்கிண்டி தேன்நெய்விட்டு லேகி
யஞ்செயதுநாழியொன்றிற்குக் கொட்டைப்பாக்குப்பிரமாணமமண்ட
லங்கொள்ளததீரும.

சுக்குபலம்-சு-சர்க்கரை தேன்வகைக்குப்பலம் உ, இவைகள்லே
கியஞ்செயதுகொள்ளத்தீரும்.

திரிகடுகுகடுக்காய்அரத்தைநறுக்குமூலம்பேய்ப்புடல்மல்லிவாய்
விளங்கம்வெட்பீர்க்குகருவேப்பிர்க்கு முருங்கைப்பட்டை சதிச்சார
ணைவேர்வகைக்குப்பலம(௫)இவைகள்சிதைத்துநாழிசலத்திற் போட்
டுகாற்படியாய்வற்றவைத்து இரண்டுநாழிகொள்ளததீரும்,

குண்டலவாயுக்குணம்

வாயுமிகுத்துக்கூப்பிட்டோடித்திரிந்து வயிற்றில்வந்து கற்போற்
றிரளும்மறுபடியும்சிதறிஉடம்பெங்கும்பரந்துபின்வந்தடங்கும்தீபன
த்தைஒடுக்கும்.

குடகரிவாயுக்குண

வாயுஅதிகரித்து குடல்முதுகுநெஞ்சுவிலாமுதலான இடங்களி
லோடிபுடைத்துபுரண்டுஅழன்றுவலிக்கும்உடலயரும் மலங்கருகும,

அனகதவாயுக்குணம்,

மென்மேல் உண்பதினாலும்நொந்தஅன்னம் ஆசற்கறிபுசித்தலா
லும்மலக்கட்டினால் வாயு அதிகரித்து வயிறுபொருமிவாங்கிபிராந்தியா
கும்,

அத்தருவாயுக்குணம்.

அக்கினிமந்தித்து சீரணம்காமல்உண்டவண்ணமாய்ப் பிரளாதி
க்கும்புளித்தேப்பமவாங்கிதாகம்காணுமவாயுதருகாற்று பரிந்துகொண
டிருக்கும்.

அடிவாயுக்குணம்.

வாயுஅடிக்கடிஉடவிற்பரந்தோடித்துடித்துச் சிலநேரமடங்கிருக்
கும்நாடோறுமதிகரித்து இப்படியேசேட்டைமிகச்செய்யும்,

குடல்வாயுக்குணம்.

குடலில்வாயுபுரண்டுவலித்துக்குமுறி இரையும் அலைபோற்கலங்கும்மந்திக்கும்

சகலவாயுக்கும் பொதுப்பிரயோகம்.

வேப்பிர்க்குமூக்கனாசாரணைவேர்கருவேப்பிர்க்குமுருங்கையீர்க்குவகைக்கொருபிடி சுக்குமிளகுமஞ்சள்வகைக்கு விராகனெடை-௩-யிவைகள்சிதைத்து யிரண்டுபடிசலத்திற்போட்டு அரைக்காற்படியாய்வற்றவைத்து போசனத்தின்பேரில் சாப்பிட்டுவரத்தீரும்

சேரகம்யிந்துப்பு ஓமம்திரிகடுகுகருஞ்சீரகம்பெருங்காயம்இவைகள்யோர்நிறையாயவெதுப்பிச்சூரணித்துதிரிகடிப்பிரமாணமதேனிலாவதுநெய்யிலாவது உண்ணத்தீரும்

சுக்குதிப்பிலிமிளகுவெள்ளுள்ளிஓமம் வாலுளுவையரிசி இவைகள்யோர்நிறையாயவெதுப்பிபனைவெல்லங்கூட்டி மெழுகுபோலரைத்துக்கொட்டைப்பாக்குபிரமாணம்சாப்பிட்டுவரத்தீரும

நற்சீரகம்கருஞ்சீரகம்திரிகடுகுஓமம்பெருங்காயம்வகைக்குப்பலம்(௧)வெதுப்பிச்சூரணித்துக்கரியுப்பைஎருக்கம்பழுப்புச்சாற்றுலரைத்து(௩)அல்லது(௫)புடம்போட்டு பஸ்பம்பண்ணியதைமேற்படிசூரணத்திற்குசிகர்கூட்டித்திரிகடியளவு யேழுநாள்கொள்ளத்தீரும

செவியம்கொடுவேலிவேர்திப்பிலி கண்டதிப்பிலி சுக்குவகைக்குவிராகனிடை-௩-சிதைத்துயிரண்டுபடிநீரிற்போட்டு அரைக்காற்படியாய்வற்றவைத்து அதில்சாதிலிங்கத்தை உரைத்துக்கொள்ளத்தீரும

நற்சீரகம்கருஞ்சீரகமதிரிகடுகுதிரிபலைதிப்பிலிமூலம் சித்திரமூலம்இந்துப்புசவுட்டுப்பு வாயவிளங்கம்கடுகுரோகணிஇவைகள்யோர்நிறையாய்ச்சூரணித்துத் திரிகடியளவுதேனிற்கொள்ளத்தீரும்

அசுவகந்தி நற்சீரகம்திரிகடுகு ஏலம்கிராம்பு அக்கிராகாரம்அரத்தை இவைகள்யோர்நிறையாய்ச் சூரணித்துத் திரிகடிப்பிரமாணம் தேனிற்கொள்ளத்தீரும்

மிளகுஓமம்வெந்தயம் சீரகம்ஏலம் தவேளைவேர் இவைகள்வெதுப்பிப்பொடித்துத்தேனிற்கொள்ளத்தீரும்

இரண்டுபடி ஆவின்பாலில்-௧-பலம்பனைவெல்லம் போட்டுப்பாகுசெய்து அதில்திரிகடுகுஏலம் சீரகம்வகைக்குப்பலம்௧ வெதுப்பிபொடித்துப்போட்டுக்கிண்டி தேன்நெய்வகைக்குப்படி-௨-விட்டுலேகியஞ்செய்துகொண்டு நாழியொன்றுக்கு கொட்டைப்பாக்குப்பிரமாணஞ்கொள்ளத்தீரும்

ஏலம்லவங்கம்குங்குமப்பூ சடாமாஞ்சிமஞ்சிட்டிகடுரோகணி திப்பிலி-மூலம்சாதிக்காய்லவங்கப்பட்டைவசவாசி சிற்றரத்தைசித்திரமூலம் அதிமதுரம்நற்சீரகம்கருஞ்சீரகம்கல்லுப்பு குருசாணிஓமம் வாலமிளகுவாய்விளங்கம்நிலவாகை வேர்வகைக்குக்கழஞ்சுமூன்று இவைகளைச்சூரணித்துஅதற்குச்சரிசீனிகூட்டித் திரிகடிப்பிரமாணம்சாப்பிட்டுவரத்தீரும்

வாயுக்குவிரோசனம்.

மிளகுயிந்துப்புவகைக்குக்கழஞ்சுக,சீரகம்கழஞ்சு-உ-சுக்குஅரியசிவதை வகைக்குவிராகனெடை-ரு-ஓமம்கழஞ்சு ௲-திப்பிலிகழஞ்சு-ச-கடுக்காய்கழஞ்சு-யரு-சத்திச்சாரணைவேர் சூரணம்கழஞ்சுபத்து இவைகள் வெயிலுலர்த்திப்பொடித்து திரிகடிப்பிரமாணங்கொள்ள விரோசனமாகிவாயுதீரும்

கொந்தகம் இரதம்நேர்வாளம்திரிகடுகசூரணம்வெள்ளுள்ளி கருஞ்சீரகம் அசமதாகம்வகைக்குக்கழஞ்சு-க இவைகளைப்பொடித்துமூற்றின தேங்காய்க்குள்ளடைத்துக்கண்ணில்மூநங்கைமுளையடைத்துயெழுதுணி மண்செய்துபுடம்போட்டுவோடுநீக்கியெடுத்துச்சுண்டைக்காய பிரமாணம உண்டைசெய்துதேனிற்கொடுக்கவிரோசனமாவும பத்தியம்மோருமஅன்னமும்வெந்நீருங்கொள்ளத்தீரும்

மல்லிவாய்விளங்கம் கடுரோகணி கடுக்காய் வாளம் இவைகளை யோர்நிறையாய்இஞ்சிச்சாற்றிலாட்டிப்பரித்திவிதைப்பிரமாணம்உண்டைசெய்துமேற்படி சாற்றிலேயாவதுமிளகுக்கியாழத்திலாவதுகொடுக்கச்சகலவாயுந்தீரும்

திரிகடுகுகடுரோகணி தேசாவரம்வாய்விளங்கம்வகைக்குக்கழஞ்சி-உ-சுத்திசெய்துமுளைபோக்கினவாளமகழஞ்சுபத்துஇவைகளையிஞ்சிசாற்றால்மைபோலாட்டி குன்றிப்பிரமாணம் உண்டைசெய்து இஞ்சிச்சாற்றிலாவது பனைவெல்லத்திலாவது இரண்டுண்டை கொடுத்து வெந்நீர்சாப்பிட நன்றாய்விரோசனமாகிசகலவாயும் மலக்கட்டுந்தீரும் மூன்போற் பத்தியங்கொள்ளவும்

சிவதைபலம்-க-திரிபலைமல்லிகடுரோகணி தேசாவரம் இந்துப்பு செவியம்முத்தக்காசுதிரிகடுகு கருஞ்சீரகமநற்சீரகம்சிறுநாகப்பூஅன்னபேதிவிலாமிச்சுவேர்வகைகள்கழஞ்சு மூன்றுதேவதாரம்லவங்கப்பத்திரிகோஷ்டம்சந்தனம்பொரிகாரங்கஸ்தூரிமஞ்சள் சடாமாஞ்சில்வாய்விளங்கம்வகைக்குக்கழஞ்சு-கத,இவைகளைவெய்யலிலுலர்த்திப்பொடித்துதிரிகடிப்பிரமாணம் இஞ்சிசாற்றிலிட சகலவாயுமலக்கட்டுந்தீரும மற்றவியாதிகட்டதற்குரிய அனுபானங்களிலிட்டால் குணமாவும்பொரிமிளகுநீரும அன்னமுமஉப்புங்கூட்டிச் சுடுகஞ்சியுங் கொள்ளலாம இரவில் மிளகுகியாழமகொள்ளவும

இவ்வைதவிராகனெடை.(௩-ம)திரிகடுகுவாய் விளங்கமசிராப்புலவங்கப்பட்டை-கோரைக்கிழங்கு-திரிபலை-வகைக்கு விராகனிடை-க-வெய்யலிலுலர்த்திபொடித்துஅதற்குசீனிச்சீனிகூட்டி திரிகடியளவுவெந்நீரிற்கொள்ளமலக்கட்டுதீருமபத்தியம மோரசனஞ்செய்யவும யிரவில்பிணக்குக்கியாழங்கொள்ளவுமசகலவாயுபாண்டுவீக்கம விஷநீர்கிராணிமுதலானதுமநீங்கும.

சிற்றாமணக்கெண்ணெய்படி-(த)சிறுள்ளிச்சாறுதண்ணீர்விட்டான்வேர்சாறு-பெரும்பேயக்குமட்டிச்சாறு வீதம்படி(வ)ஒன்றாயக்கலந்து அதில்கருஞ்சீரசம்சாதிக்காயபாதிபொடி-கிராம்பு அதிவிடயம அதிமதுரமசிறுநாகப்பூஉலர்ந்தஇஞ்சிவகைக்குவிராகனிடை-உ-கற்றுபூஞ்சருகுவில்வக்கொழுந்து இலந்தைக்கொழுந்து மூசுமுசுக்கையிலைநீர்முள்ளியிலைவகைக்குவிராகனிடை(ரு)அரைத்துப்போட்டுமெழுகுபதமாயக்காச்சிவடித்துஒருகாண்டிவீதங் கொள்ள(உ)-௩-விசை பிரவிர்த்தியாகுமபத்தியமபொரிமிளகுசாறுமஅன்னமும இரவில்சுக்குக்கியாழங் கொள்ளவுமஇப்படி-ச-ரு-மூனறுகொள்ளசகலவாயுந்தீரும்.

வாயுரோகப்படலம் முற்றிற்று.

உ

சிவமயம்.

குன்மரோகப்படலம்.

அதாவதுபித்தம அதிகரித்துகுடல்புரட்டல் வுண்டாகி என்னேர்மும்மயேப்பத்லைதபுண்டாக்கி அக்கினிமந்தத்தைப்பற்றியிருப்பதால்குன்மமஎனப்பெயர்பெற்றது,

விருத்தம்.

செப்பிஞேங்குன்மமெட்டுந்தெளிவறமானிடர்க்கு
ஒப்பிலாமல நூலாயந்துஒழுங்குடன் பிணிகள்நீங்க
அப்பறப்பூரகநாதனுந்துயயவேசெய்யவென்று
மெப்புடன்முனிவர்தாமுமமேன்மையாயுரைததிட்டாரே.

மேற்படிவிப்ரம்,

வாதபித்தசிலேத்தமகுன்மமசத்திகுன்மமயெரிகுன்மம் வலிகுன்மமசூலைகுன்மமகபாலகுன்மம்,

வாதகுன்மத்தின்குணம்.

ஈரலுமநெஞ்சுமவற்றுமஒருபக்கதனைப்பற்றிவயிற்றெரிந்துனோயும்குடலைப்புரட்டிவலிக்குமசத்திக்கும இருசிறுநீருவரும் சந்துகால்கை

பொருத்துகள் உளையும் இரவில்உபாதி அதிகரித்து நித்திரைசற்றும்வராது,

நிவர்த்தி.

வில்வக்காய்பலம் உ௰, வில்வவேர்பலம் ௰௫, இவைகள் இடித்து ௮-மரக்கால்தண்ணீரிற்போட்டு எட்டொன்றாய் வற்றவைத்து அதில் -௰௫-பலம வெல்லங்கரைத்துவடிகட்டிபாகுசெய்து இஞ்சிபலம்-௩-மிளகுபலம ௪ திப்பிலிஉள்ளிபலம உ, மஞ்சள் அசமதாகம வகைக்குபலம் ௫, வெவ்வேறாகயிடித்துவடிகட்டிப்பாகில்தூவி பசுவினெய்படி-௧-விட்டுலேகியஞ்செய்து நாழிககொருஎலுமிச்சங்காய்ப் பிரமாணங்கொள்ளத்தீரும,

வெள்ளுள்ளிச்சாறுநெல்லிச்சாறுஇஞ்சிச்சாறு இளநீர்நெய்பால் வகைக்குபடி-௧-ஒன்றாயககலந்துஇரண்டுபடியாய்வற்றவைத்துஅதில் கோஷ்டம்யேலமவெங்காரம் இந்துப்புரசகம் திரிகடுகுகொத்தமல்லி சிராம்புசேங்கொட்டைவகைக்குப்பலம்-௧-அரைத்துப்போட்டுக்காய்ச்சிவடித்துநாழியொன்றுக்குஒருகாண்டிவீதங்கொள்ளத்தீரும்,

கொடுவேலி புனலிசிலவாகைகுமரி இவைகளின்வேர்வகைக்குப் பலம்-௰-இடித்துபத்துப்படிதண்ணீரிற்போட்டுஒருப்படியாய்வற்றவைத்துவடித்துஅதில்திரிகடுகுஇந்துப்பு வகைக்குப்பலம ௧, பூண்டுபலம -௫-அரைத்துப்போட்டுஆவினெய்படி௧, கூட விட்டுக்காய்ச்சிநாழியொன்றிற்குஒருகாண்டிவீதமஉண்டுவரத்தீரும,

இஞ்சிசிவதைசிறுநில்விலவாகைகொடுவேலிகழற்கொடி இவைகளின்மூலம்முடக்கொத்தான்சமூலம்பூண்டுதிரிகடுகுவகைக்குபலம்௧ அரைத்துஅரைப்படி சிற்றாமணக்கெண்ணெயிற்போட்டுக் காய்ச்சிவடித்துவேளையொன்றுக்குஒருகாண்டிவீதங்கொள்ளத்தீரும்,

நொச்சிநிலவாகை கொன்றைகழற்கொடிஆதண்டைமுருங்கைசிவதைசெம்முள்ளிஇவைகளின்வேர்உள்ளிஇந்துப்புவகைககுப்பலம் -௧-இவைகளையரைத்துஒருபடி சிற்றாமணக்கெண்ணெயிற்போட்டுகாய்ச்சிக்கள்ளிப்பால்கழஞ்சுகூடவிட்டுநாழியொன்றுக்குஒருகாண்டிவீதங்கொள்ளத்தீரும்,

பித்தகுன்மக்குணம்

வயிறுமந்திக்கும்வலிக்கும்நெஞ்செரியும்வாய்நீர்ஊறும்ஒக்காளிக்கும்பெதிரொடுக்கும்கிறுகிறுக்கும்வியர்க்கும்வாய்கசக்கும உண்டியையொதுக்கும்மலத்திற்பித்தம்சுவரிகடுத்திறங்கும்சிறுநீர்விழும்மஞ்சணித்திருக்கலாம்

நிவர்த்தி

வில்வவேர் மல்லிவேர் சுக்கு யேலம் பாசிப்பயறு நெல்லிப்பருப்பு வகைக்கு பலம -௫- இடித்து ஒருபடிதண்ணீரிற் போட்டு அ

காக்காற்படியாய் வற்றவைத்துக்கொடுக்கவும்இப்படி-(௬) போதுகொடுக்கத்தீரும

சத்திச்சாரணைவேரை ஆவின்பாலிலவித்துலர்த்திச் சூரணஞ்செய்துசீனிகலந்துதிரிகடிபபிரமாணம் நெய்யிலாவதுதேனிலாவது கொள்ளத்தீரும

முக்காவேளைசமூலம்இடித்துப்பிட்டவித்துக்காற்படி சாறுபிழிந்து திரிகடுகுப்பொடி விராகனிடை -௯-கூட்டி (௬) வேளைகொடுக்கத்தீரும

சுக்குபலம்(வ)மிளகு ஓமம்வகைக்குப்பலம்(௨) சேங்கொட்டை அக்கிராகாரமவகைக்குப்பலம(முக்கால்) இவைகள்வெதுப்பிச்சூரணஞ்செய்து சத்திச்சாரணைவேர்ச்சூரணம்பலம் பதினறுகூட்டித்திரிகடியளவுவெந்நீரிற்கொள்ளத்தீரும

சிலேத்குன்மக்குணம்.

நாவு வழுவழுத்தினிக்கும் வாய்நீர் சுற்றி வாந்தியாகும் விக்கல் கொட்டாவி இருமல்தும்மல் இளைப்புவயிற்றிரைச்சல்காணும நீர்மலங்கட்டும் அன்னத்தைவெறுக்கும் புறந்தாள் வீங்கிவற்றும சீயபோற்கப்ம்விழும்

நிவர்த்தி.

திரிகடுகு திரிப்லைகல்லுப்பு செவியம்அரத்தை ஏலம்சன்ன லவங்கப்பட்டைகெந்தகம்மண்டதிப்பிலி கருஞ்சீரகம்நற்சீரகம்சீனிக்காரமஅக்கிராகாரம் கிராம்புஇந்துப்புசாதிப்த்திரிஅமுக்கருவேர்வகைக்கு விராகனிடை-௬-கடுகுரோகணிசாதிக்காய்வெங்காரம்வகைக்குவிராகனிடை-௯-நவாச்சாரம் கல்மதம்வகைக்குவிராகனிடை-௩-இவைகள்வெதுப்பிபொடித்து அதில்கோப்பிரண்டைனய அவித்துலர்த்தியிடித்த சூரணம்விராகனிடை-௬-கூட்டி இதற்குநிகர்வச்சிரவல்லிச்சூரணமுமசீனிபலம்-௫-சேர்த்துத்திரிகடியளவுதேனிறகொள்ளத்தீரும

வலிகுன்மக்குணம்.

வயிறுப்லவிதமாய்வலிக்கும் ஆகாரத்தைமறுக்கும்நெஞ்செரியும் எதிரொடுக்கும் மலத்திலபித்தம்சுவறிவிழும் தேகம்வற்றும

நிவர்த்தி

அரைப்படி தேங்காய்ப்பாலில் இந்துப்புபலம்-௧-பூண்டுபலம்-௨-சாரம்கழஞ்சு-௨-பொடித்துபோட்டுக்கள்ளிப்பால்கழஞ்சு-௨ கூடவிட்டுக்காய்ச்சிநெய்வடித்து அனதரைருகாண்டிவீதங்கொடுக்கததிரும்.

கொடிக்கள்ளிதிருகுகள்ளி கொடுவேலிநாயுருவி எருக்குஇவைகளின்சாம்பலையோர்நிறையாய் சலத்திற்கரைத்துதெளிவையிறுத்துக்காய்ச்சி உப்பெடுத்துக்கொண்டு நாழிஒன்றிற்கு-௧-கழஞ்சுவீதம்நெய்யிற்கொள்ளவலிமுதலான சகலகுன்மந்தீரும்

மூத்திரை தேங்காய்க்குள் வெடியுப்புவளையலுப்பு அட்டுப்புகல்லுப்பு வகைக்குபலம்-க-இந்துப்புபலம்-உ-பொடித்துப்போட்டு அடைத்துச்சாணியிற்பொதிந்து புகுல்போட்டுச்சிரட்டை நீக்கிமெழுகுபோல அரைத்து நாழி யொன்றிற்கு ஒரு கொட்டைப் பாக்குயளவு சாப்பிடத் தீரும

சத்திகுன்மக்குணம்.

வாயு அதிகரித்து வயிறுபொருமும் அன்னத்தைத்தள்ளும்செரிக்காது வாந்தியாகும்நெஞ்செரியும் புளித்தேப்பமிடும் உடல்வெளுத்து வற்றும் ஆயாசங்களப்புண்டாகும்மலங்கருகும்

நிவர்த்தி.

திரிகடுகுகடுக்காய்சிற்றரத்தைஓமம் வகைக்குவிராகனெடை(உ) வெதுப்பிப்பொடிதது அதற்குநிகா சீனிகலந்து திரிகடியளவுதேனிற் கொள்ளத்திரும்,

தாளிசபத்திரி பலம் ய-மிளகுபலம்-கஅ-சுக்குதிப்பிலி வகைக்குப்பலம்-உ-கூகைநீர்பலம் மூன்று யேலம் லவங்கபட்டை வகைக்குப

பலம்-அரை-இவைகள்சூரணித்து சீனிபலம் இருபது கூட்டித் திரிக டியளவுகொள்ளத்தீரும்,

இந்துப்புங்கற்கண்டுபொடித்துத்திரிகடியளவுகொள்ளத்தீரும்.

முட்டைக்கோழியைக் கால்குடல்ரோமம்நீக்கி அதின்வயிற்றுக் குள்காற்பலமிளகை உடைத்துவைத்துத்தைத்து-ச படி சலத்திற் போட்டு காற்படியாய் வற்றவைத்து வடித்து மூன்றுநாள் சாப்பிடத் தீரும்,

சுக்கு வராகனெடை-௰உ-திப்பிலி வராகனெடை பதினாறு-மி ளகு வராகனெடை-அ-ஏலம்விராகனிடை-ச-கிராம்பு விராகனிடை -உ-சிறுநாகப்பூவிராகனிடை-க-இவைகள்வெதுப்பிச் சூரணித்து அ தற்குநிகர் அமுக்கராவேர்ச் சூரணங்கூட்டிசூரணத்தின் இடைக்கு ச்சர்க்கரைகலந்து திரிகடிப் பிரமாணந் தேனிலாவது நெய்யிலாவது கொள்ளநீங்கும்,

கிராம்புசிறுநாகப்பூமல்லிபேலம் சன்னலவங்கப்பட்டை சாதிப் பத்திரி சற்சீரகம் மிளகு திப்பிலி வகைக்கு விராகனிடைமூன்று இ வைகள்வெதுப்பிப்பொடித்து அதற்குநிகர் சர்க்கரைகலந்து திரிகடிய ளவுகொள்ளத்தீரும்,

தூதுளைமுருக்கைப்பட்டை திப்பிலிசீனி இவைகள்யோர்நிறையா ய்ச்சூரணித்து திரிகடியளவு ஆவின்வெண்ணெயிற்கொள்ளத் தீரும்.

மிளகும்பொடுதலைக்கொழுந்தும் ஓர்நிறையாயரைத்து வேளை-க- க்குஒருகொட்டைப்பாக்களவுசாப்பிடத்தீரும்,

மாமஞ்சள் திரிகடுகுதிரிபலைஓமம்கடுக்காய்ப்பூசிற்றரத்தைதேற் றுவிரை வகைக்குவிராகனிடைமூன்று பொடித்துத் திரிகடியளவுதே னிற்கொள்ளநீங்கும்,

சிற்றரத்தைபலம் அரை- வெள்ளுள்ளிதிப்பிலிவகைக்குப்பலம் க-ஓமம்சுக்குமிளகுகடுக்காய் வகைக்குப்பலம்-வ-இவைகள்வெதுப்பி ச்சூரணித்து அதில்மூன்றுபலம் கருப்புக்கூட்டித் திரிகடியளவு ஆவி ன்வெண்ணெயிற்சாப்பிட்டு ஆவின்பால் நல்லெண்ணெவகைக்குப்படி க-சிற்றகத்தியிலைச்சாறுபடி-அரை-ஒன்றாய்க்கலந்து அதில் மிளகுநரி யுணைவேர் வகைக்குப்பலம்-க-அரைத்துப்போட்டுக்காய்ச்சிவடித்துத் தலைமுழுகிவரநீங்கும்,

தேனும்இஞ்சிச்சாறும்மாதுளம்பழச்சாறும் யோர்நிறையாய்க்கலந்துநாழியொன்றிற்கு அரைக்காற்படிவிதஞ் சாப்பிட்டுவரத்தீரும்.

தூதுளைசமூலம்கண்டங்கத்திரிவேர் நீர்முள்ளிசமூலம் இடித்துவடிகட்டின சூரணம்விராகனிடை-(ரு) கடுக்காய்ப்பொடி விராகனிடை(க)ஒன்றாய்க்கலந்து அந்திசந்தி திரிகடியளவுகொள்ளத்தீரும்.

விளாவிலை-நீர்முள்ளியிலை வகைக்கொரு பிடிபிடித்துச் சாறுவாங்கிமூன்றுநாள்காலையிற்கொள்ளத்தீரும்,

கருப்புக்குட்டிகுங்கிலியம்கடுக்காய்-கருஞ்சீரகம்-திப்பிலிநாயுருவியரிசி இவைகள்யோர்நிறையாய்த் தூள்செய்துதிரிகடியளவு கோழிமுட்டையில் பொரித்துண்ணத்தீரும்,

ஓமம்கடுக்காய் மிளகுசுக்கு-திப்பிலி-அரத்தை-அக்கிராகாரம்தேசாவரம-இவைகள் யோர்நிறையாய்ப்பொடித்து அதற்குப பாதிசர்க்கரைகலந்து திரிகடியளவுதேனிற்கொள்ளத்தீரும்,

கண்டங்கத்திரிவிரைபலம்-க-சிற்றரத்தை - அக்கிராகாரம்திப்பிலிதாளிசபத்திரி வகைக்குப்பலம்-வ-வெதுப்பிப்பொடித்துத்தூவிக்கிண்டிஆவினெய்படி அரைக்கால் விட்டுக்கிண்டி லேகியஞ்செய்து ஆறியபின்பு தேன்படி அரைக்கால்விட்டு நன்றாய் ரேகித்துக் கொட்டைப்பாக்களவு இருவேளைமண்டலங்கொள்ளவும்,

திரிகடுகுதிரிபலைதேற்றாவிரைகருஞ்சீரகம்நற்சீரகம் அதிமதுரம இந்துப்பு அசமதாகம்காட்டுச்சீரகம் கோரைக்கிழங்குமுள்ளிவேர்கண்டுரிவேர் வெள்ளுள்ளி தூதுளைவேர்இவைகள்யோர்நிறையாய் வெதுப்பிப்பொடித்து தேனும்நெய்யும்ஒன்றாய்க்கலந்து அதில்தூவிகலக்கிஅந்திசந்தி கொட்டைப்பாக்களவு சாப்பிடவும்,

ஆறுபடிஆவின்பாலில்ஏனிபலம்-பத்து-கற்கண்டுபலம்(ரு) பொடிசெய்துபோட்டு பாகுசெய்து அதில சேந்திற்சர்க்கரைபலம் பத்துதிரிகடுகுதிரிபலைகோஷ்டம்அதிமதுரம-யேலம்-லவங்கம்-சாதிக்காய்சாதிப்பத்திரி சிறுநாகப்பூ சடாமாஞ்சில்சீரகம்சிறுதேக்குதாளிசப்பத்திரிநன்னாரிதூதுளை வகைக்குக்கழஞ்சு-ரு சூரணித்துத் தூவிக் கலக்கிநெய்படி-க-தேன்படி-வ-விட்டுலேகியஞ்செய்து நாழியொன்றிற் கொட்டைப்பாக்களவுஉண்டுவரத்தீரும், மேற்படிலேகியத்தில் தாளகபற்பம்காந்தசெந்தூரம் வங்கசெந்தூரம் வைத்துண்ணசயகாசம் கபரோகம் முதலானதுந்தீரும்.

க்ஷயரோகக்குணம்.

அஸ்தியில்அனலேறி இரத்தம்வற்றி பித்தம்அதிகரித்துநெஞ்சிற்கயமுண்டாகி இருமல்இளைப்புக்காணும்தேகம்வற்றும் முகம் வெளுக்கும்வாய்நீரூறும் அரோசியங்காணும் தொண்டையிலே புண்போல் நோகும்நெஞ்சுபள்ளமவிழும் கால்விரல் நரம்பைச்சுருங்கவாகும்.

நிவர்த்தி.

ஆவிநெய்பால்வகைக்குப்படி-க-தூதுளம்பழச்சாறு கருள்ளிச்சாறுவகைக்குப்படி-அரை-ஒன்றாய்க்கலந்து அதில்தூதுளைவேர் அதினிலைமுடக்கொத்தானிலை கண்டங்கத்திரிவேர் அதினிலை சிறுவழுதலைவேர்முசுமுசுக்கையிலை ஆவாரைவேர்ப்பட்டை அதின்விரை அதினரும்புவகைக்கு ஒருஎலுமிச்சங்காயளவு மிளகுதிப்பிலி நற்சீரகம் அதிமதுரமகோஷ்டம கஸ்தூரிமஞ்சள் வாய்விளங்கம் மல்லியேலம்தாளிசபத்திரி வகைக்குவிராகனிடை(ரு) சிற்றரத்தைவிராகனிடை-அ-லவங்கப்பட்டை பலம்-பத்து-சாதிக்காய்கிராம்பு வகைக்கு விராகனிடை-௰-சாதிபத்திரிவிராகனிடை-உ-இவைகளை ஆவின்பாலிலரைத்துப்போட்டு முப்பதுவிராகனிடைசீனிகலந்து பதமாய்க்கிருதஞ்செய்து நாழியொன்றிற்குஒருகரண்டி வீதஞ்சாப்பிட க்ஷயமகாசந்தீரும்பத்தியமகரிப்புபுளிப்பு தள்ளவும்கருள்ளியும்தூதுளம்பிஞ்சுசக்கையுமே வறுத்து அசனத்தோடுகொள்ளவும்.

முயலிறைச்சிபலம்,நாற்பது, பனிரண்டுபடிசலத்தில்வேகவைத்துச,படியாய்வற்றவைத்திறுத்து அதில்ஆடாதோடையிலைச்சாறுஆவின்பால்வகைக்குக்குறுணி ஆவினெய்நாழி-உ௦, அப்பாலபெருங்குமிழ்வாகைமுன்னைபோாமல்லி வில்வம் அழுக்கறு தூதுளைகண்டங்கத்தரிமுள்ளி நெருஞ்சில்சிற்றாமல்லி பாதிரிமாள இவைகளின் மூலம் மிளகுதிரிபலை வகைக்குப்பலம் மூன்றுநூள்செய்து பத்துநாழிசலத்திற்போட்டுவற்றவைத் திறுத்தியாழம்நாழி-ச-கூட விட்டுசித்திரமூலம்சிறுதேக்குசிரகமசுக்குஉமம்அரத்தைகிராம்புகருஞ் சீரகமகற்கடகச்சிங்கிசெவியமதிப்பிலி சடாமாஞ்சில்லவங்கப்பட்டைகடுகுரோகணிதிப்பிலிமூலமலவங்கபத்திரிவகைக்குக்கழஞ்சு-உ அரைத்துப்போட்டுமூன்றுநாளவரைசிறு தியாயெரித்து நாலாநாள பதமாய்க்காச்சியிறுத்துவேளைவொன்றிற்குஒருகரண்டிநெய்யில் தேன்விராகனிடை-உ-திப்பிலித்துள்விராகனிடை-க-ஒன்றாய்க்கலந்துகொடுத்துவரவும்,

தூதுளை பிரமிசங்கு ஆடாதோடைமுருக்குமுல்லைவில்வம்கொடுவேலி இவைகள் சாறுவகைக்கு நாழி - க, ஒன்றாய்க்கலந்து அதில் சீனிபலம்பத்து கரைத்துப்பாகுசெய்து தூதுளை சங்குகண்டங்கத்திரிசிறுவழுதலைவில்வம் அழுக்கறுக்கரிமிராட்டிசெம்முள்ளிகீழ்க்காய்நெல்லி இவைகளின்வேர் திரிபலைதிரிகடுகுஅரத்தை வகைக்குப்பலம்

௧,ரவியிலுலர்த்திச் சூரணித்துப்போட்டு நெய்தேன்விட்டு லேகியஞ்செய்து சாப்பிட்டுவரத்தீரும்.

அவுரியிலைச்சாறுநாழி(௨) முற்றினதேங்காய்ப்பால்நாழி(௧)ஒன்றாய்க்கலந்து அதில்பூநாகம் ஒரு மாங்காயளவு அரைத்துப் போட்டுபதமாய்க்காய்ச்சிவடிகட்டிவேளையொன்றிற்குஒருகரண்டிவிதஞ்சாப்பிட்டு வரத்தீரும்.

பித்தக்ஷயக்குணம்.

பித்தமதிகரித்து அக்கினி கொண்டுஉடல் உள்ளங்கால்உள்ளங்கையெரிந்து கடுக்கும் வெதும்பும் நெஞ்சிற்கபமுண்டாகி இருமல்இளைப்புக்காணும்கபம்சிவந்துவிழும்வாந்திபண்ணும்வயிறுகழியும்நீர்கடுக்கும் அரோசியம் அன்னத்துவேஷமுண்டாகும்,

நிவர்த்தி.

குமரிகொடுப்பை கரிசாலைகீழ்க்காய்நெல்லிஅகத்திவிஷ்ணுகாந்தைதானமூவிழுது நீர்முள்ளிமுசுமுசுக்கை பேய்ப்புடல் நீர்வள்ளிக்கிழங்கு தாமரைக்கிழங்கு ஈருள்ளிவல்லாரைவெள்ளரிதூதுளைவேர்கரும்புஎலுமிச்சை வில்வம்கண்டங்கத்தரிபிரமிகஞ்சாவெற்றிலைபுளியிலைசெருப்படைகருவேப்பிலை பசலிபுளியாரைதுளசிமிளகுதக்காளிஅமுக்கரு இவைகளின்சாறுஇளநீர் ஆவின்பால் நெய்வகைக்குபடி-௧ ஒன்றாய்க்கலந்துஅதில்அதிமதுரம்நற்சீரகம்வெட்பாலையரிசிகோஷ்டம்ஏலம்அதிவிடையம்சுக்குவெள்ளைக்குங்கிலியம்அரத்தைதிரிபலைநெற்பொரிமிளகுதிப்பிலிவகைக்குப்பலம்-௧,வெதுப்பிப்பொடித்துதூவிக்கிண்டிகற்கண்டுபலம்-௰,தேன்படி(½)கூட்டிலேகியஞ்செய்துவேளையொன்றிற்குஒருகொட்டைப்பாக்குப்பிரமாணஞ்சாப்பிட்டுவரத்தீரும்.

நெல்லிவற்றல்பலம்-௱, இடித்துத்தண்ணீரிற்போட்டுஎட்டொன்றாய் வற்றவைத்துவடித்துஅதில்சீனிபலம்பத்துகரைத்துப்பாகுசெய்துதிரிகடுகுஓமம்சித்திரமூலம் கிராம்புதக்கோலம்குக்கில்வாய்விளங்கம்கூகைநீர் மதுரம்வகைக்குப்பலம்-௧- பொடித்துத் தூவிநெய்படி-௧, தேன்படிஅரை கூடவிட்டுலேகியஞ்செய்து கொட்டைப்பாக்குப்பிரமாணம் ஒருமண்டலங்கொள்ளத்தீரும்.

அரசம்பட்டைஅத்திப்பட்டைவகைக்குப்பலம்(௨௰) இடித்துப்பதக்குநீரிற்போட்டு எட்டிலொன்றாய் வற்றவைத்து வடித்து அதில

கற்றாழஞ்சாறு வெள்ளறுகு ஆவினெய்வகைக்குப்படி (க) ஒன்றாய்க்க லந்து-ஆல்-அரசு- அத்தி இவைகளின் மொழு அதிமதுரம்கோஷ்டம்ச ந்தனம்இலுப்பைப்பூதாமரைக்கிழங்குசெங்கழுநீர்க்கிழங்குவெள்ளறு குபேரீச்சம்பழம் சிறுநாகப்பூசண்பகப்பூலவங்கப்பத்திரி கச்சோலமா காணற்றுதுன்னரிவேர் அல்லிக்கிழங்கு அமுக்கறாவேர்ஏலம்வகைக் குவிராகனிலடை-க-இவைகள் ஆவின்பாலிலரைத்துப்போட்டுஐந்துநா ள்வரைசிறுதீயாயெரித்து ஆறுநாள் பதமாய்க்காய்ச்சி வடித்து நாழி யொன்றிற்கு ஒருகரண்டிவீதஞ்சாப்பிட்டுவரபித்தகாசம்உளமாந்தை ள்லும்புருக்கிதீரும்,

காசரோகக்குணம்,

அக்கினிபதிகரித்து நெஞ்சுபுண்ணாகி அடிக்கடி புகைந்திருமும்க பத்தோடுஇரத்தம்விழும்தொண்டைபுண்போல்நோவும்கம்மும்வாந்தி பண்ணுமகளையுண்டாகும்நாசிதணற்போலெரியும்தேகம்வெதும்பும்வ ற்றுமகடிக்கும்முறுக்கும்தலைவலிக்கும்வாயுபதிகரித்துவயிறுநோவும்

நிவர்த்தி.

சத்திச்சாரணைக்கிழங்குசதாவேரிக்கிழங்கு சீந்திற் கொடி ஆடா தோடை தூதுளைபிரமி தீமுருக்குவகைக்குப்பலம்-க,இடித்துஆறுபடி தண்ணீரிற்போட்டொருபடியாய் வற்றவைத்துவடித்து அதில்நல்லெண் ணெய்படி-க-கூட்டிவிட்டு மிளகுஇந்துப்புசுக்குதிப்பிலிகடுக்காய்நற்சீர கம்ஓமம்கற்கடகசிங்கி ஏலம்கிராம்பு வெள்ளுள்ளிகடுகுரோகணிவ கைக்குக்கழஞ்சு-௩, அரைத்துப்போட்டுக்காய்ச்சிவடித்துஉள்ளுக்கு ச்சாப்பிட்டு ஸ்நானஞ்செய்துவரத்தீரும்.

சத்திச்சாரணை கரிசாலைகீழ்க்காய்நெல்லி தூதுளைசங்குபிரமிபொ டுதலைகண்டங்கத்தரிநன்னாரி இவைகளின்சாறுவகைக்குப்படி (௨) நல் லெண்ணெய்படி (க) ஒன்றாய்க்கலந்துஅதில் திப்பிலிசம்பு-மிளகுவெ ருங்காயம் நற்சீரகம்திரிபலைமல்லிகொடிவேலிகோரோசனைவகைக்குக் கழஞ்சு(க)அரைத்துப்போட்டுப்பதமாய்க்காய்ச்சிவடித்துவேளையொ ன்றுக்குஒருகரண்டிவீதம் சாப்பிட்டுஸ்நாஞ்செய்துவரத்தீரும்,

தூதுளைகண்டங் கத்தரிமுள்ளி செங்கொட்டி ஆடாதோடைவ கைக்குப்பலம் (௨௫) மிளகு திப்பிலிகடுக்காய் அரத்தை வகைக்குப் பலம்-௩, இடித்து இருபதுபடி தண்ணியிற்போட்டு எட்டொன்றாய்வ

ற்றவைத்துவடித்துஅதில் ஆவினெய்பால்வகைக்கிப்படி(௨) திரிகடுகு திரிபலை-தாளிசபத்திரி-கோஷ்டம்-அக்கிராகாரம்-வாய்விளங்கம் ஓம ம்சிரகம்அரத்தை- பேராத்தைவால்மிளகு- ஏலம்கிராம்பு சாதிக்காய் -சாதிப்பத்திரிவகைக்கி கழஞ்சுமூன்று ஆவின்பாலாலரைத்துப்போட் டுக்காய்ச்சிவடித்து வேளையொன்றிற்கு ஒருகரண்டியளவு கொள்ளத் தீரும்.

மந்தாரகாசத்தின் குணம்,

முகம்காது ஊரும்நாசிகரகரத்து தும்மலுண்டாகும் நீர்வடியும் நெஞ்சிற்கபங்கட்டி இருமுமஇளக்கும் நெஞ்சும்விலாவும்வலிக்கும்ம ந்தாரகாலங்களில்நோய் அதிகப்படும்பசிமங்கிக்கும்வயிறு பொருமும் தேகம்அதைக்கும் கிறுகிறுக்கும்.

நிவர்த்தி,

ஆவினெய்படிஒன்றில்துதுளைகண்டங்கத்தரிசிறுவழுதலைஇம்பூ ரலசத்திச்சாரணை சாட்டரணை - முசுமுசுக்கை முக்காவேளைகாட்டா மணக்குசித்திரமூலம் இவைகளின்வேர்முசுமுசுக்கையிலை- வகைக்கு ஒருஎலுமிச்சங்காய்ப்பிரமாணம் காலதலைசிறகுகுடல்நீக்கியசகதிண் ணிவௌவால்(௫) திப்பிலிதேசாவரம் ஓமம் சிற்றரத்தைகஸ்தூரிமஞ் சள்-கருஞ்சிரகம்-கடுகுரோகணிவசம்பு-குருசாணிஓமம் இந்துப்புகல் லுப்பு மொட்டிலுப்புவளயலுப்பு - வகைக்குவிராகனெடை (௫) வெ ள்ளுள்ளிபலம்(௧) கிராம்பு-சாதிக்காய் விராகனெடை(௰)சாதிப்பத்திரி விராகனெடை(௧)இவைகளை அரைத்துப்போட்டுலேகியஞ்செய்துதே ன்படி(௨)கூடவிட்டுக்கிண்டிநாழியொன்றுக்கு ஒருகொட்டைப்பாக்கு ப்பிரமாணஞ் சாப்பிட்டுவரத்திரும்.

பிரமி தேட்கொடுக்கு சாரணைசங்கு வேராமுட்டி வேப்பம்பட் டைகொச்சி கரிப்பானமொடுதலை -ஆடாதோடை கண்டங்கத்திரி சிற் றுவளை கீழ்க்காய்நெல்லிதுதுளம் இவைகளின்சாறு வகைக்குப்படி -௨,நல்லெண்ணெய்படி-௧, ஒன்றாய்க்கலந்து அதில்மாசிக்காய்-திரிகடு குசெவியம்தாமரைக்கிழங்குதக்கோலம்திரிபலை முத்தக்காசுசித்திரமூ லம் ஆனைத்திப்பிலிவிளாவரிசி அதிவிடையம் சிரகம்காயம் கடுகுரோ கணிவெட்பாலையரிசி சிறுதேக்கு வகைக்குக்கழஞ்சு -௧, அரைத்து ப்போட்டுப் பதமாய்க்காய்ச்சிவடித்து நாளொன்றுக்குஒருகரண்டி வீத ங்கொள்ளத்திரும்,

ஆடாதோடைசமூலம் இடித்துவடிகட்டின சூரணம்பலம் பத்து மல்லிமிளகு அரத்தைசுக்கு அதிமதுரம்தாளிசப்பத்திரி இந்துப்புபேரரத்தைகோஷ்டம்கருஞ்சீரகம கடுகுரோகணி அதிவிடையம் சிறுநாகப்பூவாலுளுவையரிசி கிராம்புசிறுதேக்குஏலமருக்கில இஞ்சிவகைக்குப்பலம்-க, இவையெல்லாம் இடித்துச்சூரணித்து அதற்குநாலிலொன்றுசீனிகூட்டித் திரிகடியளவுநெய் தேனிற்கொள்ளத்திரும்,

சிந்திலதூதுளம்வகைக்குச்சாறுநாழி-க, கலந்து அதில்திரிகடுகு பலம்மூன்று ஆவின்பாலாலரைத்துப்போட்டுத் தேன் நெய்விட்டுலேகியஞ்செய்து நாளொன்றுக்கு ஒருகொட்டைப்பாக்களவு சாப்பிட்டுவரத்திரும்.

ஆவினெய் வெள்ளாட்டுப்பால்எருக்கம்பால்வகைக்குப்படி-க,ஒன்றாய்க்கலந்து அதிற்கற்கண்டுபலம்-அ- பொடித்துப்போட்டுப்பாகுசெய்துதூதுளம்சிறுகாஞ்சோரி முசுமுசுக்கை கண்டங்கத்தரி கரிசலைசங்குமுள்ளங்கிமணத்தக்காளி ஆடுதின்னாப்பாலை சிறுவழுதலைநிலவாரைகடுக்காய்கோஷ்டம்திப்பிலிகருஞ்சீரகமமிளகுவசம்புஇந்துப்புசிற்றரத்தை பேரரத்தைவாலுளுவைகூகைநீர்சீரகம்கற்கடகச்சிங்கிசிறுநாகப்பூநெல்லிவற்றல் வகைக்குப்பலம்-வ, விகிதம்இடித்துச்சூரணித்துத்தூவிகின்றிதேன் படி-உ, கூட்டிவிட்டுலேகியஞ்செய்து நாளொன்றுக்கு ஒருகொட்டைப்பாக்குப்பிரமாணம் தாளகபற்பமும்பவளபற்பமும்வைத்துச் சாப்பிட்டுப் பத்தியம்வெள்ளாட்டுப்பாலு அன்னமும்புசித்துஆவிநெய்யாவதுமுக் கூட்டெண்ணெயாவதுதேய்த்துஸ்நானஞ்செய்துவர மந்தாரகாசம க்ஷயம் கிரந்திகுஸ்டமேகந்திரும்.

விஷபித்தகாசக்குணம்-

வளர்பிறைதோறும் பித்தமதிகரித்துநுரைத்துப்பொங்கிக்கபமுண்டாகிநினைவுதெரியாமலஇருமல்அலுப்புக்கண்டுபித்தம் வடிந்தபோதுநிற்கும் இறுகிறத்துவரும்சுரங்காயும் தொண்டைநெஞ்சுவிலாபுண்போல்நோவும் அன்னஞ்செல்லாது,

நிவர்த்தி,

தூதுளங் கண்டங்கத்தரி இம்பூறல் காட்டாமணக்கு இவைகளின்வேர் வகைக்குப்பலம் பத்து 'கொடுவேலிவேர் பலம் மூன்று சத்திச்சாரணை முக்காவேளை சங்கங்குப்பி சிந்நி அவுரிநிலவாகைதி

ரிகடுகுதேசாவரம்அசமாதகம் வாய்விளங்கம்-மல்லிநற்சீரகம் - கடுகுரோகணி-கஸ்தூரிமஞ்சள்-கருஞ்சீரகம்-வகைக்கு விராகனெடை-௫-அரத்தைவிராகனெடை-அ-கடுக்காய்-நெல்லிவற்றல்வகைக்குப்பலம்-க-பேய்ப்புடல்பலம்-உ- இவைகளையிடித்துச் சூரணஞ்செய்து திரிகடிப்பிரமாணந்தேனிற் கொள்ளத்தீரும்.

வில்வவேர்பலம்முப்பது இடித்துமுக்குறுணிநீரிற்போட்டுமூன்றுபடியாய் வற்றவைத்து அதில்குமட்டி மாதுளம்பழச்சாறுபடி-க-நாரத்தம்பழச்சாறுபடி(வ) ஒன்றாய்விட்டு வெல்லம்பலம்முப்பதுகரைத்துவடிகட்டிப் பாகுசெய்து சுக்குபலம்மூன்றுமிளகுபலம்-ச- திப்பிலிபலம்(கஅ) செவியம்சித்திரமூலம் தாளிசபத்திரி சிறுநாகப்பூவகைக்குப்பலம(க) திப்பிலிமூலம்-வகைக்குப்பலம்-உ-ஏலம் லவங்கப்பத்திரிவகைக்குப்பலம்(வ) இவைகள்வெதுப்பிச்சூரணித்துப்பாகில்தூவிக்கிண்டி பசுவின்நெய்படி-வ-விட்டுலேகியஞ்செய்து வேளையொன்றுக்கொருகொட்டைப்பாக்களவு சாப்பிட்டுவரத்தீரும்,

இரத்தகாசக்குணம்.

இருமல்காணும் வாயாலிரக்தம்அடிக்கடிவிழும் உடல்வற்றும்நாவுலரும் வழுவழுக்கும அன்னஞ்செல்லாது,

நிவர்த்தி,

சங்கிலைச்சாறும் நல்லெண்ணெயும் யோர்நிறையாய் ஒன்றாய்க்கலந்து அதில் ஒருதுட்டிடை மஞ்சள்பொடிகலந்து வேளையொன்றுக்குஅரைக்காற்படிவிதம் ஐந்துநாட்காலமேசாப்பிட்டுப் பத்தியம் உப்புபுளிதள்ளவும்பத்தாநாள ஓமந்தேய்த்துஸ்நானஞ்செய்து முப்பதாம்நாளமுக்கூட்டிடநெய்தேய்த்து நீராடி உப்புபுளிகூட்டிக்கொள்ளவும்,

தண்ணீர்விட்டான்கிழங்குச்சாறு ஆவினெய்படி-க- ஒன்றாய்க்கலந்து அதில்-அத்தி-அரசு- ஆல்-இவைகளின்விரை நிலப்பனைக்கிழங்குசாதிக்காய் கிராம்புசாதிப்பத்திரி திருமஞ்சனத்திரவியம் வகைக்குவிராகனெடை-உ-அரைத்துப்போட்டுக்காய்ச்சி வடித்து ஒருகாண்டிவிதம் அந்திசந்திகொடுக்கத்திரும்,

துளசிச்சாறும் நல்லெண்ணெயும் ஒன்றாய்க்கலந்து வேளையொன்றுக்கு அரைக்காற்படிவிதம்மூன்றுநாள்காலையில் சாப்பிட்டு(௫)நாள்பத்தியமாயிருக்கத்தீரும்.

புரசம்பட்டைபலம்-௧௨-இடித்துமைத்துப்படி சலத்திற்போட்டு அடைகியாழமாய் வைத்துக்கொண்டு வேளையொன்றுக்கு அரைக்காற்படிவிதம்(௰) நாள்சாப்பிடத்தீரும்,

பெரும்பூசணிக்காய்ச்சாறு கற்றாழைவேர்ச்சாறு இளநீர்-ஆவின்பால்நெய்வகைக்கும்படி (௧) திரிகடுகு-கற்கடச்சிங்கி கடுக்காய் அரத்தை அக்கிராகாரம் நற்சீரகம் ஏலம் தாளிசப்பத்திரிகிராம்புமல்லிநெல்லிவற்றல்வால்மிளகு அதிமதுரம்சதகுப்பை-வகைக்குவராகனெடை-௨-கண்டங்கத்திரி தூதுளை கரிமுள்ளிநறுஆடாதோடை, இவைகளின்வேர் வகைக்குப்பலம்(வ) அரைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்து வேளையொன்றுக்கொருகரண்டிவீதஞ் சாப்பிட்டுவரத்தீரும்,

ஆடாதோடையிலைச்சாறு ஆவின்நெய்வகைக்குப்படி (௧) ஒன்றாய்க்கலந்து அதில்நிலவேம்பு குட்சப்பாலைப்பட்டை முத்தக்காசு-அதிமதூரம்சந்தனம் இலுப்பைப்பூ நன்னாரிவேர் விலாமிச்சமவேர்தாமரைக்கிழங்கு பெருங்குரும்பை வகைக்குப்பலம்-வ-மேற்படிசாற்றிலாட்டிப்போட்டுக்காய்ச்சிவடித்து வேளையொன்றுக்கொருகாண்டிவீதங்கொள்ளத்தீரும்,

உளைமாந்தைகுணம்,

உடல்கனத்துளைந்து குத்திக்குடைந்துகைகாலெரிந்து சுரம்தலைவலிஇருமல் ஆயாசம் மயக்கப்புலப்பமுண்டாகும் நினைவுதடுமாறும் வாயால்வெண்ணுரைதள்ளும் வாய்நீர்வடியும் அன்னஞ்செல்லாதுதேகமெலியும்,

நிவர்த்தி,

பெரும்பூசணிக்காய் சிறுகீரை, பொன்னாங்கண்ணி இலைகளின்சாறுஇளநீர்ஆவின்பால் நெய்வகைக்குப்படி-௧- இஞ்சிச்சாறுபடி-வ-ஒன்றாய்க்கலந்து அதில்திரிகடுகுதிரிபலைலவங்கம்அதிமதூரம், ஏலம்சந்தனம்பூலாக்கிழங்கு செங்கழுநீர்கோஷ்டம் சிறுதேக்கு மரமஞ்சள்சண்பகப்பூ சாதிக்காய்சாதிபத்திரி லவங்கப்பட்டைகருஞ்சீரகம்நற்சீரகம்வகைக்குவிராகனெடை-௨-அரைத்துப்போட்டுக்காய்ச்சிவடித்து அதில்சீனிபலம் (௨) தேன்படிஅரைக்கால் கூடவிட்டு விரவி வேளையொன்றுக்கொருகரண்டிவிதஞ் சாப்பிட்டுவரத்தீரும்,

சிவன்வேலம்பு நிலக்குமிழ்வல்லிகோஷ்டம் வேம்பாகும்பட்டைகருஞ்சீரகம் அதிமதுரம்மிளகு தூதுளமவகைக்குப்பலம்-வ-அரைத்துஒருபடிநல்லெண்ணெயிற்போட்டுக்காய்ச்சிவடித்து வேளையொன்றிற்கு ஒருகரண்டிவீதமுண்ணத்தீரும்,

சுரமாந்தைக்குணம்.

அகோரமாய்ச் சுரங்காயும் இருமல் ஆயாசம் அன்னத்துவேஷம்அரோசியங்காணும் தேகமெலியும்,

நிவர்த்தி,

இளநீர் ஆவினெய்வகைக்குப்படி-உ-சிற்றாமல்லிநன்னாரிகிழ்க்காய்நெல்லிபிச்சிவிலாமிச்சு ஆடாதோடைநிலவேம்பு இவைகளின்வேர்வெட்பாலையரிசிதிப்பிலிகடுகுரோகணி முந்திரிப்பழம்சந்தனமல்லிவகைக்குக்கழஞ்சு-உ-அரைத்துப்போட்டுக்காய்ச்சிவடித்து நாழியொன்றிற்குஒருகரண்டிவீதஞ்சாப்பிட்டுவர உளமாந்தைசுரமாந்தைபித்தம்மேலாயாசமதிரும,

திப்பிலிபலம் (க) சீரகம்சுக்குஏலம்திப்பிலி மூலம்சிறுதேக்குவாய்விளங்கம்கடுக்காய்மிளகுவகைக்குப்பலம்-வ- வெதுப்பிச் சூரணித்துத்தேன் சீனிகூட்டிப்பிசைந்து ஒருபோதுக்குக் கொட்டைப் பாக்களவுப்பிட்டுவரத்திரும்,

சுவாசகாசத்தின் குணம்,

தேகமுலர்ந்துவரும் சுரங்குளிர்இருமும் ஆயாசப்சுவாசம்தலைவிகாணுமவயிறுபொருமி வாந்தியுண்ணும் மலங்கட்டிவியர்வைதாகம்மிகும்புறந்தாளதைக்கும்.

நிவர்த்தி

தாளகம்லிங்கம் மனோசிலைவெங்காரம் திரிகடுகுநாவிக் கிழங்குவகைக்குவிராகனிடை-உ-இவைகள்சுத்திசெய்து இஞ்சிச்சாற்றால்-௪சாமமாட்டிச்சிறுகுன்றிக்காயளவு உண்டைசெய்துமுலைப்பாலஇஞ்சிச்சாறு சிற்றரத்தையிவைகளின் கியாழத்திலிடசுவாசகாசம் க்ஷயம்சயங்குரந்திரும்,

வாய்விளங்கம் சுக்குசிறுதேக்கு சீரகம்மிளகு வகைக்குப்பலம் -ச-திப்பிலிமூலம்செவியம்சித்திரமூலம் அரப்பொடிகையாந்தகரை வகைக்குப்பலம்-உ-திரிபலைதக்கோலம் வகைக்குப்பலம் இவைகள் வெதுப்பிப்பொடித்த சூரணத்துடன் திப்பிலிச்சூரணம்படி-க-சீனிபடி-ஐ-கூட்டித்தேன்விட்டுப்பிசைந்து அரைமண்டலந்தானியப்புடம்வைத்தெடுத்து நாளொன்றிற்குகொட்டைப்பாக்களவுசாப்பிடத்திரும்.

சுவாசகாசம் க்ஷயம்காசம் உளமாந்தை முதலான சிலேத்மரோகங்கட்கு,

முயலிரைச்சி ஆடாதோடைவேர்பலம்-கஉ-கடம்புஅசுவகெந்தி சிறுவழுதலைகோரைக்கிழங்கு தூதுளம்சங்கு நன்னாரி கண்டங்கத்தரிவட்டத்திருப்பி சத்திச்சாரணைபெருமரம்கீழ்க்காய்நெல்லிஇம்பூரல் கச்சந்திராயகையாந்தகரை இவைகளின்வேர்வகைக்குப்பலம்-க-இவைகள்இடித்து-கூ-படிசலத்திற்போட்டு எட்டொன்றாய்வற்றவைத்து வடித்து அதில்ஆவினெய்படி-உ-பால்படி-ச-கூடவிட்டுவிளாவரிசி தேவதாமதிரிகடுகு திரிபலைவெட்பாலையரிசிகற்கடகச்சிங் கிஇந்துப்புசிறுதேக்கு அதிமதுரம்முந்திரிப்பழம்கோஷ்டம்ஏலம்கிராம்புநிலவேம்பு மஞ்சள்திப்பிலிமூலம் வாலுளுவையரிசி கருஞ்சீரகம் சடாமாஞ்சில் கார்கோலரிசி அதிவிடையம் அரத்தைஅகில்மரமஞ்சள்கடுகுரோகணி லவங்கம் செவ்வள்ளிக்கொடி பெருமரத்துப்பட்டை சீந்திற்சர்க்கரை செஞ்சந்தனம் வகைக்குக்கழஞ்சு -உ- இவைகள் வெந்நீரிலரைத்துப்போட்டுப்பதமாய்க்காச்சிவடித்து நாளொன்றிற்கு ஒருகாண்டிவீதஞ் சாப்பிட்டுவரத்திரும்,

நூவங்கிப்பங்கைபலம்-ஈ-இடித்துபதினாறுபடிசலத்திற்போட்டு எட்டொன்றாய் வற்றவைத்திருந்து ஆவினெய்படி -க- கூடவிட்டு கஸ்தூரிமஞ்சள்கடுக்காய் வகைக்குப்பலம்-உ-வன்னிவேர்ப்பட்டைபலம் -க-அரைத்துப்போட்டுக்காய்ச்சிவடித்து அதில் கரிஞ்சீரகம்பலம்- க-பொடித்துப்போட்டு வைத்துக்கொண்டு அந்திசந்திஒருகாண்டிவீதஞ் சாப்பிட்டுவரத்தீரும்,

திப்பிலிபலம்மூன்று அரத்தைபலம்-உ-மிளகுவால்மிளகு ஏலம் லவங்கப்பத்திரி லவங்கப்பட்டை அதிமதுரம் திரிபலை - சாதிக்காய் சாதிப்பத்திரி - கிராம்பு - சடா மாஞ்சில் - மல்லி தாளிசப்பத்திரி

குருசானி செவியம் சிறுதேக்கு கருஞ்சீரகம் - நற்சீரகம்-அத்தி-திப்பிலி கூகைநீர்-நறுக்குமூலம்-அமுக்கருவேர் அக்கிராகாரம்வகைக்குக்கழஞ்சு மூன்று இவைகளை ரவியிலுலர்த்தி இடித்துவடிகட்டின சூரணத்துடன துதுளைகண்டங்கத்தரி கரிசாலை-இவைகள் ஓர்நிறையாயிடித்து வடிகட்டின துள்படி(வ) ஒன்ருய்க்கலந்து அதற்குப்பாதி சீனிகலந்து திரிகடியளவுதேனில் அந்திசந்தி சாப்பிட்டுவரசிலேத்மம்(௯௯-ம்)தீரும்.

திப்பிலிகழஞ்சு(௬௰)சிற்றரத்தை கழஞ்சு முப்பது கொத்தமல்லிகழஞ்சு(௰௨)மிளகு-சுக்கு-செவியம்-திப்பிலிமூலம்-மதூரம்-நெல்லி சீரகம் கருஞ்சீரகம், ஏலம் நறுக்குமூலம் சிறுதேக்கு-கூகைநீர்-அமுக்கரு குராசானியோமம் வால்மிளகு தாளிசபத்திரி கடுக்காய்வகைக்குக்கழஞ்சு (ரு) லவங்கப்பட்டை லவங்கப்பத்திரி சாதிக்காய்-சாதிப்பத்திரி கிராம்பு வகைக்குக்கழஞ்சு மூன்று இவைகளை யிடித்து வடிகட்டினதூளுடன் தூதுளை கண்டங்கத்தரி-கரிசாலை இவைகளின் சூரணம் வகைக்குப்படி(வ)கூட்டி ஒருபடி கொம்புத்தேனைக்காய்ச்சி அதிற்றூவிக் கிண்டி ஆவினெய்படி (வ)விட்டு லேகியஞ்செய்து வேளையொன்றுக்குக் கொட்டைப்பாக்களவு சாப்பிட்டுவர சிலேத்மம்(௯௯-ம்)தீரும்.

(சிலேத்மரோகங்களுக்குத் தயிலம்)

அசுவகெந்திக்கிழங்கு சிற்றுமுட்டிவேர் கொம்பரக்கு வகைக்குப்பலம் பதினறு இடித்துப்பதக்கு ஜலததிற்போட்டு நாலிலொன்ருய் வற்றவைத்து அதில் நல்லெண்ணெய்படி (சு) ஆவின்தயிர் தண்ணீர்பதக்கு ஒன்ருய்க்கலந்து அதில் சிற்றரத்தை முந்திரிப்பழம் சிற்றுமுட்டி நன்னரி முத்தக்காசு அதிமதுரம்-கோஷ்டம்-மரமஞ்சள் சீரகம் சதகுப்பை கடுகுரோகணி மஞ்சிட்டி தேவதாரம் பெருங்குரும்பை சந்தனம் அரேணுகம் திப்பிலிமூலம் அசுவகெந்தி வகைக்குக்கழஞ்சு (சு) அரைத்துப்போட்டு மெழுகுபதமாய்க்காய்ச்சி வடித்து ஒருகரண்டிவீதஞ் சாப்பிட்டு உடலாதியந்தமும்பூசி ஊறவைத்து ஸ்நானஞ்செய்ய காசம் இருமல் சுவாசகாசம் சுரமாறல் பொருமலதீரும்.

ஆடாதோடைச்சாறுபடி(சு)தூதுளை கரிசாலை கண்டங்கத்திரி தேட்கொடுக்கு சிறுசெருப்படை குப்பைமேனி சிறுவழுதலை சங்கு வகைக்குச்சாறுபடி(௧)எள்ளெண்ணெய்படி(சு)ஒன்ருய்க் கலந்து அதில் திப்பிலி லவங்கம் அதிவிடையம் சிறுதேக்கு இந்துப்பு அதிமதுரம் - திப்பிலி மரமஞ்சள் தேவதாரம்-மிளகு-சுக்கு-கோஷ்டம் வகைக்குப்பலம்(௭)ஆட்டுப்பாலி லரைத்துப்போட்டு பதமாய்க்காய்ச்சி வடித்து ஒருகரண்டி வீதஞ்சாப்பிட்டு ஸ்நானஞ்செய்து வரத்தீரும்.

{ சிலேத்மம-௯௯,
வரட்சிபீனிசம் நீர்ப்பாய்தல் கண்ணேய்காங்கைக்கு }

குமரி-முசுமுசுக்கை - கற்றுழை-கர்ப்பூரவல்லி - நிம்பப்பழம் - பொன்னுங்காணி கீழ்க்காய்நெல்லி புளியாரை-இவைகளின் சாறுகாரொள்ளெண்ணெய் வகைக்குப்பலம் (௧) இளநீர் - ஆவின்பால் வகைக்குப்படி-௨-

ஒன்றாய்க்கலந்து அதில் வில்வவேர் விலாமிச்சம்வேர் வெட்டிவேர் கிளி யூரம்பட்டை தேவதாரம் மரமஞ்சள் கஸ்தூரி மஞ்சள் வாலுளுவையரிசி சிறுதேக்கு சடாமாஞ்சில் ஏலம் சந்தனம் கிராம்பு மஞ்சள் பச்சைப்பூலா க்கிழங்கு சீரகம் குங்குமப்பூ வகைக்கிக்கழஞ்சு(க) ஆவின்பாலாலாட்டிப் போட்டு மெழுகுபதத்தில் வடித்துத்தலைமுழுகி வரத்தீரும்.

சிலேத்மரோகப்படலம் முற்றிற்று.

—— * ——

௨

சிவமயம்.

தந்தரோகப்படலம்.

அதாவது பல்லீறில்நீர்தங்கிரோகம் விளைவித்தலாம்

விருத்தம்.

பூட்டுரோகம்புகலுந்தந்தரோகம்
நீட்டும்சாத்திய நேருமசாத்தியம்
மாட்டுமேபல நூற்களுமாராய்ந்து
கூட்டுமொத்து மரகதாமிர்தமிதே.

மேற்படி-ரோகநிவர்த்தி.

அரப்பொடிபலம் க, கடுக்காய் தான்றிக்காய் மாசக்காய் சீனக்காரம் கொடுக்காய்ப்புளி துருசு காசுக்கட்டி வகைக்கு விராகனிடை மூன்று இவைகளைப்பொடித்து அரைவீசம்படி எலுமிச்சம்பழச்சாற்றிற் போட்டுக் கிண்டி ரவியிற்காயவைத்து அப்பால் மேற்படி சாற்றால் மயனமாயரைத் துலர்த்திப் பொடித்துப் பல்விளக்கிவரச் சகலதந்தரோகங்கள் தீரும்.

கொம்பரக்கு சீனக்காரம் துருசு மாசக்காய் வகைக்கு விராகனிடைக் கடுக்காய் தான்றிக்காய் அரப்பொடி வகைக்கு விராகனிடை மூன்று இவைகளைப்பொடித்து ஐந்து எலுமிச்சம் பழச்சாற்றில் விரவிரவியிலுலர்த்திப் பொடித்துப் பலவிளக்கிவரச் சகல தந்தரோகமுந்தீரும்.

ஒருபலம் கரியுப்மை எருக்கம்பாலிலும் குப்பைமேனிச்சாற்றிலுந் தனித்தனியே உ, நாளரைத்து வில்லைதட்டிக் காயவைத்து ஓட்டிலிட்டு சீலைமண்செய்து முழப்புடம் போட்டெடுத்து தேங்காயோடுசுட்ட கரிபலம் க, அரப்பொடி துருசு துத்தம் காசுக்கட்டி கருஞ்சீரகம் களிப்பாக்கு கண்டங்கத்தரியிலையை வகைக்கிக்கழஞ்சு க, இவைகளைவெதுப்பி ஒன்றாய்ச்சேர்த்துப் பொடித்துப் பல்விளக்கிக் கடுக்காய் காசுக்கட்டி முடக்கொத்தான் கருவேலம்பட்டை நீர்ப்பூலா காட்டாமணக்கின்வேர் வகைக்குப்பலம்-க-இடித்து-அ-படி சலத்திற்போட்டு ஒருபடியாய் வற்றவைத்து வாய்கொப்பிளித்துவரச் சகல தந்தரோகமும் நீங்கும்.

பேய்க்குமட்டிக் காயைக்கீறி விரைநீக்கி அதில் கரியுப்பைச் செலுத்தி மூடிச்சீலை மண்(௩) செய்து ஐந்து நாள்வரை நிழலிலுலர்த்தி முழப்

புடம்போட்டு கவசம்நீக்கிப்பொடித்துப்பல்லை விளக்கிமருக்காரைமருது
வெள்வேல் எருக்கு ஆவரை இவைகளின் வேர்ப்பட்டையும் சுக்கும் பிர
ப்பங்கிழங்கும் வகைக்குப்பலம்-௰-இடித்து-௰௪ - நாழி சலத்திற்போட்டு
௮-படியாய் வற்றவைத்து வாய்கொப்பளித்துவரச் சகலதந்தரோகமும் தீ
ரும்.

தந்தமிக அசைந்து கடுப்புக்கண்டால் அந்த தந்தத்தை பிடுங்கிப்
போட்டு நாவற்பட்டை கியாழத்தை கொப்பளிக்கவும் பல்லெயிறு அதிக
மாய் வீங்கிப்புண்ணாகிக் கடுப்புக்கண்டால் வாயில் குங்கிலிய புகைபிடித்
து ஆல் அரசு அத்தி இத்தி இவைகளின் பட்டை வகைக்குப்பலம்-௰-௩௪
க்கி(௫௨)நாழிசலத்திற்போட்டு எட்டொன்றாய் வற்றவைத்து அதில் நல்
லெண்ணெய்நாழி (௧) கூடவிட்டு மெழுகுபதமாய்க்காய்ச்சிக் கொப்பளித்
துவர நோய்மாறி மற்றபற்களிறுகும்.

அத்தி அரசு கிழுவை நாவல் கருவேல் வெள்வேல் ஆல் எருக்கு ஆ
வாரை இவைகளின்பட்டை வகைக்கிப்பலம்-௫- தூள்செய்து பதக்கு சல
த்திற்போட்டு அரைநாழியாய்க்காய்ச்சி யிறுத்து அதில் நல்லெண்ணெய்
நாழி-௪-விட்டு துத்தம் துருசுகாசுக்கட்டி வெள்ளக்குங்கிலியம்சேங்கொ
ட்டை வகைக்கு விராகனிடை-௧௦-சிதைத்துப்போட்டுக்காய்ச்சித் திர
ண்டபருவத்தில ஒருசாவலிரத்தம்விட்டு பதத்தில் பெண்ணெயை வடித்
து வாயில்கொஞ்சம் எண்ணெய்விட்டு ஒருநாழிகை வைத்திருந்து கொ
ப்பளிதததுவரத் தந்தசூலை தந்தவாயு தந்தக்குத்து தந்தவிப்புருதி காவா
ளை பல்லரணை சிங்குணைவ ரோகந்தீரும்.

மருக்காரை வெள்வேல் கருங்காலியெருக்கு கருவேல்வேம்பு நாவல்
வரகைமா இவைகளின் பட்டை வகைக்குப்பலம்-௫-இடித்து ஆறு மரக்
கால தண்ணீரிற்போட்டு நாலுபங்காய் வற்றவைத்து வடித்து அதில் சா
திக்காய் விராகநிடை-௪-சாதிப்பத்திரி ஏலம் வகைக்கு விராகநிடை-௩-கர்
ப்பூரம் விராகநிடை-௨-அரப்பொடி காசுக்கட்டி கடுக்காய்ப்பொடி வகை
க்கிப்பலம்-௫-பொடித்துப்போட்டு குழம்புபோற் காய்ச்சி ரவியிலுலர்த்
திப்பொடித்துச் சிமிளில் வைத்துக்கொண்டு பல்விளக்கிவரச் சகல தந்த
ரோகமுந்தீரும்.

தேங்காய் நெய் பொடுதலைச்சாறு வகைக்கிப்படி-௧-ஒன்றாய்க்கலந்
து அதில் நெல்லிதான்றி தேவதாரம் வேலம்பட்டை வகைக்கு விராகனி
டை மூன்று அரைத்துப்போட்டுக்காய்ச்சிவடித்துச் சற்றுநேரம் வாயி
ல வைத்திருந்து கொப்பளிக்கவும் பல்லசைவு பலலடிப்புண் இருந்தால்
மேற்படி தயிலத்தைத் தொட்டுத்தேய்க்கத்தீரும்.

பிராயம் பட்டையைக் குழித்தயிலமிறக்கி அதில் சுக்கு கடுக்காய் அ
ரப்பொடி இவைகளைச்சமனாய்ப் பொடித்துபோட்டுக் களிம்புபோலரைத்
துச் சிமிளிலடைத்துக்கொண்டு பல்விளக்கிவரச் சகலதந்த ரோகமுந்தீ
ரும்.

புழுங்கலரிசியைக் கோவைவயிலைச்சாற்றில மூன்றுவிசை பொதும்ப்
வைத்து உலர்த்தி நல்லெண்ணெயிற்பிசறி வாயிலொதுக்கிக்கொள்ள ப
ல்லீறில் சீழ்ரத்தங்காணுதல் நீங்கும்.

கருங்காலிப்பட்டை - ௱ - இடித்துப் பதினாறுமரக்கால் தண்ணீரிற் போட்டுப் பதக்காய் வற்றவைத்து வடித்து அதில் நல்லெண்ணெய் ஆவின்பால் வகைக்குப் பதக்குவிட்டுக் கோஷ்டம் நெல்லி முள்ளி அதிமதுரம் மிளகு தக்கோலம் காவிக்கல் சாதிக்காய் சாதிபத்திரி தாமரைக்கிழங்கு லவங்கப்பத்திரி லவங்கப்பட்டை அதில் ஏலம் செவ்வள்ளிக்கொடி அரத்தைகர்ப்பூர சலாசத்து வகைக்குப்பலம்-க-இடித்துப்போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்து அனுருடம் பல்லில்தேய்த்தும் நாலுநாளைக்கொருதபா சிரசிற்றேய்த்தும் ஸ்நானஞ்செய்துவரச் சகல தந்தரோகமுந்தீரும்

சேங்கொட்டை பலம்-ம-கரியுப்புபலம்-ரு-ஒரு கலசத்திற்போட்டு மூடிச்சந்துவாய் சீலைமண்செய்து முழப்புடம் போட்டெடுத்து தூள்செய்து பல்விளக்கிவரத் தந்தவாயுதீரும்.

கண்டங்கத்தரிப் பழத்தை உமிக்காந்தலிற் சுட்டு பாகயிலைச்சாற்றாலாட்டி நல்லெண்ணெயிற்போட்டுச் சூரியபுடம்வைத்துப் பல்லிற்றடவப் பற்பூசசிசாவும,

தந்தரோகப்படலம்-முற்றிற்று.

உ

சிவமயம்.

செவிரோகப்படலம்.

அதாவது காதில் சிதளமனுசரித்து என்னேரமும் நீர்தங்கி ரோகம் சமபவித்தலாம்.

கூறுமாயுறு வேதந்தனையாய்ந்து
தேறுங்கண்டத் திரையுஞ்செவிநோயை
மீறிடாமல் விரைந்தோடிப்போவதற்
கோறுமாமுனி குறித்தவாகடமே

காதில்சீழ் மாறலுக்கு.

சத்திச்சாரணைக்கிழங்கு கிளாவேர் நெல்லிவேர் கையாந்தகரை செப்பு நெருஞ்சில் இவைகள் யோர்நிறையாய்த்தட்டி வேப்பெண்ணெயிலெரித்துக் காதில்விட் டடைக்கத்தீரும்.

யெலுமிச்சம் பழச்சாறு நல்லெண்ணெய் வகைக்குநாழி அரைக்காலில் ஒன்றாயக்கலந்து அதில் பூநாகம் முப்பதுபூண்டு வசம்புவகைக்கிவிராகனிடை-க-சிதைத்துப்போட்டுக் காயச்சி வடித்துக் காதிலடைக்கத்தீரும்.

பெருங்காயம் உள்ளிவசம்பு இவைகள் யோர்நிறையாயச் சிதைத்து வேப்பெண்ணெயிற் காயச்சிக் காதிலடைக்கத்தீரும்,

இஞ்சி எருக்குகள்ளி முருங்கை துளசி திருநீற்றுப்பச்சை மிதிபாகல் கருவாழைக்கிழங்கு இவைகளின் சாற்வகைக்குநாழி விதம் நல்லெண்ணெயநாழி-வ-ஒன்றாயக்கலந்துகாயச்சிக் காதிலிட்டத்தீரும்.

மனேசிலை தாளகம் சேங்கொட்டை வகைக்கு விராகனெடை-க-சி
தைத்து-ங-பலம் நல்லெண்ணெயிற்போட்டு வெள்ளாட்டு நீர்நாழி-க-கூ-
டவிட்டுப் பதமாயக்காய்ச்சி வடித்துக் காதில்விட்டடைக்கப் புண்தீரும்

வில்வப்பழச்சதையை நல்லெண்ணெயில்வேகவைத்துக் காதிலடை
க்கத்தீரும்.

வெள்ளுள்ளி முருங்கைவேர்ப்பட்டை எருக்கம்பூ கள்ளிப்பால் வ
கைக்கு விராகனெடை-க-நண்டு-க -இவைகள் சிதைத்துக்காற்படி வேப்
பெண்ணெயிற் போட்டுக்காய்ச்சிக் காதில்விட்டடைக்கத்தீரும்,

காதிரைச்சலுக்கு,

தைவேளைச்சாறும் நல்லெண்ணெயும் ஓரளவாயக் காயச்சிக்காதில
டைக்கத்தீரும்.

காதெழுச்சிக்கு.

சுக்கு உள்ளி வசம்பு குன்றிப்பருப்பு கோஷ்டம் இந்துப்பு திப்பிலி
இவைகள் யோர்நிறையா யெழுக்கம்பழுப்புச்சாற்று லரைத்து நல்லெண்
ணெயிற்போட்டுக் காய்ச்சி வடித்துக் காதிலடைக்கத்தீரும்.

கிலுகிலுப்பை வேரையரைத்து நல்லெண்ணெயிற்போட்டுக் காய்ச்
சிவடித்துக் காதிலடைக்கத்தீரும்.

காதிரைச்சல்வலிக்கும்.

முசுமுசுக்கை யிலையும், வெள்ளுள்ளியும், சிதைத்துக்காதிற் பிழி
யத்தீரும்.

காத்தொட்டிக்கொழுந்து உள்ளி வசம்பு இவைகள் யோர்நிறையா
யரைத்து நல்லெண்ணெயிற்போட்டு வேகவைத்துக் காதில்விடத்தீரும்.

காதுப்புழு விழுதலுக்கு.

செம்பொனெரிஞ்சி-பேய்ப்பீர்க்கம் வேர்காயம் கருஞ்சீரகம் வசம்பு
இவைகள் யோர்நிறையாய் வேப்பெண்ணெயிற் போட்டுக்காய்ச்சி வடித்
துக்காதிலடைத்தாலும், அல்லது ஆடுதீண்டாப்பாளையைச் சிதைத்துக்
காதிற்பிழிந்தாலும் முருக்கிலைச்சாறும் நல்லெண்ணெயும் ஓரளவாய்க்கல
ந்து காதிலடைத்தாலும் புழுசெத்துவிழும்.

காதுமந்தத்திற்கு.

கள்ளியைவாட்டிப் பிழிந்தசாறு நல்லெண்ணெய் வெள்ளுள்ளிச்
சாறு ஆவின்பூாற் வகைக்குப்படி-க-ஒன்றாய்க்கலந்து அதில் முருங்கை
வேர் வசம்பு வகைக்குக்கழஞ்சு-ச-அரைத்துப்போட்டுக்காய்ச்சி வடித்
து இருபதுநாள் காதில் விட்டடைக்கமாறும்.

கையாந்தகரை நாயுருவிசங்கு துதுளைவேலிப்பருத்தி இவைகளினி
லையும் எருக்கம் பூவும் ஓர்நிறையாய்த் தட்டியரைத்து-ம-நாள்வரை கா
லையில் சிரசில் அப்பிவைத்திருந்து மாலையில் ஸ்நானஞ்செய்துவரத் தீ
ரும்.

வெள்ளுள்ளி தாளகம் முள்ளங்கிக்கிழங்கு இவைகளை யோர்நிறை
யாய்த்தட்டி நல்லெண்ணெயிற் போட்டுக்காய்ச்சி வடித்துக்காதிலடைத்
துவரத்தீரும்.

குதிரைலெத்திச்சாறும் இஞ்சிச்சாறும், ஓரளவாய்க்கலந்து காதில் விட்டடைத்துவரத்தீரும்.

ஒருபடி ஆவின்வெண்ணெயைச் சட்டியிலிட்டு உருகும்போது ஒருபிடி சங்கிலையைப்போட்டுக்காய்ச்சி வெந்தபதத்தில் அரிந்துப்போட்டு மூன்று விராகனெடை பெருங்காயத்தைப் பொடித்துப்போட்டு இறக்கி வைத்துக்கொண்டு மூன்றுநாள்வரை காலையிலும் மாலையிலும் சிரசிற்றேய்த்து நாலாம்நாள் பாசிப்பயறுதேய்த்து ஸ்நானஞ்செய்யவும் இந்தப்படி ஒருமண்டலஞ்செய்யத்தீரும்.

சித்திரமூலம் கழஞ்சு-உ-மூலைப்பாலாலாட்டிக்காற்படி நல்லெண்ணெயிற்போட்டுக் காய்ச்சிவடித்து ஒருமண்டலஞ் சிரசிற்பதமிட்டு நாலுநாளைக் கொருவிசை ஸ்நானஞ் செய்துவரத்தீரும்.

பன்றிமுள்ளைச் சிதைத்துப் புங்கெண்ணெயிற் போட்டுக்காய்ச்சி வடித்துக்காதில்விட்டடைத்து காற்றுப்படாமல் மூன்றுநாள்வரை யிருக்கத்தீரும்.

மிளகாய் துலாம்-க-தண்ணீரிற்போட்டு எட்டொன்றாய் வற்றவைத்து வடித்து அதில் எள்ளெண்ணெய்ப்படி-க-கூட்டிவிட்டு மிளகு பலம்-க அரைத்துப்போட்டு காய்ச்சி வடித்து முழுகிவரக்காதடைப்பு-குத்து மண்டைக்குத்து மேல்வலி சொரிசிரங்கு புண்டைசூலை மேகவாயு சோகை பெரிர்வாதந்தீரும்.

(காதிரைச்சல் குத்தல்மந்தம் எழுச்சி முதலானசெவிகோய்கட்கு)

ஒருபடி நல்லெண்ணெயில் முருங்கைப்பூ மஞ்சள் மலராத நாணற்பூ மிளகு வகைக்குப்பலம்(க)வலம்புரிக்காய் விராகனெடை(கஉ) அதிமதுரம் தக்கோலதாமம் சடைக்கஞ்சா வகைக்குக்கழஞ்சு (க)பொடித்துப்போட்டுக்காய்ச்சி வடித்துக்காதிலடைத்து ஒன்றைவிட்டொருநாள் ஸ்நானஞ் செய்துவரத்தீரும்.

ஆவினெய்ப்படி-வ-நல்லெண்ணெய்ப்படி-க-ஒன்றாய்க்கலந்து அதில் இரசம் அபின்கெந்தகம் வெள்ளைப்பாஷாணம் வகைக்கு ஒருகழஞ்சு வீதம் பொடித்துப்போட்டுக்காய்ச்சி வார்த்திற்கிரண்டுமுறை ஸ்நானஞ் செய்து ஒருதுளிகாதில் விட்டடைத்துவரத்தீரும்.

காற்படி வேப்பெண்ணெயில் மஞ்சள்பலம் (க) வசம்பு ஈருள்ளி வகைக்குப்பலம்(உ)சிதைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்து காதிலடைத்து சிரசிற்றேய்த்துவரத்தீரும்.

நல்லெண்ணெய்ப்படி ஒன்றில் நொச்சிப்பூ கொடுவேலி வேர்ப்பட்டை மிளகு கற்றாழைவேர் வலம்புரிக்காய் வெளிச்சிப்பின் கடுகுரோகணி வகைக்கு விராகனெடை-சு-இவைகளைச் சாராயத்தாலாட்டிப்போட்டு முள்ளுக்குராசானி-அ-பிச்சுப்போட்டுக் காய்ச்சிவடித்துக் காதிலடைத்துச் சிரசிற்றேய்த்து முழுகிவரத்தீரும்.

ஒருபடி நல்லெண்ணெயில் ஒருபலம் நிலப்பனைக்கிழங்கை யரைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்து தலைமுழுகிவரத்தீரும்.

இலைக்கள்ளி புளல்முருங்கை இலைகளின்சாறு வகைக்குப்படி வீதம் ஆவினெய் வெண்ணெய் வகைக்குப்படி-வ-ஒன்றாய்க்கலந்து அதில்

மரமஞ்சள் வெள்ளைப்பூண்டு சுக்கு வலம்புரிக்காய் கரியசீரகம்-நண்டிரை ச்சி நத்தைதமூசுறு முட்டை வகைக்கு விராகனெடை(௧)சிதைத்துப்போ ட்டுக் காய்ச்சிவடித்து கருங்கோழி முட்டைத்தயிலம் விராகனெடை(௧) கூடவிட்டுக்கலந்துகொண்டு பனிரண்டுநாள்வரை காதில்விடப் பஞ்சு கொண்டு மூடிவைத்திருக்கத்தீரும்.

முசுறுமுட்டை பூநாகம் நண்டிறைச்சி வெள்ளுள்ளி கோழிமுட் டை மஞ்சட்கரு குக்கில் வசம்பு வகைக்குக்கழஞ்சு (௧) சிதைத்து அரை க்காற்படி வேப்பெண்ணெயிற்போட்டுக் காய்ச்சிவடித்துக் காதில்விட்ட டைக்கமாறும்.

காதில் ஈபுகுந்தால்.

மூத்தெருக்கஞ் செவியியைக்கசக்கிக் காதிற்பிழிந்தாலும் அல்லது கோழியவரை யிலையையும் குப்பைமேனி யிலையையும்கசக்கிக் காதிற்பிழி ந்தாலும் ஈ செத்துவிழும்.

செவிரோகப்படலம்-முற்றிற்று.

உ

சிவமயம்.

பிரமியரோகப்படலம்.

அதாவது மாதர்கள் சம்போகத்தால் நோய்விளைவித்தலாம்.

விருத்தம்.

சொல்லும்பிரமியஞ் சுக்கிலம்கெட்டுமே
புல்லுமேகம் புகலும்விதாவிதம்
அல்லவேயாயுற் வேதந்தனையாய்ந்த
வெல்லும்வயித்திய சாரமிதுவாமே.

மேற்படிரோகம் வருதற்குக்காரணம்.

பலமாதரிடத்தும் வேசியர்களோடும் பிணியாளரோடும் போகிப்ப தாலும் வோயாத அனுபோகத்தாலும் மூலத்தில் அக்கினிகொண்டு தா துகெட்டு பிரமியங்கள் நீரடைப்பு சதையடைப்பு வெள்ளை வெட்டை கிரந்தி சூலை அரையாப்பு பவுத்திரம் பிரமேகம் கிருச்சனம் கல்லடைப்பு நீரிழிவுமுதலான மேகரோகங்கள் சம்பவிக்கின்றன,

(இரத்தப் பிரமியக்குணம்.)

நீர்த்தாரையில் கடுப்புங்குத்தலுங்கண்டு இரத்தம்விழும் உடல்உஷ் ணமாயிருக்கும் கைகால் அயர்ந்துவரும்.

நிவர்த்தி,

ஆவரையரிசி நாழி அரைக்கால் நற்சீரகம் சந்தனம் சர்க்கரை வகை க்குக்கழஞ்சு-௧-இவைகளை எலுமிச்சம்பழச்சாற்றுல் அரைத்துக்கலக்கி மூ ன்றுபோது கொடுக்கத்தீரும்.

ஆவாரைவேர்ப்பட்டை விஷ்ணுகாந்தி சமூலமும் வகைக்கு ஒரு எலுமிச்சங்காய்ப்பிரமாணம் அரைத்து ஆவின்பாலிற்கரைத்து சர்க்கரை சேர்த்து மூன்றுநாள் கொள்ளத்தீரும்.

விஷ்ணுகாந்தியாவது அம்மான் பச்சரிசியையாவது அல்லிவிரையையாவது ஒரு எலுமிச்சங்காய்ப்பிரமாணம்அரைத்து ஆவின்பாலிற்கலந்து மூன்றுநாள்கொள்ள நீங்கும்,

முருங்கைப்பூச்சாறு நல்லெண்ணெய் வகைக்குநாழி அரைக்கால் வெல்லம் விராகனிடை-உ- ஒன்றாய்க்கலந்து மூன்றுநாள் கொள்ளநீங்கும்.

சிறுகீரைச்சாறு நெல்லெண்ணெய் வகைக்குநாழி அரைக்கால் கற்சுண்ணாம்புத்தெளிவு நாழி அரைக்கால் ஒன்றாய்க்கலந்து எட்டுநாள்கொடுக்கநீங்கும்.

விடத்தலைக்கொழுந்தும் ஏலமும் அரைத்து எலுமிச்சங்காயளவெடுத்து தயிரிற்கலக்கிக் கொடுக்கநீங்கும்.

சந்தனம் சண்பகப்பூ வகைக்குக்கழஞ்சு-க-காவிக்கல் பொன்மெழுகு வகைக்குக்கழஞ்சு-க-இவைகளை முலைப்பால்விட்டரைத்து தூதுளங்காய்ப்பிரமாணம் உண்டைசெய்து வேளையொன்றுக்கு ஒருண்டைவீதம் அரைக்காற்படி முலைப்பாலில் எட்டுநாள் கொடுக்கநீங்கும்,

பிரப்பங்கிழங்கு சங்கம்வேர்ப்பட்டை வெள்ளறுகு சிவன் வேம்பு முற்றினவேப்பம்பட்டை வகைக்குப்பலம் -ம-இவைகளையிடித்துக் சூரணஞ்செய்து திரிகடிப்பிரமாணம் மூன்றுநாட் கொள்ளத்தீரும்.

மின்னியிலைச்சாறுபடி அரைக்கால் எலுமிச்சங்காய்ப் பிரமாணம் வெல்லங்கலந்து மூனறுநாட் கொள்ளத்தீரும்,

மருதிலைச்சாறுப்படி அரைக்காலில் கல்நார் எலுமிச்சங்காய்ப்பிரமாணம் அரைத்துப்போட்டு சீனிகலந்து மூன்றுநாட் கொடுக்கத்தீரும்.

நெரிஞ்சில்வேரை எலுமிச்சங்காய்ப் பிரமாணம் அரைத்து எருமை மோரில் மூன்றுநாட் கொடுக்கத்தீரும்,

முருக்கம்வேர்ப்பட்டையை எலுமிச்சங்காய்ப் பிரமாணமரைத்துஆவின்பாலில் மூன்றுநாட் கொடுக்கநீங்கும்.

ஓரிலைத்தாமரைச்சாற்றில் சீனிகலந்து வேளையொன்றுக்குக் காற்படிவிதம்மூன்றுநாள் கொள்ளவும்,

முருங்கைபபூ கற்றாழஞ்சோறு வெண்ணெய இவைகள்யோர்நிறையாயரைத்து வேளையொன்றுக்கு ஒருமாசிக்காயளவு அந்தி சந்தி மூன்றுநாள் சாப்பிடநீங்கும்,

ஒருபிடிவல்லாரையைக்காற்படி ஆவின் பாலில் அரைத்துக் கலக்கி மூன்றுநாள் கொள்ள நீங்கும், மேற்படி பிரயோகங்கள செய்யும்போது உப்புபுளிநீக்கவும்,

சுக்கிலப்பிரமியத்தின்குணம்,

நீர்த்தாரையிற்சுருக்குச்சுருக்கென்றுகுத்திசுக்கிலம் விழும்,

நிவர்த்தி.

கலைக்கொம்பும் சந்தனமும் வகைக்கு ஒருகொட்டைப்பாக்களவு மோர்விட்டரைத்துத் தேனிற்குழைத்துண்ண நீங்கும்.

வில்வவேரும் நெற்பொரியும் வகைக்குப்பலம்(௰) யிடித்து-அ-ப்டி தண்ணீரிற்போட்டு ஒருபடியாய வற்றவைத்து வேளையொன்றுக்கு அ ரைக்காற்படி வீதம்-௬-வேளை கொள்ளத்தீரும்.

கோரைகிழங்கு விஷ்ணுகாந்தி மிளகு வகைக்குப்பலம் - ௧௨-௪-படி தண்ணீரிற்போட்டு ஒருபடியாய் வற்றவைத்து வேளையொன்றுக்கு அ ரைக்காற்படி வீதம் ஆறுவேளை கொள்ளத்தீரும்.

நெல்லிக்காய்-௰-தேற்றுவிரை(உ௰)கையத்தடி செவ்விளநீர் ஒருநா ள் ஊறப்போட்டு மறுநாள் காலையில் இறுத்து அதில் கலைக்கொம்பைக் கொட்டைப்பாக்களவு அரைத்துகலக்கிச் சீனிகலந்து மூன்றுநாள் கொள் ளநீங்கும்.

ஈருள்ளிச்சாறு எலுமிச்சம்பழச்சாறும் நல்லெண்ணெயும் சமமாய்க்கலந்து வேளையொன்றுக்கு அரைக்காற்படி வீதம் - ௩-நாள் காலையிற் கொள்ளநீங்கும்.

ஓரிலைத்தாமரையும் நற்சீரகம் சமனுய்அரைத்து வேளையொன்றிற்கு க் கொட்டைப்பாக்களவு-மூன்று-நாள் கொள்ளத்தீரும்.

நற்சீரகம்-ஏலம்-சிறுபுள்ளடி இவைகள் யோர்நிறையாய் ஆவின்பா ல்விட்டிடித்துப்பிழிந்தசாறுபடி-வ-வில் சீனிகலந்து-மூன்று-நாள் சாப்பி டத்தீரும், உப்பு புளி தள்ளவும்.

நெரிஞ்சில் வேரின் மேற்றோல் ஒருபிடி சுக்குதோர்(உ)இரண்டும் சி தைத்து அரைப்படி நீரிற்போட்டு அரைக்காற்படியாய் வற்றவைத்து அதி ல் ஒரு விராகனிடை வெங்காரமும் கொஞ்சந்தேனுங்கலந்து இப்படி ஆறு போது சாப்பிடத்தீரும் ஆறுநாள்வரை உப்பு புளி தள்ளவும்.

ஆவினெய்பால் வகைக்குப்படி(க)வாழைப்பூச்சாறு மேற்படி கிழங் குச்சாறு வகைக்குப்படி-உ-ஒன்றாய்க்கலந்து அதில் நற்சீரகம் அமிர்தச் சர்க்கரை வகைக்குப்பலம் முக்கால் ஆவின்பாலா லரைத்துப்போட்டு மெழுகுபதத்தில் வடித்து நாளொன்றுக்கு ஒரு கரண்டிவீதம் உண்ணத் திரும்.

பரித்திகொட்டைப்பால்படி-க-வெல்லம் பலம் - ௪-கோழிமுட்டை (௰) நல்லெண்ணெய்படி-வ-ஒன்றாய்க்கலந்து காய்ச்சி மூன்றுநாள் சாப் பிடத்தீரும்.

ஆவினெய்படி-க-கீழ்க்காய் நெல்லிவேர் பலம்-ரு-விரலிமஞ்சள் பல ம்-ரு-அரைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்து ஒருகரண்டி வீதம்-அ-நாள் கொள்ளநீங்கும் இவைகட்கு பத்தியம் முன்போற் கொள்ளவும்.

செப்பிரமியத்தின் குணம்,
நீர்கடுத்தெரிவும் உடல்மெலிவும்,
நிவர்த்தி.

மிளகை. ஒரு எலுமிச்சங்காயளவு அரைத்து நல்லெண்ணெயில் மத்தித்து-மூன்று-நாள் சாப்பிடத்தீரும்.

அதிமதுரத்தைச் சூரணித்துத் திரிகடிப்பிரமாணம் நீராகாரத்தில் பத்துநாள் கொள்ளவும்.

அத்திப்பிஞ்சைத் தேங்காய்ப்பால்விட் டிடித்துப் பிழிந்தசாறுபடி அரைக்காலில் வெள்ளைக்குங்கிலியம் விராகனிடை-௧-பொடித்துப்போட்டு மூன்றுநாள் சாப்பிடவும்.

குப்பைமேனி யிலையை உப்பில்லாமல் அவித்து மிளகும் அரிசியும் பொரித்துப் பொடித்துத் தூவி ஒரு மாங்காயளவு காலையில் மூன்றுநாள் சாப்பிடப் பிரவிர்த்தியாகும்,

பிரமியத்துக்குப்பொதுப்பிரயோகம்,

ஒருப்பலம் சீனிக்காரத்தை ஆவின்பாலாலாட்டி வில்லைதட்டிக் காயவைத்து வோட்டிலிட்டுச் சீலைமண்செய்து காடைப்புடம்போட்டு வேளையொன்றுக்கு ஒரு விராகனிடை வீதம் எலுமிச்சம்பழச்சாற்றில் மூன்றுநாள் கொடுக்கநீங்கும், பத்தியம் மோருஞ்சோறுங் கொள்ளவும்.

சிற்றிலைப்பாலாடையை எலுமிச்சங்காயளவு அரைத்து ஆவின்பாலிற்கலக்கி மூன்றுநாள்கொடுக்கப் பிரமிநீங்கும்.

வெள்ளாட்டுப்பால் ஒரு வெலுமிச்சம்பழச்சாறு மாம்பட்டைச்சாறு இவைகள் யோர்நிறையாய்க் கலந்து மூன்றுநாள் கொடுக்கவும்.

ஒருதுட்டிடை வெந்தயத்தை இரவில் ஊறவைத்துக் காலையில் அரைத்து மோரிற்கலக்கி மூன்றுநாள் கொடுக்கவும்.

அத்திப்பிஞ்சை தேங்காய்ப்பால் விட்டிடித்துப் பிழிந்து வெள்ளைக்குங்கிலியம் விராகனிடை-௧-பொடித்துப்போட்டு வேளையொன்றுக்கு அரைக்காற்படியளவு மூன்றுநாள் கொள்ளவும்,

ஒருபிடி கற்றாழைவேரை இளநீரிலரைத்துக்கலக்கிச் சீனிகலந்து மூன்றுநாள் கொடுக்கநீங்கும்.

துளசியிலையைப் பிட்டவித்து அரைக்காற்படிசாறு பிழிந்து அதில் ஒரு எலுமிச்சங்காயளவு வெண்ணெய்சேர்த்து மூன்றுநாள் கொள்ளநீங்கும்,

எலுமிச்சம்பழச்சாறு நருள்ளிச்சாறு பனங்கருப்புக்கட்டி இவைகளை யோர்நிறையாய்க்கலந்து இரவில் பனியில்வைத்துக்காலையில் மூன்றுநாள் கொள்ளநீங்கும்,

பற்படாகத்தை எலுமிச்சங்காயளவு ஆவின்பாலிற் கலந்து சீனிகூட்டி மூன்றுநாள் கொள்ளநீங்கும்,

கடுதூரத்தி யிலைச்சாறும் நல்லெண்ணெயும் சமனாய்க்கலந்து வேளை யொன்றுக்கு அரைக்காற்படி வீதம்-மூன்று-நாள் சாப்பிட்டு (௬)நாள் உப்பில்லாப்பத்திய மிருக்கத்தீரும்.

சிவந்த கொட்டாங்கரந்தை சமூலம் வகைக்கு ஒருபிடிவீத மிடித்துச் சாறுபிழிந்து ஆழாக்கு நல்லெண்ணெய் கலந்து இந்தப்படி மூன்று நாளை கொள்ளத்தீரும்,

வெள்ளைகுங்கிலியம் பலம்(௧)காசுக்கட்டி மேற்றோல் நீக்கின உள்ளிவசம்பு வகைக்குப்பலம் (௨) இவைகள் சிதைத்து ஒருபடி நல்லெண்ணெயிற்போட்டுச் சூரியபுடம்வைத்து வேளையொன்றுக்கு ஒருகரண்டி வீதம்(௨௰)நாள்கொள்ள நாட்சென்ற பிரமியந்தீரும் பத்தியம் ஆவின்பால் நெய்தயிர் கூட்டவும்.

வெள்ளைக்குங்கிலியம் சர்க்கரை பரங்கிப்பட்டை வகைக்குப்பலம் (௫) பொடித்துப் யிறுத்து நல்லெண்ணெயிலாவது ஆவினெய்யிலாவது ரசாயனஞ்செய்து அந்தி சந்தி கொட்டைப்பாக்களவு சாப்பிட்டுவரத் தீரும்,

சுண்ணாம்புத்தெளிவு தண்ணீர் நல்லெண்ணெய்வகைக்குப்படிவிசம் ஒன்றாய்க்கலந்து கொள்ளத்தீரும்.

பொன்னாங்காணி சிறுகீரை இலைகளின் மூலம் வகைக்கு ஒருபிடி சிதைத்து அரைப்படி ஆவின்பாலிற்போட்டு அத்துடன் அரைப்படி தண்ணீர்கலந்து தண்ணீர்வற்றக் காய்ச்சிவடித்து ஒருஎலுமிச்சங்காயளவு வெண்ணெயும் திரிகடி சீனியுங்கலந்து சாப்பிடவும் இந்தப்படி மூன்று நாள் ஆறுபோது சாப்பிடத்தீரும் இப்பிரயோகங்களுக்கு முன்போற் பத்தியங்கொள்ளவும்.

நீர்க்கடுத்து துளிதுளியாயிற்றுவிழுந்து இரத்தங்காணுவதற்கு.

பொன்னாங்காணி சிராசெங்கழுநீர் நிலவேம்பு சிறுகீரை ஓரிலைத்தாமரை கீழ்க்காய்நெல்லி மணித்தக்காளி சிற்றாமல்லி வகைக்குப்பலம்-௧-இடித்து-௫-படி சலத்திற்போட்டு அரைக்காற்படியாய் வற்றவைத்து வடித்து அதில் ஆவினெய்-௧-கூடவிட்டு சாதிபத்திரி கிச்சிலிக்கிழங்கு மாஞ்சில் சதகுப்பை பச்சையேலம் சாதிக்காய் கிராம்பு வெட்டிவேர் விலாமிச்சம்வேர் சந்தனம் வசவாசி வகைக்குக்கழஞ்சு-௨-ஆவின்பாலால் அரைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்து வேளையொன்றுக்கு-௧-கரண்டி வீதம் உண்டுவரவும்.

சிற்றாமல்லி பேராமல்லி நிலக்குமிழ் முல்லை நன்னாரி விலாமிச்சம்வேர் வெட்டிவேர் முத்தக்காசு தண்ணீர்விட்டான்கிழங்கு இவைகளின் சாறு வகைக்குப்படி-௮-ஆவின்பால் நெய் இளநீர் தயிர்த்தண்ணீர்வகைக்குப்படி-௧-ஒன்றாய்க்கலந்து அதில் சந்தனம் கோஷ்டம் லவங்கம் அதிமதுரம் சீரகம் நெல்லிவற்றல் வகைக்குப்பலம்-௨-அரைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்து சீனிகலந்து வேளையொன்றுக்கு வொருகரண்டிவிகிதஞ் சாப்பிட்டுவரவும்.

ஆவின்பாலும் நெய்யிலும் கருப்பஞ்சாற்றிலும் கற்றாழஞ்சாற்றிலுந் தனித்தனியே சுத்திசெய்த கெந்தகம் பலம்-௬-பரங்கிப்பட்டை பலம் -௬-சீந்திற்சர்க்கரை-௨-இவைகள் சூரணித்து அதற்குப்பாதி கருப்புக்கட்டி கலந்து வேளை(க)க்கு திரிகடியளவு வெந்நீரிற்கொள்ளச் சகல பிரமேகமுந்தீரும் பத்தியம் கைப்புத்தள்ளி ஆவின்பால் தயிர் நெய் கூட்டிக்கொள்ளவும்.

{ சீப்பிரமியம் இரத்தப்பிரமியம் நீர்க்கட்டு கடுப்பு மூத்திரக்கிரிச்சனத்திற்கு. }

போராமுட்டி நெரிஞ்சு செப்புநெரிஞ்சி தண்ணிமிட்டான் பூலா பொன்னாங்காணி அமிர்தவல்லி இருவேலி இவைகளின்வேர் கருவாழைப்பூ வகைக்குப்பலம் - க-இவைகள் இடித்துப் பதக்குச்சலத்திற்போட்டு உ-படியாய் வற்றவைத்துப் பிசைந்து பிழிந்து வடிகட்டி அதிலஆவினெய்பால் வகைக்குப்படி-க-ஒன்றாய்க்கலந்து அதிமதுரம் ஏலம் லவங்கம் சண்பகப்பூ கோஷ்டம் கல்நார் கர்ப்பூரசலாசத்துசாதிக்காய்கிராம்புசாஸ்திரவேதி சீரகம் நெல்லி முள்ளி கடுக்காய் வகைக்குக்கழஞ்சு - க-ஆவின்பாலலரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்து பச்சைகற்பூரம் விராகனிடை க-பொரித்த வெங்காரம் விராகனிடை(ரு)நசுக்கிப்போட்டு வைத்துக்கொண்டு அந்திசந்தி-௨-கழஞ்சு விகிதம் சாப்பிட்டுவரத்தீரும்.

தேங்காய்ப்பால் பொடுதலைச்சாறு பிரமிச்சாறு வகைக்குப்படி (க)ஒன்றாய்க்கலந்து காய்ச்சி வடித்து மூன்றுநாள் (௬) வேளை சாப்பிட நீங்கும்.

இரததப்பிரமியல் கல்லடைப்புக்கு,

அரைக்கரற்படி எலுமிச்சம் பழச்சாற்றில் ஐந்துசோகி சுட்டசாம்பலையும் ஒருகழஞ்சு பொரித்த வெங்காரத்தையும் ஒருபாக்களவு ஆவின்வெண்ணெயுங் கலந்து இந்தப்படி-(ரு)வேளை சாப்பிடநீங்கும்,

{ இரத்தப்பிரமியம் சீப்பிரமியம் சுக்கிலப்பிரமியம் மூத்திரக்கிரிச்சனம் நீர்க்கட்டுக்கு. }

பரங்கிப்பட்டை கெந்தகம் சாதிக்காய் கிராம்பு சிறுநாகப்பூ சாதிப்பத்திரி பச்சைகர்ப்பூரம் அசுவகெந்தி கொடுவேலி சடாமாஞ்சி இவைகள் ஓர்நிறையாய் சூரணித்து அதற்குநிகர் சீனிகலந்து திரிகடியளவுஆவினெய்யிற் கொள்ளவும்.

பிரமியம் பெரும்பாடு சூலைகட்டுக்கு.

ஆவினெய்நாழி (க) ல் - பரங்கிப்பட்டை-க-செங்கத்தாரிப் பட்டை சீரகம வெல்லம் வகைக்குப்பலம்-வ-அரைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்து வேளையொன்றுக் கொருகரண்டிவீதஞ் சாப்பிட்டுவர நீங்கும்.

கருவங்கம் விராகனிடை-ம-ரசம் விராகனிடை ஐந்து ஒன்றாய்த் தொந்தித்து காந்தம் சாதிலிங்கம் சீனம் வகைக்கு விராகனிடை - ௨-எருமைமோர்விட்டரைத்துக் குன்றிபோலுண்டைசெய்து வேளை-க-க்கு ஒருண்டைவீதம் மேற்படி மோரிற்கொடுக்கவும்.

(இரத்தப்பிரமியம் சீய்ப்பிரமியம் ஊஷ்ணத்திற்கு,)

மஞ்சள் வெல்லம் வகைக்குப்பலம் (௬) மிளகு சுக்கு ஏலம் வகைக் குப்பலம்(௨)வெங்காரம் கிராம்பு வகைக்கு விராகனிடை (௨)இவைகள் ஒ ருநாழி நல்லெண்ணெயிற்போட்டுக் காய்ச்சிவடித்து வேளையொன்றுக்கு ஒருகரண்டி விகிதம் நீராகாரத்திலிட்டுச் சாப்பிட்டுவரத்தீரும்,

தேற்றுவிரையை ஊறவைத்தரைத்து ஒருகொட்டைப்பாக்குப்பிர மாணம் அரைதத சந்தனம் ஒரு கொட்டைப்பாக்குப் பிரமாணம் ஆவின் வெண்ணெய் ஒரு கொட்டைப்பாக்களவு ஒன்றாய்க்கலந்து இந்தப்படி (௬)போது கொள்ளத்தீரும்.

(இரத்தப்பிரமியம் உடம்பெரிவு கல்லெரிப்பனுக்கு.)

திருநாமப்பாலை சமூலம் ஒரு சிரங்கை பாசிப்பயறும் இடித்து இரு நாழி நீரிற்போட்டுக்காய்ச்சி உழக்காய் வற்றவைத்து வடித்து அதில ஆ வினெய் ஈருள்ளிச்சாறு வகைக்குப்படி ஆழாக்கு ஏலம் லவங்கம் அதிம தூரம் கோஷ்டம் சண்பகப்பூ கலைக்கொம்பு விலாமிச்சம்வேர் சந்தனம் பூ மிச்சர்க்கரை வகைக்குக்கழஞ்சு(க)அரைத்துப்போட்டு பதத்தில்வடித்து சர்க்கரைகலந்து நாளொன்றுக்கு முக்கழஞ்சு வீதம் சாப்பிட்டுவரத் தீ ரும்.

{ பிரமியம் எலும்புருக்கி மூத்திரக்கிரிச்சனம் காமாலை முதலான ஊஷ்ணரோகத்திற்கு. }

இளநீர் பொன்னாங்காணிச்சாறு ஆவின்பால் பெரும்பூசணிக்காய்ச் சாறு வாழைக்கிழங்குச்சாறு வகைக்குப்படி (௪) சிற்றாமுட்டிவேர் பலம் பத்து இடித்துப் பத்துபடி தண்ணியிற்போட்டு வற்றவைத்த கியாழம்ப டி(௨)ஆவினெய்படி(௨)இவைகள் ஒன்றாய்க்கலந்து அதில ஏலம் அதிம தூரம் இந்துப்பு முந்திரிப்பழம் வகைக்குப்பலம்-க-அரைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்து நாளொன்றுக்கு ஒருகரண்டிவீதம் சாப்பிடவும்.

மூத்திரப்பாலைகிரிச்சின நீர்ச்சுருக்கு எரிவு

இரத்தப் பிரமியத்துக்கு.

அமுக்கரா யிலையும், தண்டும், இடித்துப் பிழிந்தசாற் ஆவின்பால் வகைக்குநாழி(க)ஆவினெய்நாழி-௨-ஒன்றாய்க்கலந்து அறுகன்வேர் தே ற்றாவிரை செங்கழுநீர்க்கிழங்கு வகைக்குப்பலம்-௪-அதிமதூரம் பூமிச்சர் க்கரைக்கிழங்கு வகைக்கு விராகனிடை-௬-இவைகள் ஆவின்பாலா லரை த்துப்போட்டுக் காய்ச்சியிறுக்கு அதில் தேன நாழி-௭-சர்க்கரை-வ-கல ந்து நாள்-க-க்கு ஒரு கரண்டிவீதம் சாப்பிட்டுவரவும்.

முந்திரிகை பேரீச்சு நெல்லி அதிமதூரம் ஏலம் கல்நார் திப்பிலி சிறு பூளைவேர்பட்டை சந்தனம் மல்லி வெள்ளரிவித்து இவைகளையோர்நிறை யாய்ச் சூரணித்துத் திரிகடிப்பிரமாணம் பச்சரிசிக்கழுநீரிற்கொள்ளவும்.

இரத்தம்போல் நீரிறங்குவதற்கு.

எருமைப்பால் படி-உ-ல் பொன்னாங்காணிவேர் ஒரு எலுமிச்சங்காயளவு அரைத்துக்கலக்கிக் காய்ச்சிப் புரைகுத்திக்கடைந்து வெண்ணெயெடுத்து அதை மூன்றுநாள் சாப்பிட்டு மோரை தாகசாந்தி பண்ணத்திரும்,

மாம்பட்டை அத்திப்பட்டை ஆவாரைவேர்ப்பட்டை இவைகளையோர்நிறையா யிடித்துத் தண்ணியில் ஊறவைத்துக்கொண்டு வேளையொன்றுக்கு அரைக்காற்படி வீதம் அதில் கொஞ்சம் ஆவினெய்கலந்து மூன்றுநாள் சாப்பிடத்திரும்.

நீர்க்கடுப்பு எரிவுக்கு.

நருள்ளிச்சாறு நாழி அரைக்காலில் வெங்காரம் விராகனிடை-க-பொரித்துப்போட்டு மூன்றுநாள் சாப்பிடத்திரும்.

இளநீரைக் கண்திறந்து அதில் சீரகம் சீனிபாசிப்பயறு வகைக்கு விராகனிடை-க-போட்டு ஓரிரவுவைத்து காலையிலந்தமருந்தை யெடுத்து அரைத்து இளநீரிற்கரைத்துச்சாப்பிடவும் இந்தப்படி மூன்றுநாள் ஆறுவேளை சாப்பிடத்திரும்.

கீழ்க்காய் நெல்லியிலை, ஒருபிடி சீரகம் விராகனிடை-க-அரைத்து எருமைத்தயிரிற் கலக்கி மூன்றுநாள் கொடுக்கத்திரும், கடுக்காய் - க-சுக்கு-க-சீரகம் விராகனிடை க-நருள்ளிப்பூடு-க-கீழ்க்காய்நெல்லி சமூலம் பிடி-க-இவைகள் கியாழஞ்செய் துண்ணவும்.

அரைக்காற்படி வெந்நீரில் சந்தனம் ஆவின் வெண்ணெய் வகைக்கு வொரு கொட்டைப்பாக்களவுபோட்டுச் சாப்பிட உடனே நிற்கும் சுடுகிற தண்ணீரில் எலுமிச்சம்பழம் பிழிந்து கற்கண்டு கலந்து சாப்பிடத்திரும்.

எலுமிச்சம்பழச்சாறும் நல்லெண்ணெயுங்கலந்து சாப்பிடத்திரும்.

முத்தக்காசு ஆவாரைவிரை புளியங்கொட்டை மேற்றோல் இவைகள் வகைக்குப்பலம்-க-பொடித்து ஒருநாழி இளநீரில் ஓரிரவு ஊறவைத்துக் காலமே மூன்றுதபா சாப்பிடத்திரும்,

மூன்றுவிராகனிடை நீர்முள்ளி விரையை ஆவினெய்விட்டு வெதுப்பிப்பொடித்து அரைக்காற்படி தேங்காய்ப்பாலிற் கலந்து மூன்றுநாள் சாப்பிடத்திரும்.

வொருசிரங்கை ஆவின்பாலில் வொரு கொட்டைபாக்களவு புத்தாண்சோற்றை அரைத்துக்கலக்கிச் சாப்பிட நீர்க்கடுப்பு பிரமேகந்திரும்.

எலுமிச்சங்காயளவு கட்டுக்கொடியிலையை அரைத்துக் காற்படிசலத்திற் கலக்கி அதில் சீரகம் ஏலம் வகைக்கு-க-விராகனிடை பொடித்துப்போட்டு வொருதுட்டிடை சீனிகலந் துண்ணத்திரும்,

நீர்த்தாரையெரிவு கடுப்பு சதைவளர்த்திக்கு.

ஆலம்விழுது (௨) பிடி பரித்திவேர்த்தோல் அசுவகெந்திக்கிழங்கு ஆவாரை வேர்ப்பட்டை முற்றினவெள் வேலம்பட்டை வகைக்கு வொரு பிடி பரித்திப்பிஞ்சு பரித்திவிரைப்பருப்பு வகைக்கொரு சிரங்கை ஏலம் அதிமதுரம் வகைக்கு விராகனெடை(ய) செங்கழுநீர்க்கிழங்கு கோஷ்டம் கிராம்பு சாதிப்பத்திரி சாதிக்காய் வகைக்கு விராகனெடை(ரு)திப்பிலி விராகனெடை-அ-பொரிகாரம் சாதிலிங்கம் வகைக்கு விராகனிடை-௨-முந்திரிப்பழம் தேன்மெழுகு வகைக்குப்பலம்(௭)பேரீச்சம்பழம் விராகனிடை-அ-நெரிஞ்சிக்காய் ஒரு எலுமிச்சங்காயளவு இவைகள் ஆவின் பாலாலரைத்து ஒருநாழி ஆவின்பாலிற் கரைத்து அதில் நெல்லிக்காய்ச் சாறுநாழி (வ) ஆவினெய் நாழி மூன்று கூடவிட்டுக்காய்ச்சிக் கிருதஞ் செய்து நாளொன்றுக்கு மாகாணிப்படிவீத முண்ணவும்.

கல்லடைப்புக்கு.

சங்கிலே ஈருள்ளி பச்சைநெல்லுமி இவைகள் யோர்நிறையா யிடித்துச் சாறுபிழிந்து நாளொன்றுக்குக் காற்படிசாறுகொடுக்க உடனே கல்தெறித்து நீரிறங்கும்.

ஒருபலம் வெடியுப்பைச் சட்டியிலுருகசி ஒருநாழி சலம்விட்டு அரைப்படியாய் வற்றவைத்திறுத்து அதில் கோவைத்தண்டை யிடித்துப் போட்டு நாளொன்றுக்குக் காற்படியாக இருநேரங்கொள்ளக் கல்தெறித்து நீரிறங்கும்,

நெரிஞ்சிவேர் சிறுபூளைவேர் சிறுகீரைவேர் சீரகம் வகைக்குப்பலம்-க-சிதைத்துப்போட்டுக் கியாழஞ்செய்து கொடுக்கவும்,

கோவைத்தண்டை யிடித்துப் பிழிந்தசாறு நாழிகாலில் பொரித்த சீனிக்காரம் சுண்ணாம்பு வகைக்கு விராகனெடை-க-பொடித்துப்போட்டுக்கொடுக்க கல்தெறித்து நீரிறங்கும்,

நெருஞ்சில் சிறுபூளை மாவிலங்கு பேராமுட்டி இவைகளின் மூலம் வகைக்குப்பலம்-ய- நசுக்கி பத்துநாழி நீரிற்போட்டு ஒருபடியாய் வற்றவைத்து நாளொன்றுக்குக் கால்நாழிவிதங் கொடுக்கத்திரும்.

முள்ளிலவு நாவல் பூலா வெட்பூலா முத்தக்காசு நன்னாரி முல்லை சிந்தில் செந்தாமரை சிற்றாமுட்டிசீரரசெங்கழுநீர்சிறுகீரை விராலிவெட்டிவேர் விலாமிச்சம்வேர் பொன்னாங்காணி வகைக்குப்பலம்-க-நாலுபடி இளநீரிற்போட்டு அரைப்படியாய்க் கியாழஞ்செய்து கொடுக்கத்திரும்.

சதையடைப்புக்கு.

முற்றின கோழிக்கல்லீரலிலிருக்கிற சிறுகல்லும் வெள்ளரிவிரையும் பூநாகமும் வெல்லமும் வகைக்கொரு கொட்டைப்பாக்களவு அரைத்து ஆவின்பாலிற்கலக்கி(௩)நாள் கொடுக்கத்திரும்.

நாயுருவி சிறுநெரிஞ்சில் வாழைச்சருகு ஈருள்ளி சிறுபூளை இவைகளின் சாம்பல் வகைக்குப்படி அரைக்கால் சலத்திற்கலக்கி தெளிவிறுத்து அதில் பொரிகாரம் அதிமதுரப் வகைக்கு விராகனெடை-ஐ-பொடித்துப்போட்டு நாளொன்றுக்குக் காற்படிவீதம் மூன்றுநேரங்கொடுக்க நீரடைப்பு கல்லடைப்பு சதையடைப்புதீரும்,

ஆவினெய் நாழி(க-ல்)மூக்குவெட்டிச் சுத்திசெய்த சேங்கொட்டை-ம்ரு-நறுக்கிப்போட்டுக் காய்ச்சிக் கறுப்பாய்வருகிற பதத்தில் இறக்கி வைத்துக்கொண்டு நாளொன்றுக்கு ஒருகாசிடைவீதம்-ம்ரு-நாள் கொள்ளதீரும்.

நீரடைப்புக்கு.

கற்றாழஞ்சோற்றில் கடுக்காயைப் பொடித்துப்போட்டுக் கொஞ்சநேரம் வைத்திருந்து பிழிந்து வடிகட்டினதண்ணி நாழிகாலில் பொரித்த வெங்காரம் விராகனிடை-க-பனைவெல்லம் பலம்-வ-சிதைத்துப்போட்டுக் கொடுக்க விரோசனமாகி ஜலமிறங்கும்.

பசலினிலக்கத்தரியிலை வகைக்குப்பலம்-ம-யிடித்துக் கியாழஞ்செய்து காற்படிவிகிதங் கொடுக்கத்திரும்.

குருஞ்சாவிலை கல்லத்திப்பட்டை கடுகுரோகணி திரிகடுகு நாயுருவி கொழுஞ்சிவேர் வகைக்குப்பலம்-க-இடித்து ஒருபடி சலத்திற்போட்டுக் காற்படியாய் வற்றவைத்துக்கொடுக்கவும் இந்தப்மடி மூன்றுவேளை கொடுக்கத்திரும்.

ஆதண்டையிலையை ஆவின்மோர் விட்டரைத்து வூறவைத்துப் பிழிந்து கொடுக்கத்திரும்,

சுறாமீன்தலையி லிருக்கிற ரண்டுகல்லையெடுத் துலர்த்தி இளவென்னீரி லரைத்துக்கொடுக்க உடனே சலமிறங்கும்.

கோவைத்தண்டுசாற் தேங்காய்ப்பால் வகைக்குநாழி அரைக்கால் வொன்ருய்க்கலந்து நற்சீரகம் விராகனிடை - க- பொடித்துப்போட்டுக் கொடுக்கத்திரும.

அண்டத்தோல் வெள்ளரிவித்து எலிப்புழுக்கை வெங்காரம் இவைகளைச் சற்றுவெதுப்பிப் பொடித்து-வ-நாழி சுரையிலைச்சாற்றில் கலந்து கொடுக்கத்திரும்,

நீராகாரத்தில் பழங்கூரை வைக்கோலை வூறவைத்து பிசைந்திறுத்து கால்நாழிசாப்பிட சலமடைப்பு கல்லடைப்புசதையடைப்புத்திரும்.

வெங்காரம் கர்ப்பூர சலாசத்து வகைக்குப்பலம்-க-எலுமிச்சம்பழச் சாற்றலாட்டி வில்லைதட்டி சுண்ணும்பு குகையில் வைத்துச் சிறுபுடம் போட்டு வொரு விராகனிடை வீதம் தேனிற்கொடுக்க சலமடைப்பு கல்லடைப்பு சதையடைப்பு வெட்டை நீர்ச்சிருப்பு கடுப்பு பிரமேகம் முதலானவைதிரும்.

வெடியுப்பு பொரிகாரம் அண்டத்தோல் சோகிகர்ப்பூர சலாசத்து சீனிக்காரம்வகைக்குப்பலம்(௧)எலுமிச்சம்பழச்சாற்றால்மைப்போலாட்டிவில்லைதட்டிக்காயவைத்துக் கற்சுண்ணக்குகையில் வைத்துச் சில்லுபோட்டுமூடி கதுவாவிப்புடம்போட்டு ஒருவிராகனிடை பற்பத்தைமேற்காட்டிய கியாழமுதலானதுகளிலாவது, இளநீரிலாவது, ஈருள்ளிச்சாற்றிலாவது எலுமிச்சம்பழச் சாற்றிலாவது, தேனிலாவது கொள்ளசலமடைப்பு கல்லடைப்பு, சதையடைப்பு, நீர்ச்சிருப்பு முதலானவை தீரும்.

(கிருச்சனத்தின்குணம்.)

நீர்த்தாரை புண்ணாகிநொந்து வீங்கிக்கடுத்தெரியும், சலம்வருவதுபோலிருக்கும், இறங்காது, இறங்கினால் ஒவ்வொருதுளியாய்விழும் அப்போதுசகிக்கமுடியாதவேதனையும் பயக்கமுங்காணும் ஒருவேளை சலம் மஞ்சள்போலும், இரத்தம்போலும் சுக்கிலம்போலும் இறங்கும் தொப்புளடிகனத்துநோகும் வயிறுபொருமும் அபானங்கடுக்கும், அன்னஞ்செல்லாது, உடல்மெலியும்.

(நிவர்த்தி.)

நெரிஞ்சிவேர்பலம்(௰௨)இடித்துப்பதக்கு ஜலத்திற்போட்டு நாலிலொன்றாய் வற்றவைத்திறுத்து அதில் முந்திரிப்பழம் பேரீச்சம்பழம் பொரித்தவெங்காரம் சீந்திற்சர்க்கரை கோஷ்டம்லவங்கம் அதிமதுரம் ஏலம் செங்கழுநீர்க்கிழங்கு ஆடாதோடைவேர் கர்ப்பூர வள்ளி தேற்றாவிரை கூகைநீர் வகைக்குக்கழஞ்சு (௪) பச்சைக்கர்ப்பூரம் கழஞ்சு(௧)அரைத்துப்போட்டு ஆவின்பால்நெய்வகைக்குப்படி (௧) கூடவிட்டுக்காய்ச்சிவடித்து அதில்கூகைநீர்சர்க்கரைவகைக்குப்பலம்(௨) போட்டு வேளையொன்றுக்குஒருகரண்டிவீதஞ்சாப்பிட்டுவரத்தீரும்.

இளநீர்ப்படி (௩)சீந்தில்நெருஞ்சி ஓரிலைத்தாமரை பெரும்பூசனிக்காய் வாழைக்கிழங்கு தண்ணீர்விட்டான் கிழங்கு இவைகளின்சாறு ஆவின்பால்வகைக்குப்படி(௪)கரிப்பான் பொன்னாங்காணிநீர்முள்ளி இவைகளின்சாறு ஆவினெய் வகைக்குப்படி(௨)ஒன்றாய்க்கலந்து அதில்கர்ப்பூரசலாசத்து கல்நார்கல்மதம்-சிறுபூளைவேர் அத்திதிப்பிலி பொன்னாங்காணிவேர் சென்னாயுருவிவேர் நீர்முள்ளிவிரை சிறுகீரைவேர் ஏலம்எள்ளுநெபொன்னூமத்தின்விரை தேற்றான்வித்துவகைக்கு விராகனிடைமூன்று மூலைப்பாலிலாட்டிப்போட்டுச் சீனிபலம்(௧) தேன்படி முக்கால்விட்டும்பதமாய்க்கிண்டி வைத்துக்கொண்டுநாளொன்றுக்கு முக்கழஞ்சுவீதஞ்சாப்பிடக்கிருச்சினம்சுக்கிலப்பிரமேகம்கைகாலெரிவு ஊஷ்ணந்தீரும்.

ஆவினெய்படி ஒன்றில் ஆவாரை வெட்பூலாநீர்ப்பூலாநெருஞ்சில் இவைகளின்மூலம் வெள்ளரிவிரை செங்கத்தாரிப்பட்டை வகைக்கு ஒரு எலுமிச்சங்காயளவரைத்து பொரித்தவெங்காரம் முட்டைத்

தேரல் வகைக்கும்பலம்(க)கோழிக்காரம்பலம்-வ-பொடித்துப்போட்டுக்காய்ச்சிவடித்து நாளொன்றுக்கு ஒருகரண்டிவீதஞ் சாப்பிட்டுவரத்தீரும்,

நூறுகடுக்காயை காடியில்மூன்றுதபா மும்மூன்றுநாளூறவைத்து இறுத்துப்போட்டு உலர்த்திநறுக்கி விரைநீக்கி அதற்குநாலிலொன்றுகல்லுப்பு கோரக்கிழங்கு குருசாணிஓமம் சுக்கு கொடுவேலிவேர் திப்பிலிசெவியம் திப்பிலிமூலம் வகைக்குவிராகனிடை-ந-மிளகு -இந்துப்பு ஓமம்-வகைக்குப்பலம்-உ-இவைகளையிடித்து - தூட்செய்து -அதில் புளித்தமோர்-எலுமிச்சம்பழச்சாறு - இஞ்சிச்சாறு -வகைக்குப்படி-க-தனித்தனியேவிட்டுப்பிசறி யுலர்த்தி பொடித்துக்கொண்டு- திரிகடிப்பிரமாணஞ்-சாப்பிட்டுவர-வாந்திகுன்மம்-சுவாசகாசம்-மூலங்கிராணிஅரோசியம்-பாண்டுவீக்கம்-வயிற்றுவலி-சூலை-வயிற்றுளைவு சோகைமுதலான ரோகங்கள்திரும்.

மேகாதிவடகம்.

பத்துப்பலவெள்ளுள்ளியை - மேற்றோலிநீக்கி -இருபத்தைந்துப் லஆவின்பாலிற்போட்டுத் தீபம்போலெரித்து -வேகவைத்து ஐந்துபல ஆவிநெய்விட்டுக்கிண்டி மெழுகுபதத்திலிறக்கி - சீனிபலம்-உ௦-கோ துமபைமாவுபலம்-ரு-தூவிக்கிண்டி வேளையொன்றுக்கு -கொட்டைப் பாக்களவுகொள்ள வெகுமூத்திரமாயிறக்கும் மேகநீரெல்லாந்தீரும்.

திரிபலை-பருத்திவிரைபருப்பு புளியவிரைத்தோல்- வெள்வேலம் பிசின் - வெண்குன்றிப்பருப்பு-மஞ்சள்-காந்தபற்பம் - அப்பிரக செந் தூரம் - வகைக்குவிராகனிடை-க-இவைகள்கண்ட இடைக்கு ஆவரை வித்தின்பருப்புக்கூட்டிப் பொடித்து - அத்திப்பால்விட்டு- முக்கழஞ் சிடை-உண்டைசெய்து வேளையொன்றுக்கு ஒருண்டைவீதம்எருமை மோரிற்கொள்ள மேகநீர்இருபதுநீங்கும்.

லோகாதிவடகம்.

முத்தக்காசு-சீந்தில்-சுக்குதிப்பிலி வாய்விளங்கம்-சித்திரமூலம்இ வைகளை ஓர்நிறையாய்ப்பொடித்து அதற்குநிகர் லோகசெந்தூரங் கூட் டித்திரிகடிதேனில் மத்தித்து உண்டுவரபாண்டு சோகைகாமாலைதீரும்

சவுபாக்கியசுண்டி,

கரிசாலை பொடுதலை-இவைகளின்சூரணம் வகைக்குப்பலம்-அ-தி ரிகடுகு திரிபலை அதிமதுரம் ஓமம்குருசாணி யோமம்-தாளிசபத்திரி-சி ற்றாத்தை -தேசாவரம்-ஏலம் - வகைக்குப்பலம்-க- சாதிக்காய் சாதிப்ப த்திரி-கிராம்பு - அதிவிடையம் கருஞ்சீரகம் நற்சீரகம்-லவங்கப்பத்திரி வால்மிளகு - மல்லி-வெந்தயம் - வகைக்குப்பலம்-௨-இடித்துவடிகட்டி- னசூரணத்தையும் - நாலுபடிஆவின்பாலையுங் குழம்பாய்க்காய்ச்சி -யதி ல்சிறுகத்தூவிப் பிசைந்துஒருசட்டியில் இரண்டுபடிபால்விட்டுவேடுக ட்டி-அதின்மேற்பிசைந்தமருந்தைவைத்து பிட்டவித்துத் தேன்விட் டுமத்தித்துச்சுண்டைக்காய்ப்பிரமாணம் இஞ்சி எலுமிச்சம்பழம் நார த்தம்பழம் மாதுளம்பழம் இவைகளின்சாற்றிலும்தேனிலும் அல்லது சீனியிலும்வெந்நீரிலுங்கொள்ள சூசிகாபிராணி குன்மவாயு உப்பிசம் தாகம் அரோசியம் அக்கினிமந்தம் கழிச்சல்தீரும்.

இரண்டுபடிஆவின்பாலில் -உ௦-பலச்சீனியைக் - கரைத்துப்பாகு செய்து அதில் எட்டுபலச்சுக்கைமேற்றோலிசீவி சிறுதுண்டாயநறுக்கி அதில்செம்முள்ளி செந்திராமுருக்கிலை கரிசாலை சிறுசெருப்படை கர த்தட்டி இவைகளின்சாறு வகைக்குப்படி-வ-தனித்தனிவிட்டு விரவியு லர்த்தி யிடித்த சூரணத்துடன் தக்கோலம் வாலுளுவையரிசி கூகைநீ ர்கரியபவளம் வாய்விளங்கம் தான்றிநெல்லிதிப்பிலி - திப்பிலிமூலம்வ

கைக்குப்பலம்-க-வெதுப்பிப் - பொடித்தசூரணத்தையும் - அமுக்குரு பொன்முசுட்டை கண்டங்கத்திரி நன்னாரி சிலப்பனே வகைக்குப்பலம் (உ)ஆவின்பாலில் அவித்துலர்த்தியிடித்தசூர்ணத்தையும் தூவிக்கிண்டித் திரிகடிப்பிரமாணங்கொள்ள, கிராணிபிரமியம் வாதம்பித்தம் மேகம் அக்கினிமந்தம்வாதசூலை அந்திரவாயுவாயூறல் கசப்புந்தீரும்.

இரண்டுபடி ஆவின்பாலில் - அரைவீசை சீனியைக்கலந்து பாகு செய்து அதில்இஞ்சி வாலுளுவையரிசி ஓமம்வாய்விளங்கம் திப்பிலிமிளகு-ஏலம்-கரிசாலைவகைக்குப்பலம்-க-சதகுப்பைபலம்-ரு-மல்லிபலம்-ரு-சுக்குபலம்-அ-இவைகளையிடித்துச்சூரணித்துத்தூவிக்கிண்டிக்கொட்டைப்பாக்குப்பிரமாணஞ்சாப்பிட்டுவர வாதபித்தம் வலிகுன்மம்காசம்சூசிகாவாயுசுரதோஷம் கிராணிதீரும்.

எண்ணெய்ப்படலம்-முற்றிற்று.

உ

சிவமயம்.

கட்டுவகைப்படலம்.

அதாவது ஒவ்வொருமூலிகைகளாலும் புஷ்பரசாக்கினையாலும், பால்வகைகளாலும் செயநீர்போக்குகளாலும் சுருக்குதாக்குவதுகட்டுவகைப்படலமெனப்பெயர்பெற்றது, கட்டு-எ- ஆண்டுபிரயோகிக்கலாம்.

சாதிலிங்கக்கட்டு.

அஞ்சுகோழிமுட்டை வெள்ளைக்கருவில் வீரம்பச்சைக்கர்ப்பூரம் வெடியுப்புச்சுண்ணம் வகைக்குவிராகனிடை-க- பொடித்துப் போட்டுச்சீசாவிலடைத்து ஆறுநாள்சென்றபின்பு அதில்பத்துவிராகன் லிங்கத்தைப்பத்துத்தபா தேய்த்துக்காயப்போட்டு அப்பாலதில்தேய்த்து கருஊமத்திலையில் சுற்றிஒன்றுமுதல் -ருஉ-புடம்வரை புடந்தோறும் ஒவ்வொரு எருவாய் உபரியாக்கி -ருஉ-புடம்மணல்மறைவிற் போட்டுருக்க உருகிகட்டும் அதையனுப்பானங்களிற்கொடுக்க முயல்கண்டன்குமாகண்டன்முசல்வலிப்பு குதிரைவலிப்பு காக்கைவலிப்பு புறவிச்சுஉள்ளிவீச்சு சன்னிதோஷம் வாலைக்கிறுக்கைநெஞ்சு குதஅவாயுக்குத்துந்தீரும்.

பத்துவிராகனிடைலிங்கத்தை முலைப்பாலில் எலுமிச்சம்பழச்சாறுமாவிலிங்கம்பழச்சாறு ஐவிரலிச்சாறுதேன் - இவைகளில் வகைக்கு ஒருசாமம் சுருக்குக்கொடுத்து அஞ்சுவிராகனிடை சூடத்தையும் அஞ்சுவிராகனிடை சாம்பிராணியையும் மெழுகுபோலரைத்துப்பததுப்பங்குசெய்து ஒவ்வொருபங்காய்த் துணியிற்றடவி லிங்கத்தின்பேரிற் சுத்தித்தீயிற்கொளுத்தி கரியெல்லாஞ்சுரண்டிப்போட்டுத் தேனிலிடவாயுபோகும் திரிகடுகிற் சன்னிதோஷம் இஞ்சிச்சாற்றில் நெஞ்சடைப்புவாயுமூர்ச்சைபேதி வயிற்றுப்பொருமல்தீரும் கொடிவேலிக்கஷாயத்தில் விஷபாகம் வயிற்றுவலிகுன்மம் சோகைசூலைபித்தபாண்டுதீரும்.

ஒருபலச்சாதிலிங்ககட்டியின்பேரிற் குன்றிமணிப்பருப்பின் பசையினல்-ஒருவிராகனிடை -தங்கரேக்கைஒட்டி -அதின்மேல் ரோமத்தை அரைவிரற்கனம்சுத்திபிரியாமற்கட்டி ஒருஅகிற்சிட்டியில் அதற்குக்கீழுமேலும் கெந்தகம் அரிதாரம்வகைக்குப்பலம் (௨)வீதம்பொடித்ததூளைப்போட்டுமேற்சிட்டிமூடிச்சீலைசெய்து காயவைத்து அதைஒருசட்டியில் நாலுவிரற்கடை மணலைக்கொட்டி அதின்பேரில்வைத்து அது தெரியாமல் ஆறுவிரற்கடைமணலைக்கொட்டி கமலாக்கினியாயெரித்துமணல்மேல்நெல்லைப்போட்டாற்பொரியும்பதத்தி லிறக்கி ஆற்றிமேற்கசடுநீக்கி சுத்தமாய்க்கழுவிப்போட்டு ஆவின்பாலில் ஒருபணவிடைவீதம் உரைத்துச்சாப்பிடவீரியவிர்த்தியுண்டாகும் முலைப்பாலிற்கொடுக்க மூலவாயுமூர்ச்சைவாயு அக்கினிமந்தம் நீங்கும்,

ஒருபலலிங்கக்கட்டிக்குஒருபடி செம்பரத்தம்பூச்சாற்றைச்சுருக்கிட்டு அதின்பேரில் ஒருவிராகனிடை தங்கரேக்கைச்சுத்தி அப்பால் சங்கோலிமூலிகையை அரைத்துக்கவசஞ்செய்து சீலைமண்வலுவாய்ச்செய்து குக்குடபுடம்போடக்கட்டும் அதை அனுபானங்களிலுரைத்துக்கொடுக்க சுரதோஷம்நீங்கும் தேகம்பலக்கும்,

மூன்றுவிராகனிடை லிங்கத்தைக்கரண்டியில்வைத்து அதற்குக்கீழுமேலும் ஐந்துவிராகனிடை சீனத்தைப்பொடித்துப்போட்டு தீபாக்கினியாயெரித்து -ஓயாமற்புரட்டிக்கொடுத்தபின்பு -மாகாணிப்படிகொடிக்கள்ளிப்பாலும் காற்படிகொம்புத்தேனும்சுருக்குக்குக்கொடுத்து இஞ்சிச்சாற்றிலுரைத்துக்கொடுக்கசுரம் சன்னிதோடமவாயு புறவீச்சுகுன்மம்நீங்கும்.

ஒருபலசாதிலிங்கக்கட்டிக்கு எலுமிச்சம்பழச்சாறு முலைப்பால் தைவேளைச்சாறு வெடியுப்புச் செயநீர் வகைக்குஒருசாமம் சுருக்குக்கொடுத்து ஒருவிராகனிடை தங்கரேக்கைச்சுத்தி அப்பால்சாரம்சீனம் வெங்காரம் வெடியுப்புவகைக்குப்பலம் -க-வெண்கருவாலாட்டிக்-கவசம்செய்து காயவைத்துக்குகையில்வைத்துச் சில்லுப்போட்டு ஓலைமண்செய்து இரண்டுகூடைஉமியைக்கொட்டி அதற்குமத்தியில் தீப்போட்டெரித்து வெந்தபின்னெடுக்க உருகிமணியாயிருக்கும்..

பத்துவிராகனிடை லிங்கக்கட்டிக்கு வெள்ளெருக்குவேளைக்குழி ந்தயிலமிறக்கி சுருக்குக்கொடுத்து இருபதுசெங்கொட்டையை அரைத்துக்கவசஞ்செய்து அதின்மேல் எலுமிச்சங்காய்ப்பிரமாணம் வெண்ணெயை வைத்துச்சட்டியிலிட்டுத் தீயாயெரிந்துநெருப்புப்பிடித்த உடன் இறக்கி ஆறவிட்டெடுக்ககட்டும்.

காசிக்குப்பியைக்கல்வத்திற்பொடித்ததுள் வெடியுப்பு சீனக்காரம் அண்டத்தோல் வெங்காரம் இவைகளையோர்நிறையாய் நீராலரைத்துலிங்கத்துக்குக் கவசஞ்செய்து எழுசீலைமண்செய்துகாயவைத்து முன்போல்உமிப்புடம்போட்டெடுக்கக்கட்டும்.

லிங்கத்திடை அயம்தாளகம் -மனோசிலைகெந்தி இவைகளையோர்நிறையாய்எலுமிச்சம்பழச்சாற்றாலாவது கோழிமுட்டைவெள்ளைக்கருவாலாவது ஆட்டிஅதற்குக்கவசஞ்செய்து உமியில்முன்போற் புடம் போடக்கட்டும்.

ஐந்துவிராகனிடை லிங்கத்தைமுலைப்பாலில் ஐந்துநாள் ஊறவைத்து ரவியிலுலர்த்தி மூட்டைக்கூட்டில் வைத்துக்கெந்திவிராகனிடை (சு)தாரம்விராகனிடை(உ)சூடன்விராகனிடை(க)வீதம்பொடித்ததூளை கீழும்மேலும்போட்டு மூடச்சீலைமண்செய்து மணல்மேல்வைதத்தெரிக்க கட்டும்.

ஒருபலலிங்கத்தை ஒருப்டிஈசுரமூலிச்சாற்றிற் சுருக்குக்கொடுத்து அதற்குபொரித்த வெங்காரத்தைமேற்படிசாற்றாலாட்டிக் கவசஞ்செய்துலர்ததி ஓட்டில்வைத்துமூடி யேழுசீலைமண்செய்து குக்குடபுடம் போடக் கட்டும்,

வங்கத்திடைகட்டின தாளகத்தைக்கொடுத்து அந்தஇடைக்குக் கட்டினதாளகத்தைச்சேர்த்து முலைப்பால்விட்டுமைப்போலரைத்து நிறுத்து அந்தஇடைலிங்கத்திற் கவசஞ்செய்து ஏழுசீலைமண்செய்துகாயவைத்து ஒருசாண்ஆழக்குழியில் உமிப்புடம்போடக்கட்டும அனுப்பானங்களில்விட சன்னிதோஷமவாதசுரந்தீரும்.

தாளகம் கெந்தகம பொரிகாரம் மனோசிலைவகைக்குவிராகனிடை வ)பொடித்து இரண்டுபங்குசெய்து ஒருகோழிமுட்டைதோவிற பாதி வெள்ளைக்கருவிட்டு ஒருபங்குப்- பொடியைப்போட்டு அதின்மேலும் பாதிப்பொடியைபோட்டுப் பாதிவெள்ளைக்கருவிட்டு முட்டைதோலால் மூடிச்சீலைமண்செய்து மணல்மேல்வைத்து நாலுசாமமெரிக்கக் கட்டும.

இரசமும் நாகமுந்தொந்தித்து அதற்குநிகர் பொரிகாரம்கெந்திசேர்த்து முலைப்பாலாலாட்டி லிஙகத்திற் கவசஞ்செய்துரவியிற்காயவைத்து அதின்மேல்சுண்ணாம்பும் உப்புஞ்சேர்த்து எலுமிச்சம்பழச்சாற்றாலரைத்துச் சீலையிற்றடவிக கவசஞ்செய்து குக்குடபுடமிடக்கட்டும் இந்தப்படிவீரத்தையுங்கட்டிக்கொள்ளலாம்,

லிங்கரசகர்ப்பூரக்கட்டு.

பனிரண்டுவிராகனிடை செந்தகத்தை உருக்கி அந்தவிடை வீரம் இலிங்கம் இரசகர்ப்பூரம் பொடித்துப்போட்டுக்கிண்டி ஈரக்குழலில்விட்டு ஆற்றிமாத்திரைசெய்து சன்னிசுரதோஷமுதலானவைகளுக்கு அனுபானங்களிலிடத்தீரும்.

ரசகர்ப்பூரக்கட்டு,

ஒருபலரசகர்ப்பூரத்தை முலைப்பாலில் (௰) நாள்ஊறவைத்துலர்த்தி அப்பால் வெள்ளுள்ளிததயிலத்தை மூன்றுசாமம் சுருக்குக்கொடுந்து ஓட்டிவிரண்டுபல வெடியுப்பைப்பொடித்து அதற்குக்கீழ்மேலும் போட்டு அஞ்சுகோழிமுட்டையை உடைத்துவிட்டுமூடி அடுப்பேற்றிச் சிறுதீயாயெரிக்க பொங்கியுருகியெடுத்து அனுபானங்களில் உரைத்துக்கொடுக்க சன்னிசுரம் ஈவாட்சி மலக்கட்டுநீங்கும் லிங்கக்கட்டுடன்சேர்த்துக்கொடுக்க வாதநோய்தீரும்.

நாலுவிராகனிடை ரசகர்ப்பூரத்துக்கு முலைப்பால்கண்டையிடித்துப் பிழிந்தசாறு முசுமுசுக்கைச்சாறு இவைகளைவகைக்கு இரண்டுசாமம் சுருக்கிடக்கட்டும்.

பத்துவிராகனிடை ரசகர்ப்பூரத்துக்கு முலைப்பால்எலுமிச்சம்பழச்சாறு வாழைப்பழச்சாறு ஆதளம்பால் இவைகளைவகைக்குஒருசாமஞ்சுருக்கிட்டு அஞ்சுவிராகனிடை சாம்பிராணியைப்பொடித்து வடிகட்டி அரைக்காற்படி தேனிற்கலந்து சுருக்கிட்டுப் பத்துவிராகனிடை கூடப்பொடித்து அதற்குக்கீழ்மேலும்வைத்துத்தீக்கொளுத்தவும் இந்தப்படி பத்துத்தபாகொளுத்தக்கட்டும்.

தாளகக்கட்டும்.

வெடியுப்புசீனம் வகைக்குவிராகனிடை(உ௰)எவச்சாரம் வெங்காரம் வகைக்குவிராகனிடை(௰)இவைகளைப்பொடித்து சாண்டியிற்போட்டு தீயில்வைத்து உருகிப்பொங்கும்போது அதில்சுத்திசெய்த ஐந்துவிராகனிடை தாளகக்கட்டியைப்போட்டுப் புரட்டிக்கொடுத்துமீந்திருக்கிறதையும் அரைத்து அதன்மேற் கவசஞ்செய்து காயவைத்து அதன்மேற்கற்சுண்ணும்புநீரும் பூநீரும்அரைத்துத்துணியிற்பூசி ஏழுசீலைசெய்து காடைப்புடமிட்டெடுத்து அனுபானங்களிலிட ஈளைகாசம்ளவிகடிவிப்புருகி உளைமாந்தைகுளிர்சுரம்தீரும்.

கிராம்பு சிற்றரத்தை ஓர்நிறையாய்வெதுப்பிப்பொடித்துத் தேனிற்றாளகக்கட்டை யிழைத்துவிட்டுமத்தித்துக்கொடுக்கபழஞ்சுரந்தீரும் பத்தியமில்லை மேற்சொல்லியபிரகாரம் வெள்ளையையும் கெவுரியையுங்கட்டிக்கொள்ளலாம்,

ஒருபலந்தாளகத்தைகற்சுண்ணாம்பில்வைத்து அமுரிவிட்டுபத்து தப்ா நீற்றிச் சுத்தசலம்விட்டுக்கழுவி அயச்சட்டியில்வைத்து ஒருபடி பூநீறை நாலுபடி அமுரியிற்கரைத்துவைத்து மூன்றுநாள் தெளிவிறுத்து அதில்வெங்காரம்- சாரம்-கூடன் வகைக்குப்பலம்-க-முப்பூச்சுண்ணம்கழஞ்சு-க- பொடித்துப்போட்டு நாலுசாமம் சுருக்குக்கொடுக்க தளுக்கற்றுக்கட்டும் அனுபானங்களிலிட சேத்மரோகம்(கூசு)சுரம்- சன்னிதோஷந்தீரும்.

பத்துவிராகனிடை தாளகக்கட்டிக்கு ஒருபடிசிவகரந்தைச்சாற்றில் பத்துவிராகனிடை துருசிஞ் செந்தூரத்தைக்கலந்து சுருக்குக்கொடுத்து அப்பால்நவாச்சாரம் சீனிக்காரம்-கூடன் வெடியுப்பு-வெங்காரம் வகைக்கு விராகனிடை-ச-வீதங்கல்வத்திட்டு எருக்கம்பாலாலும்-கள்ளிப்பாலாலும்- குமரிச்சாற்றாலும் வகைக்குஒருசாமம் தனித்தனியே ஆட்டி உலர்த்தி அப்பால் ஊமத்தஞ்சாற்றாலாட்டி மேற்படி தாளகக்கட்டிக்குக் கவசஞ்செய்து உலர்த்தி ஏழுசீலைமண்செய்து பத்தெருவிற் புடமிடக்கட்டும்.

பத்துவிராகனிடை தாளகக்கட்டிக்குச் சிவகரந்தைச்சாறு கரிப்பான்சாறு வகைக்குப்படி(க) சுருக்குக்கொடுத் துலர்த்தி அதை-யரு-எருவில்வெடியுப்பு அடக்கவறுத்து எலுமிச்சம்பழச்சாற்றிலரைத்து மூன்றுபுடம்போட்ட கரியுப்புவிராகனிடை-யசு- சிறுநீர் விட்டரைத்துக் கவசஞ்செய்து அதின்பேரில் ஒருவிரற்கனத்தில் கற்சுண்ணாம்புக் கவசஞ்செய்து காயவைத்து ஐந்துசீலை மண்செய்து பதினைந்து எருவிற் புடம்போட உருகிகட்டும்.

சாரக்கட்டு.

குளத்திலுண்டாயிருக்கிற முற்றின நூறு காக்காய்ச்சிப்பியை உயிருடனெடுத்துப்பொரித்து பொரிககாரம் பொரித்துப்போட்டுவைக்க நீரிறங்கும் இருப்புச்சட்டியில் அஞ்சாங்காசசல் வெடியுப்பைப்போட்டு அடுப்பேற்றி மேற்படிநீரைச் சிறுகச்சிறுகவிட்டுக் கிண்டிக்கொடுத்துக்கொண் டிருக்கத் தண்ணீர்போலாகும் அந்தப்பததிலிறக்கியொற்றி ஒருபலச்சாரக்கட்டிக்குக் கவசஞ்செய்து காயவைத்து நெருப்பில்கருக வாட்டி யுதிர்த்துப்போட்டு அப்பால் வெடியுபபுச்-சுண்ணம்-இந்துப்பு வளையலுப்பு-கல்லுப்பு-வெங்காரம்- துருசு-பற்பம்- சிப்பிச்சுண்ணம் அண்டச்சுண்ணம் வகைக்குப்பலம்-வ-வீதம் வெள்ளைக்கருவில் மெழுகுபோலாட்டிக் கவசஞ்செய்து நன்றாய்க்காயவைத்து ஒருசட்டியில் அரைப்படி கற்சுண்ணத்தைக்கொட்டி அதின்மேல் ஒருஜலேச்சுருளைவைத்து அதற்கு அரைவாசி கருமணற்கொட்டி அதில் மேற்படிசாரததை வைத்து மறையும்படி மேலுங் கருமணல்போட்டு ஒருசாமம் ஒருவிறகாலும் மறுசாமம்-உ-விறகாலும்-மூன்றுஞ்சாமம்-ங-விறகாலும்-நாலாஞ்சாமம்-ச-விறகாலுந் தீயாயெரிசது ஆறவிட்டெடுத்து அனுபானங்

களிற் பணவிடைகொடுக்க குன்மம்கட்டு நீர்க்கட்டுநீங்கும் இங்ஙங்கட்டைச்சேர்த்துச் செயநீர்செய்தால் சரக்குகள்கட்டும் மெழுகாகும்.

பாசாணக்கட்டு.

ஒருபடி பூப்ரில் நாலுபடி அமுரிவிட்டுக்கரைத்து மூன்றுநாள் தெளிவிறுத்து ஒருபலபாசாணக்கட்டியைத் தோளாந்திரகட்டி எரித்தெடுதது‌க் கள்ளிச்சாற்றிலும்-எருக்கம்பாலிலும்-திருகுகள்ளிப் பாலிலும் அல்லது சதுரக்கள்ளிப்பாலிலும் வகைக்குநாலுசாமம் சுருக்குக்கொடுத்து அயவிரலிச்சங்கை சுட்டசுண்ணும்பைச் சாராயம்விட்டுப் பிசைந்து அதற்குமத்தியில மேற்படி கட்டியைவைத்துத் தேங்காய்ப்பிரமாணமுருட்டி ஒருதுணியில்முடிந்து பானையில்வைத்து அதற்குக்கீழும்மேலும் ஒருபடிவெள்ளைக்கற்பொடியைக கொட்டித் தீயெரித்துத துணிவெந்தபின் ஆறவைத்துக்கட்டியையெடுத்துஒருதேங்காய்ப்பிரமாணம் நத்தையையரைத்து ஒருகலசத்திற்போட்டு அதின்மேற்கட்டியைவைத்துமூடிச் சீலைமண்செய்து எரித்து மருந்து கருகும்படியாய் புடம் போடவும் இந்தப்படி ஐந்துபுடம்போட்டெடுத்து பணவிடை அனுபானங்களில்விட சுரம்-சன்னி-தோஷம் முதலான அனேககொடியரோகங்கள் தீரும்.

வெள்ளைக்கற்சுண்ணம்-பூநீர் வகைக்குப்படி-௨-நாலுபடிதேசிநீரிற்கரைத்துகதெளியவைத்து மூன்றுநாள் தெளிவையிறுத்து அதில் பத்துவிராகனிடை பாசாணத்தைத் தோளாந்திரங்கட்டி எரித்தெடுத்து சீவனம் வெடியுப்புச்சுண்ணம-நவாச்சாரம்-வெங்காரம்-சூடன்-பூநீர்சிப்பிச்சதை இவைகளையரைத்துக் கவசஞ்செய்து குறுணிஉப்புக்குள்ளாவது சுண்ணும்புள்ளாவது வைத்தெரித்துநாலுசாமம்சென்றபின்னெடுத்து இஞ்சிச்சாற்றில் பணவிடையுரைக் சன்னி-சுரம்-சூலை-தீரும்.

ஜலமஞ்சரி.

கெந்தி-காந்தம்-லோகம்-வெங்காரம்-சீனம்-சங்குப்பொடிசலாசத்து-சாஸ்திரவேதி-கல்நார்வகைக்கு விராகனிடை-க- வெடியுப்புபலம்-க-இவைகளை மயனமாயாட்டிக் குகையிலிட்டு அனலில்வைத்து உருகினஉடன் ஆற்றியெடுத்துப் பணவிடைவீதம் இளநீர் பழச்சாறுவெந்நீர்கரிப்பான் கஷாயத்திலிட-கவுசி-நீராமை-பாண்டு-சோகைக-வீக்கந் தீரும்.

வெடியுப்புக்கட்டு.

சிறுநீரில் பூநீரைக்கரைத்து அதில்அண்ட ஓட்டைப் போட்டுக்கொதிக்கவைத்துச சுத்திசெய்தது விராகனிடைஐந்து நொறுக்கிக் காண்டியிற் போட்டு அதற்குக் கீழும்மேலும் வெடியுப்பு-சீனம் வகைக்கு விராகனிடை ஐந்துவீதம்பொடித்த தூளைப்போட்டு உலையில்வைத்துஊதி உருகினஉடனெடுத்து ஆற்றி வைத்துக்கொண்டு தேகக்கூறறிந்து

தேனிலாவது ஆவின்வெண்ணெயிலாவது ஒருபணவிடை உரைத்துக் கொடுக்க வாயுகுன்மம் வயிற்றுவலிசூதகவாயுதீரும்.

லவணகட்டு.

கரியுப்பு வெடியுப்பு இந்துப்பு சவுட்டுப்பு நவச்சாரம் வகைக்குவி ராகனிடை-ரு-ஐவிரலிச்சங்குசுண்ணம் விராகன்-ிரு-இவைகளைப்பொ டித்துத் திருகுகள்ளிக்கட்டையைநறுக்கிச் சோற்றையெடுத்து அதற் குளடைத்து அதினமேலந்தச் சோற்றால்மூடிச் சீலைமண்வலுவாயச் செய்து மூடப்புடம்போடக் கம்பியாயுருகி நிற்கும் அதை பணவிடைக ருப்புக்கட்டியிற் கொடுக்க குன்மம்வாயு வயிற்றுவலி முதலானவைநீ ங்கும்.

இந்துப்பு கல்லுப்பு பாறையுப்பு - சவுட்டுப்பு - வளையலுப்புமாவி லிங்கு பிரண்டை இவைகளை யோர்நிறையாய் முருங்கைப்பூ எருக்கம் பூ -வேலிப்பருத்தி - இவைகளின்சாற்றால் - வகைக்கொருசாமமாட்டி வில்லைசெய்து நன்றாய்க்காயவைத்து முழப்புடம்போடவலுத்துக்கட் டும் கறுத்திருந்தால் - அந்தச்சாறுகளி லெதினாலாவதரைத்துப்- புடம் போட்டு இரண்டுபணவிடை வாயுநெஞ்சடைப்புக்கு வெந்நீரிலும்அஸ் திகுன்மத்திற்கு ஆவினெய்யிலாவது - தேன்சுக்கிலாவது கொடுக்கத் தீரும்.

கரியுப்பைத்தண்ணீரிற் கரைத்துத் -தெளிவிறுத்துக்காய்ச்சியெடு த்து மேனிதைவேளைமுருங்கை இவைகளி னிலைச்சாற்றை ஓளவாய் விட்டு மெழுகுபோலாட்டிக் -காயவைத்து - குக்குடமாகமூன்றுபுடம் போட்டு பணவிடைகருப்புக்கட்டியில் மத்தித்துக்கொடுக்க சகலவாயு வுந்தீரும்.

வீரக்கட்டு.

ஒருவிராகனிடை வீரத்துக்கு-அமுரியிலேச் சாறுபடி-உ-சுருக்குக் கொடுத்துக்கட்டி ஒருகாண்டியில் ஆவினெய்விட்டுக்காய்ச்சிக் கட்டி யையெடுத்துக்கொண்டு அந்தநெய்யில் பரங்கிப்பட்டைச்சூரணத்தை ப்பிசைந்து சுண்டைக்காய்ப்பிரமாணம் உண்டைசெய்து கருப்புக்கட் டியிற் பொதிந்து மூன்றுநாளாறுபோது உப்புப்புளிநீக்கிச்சாப்பிடமே கம் கிரந்திமுதலானமேகரணங்கள்தீரும்.

இந்துப்பு-கல்லுப்பு-கரியுப்பு-வளையலுப்பு- சீனம்-சாரம்வகைக்கு ப்பலம்-க-வெடியுப்பு-பலம்-ரு-வெண்மையாய்வறுத்த - அருசுபலம்-உ- சூடன்பலம்-வ-இவைகளைப்பொடித்து இரண்டுபங்குசெய்து - ஒருபங் கைத் திராவகமாகவடித்து-அதைமற்றொருபங்கில்விட்டுப்பிசறி -கலசு த்திட்டு திராவகம்வடித்துச் சீசாவிலடைத்துக்கொண்டு அந்ததிராவக ம்விட்டு கரியுப்பை மயனமாயாட்டி வழித்து குகைபிடித்து அந்தக்கு கையிலாவது அப்பிரகத்தகட்டிலாவது சவ்வீரக்கட்டியைவைத்து -அ தைமணல்மேல்வைத்துத் தீயெரித்து வீரக்கட்டியில்சூடேறினவுடன் மேற்படிதிராவகம் இரண்டுசாமமும் தும்பை ஆடாதோடைமுருங்கை ப்பூ இவைகளின்சாற்றிலும் முலைப்பாலிலும் வகைக்கொருசாமஞ் சுரு க்குக்கொடுக்கக் கட்டும் அதை அனுபானங்களிலிட சகலகொடியரோ கங்கள் தீரும்.

கட்டினவீரத்திடைக் கெந்தியும் அயமும் -சமனாய் எலுமிச்சம்பழ ச்சாற்றால் மெழுகுபோலாட்டிக் கவசஞ்செய்து அதற்குமேல் உப்பை அரைத்துக்கவசஞ்செய்து காயவைத்து -ஒருசட்டியில் -இரண்டுவிரற்க டை மணற்போட்டு அதன்மேல்வைத்து அதன்மேலும் மணலைக்கொ ட்டி இரண்டுசாமங் கமலாக்கினியாய்த் தீயெரித்து ஆற்றியெடுக்கச்செ ந்தூரமாயிருக்கும் இதைச்சகலரோகங்களுக்கும் அனுபானங்களிற்கொ டுக்கத்தீரும் வாய்கட்டாது-௰-திங்கள் ஆண்டுபிரயோகிக்கலாம்.

கட்டுவகைப்படலம்- முற்றிற்று.

உ

சிவமயம்.

மெழுகுவகைப்படலம்.

அதாவது தேன்பனவெல்லம் எண்ணெய்நெய்சேர்த்து அரைப்ப தால் மெழுகுப்படலமெனப் பெயர்பெற்றது.

லிங்கமெழுகு.

குமரிச்சோற்றிற் கடுக்காய்த்தூளைப்போட்டுப் பிசைந்துவைத்து அதில்வருகிறநீரைப் பத்துவிராகனிடை லிங்கத்திற்கு ஒருசாமஞ்சுருக் குக்கொடுத்து சீனக்காரம் - துருசுவெங்காரம் - பூநீர்வகைக்குவிராகனி டை(௫)எருக்கம்பால்விட்டு மெழுகுபோலரைத்து மூன்றுபங்கிட்டு ஒ ருபங்கைக்கட்டிக்குப் பூசிக்காயவைத்து நன்றாய்க்காய்ந்தபின்பு மற்ற விரண்டுபங்கையும் அதுபோற்பூசிக்காயவைத்து மண்ணையரைத்துத்து ணியிற்பூசி ஐந்துசீலைசெய்துகுக்குடபுடம்போட்டு - எடுத்துக்கரண்டி யில்வைத்துக் கொடிக்கள்ளிச்சாற்றாலொருசாமஞ் சுருக்குக்கொடுத்து கட்டியில் ஊசியினாற் குத்தினாலிறங்கும் அந்தப்பதத்தில் கல்வத்திட்டு அரைக்கமெழுகாகும் அதைப்பணவிடை அனுபானங்களில்விட கிராந்தி குஷ்டம்கரப்பன்காசம் ஜன்னிசுரம் சூலைநீரோடுதல் -புண்பேதிவாதம் ரணம்நீங்கும்.

வீரமெழுகு.

பரங்கிப்பட்டை கொடுவேலிவேர் - சிவன்வேம்பு- சமூலம்-சேங் கொட்டை ஓர்நிறையாய்நறுக்கிப் பாண்டத்திட்டுக்குழித்தயிலமிறக்கி சு த்திசெய்த சவ்வீரம் லிங்கம்ரசகர்ப்பூரம் வகைக்குவிராகனிடை -௫-ரச ம் அரிதாரம் துருசுபற்பம் இந்துப்பு வகைக்குவிராகனிடை-௧-இவைக ளைமயனமாய்ப்பொடித்துக் காண்டியிற்போட்டு காற்படிதயிலம் விட்டு ஓயாமற்கிண்டிக்கொடுத்து வற்றினபின்புதேன்படி அரிக்கால் விட்டுக் கிண்டி மெழுகுபதத்திற் கல்வத்திட்டு சாதிக்காய் கார்கோலரிசி திரிக டுகு கோஷடம் அரத்தைதேசாவரம் அக்கிராகாரம் சன்னிநாயகம் தி

ப்பிலிமூலம் ஓமம்திப்பிலி கொடிவேலிவேர்ப்பட்டை வகைக்குவிராக் கனிடை-க-பொடித்து வடிகட்டிச்சேர்த்துத் தேன்விட்டு இரண்டுசாம ம்மெழுகுபோலாட்டி தந்தச்சிமிளிலடைத்துக்கொண்டு சுண்டைக்கா ய்ப்பிரமாணங் கருப்புக்கட்டியிற்பொதிந்து ஏழுவேளைகொடுக்க நெஞ் சடைப்பு மார்புக்குத்துவிப்புருதிவலிப்புகள் வயிற்றுவலி மூகவாதசன் னிசூலை-டு அ-காப்பன் உதிரத்திரட்சி தேகக்கடுப்பு சூதகவாயு மந்தார காசம் சன்னிதோஷம்கைகாலில் விழும்கறும்புவெள்ளை சொரிசிரங்கு படர்தாமரை குஷ்டம்மேகரணம் கிரந்தி அரையாப்புமேகப்புற்றுதுன் மாங்கிஷ அடைப்புந்தீரும் பத்தியம் புளி-புகைதள்ளவும்-கொஞ்சமள யிறுபல் எயிறுகட்டும்,

ரசமெழுகு.

ஒருபல கெந்தகத்தில் ஆவின்வெண்ணெயைப்போட்டு உருக்கி மூன்றுதபா மிளகு-தக்காளிச்சாற்றிலும் இரண்டுதபா வேலிப்பருத்தி ச்சாற்றிலும் சாய்த்தெடுத்து அதையும் - நாலுசேங்கொட்டையையும் வெட்டி அரைக்காற்படிவிளக்கெண்ணெய்யிற்போட்டுக் காய்ச்சி- ஒரு சொட்டுக் கீழேவிட்டுப்பார்க்கக் கெந்தகநிறமில்லாமலிருந்தால் அந்த ப்பதத்தி லிறக்கிவைத்துக்கொண்டு ஒருவிராகனிடை ரசத்தில்விட்டும த்தித்து வேளைக்குக் காற்பணவிடைவீதஞ்சருக்கரையிற் கலந்துண்ண மேகம்-உ க-ம்-சூலைகிரந்தி அரிச்சிரங்கு வெட்டைதீரும்.

கெந்தகம் விராகனிடை(டுரு) ஆவின்வெண்ணெய்பலம்-உ-சேர்த் து மெழுகுபோலாட்டித் துணியில்வூட்டித்திரித்து கதிர்ச்சேர்த்துத் தீயிற்கொளுத்திச் சுடர்த்தயிலமிறக்கிக் கல்வத்திட்டு இரசம்விராகனி டை-சு-சேர்த்து மெழுகுபோலரைத்துவைத்துக்கொண்டு ஒருபணவி டைவீதம் மூன்றுநாளாறுபோது கருப்புக்கட்டியிற்கொடுக்க வாதசூ லைதீரும்.

சங்கங்குப்பிச்சாற்றிற்கொடுக்க கிரந்தி அரையாப்பு பவுத்திரம் தீ ரும் சிறுசெருப்படைச் சாற்றிக்கொடுக்க சிரங்குசொரிதீரும்,

லிங்கரசகர்ப்பூரமெழுகு.

இரசகர்ப்பூரம்விராகனிடை லிங்கம்விராகனிடை (க) முலைப்பால் எலுமிச்சம்பழச்சாறு தேன்இவைகளில் வகைக்கொருசாமமாட்டிக்கர ண்டியில் வழித்துப்போட்டு மேற்படிசாறு கொஞ்சம்விட்டுத் தீபம் போலெரிக்க உருகி -மெழுகாகும்பணவிடை - வீதங்கருப்புக்கட்டியிற் கொடுக்க வயிற்றுவலி சூதகத்திரட்சி திரும் திரிகடுகுப்பொடியிற்கொடு க்க வாயுதீரும்.

பாசாணமெழுகு.

ஒருபடிபூநீறுநாலுபடி சிறுநீரிற்கரைத்து ஒருபலபாஷாணத்தை த் தோளாந்திரங்கட்டியெரித்து அப்பால்ஒருபடி முந்திரிச்சாராயம் சு ருக்குக்கொடுக்க மெழுகாகும் பிராயம் பட்டைத்தயிலத்தைச்சுருக்குக் கொடுத்து பணவிடை அனுபானங்களிற்கொடுக்க சுரம்சன்னிதோஷ ம் நீக்கும்.

மெழுகுவகைப்படலம்- முற்றிற்று.

சிவமயம்.

செந்தூரப்படலம்.

அதாவது பழரசம்-மூலிரசம்விட்டு ௫௰-புடம்போடுவதால் செந்தூரப்படலமெனப் பெயர்பெற்றது.

௫-ஆண்டுபிரயோகிக்கலாம்,

அயச்செந்தூரம்,

அரப்பொடியைப்பழச்சாற்றில் மூன்றுநாளூறவைத்துப்பிசைந்து கழுவிப்போட்டு அப்பால்காடியில் மூன்றுநாளூறவைத்துக் கழுவிச்சுத்திச்செய்து காட்டாமணக்கம்பாலில் மூன்றுநாளூறவைத்து ரவியுலர்த்திக் கல்வத்திட்டு மேற்படிபாலால் நாலுசாமம் அரைத்து வில்லைதட்டிக் காயவைத்து ஓட்டிலிட்டுச் சீலைமண்செய்து கெசபுடம்போடவும் இந்தப்படி மேற்படிபாலில்-௰௧-புடமும் - மருதம்பட்டை -நவ்வற்பட்டை-கற்றாழைசமூலம் - இவைகளை ஓர்நிறையாயிடித்துச் -சாறுவாங்கியதில்-௨௫-நாளூறவைத்து -அரைத்து-௩௰-புடமும் - பொற்றலைக்கரிப்பானிலையுஞ் சீந்திில்தண்டும் ஓர்நிறையாயிடித்துப் பிழிந்தரசத்தில்-௨௫-புடம்போட்டு வாததேகிக்குத் தேனிலும்பித்ததேகிக்கு -வாழைப்பழத்திலும் நெய்யிலும் ஆத்தையிலும் பாலிலுங்கொள்ள சோகைவிஷபாகவிககம் குடல்வாதம்தேகவெளுப்பு நயனரோகம் - ௯௬-ம்-நீங்கும் தேகம்பொன்போலாகும் ஒளியுண்டாகும் அதிகபலமுண்டாகும்- உதிர்ந்தரோமங்கள் முளைக்கும்நரைமாறும் -மேற்சொல்லியதை திரிகடுகிற்கொள்ள பெருவயிறுபக்கவாயுநீங்கும் வேளைச்சாற்றிற்கொள்ள குன்மம்-சத்திகாசரோகந்தீரும்.

முன்போற்சுத்திசெய்த அரப்பொடிபலம்-௧-சுத்திசெய்தகெந்திபலம்-௧-சிங்கிமுப்புக்கழஞ்சு-௧-இவைகளைப் - பொற்றலைக்கரிப்பான்சாற்றிலும் எலுமிச்சம்பழச்சாற்றிலும் வகைக்குநாலுசாமமரைத்து வில்லைத்தட்டிக்காயவைத்து ஓட்டில்வைத்து மேலோடுமூடிச் சீலைமண்செய்து முப்பதெருவிற் புடம்போட்டெடுத்து - அப்பால்மேற்படியிலைச்சாற்றில் மூன்றுபுடம்போட்டு அனுப்பானங்களிற்கொடுக்க பாண்டுபித்தம்மெய்மயக்கம்வாந்தி வாயுதிரும் இஞ்சிச்சூரணத்தில் பித்தவெட்டை பித்தவாயு அரோசியம் அன்னத்துவேசந்தீரும்.

முன்போற் சுத்திசெய்த நாலுபல அரப்பொடியைநவ்வற்பட்டைச்சாற்றுலொருநாளாட்டி வில்லைதட்டிக்காயவைத்து - கெசபுடம்போடவும் இந்தப்படிபொற்றலைக்கரிப்பான்- சாற்றிலும்கவுதும்பைச்சாற்றிலும் வகைக்கொருபுடம்போட்டு -எடுத்து-திரிகடு நற்சீரகம்- ஓர்நிறையாய்வெதுப்பிப்-பொடித்துத்-திரிகடிச்சூரணத்தில்-பணவிடை செந்தூரம்வைத்து தூலதேகிக்கு தேனில்மத்தித்தும் சூடகதேகிக்கு ஆவினெய்யில்-மத்தித்துக்கொடுக்க-விஷபாகந்திரும்-கையாந்தகரைக் -கஷாயத்தில்-தேன்விட்டுப்பணவிடைகொடுக்க சோகைதிரும் -இதுகளெல்லாமிச்சாபத்தியம்.

சாதிக்காய்-சாதிப்பத்திரி-கிராம்பு- இவைகளைப்பொடித்து-ஒருகாசிடைபொடியில்-பணவிடைச்செந்தூரம் - வைத்துத்- தேனில்மத்தித்துக்கொடுக்க-மேகந்திரும்.

சுத்திசெய்த அரப்படிபலம் (க௨) சுத்திசெய்தகெந்தகப்பலம்-௪௨ இவைகளைக்கல்வத்திட்டு கற்சுண்ணாம்பைத் தண்ணீரிற்கரைத்துத்தெளியவைத்து அந்தத்தெளிநீரா லேழுநாள் ரவியிற்காயவைத்து உதிர்த்து ஒருசட்டியிற்போட்டு மேற்சட்டிமூடிச் சீலைசெய்து இரண்டுசாமமெரிக்கச் செந்தூரமாகும் அதைகரிசாலைலேகியத்திற் கொள்ள பாண்டுசோகை-காமாலையும் பச்சரிசிக்கழுநீரிற் கிராணியும் தேன்-அல்லது வெப்பாலையரிசியும் சீரகமுங் கஷாயஞ்செய்து அதிற்கொள்ள மேகம சொரி-சிரங்கு-புண்புரையுந்தீரும.

சுத்திசெய்த அரப்பொடியை நவ்வற்பட்டை சாற்றில் நாலுசாமமாட்டி வில்லைகட்டிக்காயவைத்து கற்றாழஞ்சருகை இந்தத்தூள்குறுணியை ஒருபானையிற்கொட்டி அதின்மேல் வில்லையைவைத்து மேலுமந்தத்தூளைக்கொட்டி அதின்மேற்சட்டியைமூடி ஏழுசீலையண்செய்து (௰௨)சாமமெரித்து ஆற்றி இதற்குமுந்தினபிரயோகத்திற் சொல்லியபடி அனுப்பானத்தில் வியாதிகளுக்குபயோகிக்கவும்.

முன்போற்சுத்திசெய்த அரப்பொடிபலம் ஐந்துலிங்கம்பலம்-௨-சூதம்-கெந்தி-பொரிகாரம் வகைக்குப்பலம் (க) இவைகளைப் பொடித்து எலுமிச்சம்பழச்சாற்றிலும்-குமரிச்சாற்றிலும் வகைக்கு இரண்டுசாமமும்-நவ்வற்பட்டைச்சாற்றில் மூன்றுசாமமும்-முருக்கப்பூச்சாற்றில் நாலுசாமமும்-புளித்தமாதுளம்பழச்சாற்றிலொருசாமமு மரைத்து வில்லைதட்டிக் காயவைத்து கற்றாழஞ்சோற்றை நாலுவிரற் கனத்தில் ஒரு சட்டியிற்போட்டு அதன்மேல் நவ்வற்பட்டையை யிடித்த தூளை நாலுவிரற்கனம் பரத்தி அதின்மேல் மேற்படி வில்லையைவைத்து மேலுமதுபோலவே நவ்வற்பட்டைத் தூளுங் கற்றாழஞ் சோறும்போட்டு அதின்மேற் சட்டியைமூடி ஏழுசீலை மண்செய்து அடுப்பேற்றி தீபாக்கினி காடாக்கினியாக வகைக்கு எட்டுசாமமெரித்து ஆற்றியெடுத்துக் கல்வத்திட்டு குமரிமுருக்கம்பூ-நவ்வற்பட்டை இவைகளின்சாற்றால்வகைக் கொருசாமமாட்டிக் காயவைத்து ஓட்டிவிட்டேழுசீலைமண்செய்து முழங்காற்பள்ளத்திற் புடம்போட்டெடுத்துப் பணவிடை வீதந் திரிகடிச்சூரணத்தில்(௨௰)நாட்கொள்ள அஷ்டகாசம்-மந்தாரகாசம்-சுவாசகாசம் பாண்டுதீரும்.

அயக்காந்தசெந்தூரம்.

சுத்திசெய்த அயக்காந்தசெந்தூரம் வகைக்குப்பலம் (க) சாதிலிங்கம்-கெந்தகம் வகைக்குப்பலம் (௨) வெண்காரம்-இரதம் வகைக்குப்பலம்(௮)முப்புக்கழஞ்சு (௨) எலுமிச்சம்பழச்சாற்றில் நாலுசாமம்பொற்றலைக்கரிப்பான்சாற்றில் நாலுசாமம் அரைத்து வில்லைசெய்து காயவைத்து ஓட்டிவிட்டுச் சீலைசெய்து முப்பது எருவிற்புடமிட செந்தூரமாகும் இதையனுப்பானத்திற்கொள்ள பாண்டு ஆறும்-கிராணி ஆறும் பித்தநாற்பதும-வாயு-வாதம்-அக்கினி-மந்தம்தீரும் தாதுபுஷ்டிக்கும் தேகவெளுப்புநீங்கும் தேனிற்கொள்ள பாண்டு-சூலை-கொர்ப்பநோய்வாந்திபொருமல்-உஷ்ணவாயு-சிலேத்தம-மதலை மயக்கம்-வாயூறல்-பித்தம்-நீங்கும்.

அயக்காந்தம்-இரதம்,கெந்தகம்-ஓர்நிறையாய்க் குமரிச்சாற்றால் ஒருநாளாட்டி வில்லைதட்டிக் காயவைத்து ஓட்டிலிட்டுச் சீலைமண்செய்து சேவற்புடம்போட்டுத் திரிகடுகுச்சூரணத்தில் தேன்விட்டு மத்தித்து பணவிடை செந்தூரம்வைத்துண்ண வாயுதீரும் வெள்ளுள்ளித் தயிலத்தில் சன்னியும் நொச்சிச்சாற்றில் வாதம் பெருங்காயத்தில் கூஷயம் நீங்கும்.

சுத்திசெய்த காந்தம் - அரப்பொடிசூதம் - கெந்தி-சாதிலிங்கம் வகைக்குப்பலம் (க) கற்றாழம்பாலில் ஒருநாளாட்டி வில்லைசெய்து காயவைத்து ஒருசட்டியில்வைத்து மேற்சட்டிமூடி ஏழுசீலை மண்செய்து காடாக்கினியாக நாலுசாமமெரித்து பணவிடை இஞ்சிச்சாற்றிற் கொள்ள சோகைதீரும் சிந்தாதிலேகியத்திற் பாலையும் மேகமுந்தீரும் மற்ற அனுபானங்களிலிட வெட்டை-நீரிழிவு- தாகம்- வாயுட்சயம்-அஸ்திசுரம்-அஸ்திவெட்டைதீரும்.

சுத்திசெய்த அயம்-காந்தம்-கெந்தகம் வகைக்குப்பலம் (க) பூநீர்ச்சுண்ணம் கழஞ்சு (க) எலுமிச்சம் பழச்சாற்றால் நாலுசாமம் ஆட்டி வில்லைதட்டிக் காயவைத்து ஓட்டிலிட்டுச சீலைமண்செய்து ஒருமுழ குழிகள் அன்பதெருவிற் புடம்போட்டெடுத்து சாதிக்காய் - சாதிபத்திரி- அதிவிடையம்-காயம்-சுக்கு-திப்பிலி-மிளகு- அபின்-கோஷ்டம வகைக்குப்பலம் (க) வெதுப்பிப் பொடித்து நாலுபலக் கருப்புக்கட்டி சேர்த்திடித்துத் தேன்விட்டுப்பிசைந்து வேளையொன்றுக்கு ஒரு சுண்டைக்காய்ப் பிரமாணத்தில் செந்தூரம் குன்றியிடை வைத்துண்ண அறுவகைக்கிராணியும் மற்ற அனுபானங்களிற் பாண்டு-சோகை - காமாலையும் தீரும்.

மண்டூரசெந்தூரம்.

நாட்சென்ற நாலுப்பல மண்டூரத்தை இடித்து வெள்ளாட்டுநீர் குறுணிவிட்டு மூன்றுநாளூறவைத்து வறக்காய்ச்சி அப்பால் ஆவினீரில் பத்துத்தபாகாய்ச்சித் தேய்த்துக் கழுவிப்போட்டு கற்றாழஞ்சாற்றில் ஒருநாளாட்டி வில்லைசெய்துகாயவைத்து ஓட்டிலிட்டுச் சீலைசெய்து கெச்புடம்போடவும் இந்தப்படி மேற்படிசாற்றில் புடம் பத்துநீர் முள்ளி - கரிப்பான்-வீழி- வேலிப்பருத்தி-மாதுளம்பழம் இவைகளின் சாற்றில் வகைக்குப்புடம் பத்துப்போட்டு பணவிடை கரிப்பான் சாற்றிற்கொள்ள மகோதரம்-விஷநீர்க்கோவை-கெண்டைபாண்டு விஷபாகம்-சோகை-சூலை-பெருவயிறு-குன்மம்-தேகவீக்கம்-நீர்க்கடுப்பு-தாகம் வாதம்-குடல்வாதந்தீரும்,

முன்போற் சுத்திசெய்த மண்டூரம்பலம்(க) கெந்தி-சூதம்-கெவுரி வெடியுப்பு-சூடன் சாரம் சீனம் தாளகம் வகைக்குப் பலம் (க) இவை

௩ளை எருக்கம்பாலில் ஆறுசாமமும் பழச்சாற்றி லிரண்டுசாமமு மாட்டி வில்லைகட்டிக்காயவைத்து குக்குடபுடம்போடவும் இந்தப்படி செந்தூரமாகும்வரை புடம்போட்டெடுத்து அனுப்பானத்திற் கொடுக்க பாண்டுவகையெல்லாந்தீரும்,

முன்போற் சுத்திசெய்த மண்டூரத்திடைக்குப் பத்திலொன்றுகெந்தி-சூதம்-லிங்கம்-மூப்பு - வெங்காரங்கூட்டி எலுமிச்சம்பழம் கரிப்பான்-செருப்படை-செம்பை இவைகளின்சாற்றில் வகைக்குப் புடம் பத்து அரசம்பட்டைச்சாற்றிற் புடம்ஐந்து முன்போற போட்டெடுத்து திரிகடுகுதேனில் இரண்டு பணவிடை வைத்துண்ண விஷபாண்டு காமாலை-பாண்டு-பித்தம்-சிலேத்மம்-தேகவெளுப்புமாறும்.

சுத்திசெய்த அரப்பொடி காந்தம்-மண்டூரகம்வகைக்குப்பலம்(க)கவுதும்பை-கரிப்பான்-வெற்றிலை இவைகளின்சாற்றால் வகைக்கு நாலுசாமம தனித்தனியே ஆட்டிக்கெசபுடமாய் ஐந்து புடம்போட்டு அனுப்பானங்களிலிட முந்தின்பிறையோகத்திற் சொல்லிய வியாதிகளைந்துந்திரும.

சுத்திசெய்த அரப்பொடி- காந்தம் - மண்டூரம் வகைக்குப்பலம் (ரு) எருக்கம்பாலால் ஒருசாமமாட்டி வில்லைசெய்து காயவைத்து ஓட்டிலிட்டுச் சீலைசெய்து குழிவெட்டிக் கெசபுடம்போட்டு அப்பால் மேற்படிபாலிலும் கையாந்தகரைவிழி-சிறுபூளை - சிறுகீரை-பொன்னாங்காணி செந்நாயுருவிநீர் - முள்ளிகற்றாழை இவைகளின்சாற்றிலும் உசிலம்பட்டைக் கஷாயத்திலும் வகைக்குப்புடம் பத்துப்போட்டு திரிகடுகுச்சூரணத்தில் செந்தூரம் பணவிடைவைத்துத் தேன்விட்டு மத்தித்துக்கொடுக்கப்பெருவயிறு-காமாலை-பாண்டு-சோகை-மகோதரம்- கவுசிகைகால்கடுப்பு-வாதசூலை-மேகவட்டை-நீர்க்கடுப்பு - சன்னி-சீதளம்- மந்தாரசன்னி-அண்டவாதம்-சயரோகந் தீரும்.

உருக்குச்செந்தூரம்.

கோசலமும் வெள்ளாட்டுநீரும் ஒன்றாய்க் கலந்து அதில் பத்து உருக்குளியைப் பழுக்கக்காய்ச்சித் தோய்க்க அதில் தகடாயுதிரும் அதையெடுத்து பொற்றலைக்கரிப்பான் சாற்றா லொருநாளாட்டி வில்லைசெய்து காயவைத்து ஓட்டிலிட்டு மேலோடுமூடிச் சீலைமண்செய்து கெசபுடம் போட்டெடுத்து இந்தப்படி அந்தரத்தாமரையின் சாற்றிலொருபுடமும் கற்றாழஞ்சாற்றி லொருபுடமும் போட்டெடுக்கச் செந்தூரமாகும் திரிபலைத்தூளும் வெல்லமுங்கூட்டிப் பணவிடைச் செந்தூரம்வைத்து தூலதேகிக்குத் தேனிலுஞ் சுட்கதேகிக்கு ஆவினெய்யிலும் மத்தித்துக்கொடுக்க தேகம்பலக்கும் நரைதிரைமாறும்.

திரிலோகசெந்தூரம்.

சுத்திசெய்த- அப்பு-காந்தம்-அப்பிரகம் வகைக்குப் பலம் (க) கெந்தகம்பலம் (ரு) ரசம்பலம் (௧௨) பூநீர்கழஞ்சு (ரு) இவைகளைக் கல்வத

கிட்டுபொற்றலைக்கரிப்பான் - சிறுசெருப்படை-குமரி இவைகளின்சாற்றால் வகைக்கு நாலுசாமமாட்டி வில்லைசெய்து காயப்போட்டு நூறுஎருவில்புடம்போட்டு லிங்கம்பலம் (௨) கூட்டிக குமரிச்சாற்றால் (௪) சாமமாட்டி வில்லைதட்டிக்காயவைத்து முப்பதெருவில் புடம்போடச்செந்தூரமாகு இதைச் சஞ்சீவிசூரணத்தில் பணவிடைசெந்தூரம்வைத்து நெய்யில் மத்தித்துக்கொள்ள-மேகநீர்ப்பாண்டு- பித்தம்-பிரமேகம்-வாயு-உட்சூடு-இருமல் நீங்கும் தேகங்குளிரும.

சுத்திசெய்த- அயம்- உருக்குகிட்டம் வகைக்குப்பலம்(௧) நவ்வற்பட்டைசசாற்றில் ஒருசாமமாட்டி வில்லைதட்டிக்காயவைத்து ஓட்டில்வைத்துச் சீலைமண்செய்து கெசபுடம்போடவும் இந்தப்படி அஞ்சுபுடம்போட்டு சிற்றாமணக் கிலையிற் பொதிந்து நெற்பாண்டத்துக்குள் இருபதுநாள்வைத்துபணவிடை அனுபானத்திற்கொள்ள பாண்டுசோகை-காமாலை-பெருவயிறு-சலக்கழிச்சல்-விஷநீர்க்கோவை-வாய்நீரூறல் வாய்க்கசப்பு-வாந்தி-இருமல்- இளைப்பு-வாயு-பொருமல்தீரும்.

பஞ்சலோகசெந்தூரம்.

தங்கம்-வெள்ளி-செம்பு-காந்தம்-இரும்பு இவைகளையோர்நிறையாய்ச்சுத்திசெய்து அதற்கிரட்டி கெந்தகம்-சூதம்- அரைவீராங்கால்கூட்டி முப்புச் சுண்ணம் கழஞ்சு (௧) எலுமிச்சம் பழச்சாற்றிலும் கரிசாலைச்சாற்றிலும் வகைக்குநாலுசாமமாட்டி முழப்புடத்திற்போட்டு அப்பால் சிறுசெருப்படைச்சாற்றில் நாலுசாமமாட்டி முழப்புடத்திற்போடசசெந்தூரமாகும் அதிற் பணவிடை திரிகடுகுச்சூரணத்தில் வைத்துத் தேன்விட்டுமத்தித்து மண்டலங்கொள்ள- வாயுஎண்பதும் பித்தம் மூலம்-சிலேஷ்மம்நீங்கும்.

அப்பிரகசெந்தூரம்.

ஆவிநீரும் வெள்ளாட்டுநீரும் ஒன்றாய்க்கலந்து அதில் கிஷ்ண அப்பிரகத்தைகொல்லனுலையில் பழுக்கக்காய்ச்சித்தோய்த்து உரலிலிட்டுக்கட்டப்பாரையாலிடித்து நெல்லுடன்கலந்து அவித்துக் கம்பிளியிற்கட்டிக் காடியிற்பிசைந்து மறுநாள்தெளிவையிறுத்து அடியில் உறைந்திருக்கும் அப்பிரகநவநீதத்தை ரவியுலர்த்தி பலம் (௰) கெந்திபலம் (௧) மகல்வத்திட்டு எலுமிச்சம்பழச்சாற்றால் நாலுசாமமாட்டி லேசாய் வில்லைக்காயவைத்து - ஓட்டிலிட்டுச் சீலைசெய்து முப்பதெருவிற்புடம்போடவும்-இந்தப்படி புடந்தோறும-கெந்திசேர்த்து எலுமிச்சம்பழம-கரிசாலை-செருப்படை-பொடுதலை-முருக்கம்பூ- பொற்றலைக்கரிப்பான்-சிறுசெருப்படை இவைகளின் சாற்றில் வகைக்குப் புடம பத்துபோடச் செந்தூரம அருணன்போலாகும அனுபானங்களிலிட சயம்-ஈளை-இருமல் முதலானசிலேத்துமநோய்தொண்ணூற்றாறும அமிர்தசஞ்சீவிசூரணத்திற்கொடுக்க மேகநீரிழிவு- பிரமியம்- எலும்புருக்கி-உட்சூடும உள்ளெரிவுநீக்கும விந்துறும புஷ்டியாகுமகண்குளிரும

இரண்டுபலம் அப்பிரகநவநீதத்திற்குகெந்திதங்கம் வகைக்குவிராக
னிடை(௫)வீதம்புடந்தோறுஞ்சேர்த்து சிறுசெருப்படைச்சாற்றால் நா
லுசாமமாட்டிப்பவியுலர்த்தி முப்பதெருவில் முப்பதுபுடம்போடச்செங்
காரமாகும் அந்தச்செந்தூரம்-குங்குமப்பூ-கோரோசனை பச்சைக்கற்பூ
ரம் நத்தைச்சூரிவிரைசூடைகீர் வகைக்குவிராகனிடை - ௫-புனுகு-அபி
ன் வகைக்குவிராகனிடை -௧௦- இவைகளைச்செவ்விளநீராலும் கரும்புச்
சாற்றாலும் மாதுளம்பழச்சாற்றாலும் -வகைக்குஒருசாமமாட்டி குன்றி
போலுண்டைசெய்து காலையிலும் மாலையிலும் ஒவ்வோருண்டைவீத
ம் ஆவின்பாலிலுரைத்துச் சாப்பிட்டுவர நீரிழிவு பிரமேகம் தீரும்.

வீரியவிர்த்தியும் தேககாந்தியு முண்டாகும் சாதிக்காய்த்தயிலமு
ம் கசகசாத் தயிலமும் ஓர்நிறையாய்க் கலந்து கால்விராகனிடை தயில
த்திற் செந்தூரம்பணவிடை வைத்துமாலையிலுண்டு இரவில்பாலும் அ
ன்னமுஞ்சாப்பிட்டுப் புணர்ந்தால் விந்துகட்டும்.

அப்பிரகநவநீதம்பலம்-௰ - முள்ளங்கிக்கிழங்குச்சாற்றில் நாலுசா
மமாட்டி வில்லைசெய்து காயவைத்துக்கெசபுடம்போடவும் இப்படி
மேற்படி சாற்றிலும் ஆல்,அரசு நாவல் அத்தி இவைகளின் பட்டைக
ளை ஓர்நிறையாயிடித்துக் கஷாயஞ்செய்து அதிலும்கொடுவேலிவேர்க்
கஷாயத்திலும் எலுமிச்சம்பழம் கவுதும்பைகரந்தை சிறுசெருப்படை
பொற்றலைக்கரிப்பான் முருக்கம்பூகுமட்டி மாதுளம்பழம் புளிப்பு மா
துளம்பழம் இவைகளின்சாற்றிலும்வகைக்குப்புடம்பத்துப்போட்டெ
டுத்து அனுபானங்களில்விட சயம் -௬௰-மேகம்-௨௧-இருச்சனம்பிரமேக
ம் மேகவாயுகிராணிசன்னி அஸ்திசுரம் அஸ்திவெட்டை உடல்வாட்சி
கைகாலெரிவு காந்தல்நீங்கும் ஆவின்பாலிற்கொள்ள தாதுகட்டும்.

அப்பிரகநவநீதத்தை எருக்கம்பாலில் ஏழுநாளூறவைத்துநாலுசா
[…]டி வில்லைசெய்து காயவைத்து ஓட்டிலிட்டுச் சீலைசெய்துகெசபு
[…]ட்டு பின்புமுள்ளங்கிக்கிழங்கு செங்குமரி-நாயுருவி கொழிஞ்சி
[…]ருட்கிழங்கு கரணைக்கிழங்கு கருவாழை பொன்னாங்காணி சா
[…]த்தக்காளி கறிப்பிரண்டை நீர்முள்ளிகொட்டாங்கரந்தை திரு
[…]சைகச்சந்திராய் பொற்றலைக்கரிப்பான் இவைகளின்சாற்றிலு
[…]லவிழுதுக்கஷாயத்திலும் வகைக்குமூன்றுபுடம்போட்டு பணவி
[…]யனுபானங்களில்விட தாதுகட்டும்நரம்புகள்முறுக்கேறும் தேகமப
லக்கும் பத்தியமில்லை.

அப்பிரகநவநீதம்பலம்-௪. கோவையிலைச்சாற்றில் நாலுஜாமமாட்
டி அன்பதெருவில்புடம்போட்டு கெந்தகம் - சூதம்பவளம் - காந்தம்வ
கைக்குப்பலம்-௨-சேர்த்துக்கரிப்பான்சாற்றிலும் உதியம்பட்டை ஆவா
ரம்பட்டை ஆலவிழுது இவைகளின்கஷாயத்திலும் - குமரிச்சாற்றிலும்,
பொற்றலைக்கரிப்பான்சாற்றிலும் தளுக்கற்றுஅருணன்போற்சிவக்கும்வ
ரைபுடம்போட்டு அனுபானங்களில்விட மேகநீரிழிவுதீரும்.

கருவங்கசெந்தூரம்.

காரியத்தை எலுமிச்சம்பழச்சாற்றிலும் நல்லெண்ணெயிலும்கோ
சலத்திலும் கொள்ளுச்சாற்றிலும் காடியிலும் வகைக்குஏழுதபாஉரு
கிச்சாய்த்து சுத்திசெய்தது பலம்-௪-சூதம்பலம்-௧-அயச்சட்டியிலிட்டு
ருகும்போது ஆவாரைபஞ்சாங்கத்தை இடித்துத்தூள்செய்துதூவி நாலு
சாமம்வறுத்து பின்புஒருசாமமரைத்து சிறுசெருப்படை எலுமிச்சம்ப
ழம் கற்றாழைபொற்றலைக்கரிப்பான் இவைகளின்சாற்றில் வகைக்குநா
லுசாமமாட்டி வில்லைசெய்து - காயவைத்துகோழிப்புடம்போட்டுப் ப
ணவிடை தேன்நெய்யிலுண்ணபிரமியம் பெரும்பாடு -இருச்சனம்கல்ல
டைப்பு நீரிழிவு தீரும்.

முன்போற்சுத்திசெய்த ஒருசேர்காரீயத்தை அயச்சட்டியிலுருக்கி
மூப்புச்சுண்ணம் நீருசுச்சுண்ணம் வகைக்குக்கழஞ்சு-௧- அஞ்சாங்காச்
சல் வெடியுப்புப்பலம்-௰-ஒன்றாய்ப்பொடித்துச் சிறுகச்சிறுகத்தூவி
அசுவகெந்திவேரினால் நாலுசாமங்கடைந்து கல்வத்திட்டுநீரா அமு
ரியிற்கரைத்துத் தெளிவிறுத்து அதினால்ஒருசாமம் ஆட்டிச்சிறுவில்லை
களாய்ச்செய்து காயவைத்து ஒருசட்டியிற்பச்சைப்பனையோலையைவிரி
த்து அதின்பேரில்மேற்படிவில்லைகளைப்பரத்தி -மேற்சட்டிமூடிச்சீலை
செய்து கமலாக்கினியாய்நாலுசாமமெரித்து ஆறவிட்டெடுக்கச்செந்தூர
மாகும்அதைபணவிடை அனுபானங்களிலிட மேகம்-௨௰-ம்-குமரிலே
கியத்திலிடசூலை கிராணிவாதம்-௮-ம்-பித்தம்-௪௰-சிலேற்பனம்-௯௬-நீ
ங்கும் தேகம்பலக்கும்பத்தியத்திற்கு ஆவின்பாலும் நெய்யுஞ்சேர்த்து
க்கொள்ளலாம்.

சுத்திசெய்தகருவங்கம்பலம்-௫- அயச்சட்டியிலிட்டு -உருக்கிஅதில்
ரசம்பலம்-௫-கெந்தகம்-மனோசிலை அரிதாரம் வகைக்குப்பலம்-வ- ஒன்
றாய்ப்பொடித்துச் சிறுகத்தூவிகற்றாழஞ்சோற்றில் - கடுக்காய்ப்பொ
தூவிப்பிசைந்துவைத்திருக்கசெலம்வறும் அதைவிட்டு அயக்காம்
கிண்டிக்கொடுக்கச்செந்தூரமாகும் அதில்பணவிடை நெய்யிற்கொ
நீரிழிவும்சுக்குக்கஷாயத்தில்சுரமும்கரிப்பான்சாற்றில்காமாலைப
நீங்கும்.

சுத்திசெய்த வங்கம்பலம்-௧-உருக்கிரோமம் பலம்-௧- ம
லம்-வ-ஒன்றாய்ப் பொடித்துஇரண்டுசாமம்வரை சிறுகத்தூவி
ம்பாற்கிண்டிவறுத்து - அப்பால்வெடியுப்புபலம் -௧-ஆவாரைவே
டைபலம்-௨௫-ஒன்றாய்ப்பொடித்து இரண்டுசாமம்வரைசிறுகத்தூவி
ற்றாழைவேராற்கிண்டிவறுத்து -குமரிஎலுமிச்சம்பழம் - சிறுசெருப்ப
டை பொற்றலைக்கரிப்பான் - இவைகளின்சாற்றில் -வகைக்கொருபுடம்
போட்டெடுத்து அனுபானங்களிலிடமேகநீரிழிவுவாட்சிகாநதல்கிரந்தி
சூலைபெரும்பாடு மேகப்புற்றுத்தீரும்.

சுத்திசெய்தகருவங்கம்பலம்-௧-ஆடாதோடைவேராலும் ஆடுதீண்
டாப்பாளைவேராலும் வகைக்கிரண்டுசாமம்வறுத்துக்கல்வத்திட்டுமேற்
படிசாற்றிலும் கொட்டாங்கரந்தைசாற்றிலும் அரைத்துவகைக்குமூன்

நுபுட்மும் வெற்றிலைச்சாற்றிற்பத்துப்புடமும்போட்டு அனுபானங்க ளிலிட மேகக்கட்டி முதலியரோகங்கள் தீரும்.

சுத்திசெய்த வங்கம்-நற்பவளம் சலாசத்துவகைக்குப்பலம்-க சூத ம்பலம்-உ இவைகளை எலுமிச்சம்பழச்சாற்றால் - மூன்றுநாளாட்டிவில் லைசெய்து காயவைத்து புடம்போட்டுநிறுத்துநாலிலொன்றுகெந்திசே ர்த்து பொற்றலையின் சாற்றாலாட்டிச்சிவக்கும்வரைபுடம்போட்டு அமி ர்தசஞ்சீவி லேகியத்திற்கொள்ள கழிச்சல்கடுப்புஇரத்தம் அபானங்கா ந்தல் லிங்கப்புற்று முதலான மேகவியாதிகள்தீரும்.

சுத்திசெய்த வங்கம் சூதம்பவளம் - லிங்கம்வகைக்குப்பலம்-ச-எ லுமிச்சம்பழச்சாற்றாலரைத்து வில்லைசெய்து காயவைத்து ஓட்டிலிட் டுச்சீலைசெய்து மணல்மறைவில் மூன்றுபுடமும் வெளியில்அஞ்சுபுட மும்போட்டு அனுபானங்களிலிட நவமூலம் மூலச்சூடுநீரிழிவுகிராணி தீரும்.

தாம்பிரசெந்தூரம்.

அஞ்சுப்லத் தாம்பிரத்தைக் குகையிலிட்டு உருக்கி அண்டத்தோ ல்பலம்-க-மஞ்சள்வலை வெங்காரம்காரம்பூரம்வெடியுப்பு வீரம்சீனம் பூநீர்ச்சுண்ணம் வகைக்குக்கழஞ்சு-க - இவைகளை அரைப்படிப்பழச்சாற் றாலாட்டி பணம்போல்வில்லைசெய்துகாயவைத்து ஒவ்வொருவில்லையா ய்க்கொடுத்து பின்பு அதை மறுகுகையிலிட்டு உருக்கி ஒருபடிஎலுமிச் சம்பழச்சாறும் காற்படிமுலைப்பாலும்சுருக்குக்கொடுத்த தாளகம்பலம் க-வெங்காரம்சாரம்வகைக்குப்பலம்உவ-கல்வத்திட்டுஒருபடிதிருகுகள ளிப்பாலில்மேற்படிகள்ளியுப்புவச்சாரம் வீரம்பூரம் வெடியுப்புசீனம் பூநீர்வகைக்குக்கழஞ்சு-க-பொடித்துப்போட்டு வைத்திருக்கமூன்றுநா ள்செலமாகும் அந்தசெலத்தால் மூன்றுநாளரைத்துப் பணம்போல்வில் லைசெய்து காயவைத்துஉருக்குமுகத்தில் ஒவ்வொருவில்லையாகக்கொ டுக்க களிப்பற்றுசெம்புநிறம்மாறி வெண்கலம்போலாகும் அதைக்கல் வத்திட்டுப்பொடித்து அதற்கிரட்டிசூதமும் வீரமுஞ்சேர்த்துபூநீர்ச்சு ண்ணம்கழஞ்சு-ஒ-சேர்த்து முலைப்பாலில்மூன்றுநாளாட்டிக் காயவை த்துக்கண்ட இடைகெந்திசேர்த்துப் பொற்றலைக்கரிப்பான்சாற்றாலாட் டிஐம்பதெருவிற்புடம்போடசெந்தூரமாகும் பணவிடை திரிகடுகுச்சூ ணத்திற்கொள்ள குன்மம்வாயுபீலிகைஉதிரத்திரட்சிபெருவயிறு நீர்க் கோர்வை நீராமைதிரும்பத்தியம்ஆவின்பாலில் நெய்சேர்த்துக்கொள் ளவும்.

முன்போற்சுத்திசெய்த தாம்பிரத்திற்குப் பாதிகெந்தியும்சூதமுங் கூட்டிப் பழச்சாற்றால்ஒருநாளாட்டி வில்லைசெய்து காயவைத்துக்கெ சப்புடம் போடவும் இந்தப்படிசிவக்கும்வரை சூதம்கெந்திகூட்டிப்புட ம்போட்டெடுத்துப் பணவிடை அனுபானங்களிலிடமேற்படிவியாதி கள் தீரும்.

முன்போற்சுத்திசெய்த தாம்பிரம் விராகனிடை-௰-கெந்தகம்விராகனிடை-௫-இரதம் விராகனிடை-௬-கல்வத்திட்டுநொச்சியிலைச்சாற்றால் மூன்றுநாளாட்டி அரசிலைபோல் லேசாய் - வில்லைதட்டிக்காயவைத்து ஒருசட்டியிற்பாதிவரை உப்பிட்டு அதின்மேல் வில்லைகளைப்பரத்தி மேலும்உப்புக்கொட்டி அடுப்பேற்றித்தீபம்போல்எட்டுசாமம் எரித்து ஆற்றியெடுக்கச்செந்தூரமாகும் அதிற்பணவிடை அனுபானங்களிலிட மேற்காட்டியபிணிகள்நீக்கும்,

முன்போற்சுத்திசெய்த தாம்பிரத்திடை-கெந்திசேர்த்து எருக்கம்பாலால் நாலுசாமமாட்டி வில்லைதட்டிக்காயவைத்து கெசபுடம்போட்டுப் பின்புதிரிபலைக்கஷாயத்திலும்- ஆவின்பாலிலும்கற்றாழஞ்சாற்றிலும் வகைக்கு நாலுபுடம்போட்டு அப்பால் எருக்கம்பால்வெள்ளாட்டுப்பால் தாமரைக்கிழங்கு அரசம்பட்டைபொற்றலை இவைகளின்சாற்றில் வகைக்குஒருபுடம்போடச் செந்தூரமாகும அதில்பணவிடை அனுபானங்களிலிட சகலரோகங்களுந்தீரும்.

முன்போற்சுத்திசெய்த தாம்பிரம்பலம்(௧)பொன்னிமிளைபலம்-௩-ரசகம்பலம்-௨-கெந்திபலம்-௮-இவைகளைக்கல்வத்திட்டுபொற்றலைக்கரிப்பான்சாற்றில் மூன்றுநாளாட்டி வில்லைத்தட்டிக்காயவைத்து மணல்மறைவிற்புடம்போட்டு பின்புமேற்படிசாற்றிலரைத்துவெளியில்ஐந்துகோழிப்புடம்போட்டு - அனுபானங்களிலிடமூலம்குன்மம் சூலைபுற்று முதலானசகலவியாதியுந்தீரும்தாதுபுஷ்டியாகும.

நாகசெந்தூரம்,

இலுப்பைநெய்யிற் பத்துதபாஉருக்கிச்சாய்த்துச் சுத்திசெய்தநாகத்தைக குகையிலிட்டு உலையில் வைத்துருக்கி அதில்ஒருபலமனோசிலையைப்பொடித்துத்தூவிவெண்கொழிஞ்சிவேராற்கிண்டநீறும்அதைக்கல்வத்திட்டுரசகம்விரமவகைக்குப்பலம்-௧-கூட்டிமுலைப்பாலால்நாலுசாமமாட்டிப்பின்பு கெந்தகம் இரட்டிப்புச்சேர்த்துபொற்றலைக்கரிப்பான்சாற்றிலரைத்து ஆறுதபாகோழிப்புடம்போடச் செந்தூரமாகும் குன்றியிடை அனுபானங்களிலிடகாசம்வலிகுன்மம் எரிகுன்மம் கவுசிபுண்சூலைகிராணிஉள்மூலம் மேகம்வாதம்பீலிகைகாமாலை காச்சல்குளிர்மந்தாரகாசம் நீக்கும.

ஒருபலம்சுத்திசெய்தநாகத்தை அயச்சட்டியிலுருக்கி அதில்வளையலுப்பு மஞ்சள்வகைக்குப்பலம்-௨-பொடித்துத்தூவி அயக்கரண்டியாற்கிண்டிப்பின்பு சென்னியுருவி சமூலத்தைபிடித்ததூளைச்சிறுகச்சிறுகத்தூவி சிவககுமட்டுங்கிண்டிககொடுத்துப் -பணவிடை அனுபானங்களிலிட மேற்படி வியாதிகள்தீரும்.

சுத்திசெய்தநாகம்பலம - ௪-இருப்புச்சட்டியிலுருக்கி-வெடியுப்புபலம-௧-ஓமம்சுக்குமஞ்சள்-வகைக்குப்படி-காலேஅரைக்கால்ஒன்றாய்ப்

பொடித்துத்தூவி அறுகம்வேரால் இரண்டுசாமந்கிண்டிக் கொடுத்து அப்பால் நாயுருவிசமூலம் இடித்ததூளைச் சிறுகத்தூவிக்கிண்டிக் கொடுத்துச் சிவந்தபின்பு எலுமிச்சம்பழச்சாற்றாலாட்டி வில்லைசெய்து காயவைத்துபுடப்போட்டு பணவிடை அனுபானங்களில்விட ஈளை-இருமல்-எலிகடி-தாகம்-மூலந் தீரும்.

காளமேகநாராயணசெந்தூரம்.

எட்டாங்காய்ச்சல் வெடியுப்பு-சினம் வகைக்குப்பலம் (உச) வெண்மையாய்வறுத்தநாருசு வெங்காரம்சாரம்-கல்லுப்பு வகைக்குப்பலம் (ரு) பூரீர்பலம் (ங) இவைகளைப் பொடித்து மூன்றுபங்குசெய்து ஒரு பங்கைத் திராவகமிறக்கி யதைமற்றொருபங்கிலவிட்டுப்பிசறி யுலர்த்தி பொடித்து திராவகமிறக்கி அதைமூன்றாவதுபங்கில்விட்டுப் பிசறியுலர்த்தி திராவகம்வடித்து பளிங்குககற்சீசாவிலடைத்துக்கொண்டுவாலைரசம்பலம் (ஙய) சாதிலிங்கம்பலம் (யரு) அரிதாரம்பலம் ய) கெந்தகம்பலம் யஉ-மனோசிலைபலம் (ச) இவைகளைககல்வத்திட்டுப்பொடித்து மேற்படி திராவகத்தால் நாலுசாமமாட்டி, நன்றாய் உலர்த்திப்பொடித்துவமூசிலைசெய்து காயவைததுலர்த்திககுப்பியிலிட்டுபலப்பககல்லாலடைதது ஒருசட்டியில் நாலுவிரற்கடை பொடிமணலைக்கொட்டி அதின்மேற்குப்பியைவைத்து அதின்கழுத்துவரை மணலைககொட்டி மேற்சட்டிமூடி சீலைமண்செய்து பத்துசாமம் ஆவாரைவிறகாலெரித்துமேற்சட்டிதிறந்து சலாகைபோட்டுக் கிண்டிக்கொடுத்துநிறமில்லா விட்டால் பின்னுமிரண்டுசாமமெரித்து ஆறவிட்டெடுக்கச்செந்தூரமாயிருக்கும் நாதுளை-கண்டங்கத்திரி-ஆடாதோடை இவைகளை ஓர்நிறையாயிடித்துப்பிட்டவித்து அரைக்காற்படிசாறுபிழிந்து அதிலொருகாண்டிதேனும் அரைப்பணவிடை செந்தூரமுங்கலந்து நாளொன்றுககு இருநேரம் இருபதுநாட்கொடுக்க சிலேதமநோய் (கூரு) ம்-எலிகடி-வயிற்றுப்பொருமல்-மேலிளைப்பு-சன்னி (ரு) சன்னிமூர்ச்சை-சிலேற்பனமூர்ச்சை இப்படிப்பட்டவியாதிகள் (எஅ) ம்-தீரும.

திப்பிலியை வெதுப்பிப்பொடித்த சூரணம்-திரிகடியில் அரைப்பணவிடை செந்தூரம்வைத்து தேனில்மததித்து இருவேளையும் ஒருமண்டலங்கொள்ள சூலை-யஅ-ம்-குஷ்டநோய்-ரணம்-கடிவிஷம்-ஆரையாப்புபுற்று-கபாலசூலை-கண்ணோய்-கண்ணப்புற்று-பீனிசம் - நெஞ்சுநோய் காதடைப்பு-நெஞ்சடைப்பு-காதுமடல்விக்கந்தீரும்.

வெள்ளுள்ளித்தயிலத்தில் அரைப்பணவிடை வீதம் இருவேளையும் பத்துநாட்கொள்ள வாதமூர்ச்சை-பித்தமூர்ச்சை - அற்புதவாதம்-உதிரவாதம் - சன்னி மூர்ச்சைசிலந்தி கண்ணோய்கரப்பன்-சன்னி-யஅ ம் தீரும்.

நெற்பொரி-அசமதாகம்-சுக்கு-மிளகு இவைகளை வெதுப்பிப்பொடித்த சூரணம் - திரிகடியும் அரைப்பணவிடை செந்தூரமும் மூரு

ங்கைப்பட்டைச் சுரசத்தில்கலந்து ஒருமண்டலங்கொள்ள சன்னி-வாதம்-பக்கவாதம்-சருவாங்கவாதம்-தோள்வாதம்-எரிவாதம்-உதிரவாதம் நடுக்குவாதம்-பிடிவாதம்-முடக்குவாதம்-சென்னைடைவாதம்-அசமவாதம்-இடுப்புவாதம் முதலானவாதம்-அ௰-ம், பித்தநடுக்கம் - சிலேத்மநடுக்கம்-சருவாங்கநடுக்கம்-இருமல்-ஓக்களித்தல்- தலைநடுக்கம்-கால்நடுக்கம்-கண்செவி-கபாலநடுக்கம்-உள்வீச்சுசத்தி-குன்மம்-வலிகுன்மம் முதலான அஷ்டகுன்மம் வாயுவகைகளும் மூலவாயு-உதிரத்திரட்சி-கவுசிகல்லடைப்பு- சதையடைப்பு-நீரடைப்பு இப்படிப்பட்ட-௯௭-வகை வியாதிகளுந்திரும்.

நிலவாணகச்சாற்றில் அரைப்பணவிடை செந்தூரமிட்டு ஒன்றைவிட்டொருநாள் இருவேளையும் பத்துநாட்கொள்ள கெர்ப்பவிப்புருதி-மகிவிப்புருதி- விலாவிப்புருதி உள்மாந்தை-பக்கவாயு - அண்டவாயு அண்டவாதம்-கழல்வாதம்- துடைவாதம் - இடி-சூலை-பக்கசூலை - வாதசூலை - யோனிச்சூலை - நாபிச்சூலை-கிருமி-உதிரவாயு-ரணங்கள்-கண்குலை முதலானவியாதிகள் தீரும்.

மேற்சொல்லிய வியாதிகளுக்கும் மற்றவியாதிகளுக்கும் அவைகட்குரிய மற்ற அனுபானங்களிலும் மேற்படிசெந்தூரம் வைத்துக்கொடுக்கலாம்.

சுத்திசெய்த இரதம் விராகனிடை-௬௰-கெந்திவிராகனிடை-௰௫-அரிதாரம் விராகனிடை-அ-லிங்கம்-மனோசிலை வகைக்குவிராகனிடை-௪-அல்லது சுத்திசெய்தகெந்தகம் ஆகம வகைக்குவிராகனிடை-௬௰-லிங்கம்விராகனிடை (௰௫) தாளகம்விராகனிடை (௫) மனோசிலை விராகனிடை (உ௦) இவைகளை யெருக்கம்பால் - புரசிலை - கவுதும்பை-சிறுசெருப்படை-செம்முள்ளி-மாறுலையிலிலை மேற்படிபூ முருக்கப்பூ இவைகளின்சாற்றால் வகைக்கிரண்டுசாம மரைத்துலர்த்திக் குப்பியிலடைத்து மணல்மேல்வைத்து உ௪)சாமமெரித்து ஆற்றியெடுக்கச்செந்தூரம் முருக்கம்பூப்போலிருக்கும் அதைமுந்தினபிரயோகத்திற்சொல்லியபடி வியாதிகளுக்குத்தகுந்த அனுபானங்களிலிடத் தீரும்.

ஈசுரசிந்தாமணிசெந்தூரம்.

சுத்திசெய்த இரதம்பலம்-உ-கெந்திபலம்-உ௦- சாதிலிங்கம் பலம் ௧-மனோசிலைபலம்-௦-இவைகளைபொற்றலைக்கரிப்பான்-மாதுளம்பூ-முருக்கம்பூ-பிச்சிப்பூ இவைகளின்சாற்றில் வகைக்கொருநாளரைத்துலர்த்திப் பொடித்து ஏழுசீலைமண்செய்த குப்பியிலடைத்துப் பலப்பக்கல்லால்மூடி ஒருசட்டியில் நாலுவிரற்கடை மணல்மேல்வைத்து அதின்கழுத்தளவு மணற்கொட்டி அடுப்பேற்றித் தீபாக்கினியாய் ஒருசாமம் கமலாக்கினியாய்-ஒருசாமம்காடாக்கினியாய்- ௧-சாமம் எரித்து தீயாற்றியெடுக்கச் செந்தூரமாகும் சாதிக்காய்-சாதிப்பத்திரி-கிராம்பு-குருசாணியோமம்-அதிவிடையம் வகைக்குப்பலம்-௧-வெதுப்பிப்பொடி

து திரிகடியிற் பணவிடை செந்தூரம்வைத்து பத்துநாட்கொள்ள சகலகிராணியுந்தீரும்.

மருட்கிழங்கை உலர்த்தியிடித்த திரிகடிக்குசாசினில்பணவிடை செந்தூரம்வைத்து இருபதுநாட்சாப்பிட்டு பத்தியமிளைத்தண்டும் மோழிக்கறியுஞ் சேர்த்துவர நவமூலமுந்தீரும்.

பாக்கிப்பட்டை சூரணத்திற் செந்தூரம்வைத்துத் தேன்விட்டுமெ த்து இருபதுநாட்கொள்ள விப்புருதிமேகம் மேகாண முதலான வைதீரும்.

வெருகங்கிழங்கும் விளாம்பொருக்கும் ஓர்நிறையாய்க் குழித்தயி இறக்கி யதில்ரசகர்ப்பூரம் பணவிடைகால் செந்தூரம்பணவிடை-கூ வைத்துமதித்து இருபோழும் மண்டலங்கொள்ள குட்டம்பதினெட் ம்வண்டுகடி-விஷக்கடி-குதிரைநோய்-கிரந்திசொறி-கபாலகுட்டம்வி கடியிலுண்டாகும் வியாதிகளும்தீரும்.

பிரண்டையைத்தயிலமிறக்கி அதிற்பணவிடை செந்தூரம்வைத்து இ பதுநாட்கொள்ள சகலகுன்மமும் சகலவாயுவுந்தீரும்.

தாமரைப்பூச்சாற்றிலாவது அல்லிப்பூச்சாற்றிலாவது செங்கழுநீர் ப்பூச்சாற்றிலாவது ஒருபணவிடை செந்தூரம்வைத்து இருபதுநாட்கொ ள ஊஷ்ணரோகம் சுரந்தீரும்.

வெற்றிலைச்சாற்றில்மாறல்சுரம்-அஸ்திசுரம்சீதசுரம் வில்வாதிலேகியத்தில் ஈளை-இருமல்-மகாதாரகாசம்-உளைமாந்தை-கரமாந்தை-சந்நிகுன்மம் வலிகுன்மமுதலானவை தீரும்.

இரதசெந்தூரம்.

கழிமண்ணும்பொடிமணலுஞ்சேர்த்துச் சீலையிற்றடவி கெந்தக லக்குப்பிக்கு ஏழுசீலைசெய்துநன்றாய்க்காயவைத்து ஒருபுதுச்சட்டியை அடுப்பில்வைத்துத் தீபம்போலெரித்து இருபது விராகனிடை சுத்தி செய்த கெந்தியைப் பொடித்துப்போட்டு உருகினவுடன் தீபாற்றிசுத் திசெய்த ஐம்பதுவிராகனிடை ரசத்தைச் சிறுகவிட்டு சட்டுவத்தால் கிண்டிக்கொடுக்கக்கறுப்பாயிருக்கும் அதைக்கல்வத்திலிட்டுப்பொடித்து மேற்படிகுப்பியில் அரைவாசிபோட்டு அதின்வாயைஓட்டால்மூடி அ ர்க்கனதகதாழியில் இரண்டல்லது நாலுவிரற்கடை பொடிமணல்போ ட்டு அதின்மேல் மேற்படிகுப்பியைவைத்து அதின்கழுத்தளவாமணல் கொட்டி வாலுகையடுப்பிலேற்றித் தீபாக்கினியாய் ஒருசாமமும் கம லாக்கினியா யொருசாமமும் எரித்துப் புகைகண்டவுடன் குப்பிவா யோட்டையெடுத்துச் சலாகையாற்கிண்டிக்கொடுக்கவும்.

இந்தப்படி ஒருநாழிகைக்கொருதரம் குப்பிவாய்திறந்து கிண்டிக் கொடுத்து வெவ்வேறோட்டால் மூடிவருகையில் மருந்துருகிச்சலாகை யிற்பிடித்தாலப்போது சுத்திசெய்ததாளகம் மூன்றல்லது ஐந்துவிரா கனிடையைப்பொடித்து மூன்றுபங்குசெய்து ஒருபங்கைப்போட்டுச் செவ்வைத்தாய்க் கிண்டிக்கொடுக்கவும்.

இந்தப்படி மற்ற இரண்டுபங்கையும் ஒருநாழிகைக் கொருத் காய்ப்போட்டுச் செவ்வையாய்க்கிண்டிக்கொடுத்துமூடிக்காடாக்கி யாயெரித்து அடிக்கடி கிண்டிக்கொடுத்து வெவ்வேறேடுபோட்டு மூடிவருகையில் ஓட்டில்மெழுகுபதத்தால் வெளுப்பா யிருந்தாலும் கிண்டிக்கொடுக்கும்போது குப்பியினடிகர காத்தாலும் சலாகைமு னை சிவப்பாயாவது வெளுப்பாயாவதிருந்தாலும் அந்தப்பதத்தில் யாற்றிக் குப்பியையெடுத்துத் தண்ணீரிற்றோய்த்து ஆறினபின் டுத்துடைத்துச் செந்தூரத்தைச் சீசாவி லடைத்துக்கொண்டு தி டுகு சாதிக்காய்சீரகம் இவைகளை யோர்நிறையாய் வறுப்பிப்பொ த்த திரிகடித்தூளையும் பணவிடைசெந்தூரமும் வைத்துமதித்து ருபதுநாட் கொள்ள வாதம் எண்பதும் அண்டத் தயிலத்தி லாவ இஞ்சிச்சாற்றிலாவது திரிகடி திரிகடுகுச்சூரணமும் பணவிடைசெ தூரமும்வைத்து மதித்துக்கொடுக்க சன்னிதோஷமும் திப்பிலி-கடுகு-திப்பிலிமூலம் வாய்விளங்கம் இவைகளை யோர்நிறையாய்ப் பொ டித்துத்திரிகடியில்செந்தூரம்வைத்துத்தேன் விட்டுமதித்துண்ண சூலைவாயுவும், தேனிக்கொள்ளமூலம்-பவுத்திரம்-குன்மம்-வாயுசூலை-ஙகி-மேகவகைசொரிகரப்பன் வெண்குட்டமும் முந்தியபிரயோ த்திற் சொல்லிய பலவியாதிகளுக்கும் அனுபானங்களிலிடத் தீரும்

சுத்திசெய்த இரதம்பலம் (௧) கெந்திபலம் (உ) இவைகளை முன்போல் தொந்தித்துப் பேய்ச்சேம்புச்சாற்றால் நாலுசாமமாட்டி யுலர்த்திப்பொடித்துக் குப்பியில்வைத்து மணல்மேல்வைத்து முந்தியபிரயோகத்திற் சொல்லியபடியெரித்து மருந்தைக்கிண்டி சலாகையிற்பிடிக்கும்போது இரண்டுபலந் தாளகத்தைப் பொடித்துச் சிறுகச்சிறுகப்போட்டுக் கிண்டிக்கொடுத் தெரித்துப் பதத்திலெடுத்துத் தண்ணீரிற் றுவைத்துக்குப்பியையுடைத்துச்செந்தூரத்தையெடுத்துமுந்தினபிரயோகத்திற் சொல்லியபடி வியாதிகட்கு அனுபானங்களி லிடத்தீரும்.

வாலைரசம்பலம்-க-சுத்திசெய்த கெந்தகம் பலம்-உ-இவைகளை முன்போல்தொந்தித்து பேய்ச்சேம்பின்கிழங்குச்சாற்றால் மூன்றுநாளாட்டி உலர்த்திப்பொடித்து குப்பியிலடைத்து மணல்மேல்வைத்துமூன்றுசாமமெரித்து குப்பியையுடைத்து மருந்தைக் கல்வத்திட்டு முன்சொல்லிய இடைப்படி கெந்திசேர்த்துமேற்படிசாற்றாலாட்டியுலர்த்தி குப்பியிலடைத்து மூன்றுசாமமெரிக்கவும் இந்தப்படி அஞ்சுதபா கெந்திசேர்த்தெரிக்க செந்தூரம் மேலேறாமல் தளத்தில்நிற்கும்குப்பியையுடைத்துச் செந்தூரத்தையெடுத்து பணவிடை அனுபானங்களிலிட மேற்சொல்லியவியாதிதீரும்.

சூதம் பலம்-க-கெந்திபலம் - உ - இவைகளை ஒன்றாய்த் தொந்தித்துக் கல்வத்திட்டு கருந்துளசிச் சாற்றால் நாலுசாமம் உலர்த்தி குப்பியி லிட்டு மணல்மேல் வைத்து காடாக் கினியாய் பத்துசாம

மெரித்து ஆற்றியெடுத்துப்பணவிடைபொரிமாவிற்கொள்ள சந்தி சுரம் உட்சுரம்-நொச்சிச்சாற்றில் மாரல்-சுரம்- கொடிவேலிக்கஷா யத்தில்-அஷ்டகுன்மம் தசமூலக்கஷாயத்தில் சன்னிதோஷம் அமு க்குருக்கிழங்கு கஷாயத்தில் பவுந்திரம் - ஆடாதோடைக்கஷாயத் திலமொப்பவிப்புருதி-கரிப்பானும்-மிளகுஞ்சேர்த்து அரைத்து-அ தில்பணவிடை-செந்தூரம்-வைத்துண்ண - பாண்டும்வீரண்டத்தெ ண்மெணயில்வாதம்-அ௰-ம்-கரணைக்கிழங்குச்- சாற்றில்-மூலப்பருத்தி விரைத்தயிலத்தில்மேகம்-உ௰-ம்-மற்ற அனுபானங்களிலிட- சீதம் விழுதல்-சுரம்-அரோசியமுதலான வியாதிகள்தீரும்,

சந்திரோதயசெந்தூரம்.

தங்கம்விராகன்(க)வாலைரசம்விராகன்(அ)சுத்திசெய்தகெந்தகம் விராகன்(௰சு)இவைகளைச் செம்பரத்தம்பூச்சாற்றில்நாலுசாமமும் கற்றாழைவேர்ச்சாற்றில் எட்டுசாமமும்ஆட்டி நிழலிலுலர்த்திக்குப் பியிலிட்டு மணல்மேல்வைத்து - தீபாக்கினி கமலாக்கினி காடாக்கி னியாய் வகைக்கொருநாள் ஒருசாதிவிறகாலெரித்து ஆற்றியெடுக்க ச்செந்தூரமாகும்-அதில்பணவிடைவீதம் அனுபானங்களிலிடநீரி ழிவுசயம் முதலானசகல ரோகங்கள்தீரும்.

கெந்தி-சூதம்-சீனம்-வெங்காரம்-நாவிசங்கு- மனோசிலைபவளப்பு ற்று-வகை குப்பலம்-க-இவைகளை-எலுமிச்சம்பழச்சாற்றிலும் - கு மரிச்சாற்றிலும்-வகைக்கு ஒருநாளாட்டி -வில்லைதட்டி யுலர்த்திக்க லசத்திலிட்டு-மேற்கலசமூடிச்-சீலைசெய்து- அடுப்பேற்றிமுந்தீயும் ஒருநாளெரித்து-ஆற்றி கல்வத்திட்டு-தங்கம்பொன்வெள்ளி லிங்கம் பவளம்-ருத்திராட்சம்-முத்து அக்கிராகாரம்- வகைக்குஒருகழஞ்சு சேர்த்து மூலைப்பாலிலும் மாதுளம்பூச்சாற்றிலும் - துளசிச்சாற்றி லும்-வகைக்கொருநாளாட்டிச் சிறுகடலையாய்த்தட்டி- நெற்குழியி ல்வைத்து-இருபதுநாட்சென்றெடுத்து அனுபானங்களிலிட-சன்னி தோஷம்-சுவாசகாசம்நீரிழிவு அரோசியம்மகோதரம் - கவுசிபாண்டு முகவாதம்-எலும்புருக்கிஊளைதாகம்சூடு முதலானவைதீரும்,

சடாச்சர அக்கினிகுமாரன்:

அரப்பொடி-கெந்திகாத்தம்-வெங்காரம்-லிங்கம்ரசம்வகைக்குப் பலம்-க-இவைகளைகற்றாழஞ்சாற்றால்ஒருநாளாட்டியுலர்த்திப் பொ டித்து-கலசத்தில்போட்டு-கடுரவியில்ஒருநாள்வைத்து-அதைமறுப டியும்-மேற்படிசாற்றால்-முன்போலாட்டிப் -பொடித்து கடுரவியி ல்வைக்கவும் இந்தப்படி-மூன்றுதபா-ஆட்டிரவியில் - வைக்கச்செந் தூரமாகும்-திரிகடுகுச்சூரணத்தில்- பணவிடைசெந்தூரம்வைத்து தேன்விட்டு மத்தித்து நாளொன்றுக்கிருநேரம் மண்டலங்கொள்ள வாதம்(அ௰)வாயுசூலை-அஷ்டகுன்மம்-சன்னிமுகவாதம்- கழல்வாத ம்மூர்ச்சை-பித்தம்-சிலேத்பனம்-புசல்வலிப்பு குதிரைவலிப்பு கு

மாகண்டன்வலிப்பு - கவுசி-நெஞ்சடைப்பு - மொளிச்சூலை-கிரந்தி அரையாப்புத்தீரும்.

சுயமக்கினி.

இரதம்-மனோசிலை - வகைக்குவிராகனிடை-சு-கெந்தி - விராகனிடை(அ)காந்தம்விராகனிடை-யசு-அரப்பொடிவிராகநிடை-நஉ-லிங்கம்-கல்நார்கல்மதம் - வகைக்குவிராகனிடை-க-இவைகளில் அரப்பொடியைக்குமரிச்சாற்றால் ஒருசாமமாட்டி மற்றமருந்துகளையுஞ்சேர்த்து-ஒருசாமமாட்டி யுலர்த்தி-இருப்புக்கிண்ணத்திலிட்டுசுகடும்வயிலில்வைக்கப்-புகைந்துசெந்தூரமாகும்-அதிற்பணவிடை இஞ்சிச்சாற்றில் பத்துநாட்கொள்ளவாதம்சுரம்-அஷ்டகுன்மம்- சன்னியும்வெள்ளுள்ளித்தயிலத்திலிட சன்னியும்-தேனில்மகோதரம் உளைமாந்தைபிரநீர்க்கோர்வையும் கிராணிமந்தாக்கினி-நீரிழிவும்- கரிப்பான்சாற்றில்-காமாலை-பாண்டுசோகையுந்தீரும்.

மனோசிலைபலம்-உ-சூதம்-பலம்-ச-கெந்திபலம்-அ-கரந்தைபலம்-யசு-அரப்பொடிபலம்-நஉ-இவைகளை - குமரிச்சாற்றா லிரண்டுசாமமாட்டி-வில்லைசெய்து-இருப்புப்பாத்திரத்தில்வைத்து ரவியில்வைக்கப்புகைந்து செந்தூரமாகும்-அதைக்குப்பியிலடைத்து ஒருமண்டலம்-நெற்குழியில்வைத்தெடுத்துப் பணவிடை- இஞ்சிச்சாற்றிலிட-பித்தபாண்டுசோகை-புளித்தேப்பம்கிராணிஉள்மூலந்தீரும்

பஞ்சபாஷாணசெந்தூரம்.

சாதிலிங்கம்-மனோசிலைகாந்தம்தாரம்-கெந்திரசகர்ப்பூரம்- வெள்ளைப்பாஷாணம் வகைக்குப்பலம்-சு-இவைகளைச்சுத்திசெய்து குப்பைமேனி-வெற்றிலைப்பருத்தி-வெள்ளறுகு- துளசிவேலிப்பருத்திபொடுதலை-இவைகளின்சாற்றால்-வகைக்குநாலுசாமமாட்டி- வில்லைசெய்து நிழலிலுலர்த்தி அதற்குவெற்றிலையாற்-கவசஞ்செய்துஒருசட்டியில்வைத்து மேற்சட்டிக்கொண்டு-ஏழுசீலைமண்செய்து நன்றாய்க்காயவைத்து அடுப்பேற்றி-தீபம்போல் -நாலுசாமமெரித்தாற்றிப்பார்க்க - மேற்சட்டியில்- செந்தூரம்பற்றியிருக்கும் - அதையெடுத்துப் பணவிடைதேன்-இஞ்சிச்சாறு-முதலானவியாதிக்குத்தகுந்தஅனுப்பானங்களிலிட சன்னிசுரப்-வெண்குட்டம் - சூலைவாயுவாதம்மேகம்-குன்மம்-கிராணிகைகால்முடக்கு-பிளவைபுற்று கண்டமாலைகுறைநோய்-பெருவியாதி- அரிகரப்பன்- தேமல்-வண்டுகடிகழல்வாதம்அண்டவாதம்-குழிவாழை வலிப்புகன்னோசி- கன்னப்புற்றுகபாலகுட்டம்-பவுத்திரம்-மூலமுளைகசரோகம்-மேகரணங்கள்கிரந்தி-அரையாப்பு-கபாலசூலை முதலானவியாதிகள் தீரும்.

வெடியுப்பு-பலம்-ய-அட்டுப்பு-சீனம்-வெண்காருசு-வகைக்குப்பலம்-டு-நவாச்சாரம்பலம்-எ-அன்னபேதிபலம்-உ-கெந்தகம் பலம்-ந இவையெல்லாங்-கண்டவிடைப்-பழம்புளி-சேர்த்திடித்து- ஒட்டி

விட்டு-அதில்-தீக்கொளுத்த எரிந்து-சுண்ணமாகும்- அதைநீங்கானி ல்வைத்து மூடி மண்ணிற்புதைத்து மண்டலஞ்சென்றெடுக்கச்செ யநீரிறங்கியிருக்கும் இரதமகெந்தி-வகைக்குவிராகனிடை- இருபது நாகம் விராகனிடைபத்து மனோசிலைவிராகனிடை (ரூ) லிங்கம்விரா கனிடை (உ) இவ்வகைளைச்சுத்திசெய்து மேற்படிசெயநீரால்மூன்று நாளாட்டி புலர்த்திகோழிமுட்டைக்கூட்டி லடைத்து அதற்குஏழு சீலைசெய்து காயவைத்து-நாலுவிரற்கடை - மணல்மேல்வைத்து தீ பாக்கினி கமலாக்கினி-ஞடாக்கினி- வகைக்குப்பத்துநாழிகையெரி த்து-ஆற்றியெடுக்கச்-செந்தூரமாயிருக்கும் - அதில்பணவிடைவீத ம்அனுபானங்களிலிட-மேற்காட்டிய-வியாதிகளும்-அமுர்தவல்லிச் சூரணத்தி மேகத்திலெடுத்த சகலவியாதியுந்தீரும் தேகம்பலக்கு ம்அப்பிரகம் அயம்காந்தம் வங்கமுதலானலோகங்களில் தனித்தனி யேமேற்படி செயநீகாலரைத்துக் கோழிப்புடமாய்ப் பத்துப்புட ம்போடச் செந்தூரமாகும் அனுபானங்களிலிட வியாதிதீரும்.

கரியுப்புச்செந்தூரம்

கரியுப்பை எருக்கம்பால் - திருகுகள்ளிப்பால் அய்யபகவுரிதும் பை மருதம்பட்டை குமரி எலுமிச்சம்பழம் பொடுதலை இவைகளி ன்சாற்றில வகைக்கிரண்டுபுடமபோடச் செந்தூரமாகும் அதைமூ ன்றுபணவிடை தேனிற்கொடுக்க குன்மம்உதரரோகம் க்ஷயம் சூலை வீக்கம் வாயுகிராணி-முதலானவகைதீரும்.

லிங்கசெந்தூரம்.

ஒருபலலிங்கத்தை அயச்சட்டியிலிட்டு அதற்குக்கீழுமேலும் ஒ ருபலக்கெந்திலையப்பொடித்துப்போட்டுக் காற்படிகழுதைப்பாலை ச்சிறுகச்சிறுக மெழுகுபோலுருகும்படி - விட்டுக்கொண்டு நாலு சாமமெரித்தெடுத்துக் கழுவிப்பொடித்துப் பணவிடை இஞ்சிச்சா ற்றிலும் திரிகடுகு சூரணத்திலும் கொடிவேலிக்கஷாயத்திலுங்கொ டுக்க சன்னி-சூலை-வாதம்-அம்-ம்-வாயுவுந்தீரும்.

கரியுப்பைக் கழுதைப்பால்விட்டு - நாலுசாமமாட்டி வில்லைசெ ய்து-காயவைத்து-ஒட்டிலிட்டுச் சீலைசெய்து -குக்குடபுடம்போட வும்-இந்தப்படிமூன்றுபுடம்போட்ட - உப்புகூடன்வகைக்குப்பல ம் (க) இவைகளை அண்டமவெள்ளைக்கருவாலாட்டிச் சுத்திசெய்தஒரு பலத்தாளகக்கட்டிக்குக் கவசஞ்செய்து காயவைத்து அதற்குமேல் ஏழுசீலைமண்செய்து காயவைத்து ஒருசட்டியில் ஒருவிரற்கடைம ணற்கொட்டி அதன்மேற்கவசத்தைவைத்து மேலும்மணற்போட் டுகமலாக்கினியாய் ஒருசாமமெரித்துஆற்றியெடுக்கச் செந்தூரமா கும்அதில்பணவிடை தேனிற்கொள்ள சுரம் சன்னிசயம்எலிகடி உ ளைமாந்தைதீரும்

செந்தூரப்படலம் - முற்றிற்று.

சிவமயம்.

பற்பபடலம்.

அதாவது-பற்பலசெயநீராலும்மூலிகைகளாலும்கவசம்செய்துகா
டைபுடம்தொடங்கி கெசபுடம்வரையில் பகுத்துணர்ந்து
பாகித்தலால் பற்படலமெனப்பெயர்பெற்றது.

சூ௱-ஆண்டுபிரயோகிக்கலாம்.

விருத்தம்:

கூறும்பற்பங்குறை நூலெலாமாய்ந்து
நீறுமேசரக் கானவறுபதும்
தேறநீற்றினஞ் செய்யவேபண்டிதர்
காறமாமுனிக்கடிய வறைந்ததே.

ரசபற்பம்.

காட்டுள்ளியும் கெந்தகமும் ஓர்நிறையாய் அரைத்து வில்லைதட்டிக்கலசத்திலிட்டுத் தயிலமிறக்கி வாலைரசத்தில்விட்டு ரவியில்வைக்க நீறும்அதை அந்தத்தயிலத்தாலாட்டி வில்லைசெய்துகொண்டு நன்றாய்வெந்த செங்கல்லைப் பாக்குப்போலுடைத்து ஒருகுண்டுசட்டியில் அரைவாசிபோட்டு அதின்மேலொருபடி உப்புக்கொட்டிப் பரத்தியதில் மேற்படிவில்லையைவைத்துமூடிஎழுசீலைமண்செய்து அடுப்பேற்றிக் காடாக்கினியாய் மூன்றுசாமமெரித்து ஆற்றியெடுக்கப்பதங்கித் திருக்குமதையெடுத்து பணவிடைபனைவெல்லம் முதலான அனுபானங்களில் (எ)நாட்கொள்ளகுஷ்டம் குறைநோய்பவுத்திரம் கழலைகாமாலை விப்புருதிவீக்கம் வெள்ளைப்படருதல்குலை அரையாப்பு யோனிப்புற்றுமூலமுளை கண்டமாலை கிரந்தித்தடிப்பு வெள்ளை கருங்கரப்பன்வண்டுகடி மேகவாயுகுன்மம்தீரும் வாய்வேகாது.

ஒருபலச்சூதத்தை முந்திரிக்கொட்டைத் தயிலத்தாலும்விட்டுத் தீஞ்சான மூலிச்சாற்றாலும் மால்தேவிக்கிழங்குச்சாற்றாலும் வெள்ளெருக்கம்பாலாலும் வகைக்கொருசாமமாட்டிவில்லைசெய்துமுன்போலெரித்து பதங்கித்துபணவிடை வெல்லமுதலான அனுபானங்களிலிட மேற்காட்டிய வியாதிகள்தீரும்.

பனிரண்டு விராகனிடைசுத்திசெய்த கெந்தகத்தையும் எண்பது விராகனிடை இரதத்தையும் இரதசெந்தூரத்திற்சொல்லியபடி ஒன்றாய்த் தொந்தித்துப்பொடித்து - முன்போற்பதங்கித்துக்கொண்டு நாலுவிராகனிடை ஓமத்தைப்பொரித்து அதற்குநிகர் கருப்புக்கட்டியும் எட்டுவிராகன்மேற்படி பற்பமும் இதனடியிற்சொல்லியிருக்கிற கெந்தகப்பற்பமுஞ்சேர்த்து மெழுகுபோலாட்டிப் பதினாறுமாத்திரைசெய்து எட்டுநாளந்திசந்திகொள்ளமேற்சொல்லியவியாதிகள் தீரும்.

கெந்தகபற்பம்.

பூநீறும்வெடியுப்பும் ஓர்நிறையாய்ச் சுத்தசலம்விட்டரைத்துவில்லைசெய்துகாயவைத்துஓட்டிலிட்டு அதற்குக்கீழும்மேலும்இரண்டுவிரற்கடை உவர்மண்போட்டு இரண்டுசாமமெரிக்கச் சுண்ணமாகும் அதற்குப்பாதிசாரஞ்சேர்த்து மெல்லியசீலையால்முடிந்து ஒருபீங்கானில்தொங்கவிட்டுமூடிப்பூமியிற்புதைத்து ஒருமண்டலஞ்சென்றெடுக்கச் செயநீரிறங்கும் அதைச்சீசாவிலடைத்துக்கொண்டு கெந்தகமுஞ்-சீனமும் ஓர்நிறையாய்க்கல்வத்திட்டு மேற்படிசெயநீராலரைத்து வில்லைசெய்து காயவைத்து சிறுசின்னியிலையை அரைத்துக்குகைசெய்து அதில்வில்லையைவைத்துமூடிக்காயவைத்து அதற்குமேல் ஏழுசீலைமண்செய்துகாயவைத்து அஞ்செருவிற்புடம்போடநீறும் இந்தப்படிதாளகத்தையும்நீற்ற மேற்படிபற்பமும் ரசபற்பமும் வகைக்குப்பணவிடையை தேனிலாவது மற்றஅனுபானத்திலாவதுகொள்ள ரசபற்பத்திற்சொல்லியவியாதிகள்தீரும்.

கெந்தகமும்-சீனிக்காரமும் ஓர்நிறையாய்ப்பொடித்துக் கலசத்திலிட்டு சிறுசின்னிச்சாறு விட்டுப்பிசறி ரவியிலுலர்த்தி மேலோடுமூடி மூன்றெருவிற்புடம்போட நீறும் அனுபானங்களிலிட மேற்படி வியாதிகள்தீரும்.

சுத்திசெய்த கெந்தகத்திலடை காளானைச்சேர்த்தரைத்துவில்லைசெய்துகாயவைத்துஒட்டிவிட்டுச்சீலைசெய்து காடைப்புடம்போ [டநீறும்,

வீரபற்பம்.

ஒருபடிபூநீறு நாலுபடி அமுரியிற்கரைத்துத்தெளிவிறுத்து ஒருபாண்டத்தில்விட்டு அதின்வாயிற் சீலையால்வேடுகட்டி அதின்மேல் அஞ்சுவிராகனிடை வீரக்கட்டியையைவைத்துமூடி நீர்வற்றும்வரைதீயெரிக்கப்பற்பமாகும் அதை கிரந்திநாயகச்சாற்றால்- ௰௨ -சாமமெரித்து வில்லைசெய்துகாயவைத்து மேற்படியிலையை அரைத்துக்குகைசெய்து அதற்குள் மேற்படிவில்லையை வைத்துமூடி ஒருசட்டியில் நாலுவிரற்கடைமணற்போட்டு அதின்மேல்வைத்துநாலுநாழிகையெரிக்கச் சிவந்தநிறமானபற்பமாயிருக்கும் அதில்பணவிடை திரிகடிச்சூரணத்தில்வைத்து தேன்விட்டுமத்தித்து மூன்றுவேளைகொடுக்க சன்னி-தோஷி-கபக்கட்டு-வாயுவாதந்தீரும்.

தாளகபற்பம்.

ஒருபலத்தாளகத்தை பெரும்பூசனிக்காயை யிடித்துப் பிழிந்த சாற்றிலிரண்டுசாமம் வேகவைத்தெடுத்துச் சுண்ணாம்புக் கல்லுக்குள்வைத்து நூறுதபாநீற்றியெடுத்து நல்லெண்ணெயி லிரண்டுசாமமெரித்து சாரம்-பூநீர்சவுட்டுப்பு-சுண்ணாம்கல்லுப்பு-சூடன்- சீனம் வெடியுப்பு-இந்துப்பு வகைக்குப்படி-க-நாலுபடி சிறுநீரிற்கரைத்துத் தெளிவிறுத்து கட்டிக்குச்சுருக்குக்கொடுக்கச்சுத்தியாகும்மு

கனாச்சாரணை சமூலம் ஒருதேங்காய்ப்பிரமாணம்வைத்து அதற்குநடுவில் கட்டியைப்பொதிந்துசட்டிக்குள்வைத்து மேற்சட்டிமூடிசீலைசெய்து தீபம்போல்நாலுசாமம் எரிக்கப் பற்பமாகும் அதில்பணவிடைதேநிற்கொடுக்க க்ஷயம்-கபாலசூலை-பெரும் பூசனிக்காய்ச்சாற்றில் மேகமும்-மற்ற அனுபானங்களில் கிரந்தி-சூலையும்- சுரம்-குஷ்டமுந்தீரும்.

சுத்திசெய்த ஒருபலத்தாளகத்தை வாழைக்கிழங்குக்குள் வைத்துமூடி ஏழுசீலைமண்செய்துகாயவைத்து அன்பதெருவிற் புடம்போடநீறும் அனுபானத்திலிட சிலேத்மநோய்-கசு-ம்-சுரம் - அரையாப்பு-கிரந்தி-சூலை-குட்டமுந்தீரும்.

சுத்திசெய்த ஒருபலத்தாளகத்திற்கு கருள்ளிச்சாறு-சிவகரந்தைச்சாறு வகைக்குப்படி-க்-சுருக்குக்கொடுத்து-சிற்றண்டம்- பேரண்டம்-பூநீர் இவைகளின் சுண்ணத்தை ஓர்நிறையாய் எருக்கம்பாலாலாட்டி கட்டிக்குக்கவசஞ்செய்து காயவைத்து பூவரசம்பட்டை-புளியம்பரணை-நாயுருவி இவைகளின்சாம்பல் வகைக்குப்படி- உ-ஒருசட்டியிற்போட்டு அதற்குநடுவில்வைத்து மேற்சட்டிமூடிச்சீலைமண்செய்து நாலுசாமம்கமலாக்கினியாய் தென்னமட்டையாலெரிக்கப் பற்பமாகும் அதில்பணவிடையும்ரசபற்பம்பணவிடையுஞ்சேர்த்து அனுபானத்திலிட மேற்படிவியாதிகள்தீரும்.

துருசுபற்பம்.

துருசுக்கட்டியைக் கவுதும்பைச்சாற்றில் ஆறுசாமம் ஊறவைத்து ரவியுலர்த்தி அப்பாலந்தச்சாற்றால் ஒருசாமமாட்டி வில்லைசெய்துகாயவைத்து மேற்படிஇலையையரைத்து அதற்குஅங்கிபூட்டிஎழுசீலைசெய்து கவுதாரிப்புடப்போட்டு கருஊமத்தஞ்சாற்றால் லாட்டிவில்லைசெய்துகாயவைத்து மேற்படி யிலையையரைத்து அங்கிபூட்டி எழுசீலைசெய்து முன்போற்புடம்போடநீறும் அதையனுபானத்திலிட சுர-கெண்டை-சன்னி தோஷம்-கட்டி - அஷ்டகுன்மம்-பக்கவாயு-ஈளை-இளைப்பு-தாகம்-வயிரறுப்பொருமல் - பெருவயிறுவீக்கம்-காமாலை-பித்தம்-சோகை-பாண்டு- விஷநீர்க்கோர்வை தீரும் மேற்படிபற்பத்தைச் சாறுவராத்தலைகளிலிடச் சாறுவரும்

தாம்பிரபற்பம்.

தாம்பிரசெந்தூரத்திற் சொல்லியபடி சுத்திசெய்ததாம்பிரம்வீரம்-இரசம்-சூடன்-வெள்ளைரம் வகைக்குப்பலம்-௪- பாஷாணம்பலம்-வ-இவைகளை வெள்ளெருக்கம்பால்விட்டு ஒருநாளாட்டி வில்லைசெய்துகாயவைத்து ஓட்டிலிட்டுச் சீலைசெய்து கெசபுடம்போடபற்பமாகும் அதிற்பணவிடை அனுபானங்களிலிட புறமேகம்-மேகம்-குட்டம்-க்ஷயம்-பவுத்திரம்-சூலை-௮-குன்மம்-வாயுவகை பித்த

முதலான வியாதிகள் தீரும் பத்தியம் ஆவின்பாலும் - அன்னமுங் கொள்ளவும்:

சுத்திசெய்ததாம்பிர விராகனிடை-௰௨-சூதம்-கெந்தி- தாளகம்-வகைக்கு விராகனிடை-௮-இவைகளைவெள்ளெருக்கம்பாலாலாட்டி வில்லைசெய்து காயவைத்து ஒட்டிவிட்டுச் சீலைசெய்து கெசபுடம்போட்டு அப்பால்சத்திச்சாரணைசாற்றால் ஒருநாளாட்டி முன்போற்புடம்போட பற்பமாகும் அதில்பணவிடை தேனிற்கொள்ள குன்மம்-வாயு-கவுசி-கெண்டைசூலை-மூலந்தீரும்.

வெள்ளிபற்பசெந்தூரம்

சரிகைவெள்ளியை லேசாய்த்தட்டிப் பழுக்கக்காய்ச்சி பளுபாகற்கிழங்குச்சாற்றில் ஏழுதபாதோய்த்துக குகையில்வைத்து உருக்கிக் கண்விட்டாடும்போது மகிழம்பூச்சாற்றைச் சிறுகவிட்டு ஊதத் பொடியாய்ப்போகும் அதைமேற்படிசாற்றாலாட்டி வில்லைதட்டிக்காயவைத்து மூக்காவேளைவேளை மேற்படிசாற்றாலாட்டிக்குகைசெய்து வைத்துமூடி யேழுசீலைமண்செய்து நாலொருவிற் புடம்போடநீறும் அதில்பணவிடை திப்பிலிலேகியத்திற்கொள்ளசிலேத்மம் ௯௯-ம்-சூலையுந்தீரும்.

மேற்படி வெள்ளிப்பொடிக்குச் சமன்லிங்கஞ்சேர்த்து எருக்கம்பாலும் - அரசம்பட்டை-தாமரைக்கிழங்கு-எலுமிச்சம்பழம் இவைகளின் சாற்றிலும் தனித்தனியே அரைத்து வகைக்கொருபுடம் முப்பதெருவிற்போடச் செந்தூரமாகும் இதை மேற்படிவியாதிகட் குபையோகப் படுத்திக்கொள்ளலாம்.

பவளபற்பம்.

முயலெலும்பைச்சாற்றில் சுட்டசாம்பல்பலம்-க-குமரிச்சாற்றாலாட்டி குகையும்மூடியுஞ்செய்து பவளம்பலம்-க-கிராம்பு - சடாமாஞ்சில்வீரம்வகைக்குக்கழஞ்சு- ௨-இவைகளை மேற்படி இரத்தத்தாலாட்டிக்காயவைத்து மேற்படிகுகைக்குள்வைத்து ஏழுசீலைசெய்து ஐம்பதெருவிற் புடம்போடநீறும் மேற்படி பற்பத்தைச் சீந்திச்சக்கரையிற்கொள்ள சகலமேகமுந்தீரும்.

எலுமிச்சம்பழச்சாற்றில் பவளத்தை ஒருநாளூறவைத்துக் கழுவிப்போட்டு எருக்கம்பாலால் மூன்றுநாள் அரைத்து வில்லைசெய்து காயவைத்து முன்போற்புடம்போட நீறும்.

கீழ்க்காய் நெல்லியிலையை அரைத்துக் குகைசெய்து அதற்குள் பவளத்தைவைத்து யேழுசீலைசெய்து முன்போற் புடம்போடப் பற்பமாகும் அதையனுப்பானங்களிலிடசுரம்-குளிர்-சன்னி-வயிற்றிரைச்சல்-பித்தம் - கண்புகைச்சல்-விக்கல் - வயிற்றுளைச்சல் - இருமல் தீரும்.

ஒருபலபவளத்தை ஒருநாள் தண்ணீரில்ஊறவைத்துக் கழுவிப்

போட்டு-தேட்கொடுக்கிலையயரைத்துக் குகைபிடித்து அதற்குள் மேற்படிபவளத்தைவைத்துமூடிமேமூசிலைசெய்துகாயவைத்துமூன்போற்புடம்போட்டுடெடுத்துப் பீங்கானிலிட்டுஅதில்ஆவின்பால்விட்டு ரவியில்காயவைத்து அப்பாலதைஆலம்பழுப்பிற் கொடிநெற்குழியில் மூன்றுநாட்புதைத்தெடுத்து அனுப்பானங்களிலிட சயம்-ஈளை-மந்தாரகாசம்-சிரங்குசொரிமுதலான மேற்கட்டியரோகங்கள் தீரும்.

ஒருபலபவளத்தை எலுமிச்சம்பழச் சாற்றிலிட்டு ஒருநாள் ரவியில்வைத்துக் கழுவிப்போட்டு இலந்தையிலையையாவது தைவேளையிலையையாவது அரைத்துக்குகைசெய்துஅதற்குள்வைத்துமூடியே மூசிலைசெய்து காயவைத்து மூன்போற் புடமிட்டெடுத்து ஒருபீங்கானிலிட்டு ஆவின்பால்விட்டு ரவியிற் காயவைத்துதேன் ஆவினெய்யிற்கொள்ள மேகச்சூடு-காங்கை- சயம்-ஈளை-இருமல்-நீர்க்கடுப்பு நீங்கும்.

ஒருபலம் பவளத்தை எலுமிச்சம்பழச்சாற்றி லிரண்டுநாள்வரையில் ஊறவைத்துக்கழுவி அதற்குநிகர் கர்ப்பூரசலாசத்துச் சேர்த்துப் பிரண்டைச்சாற்றால் நாலுசாமமாட்டிவில்லைதட்டிக் காயவைத்து ஒட்டிலிட்டுமூடிச்சீலைசெய்துமுழப்புடம்போடநீறும் அதைப்புளியாரைச்சாற்றிலிரண்டுசாமமரைத்துவில்லைசெய்து மூன்போற்புடம்போட்டுப் பணவிடைவெண்ணெயிற்கொள்ள எலும்புருக்கி மதுமேகம்-அஸ்திமேகம்- முதலான ரோகங்களும் தேனிற்கொள்ள மேகஊறல் குன்மவாயுவுந்தீரும்.

நாகபற்பம்.

இலுப்பைநெய்யில் இருபதுதரம் உருக்கிச்சாய்த்துச் சுத்திசெய்த அரைப்பலநாகத்தைக்குகையிலுருக்கிக்கண்விட்டாடும்போது சிற்றாமணக்கிலையைக்கசக்கி அஞ்சாறு சொட்டுப்பிழியச் சத்தமிடும் மறுபடியும்அஞ்சாறுசொட்டுப்பிழியச்சத்தமடங்கும் திருத்தியிலை விசையாய்ஊதி மறுபடியும் அஞ்சாறு சொட்டுப்பிழிந்து மேற்படிவேராற்கிண்டிவர மல்லிகைப்பூப்போல்நீறும் அதை யனுப்பானங்களிலிட வெள்ளைவெட்டைசிலேத்மம்-குன்மம்-மூலம்- நீங்கும் தாதுவிர்த்தியுண்டாகும்.

சுத்திசெய்த நாகத்திடைப்பாதி இரசஞ்சேர்த்துருக்கி வேலிப்பருத்திச்சாற்றா லரைத்து வில்லைதட்டிக்காயவைத்து அதற்கு மேல் துத்தியிலையை யரைத்துக்கவசஞ்செய்துமேமூசீல மண்செய்து முழப்புடம்போடநீறும் இப்படிமூன்றுபுடம்போட்டுவெண்ணெயில் பத்தியமாய்க்கொள்ள மேற்படிவியாதிகள்தீரும்

கெருடக்கற்பற்பம்;

கற்றாழஞ்சோற்றில் கடுக்காயைப்பொடித்துப்போட்டுப் பிசை

ந்துவைக்கத்தண்ணீராகும் அதில்கெருடக்கல்லைப்போட்டு கொதிக்கவைத்துக்கழுவிஒட்டிவிட்டுஅதற்குக்கீழுமேலும ஆனையறுகங்கிழங்கையிடித்ததூளைப்போட்டுமூடிச்சீலைசெய்து கெசபுடம்போட நீறும்வெண்ணெயிற்கொள்ள கடுப்புளலும்புருக்கி அஸ்திசுரம்அஸ்திவெட்டை மேகவெட்டை தீரும்.

வெள்வங்கபற்பம்.

புளியமடற்கிழங்கை அரைத்து - எருமைத்தயிரிற் -கலக்கிவங்கத்தைப் பத்துதபாஉருக்கிச்சாய்த்துச் - சுத்திசெயதுவிராகனிடை (௫) வாலைரசம் விராகனிடை(௫)இவைகளையொன்ருய்த் தொந்தித்து கர்ப்பூரசலாசத்து விராகனிடை (௫) கூட்டிச்சுண்ணநீரா - லிரண்டுசாமமாட்டி வில்லைதட்டிக்காயவைத்து ஓட்டிவிட்டுசசீலைசெய்து முப்பதெருவிற் புடம்போட்டு மறுபடியும் மேற்படிநீராலாட்டி மூன்றுநாலுபுடம்போடநீறும் மாதுளம்பூவிதழை நிழலிலுலர்த்தி - அதினிடை சேரகஞ்சேர்த்துச் சூரணித்துத் திரிகடிப்பிரமாணத்தில்பணவிடைபற்பம்வைத்து நாளொன்றுக்கிருநேரமாகமண்டலங்கொள்ள - நவமூலம் - மெய்நோய்-மேகம்-எலும்புருக்கி தீரும்-நாடிவலுத்துத் -தாதுண்டாகும்-காப்பண்பதார்த்தம் நீக்கவும்.

சுத்திசெய்தவெள்வங்கத்திற்குப் பாதிரசஞ்சேர்த்துருக்கிகஞ்சாவிலைச் சாற்றாலாட்டி வில்லைசெய்துகாயவைத்து -அதற்குமேற்படி இலையையரைத்துக் கவசஞ்செய்து ஓட்டியிலிட்டுமூடி முன்போற்புடம்போடப் பற்பமாகும் - அதையனுபானங்களிலிட -மேற்படிவியாதிகள் தீரும்.

கருவங்கபற்பம்.

கருவங்கத்தைப் பிரண்டைச்சாற்றிற் பத்துதபா உருக்கிச்சாய்த்துச் சுத்திசெய்தது பலம்-௧-சட்டியிலிட - உருக்கிஆடுதீண்டாப்பாளைவேரால்பஸ்பமாகும்வரை கிண்டிநிறுத்து அதற்குப்பாதிரசஞ்சேர்த்து மூக்கனாச்சாரணைச் சாற்றால் நாலுசாமமரைத்து மூன்றுபுடம்போட நீறும் அனுபானங்களிலிட மேகவியாதிகள் திரும்.

கருவங்கத்திற்குப் பாதிரசஞ்சேர்த்துருக்கி ஆலம்பாலால்மெழுகுபோலரைத்து வில்லைதட்டிக்காயவைத்து மருதம்பட்டையும் உப்புஞ்சேர்த்து இடித்து வில்லைக்குக் கீழும்மேலும்போட்டுமூடிச்சீலைமண்செய்து முப்பதெருவில்புடம்போட மூக்கனாச்சாரணைச்சாற்றாலரைத்து மூன்றுபுடம்போடத் தவளம்போல்நீறும் அனுபானங்களிலிட்டுமேகமுதலான வியாதிகள் தீரும்.

கர்ப்பூரசலாசத்து பற்பம்.

கர்ப்பூரசலாசத்தை ஆவின்பாலிற்போட்டுக்காய்ச்சிக் கழுவிச்சுத்திசெய்து சிறுசெருப்படைச்சாற்றால் நாலுசாமமாட்டி லேசாய்வில்லைதட்டிக் காயவைத்து - ஓட்டிலிட்டுச்சீலைசெய்து - ஐம்பதெருவிற்புடம்போடவும் இந்தப்படிமேற்படிசாற்றாலாட்டி மூன்றுபுடம்போட்டு ஆவின்வெண்ணெயிற் கொள்ள மேலெரிவு பித்தவெட்டை நீர்க்கடுப்பு நீங்கும்

மேற்படி பற்பத்திடை சுத்திசெய்தவெங்காரஞ் சேர்த்து இலுநீரா லாட்டிவில்லைசெய்து காயவைத்து - ஓட்டிலிட்டுச்சீலைசெய்து ஒருனரு விற்புடம்போட்டுவெண்ணெயிற்கொடுக்க நீர்க்கட்டுநீர்க்கடுப்புத்தீரும்

வெள்ளரிவிரை விராற்றலைக்கல்மேற்படி பற்பம்இவைகளை யரை த்துக் காற்படிவெள்ளரிக்காய்ச்சாற்றி லொருவேளையும முள்ளங்கியை யிடித்துப் பிழிந்து சாற்றிலொரு - வேளையுங்கொடுக்க கல்லடைப்புத் தீரும்,

வெங்காரம் சலாசத்து கலக்கொம்பு-கல்நார்-இவைகளை -ஓர்நிறை யாய்க் கல்வத்திட்டு பருத்திச்செடி சமூலஞ்சுட்டசாம்பல்-படி-௧-நாலு படி ஜலத்திற்போட்டுக் கலககி நாலாநாள் தெளிவிறுத்து அந்தத்தெளி விருல் நாலுசாமமரைத்து வில்லைதட்டிக்காயவைத்து ஓட்டிலிட்டுச் சீ லைசெய்து முப்பதெருவிற்புடம்போட்டு அகில்-சாரம்-கூடன்பூநீர் வீர ம் வகைக்கொருகழஞ்சுசேர்த்து மேற்படி நீரால்நாலுசாமமாட்டி வில் லைசெய்து காயவைத்து சுண்ணும்புப்பொடிக்குள்வைத்து முழப்புடம் போடநீறும் கறுத்திருந்தால் அண்டவெள்ளைக் கருவிருலரைத்து ஒரு புடம்போட வெளுத்துநீறும் அதற்கும்பாகிசுத்திசெய்த லிங்கஞ்சேர் த்துப்பொடித்து இரண்டுபணவிடைஇளநீரிற்கொள்ள - பெருவயிறும கோதரம் கிருச்சனம் சல்லடைப்புசதையடைப்பு நீர்ச்சிறுப்பு நீரெரிவு நீர்ச்சுருப்பு-நீர்க்கட்டுத்தீரும்.

சொர்ணபற்பம்.

தங்கரேக்கை முள்ளிக்கீரைச்சாற்றில் மூன்றுநாளூறவைத்து ரவி யிற்காயவைத்துக் கல்வத்திட்டு சித்திரப்பாலாடைச்சாற்றில் மைபோ லரைத்து வில்லைதட்டிக்காயவைத்து அதற்குகடம்பிலையை யரைத்துக் கவசஞ்செய்து அகலில்வைத்துமூடி எழுசீலைமண்செய்து நூறெருவி ற் புடம்போடப் பற்பமாகும் சவுரியிலைச்சாறுபடி-௮-சிறுகச்சிறுக ஒரு சட்டியிலிட்டுக் காயவைத்துக்கிரட்டி நிறுத்து அந்தவிடை ஆடாதோ டையிலையும் ஒருபலப்புனுகும் இரண்டுகழஞ்சுமேற்படி பற்பத்தும்சேர் த்து மெழுகுபோலரைத்து நெல்லிக்காய்போலுருட்டி எள்ளெண்ணெ யிற்போட்டு அந்திசந்தி ஒவ்வொருஉண்டைவீதம் - ஆறுமாதஞ்சாப்பி ட்டு மேற்படிஎண்ணெயைவார்த்துக்கிரண்டுமுறை -ஸ்நானஞ்செய்து. சையோகமும் காப்பன்பதார்த்தமுந்தள்ளிவைக்க வெண்குட்டமுதலா ன சகலகுட்டமுந்தீரும்.

கிராம்பை மயனமாய்ப்பொடித்து -ஆவின்வெண்ணெயில்மத்தித் து அதிற்பணவிடை தங்கபற்பம்வைத்துச் சாப்பிட்டுபாலும்அன்னமு ம்பொசித்துவர விந்தூறும் தாதுகட்டும் தேகம்பலக்கும்.

முத்துப்பற்பம்.

முத்தைச்சங்கம்பழச்சாற்றி லிரண்டுநாளூறவைத்து முள்ளிப்பழ ச்சாற்றால் மெழுகுபோலரைத்து வில்லைசெய்து காயவைத்துவோட்டி லிட்டுச் சீலைசெய்து முப்பதெருவிற்புடம்போட்டு தங்கப்பற்பத்துடன் சேர்த்துச்சாப்பிட தாதுகட்டும் மேகவியாதிகள் தீரும்.

அயபற்பசெந்தூரம்.

வாலுபலஞ்சுத்திசெய்த அயத்தில்மாஞ்செவிக்-கள்ளிப்பால்விட்டு ரவியில்வைக்க நீறும் அதைஒதியம்பட்டைச்சாற்றால் - நாலுசாமமாட்டிப் பத்துபுடப்போடச் செந்தூரமாகும் அனுபானத்திலிட-தேகம் இறுக்கும் விந்தூறும் தாதுகட்டும்,

மான்கொம்பை நாலாய்ப்பிளந்துசிறுதுண்டுகளாய் நறுக்கிஒருநாள் குப்பைமேனிச்சாற்றில் ஊறவைத்து மேற்படியிலையையரைத்துக் கவசஞ்செய்து காயவைத்து ஓட்டிற்பரத்திமேலோடுமூடிச் சந்துவாய்சீலைமண்செய்து ஐம்பதெருவிற் புடம்போட்டெடுத்து ஆவின்பால்விட்டரைத்து வில்லைதட்டிக்காயவைத்து முன்போற்புடம்போடப்பற்பமாகும் அனுபானங்களில் மேற்படிபற்பத்துடன்-பவளபற்பஞ்சேர்த்துக் கொடுக்க-நீரடைப்பு-கல்லடைப்பு-சதையடைப்பு-நீரெரிவு-சயம் -ஏலை இருமல் ஊஷ்ணம்மேககாங்கைதீரும்.

மான்கொம்பை இழைத்து கோவைச்சாற்றில்-ஒருநாளூறவைத்து மறுநாள் நன்றாய்க்காயவைத்து ஓட்டிலிட்டுச்சீலைசெய்துமுன்போற்புடம்போடநீறும் அதையனுபானங்களிலிட - மேற்காட்டியவியாதிகள் தீரும்.

கல்நார்ப் பற்பம்.

கல்நாரைச் சிறுதுண்டாய்ப்பிளந்து - ஓட்டிலிட்டு அதற்குக்கீழுமேலும் கோங்கிலவம்பட்டை யிடித்துப்போட்டு அப்பால்மேற்படிபட்டைக்கியாழம் விட்டரைத்துமூன்றுபுடம்போடத் தவளம்போல்நீறும் தேனிலாவது தூதுளை லேகியத்திலாவது - கொள்ளசிலேத்துமரோய் கூசு-ம்-நீங்கும் மேககாங்கைதீரும்மேற்படிபற்பத்தைப் பல்விளக்கதந்தம் இறுகும்.

கல்நாரைச்சிறுதுண்டுகளாய்வெட்டி ஓட்டில்வைத்து அதற்குக்கீழுமேலும் எருக்கம்வேரையிடித்த - தூளைப்போட்டு - மூடிகெஜபுடம்போட்டு மேற்படிபாலிலரைத்து மூன்றுபுடம்போட்டு - அனுபானத்திலிட மேற்படிவியாதிகள்தீரும் தந்தம்இறுகும்.

பஞ்சலவண பற்பம்.

பஞ்சலவணம் வகைக்குப்பலம்-௫-கல்வத்திட்டு பிரண்டைமுருங்கைப்பட்டை குப்பைமேனிநொச்சி-குமரி-இவைகளின்சாற்றால் வகைக்குஒருசாமமரைத்து வில்லைதட்டிக்காயவைத்து ஓட்டிலிட்டுச்சீலைசெய்து பத்தெருவிற் புடம்போடப்பற்பமாகும் அதற்குநாலிலொன்றுபெருங்காயஞ்சேர்த்து தேன்விட்டு மெழுகுபோலரைத்து சிமிழில்வைத்துக்கொண்டு வேளையொன்றுக்கொருகழஞ்சுவீதம் வியாதியின்பலத்துக்குத் தகுந்தபடிகால்மண்டலம் அரைமண்டலங்கொள்ள, வாதம்வாய்-குற்றல்-குடைதல்-வலிகடுப்பு-குன்மம்- அண்டவாயுகிராணி-பவுத்திரம்-ருத்திரவாயுகுடற்புரட்டல் வயிற்றுப்பொருமல் -செரியாமைமந்தம் மகோதரம் நீங்கும்.

பற்பப்படலம் -முற்றிற்று.

சிவமயம்.

திராவகப்படலம்.

அதாவது சகலவிதமான லவணவகை உபரசங்களை கிளாசுப்பாத்திரங்
களிலும்வாலைப்பாத்திரங்களிலும் புட்டிவகைகளிலும்தீநீர்
பெருக புகைநீர் பிடித்தலால் திராவகப்படல
மெனப்பெயர்பெற்றது.

ருஉ- ஆண்டுபிரயோகிக்கலாம்.

விருத்தம்,

சொன்னாரோ திராவகத்தின் மார்க்கமெல்லாம்
சுளுவாகப்பல நூறு மெல்லாம்பார்த்து
பன்னவேலோகங்கள் நீறுமார்க்கம்
பாடினார்நீத்தினங்கள் சுளுக்குவேதை
என்னவேயிந்நூல்போ லாருஞ்சொல்லார்
என்மக்காளுங்களுக்கு வுரைத்தேன்யானும்
மன்னனேகேள் ஆத்மரட்சாமிர்தத்தை
மண்டலத்தில்பண்டிதற்காயறைந்திட்டோமே.

மகா திராவகம்.

எருக்கு- துத்திதாழை - முருங்கை-ஊமத்துநாயுருவி - பிரண்டை-
அறுகு சித்திரமூலம்-தென்னோலை-வாழைக்கிழங்கு குப்பைமேனி- அ
றுகு-இவைகளைச்சுட்ட சாம்பல் - வகைக்குப்படி (க) வெவ்வேறுபாண்
டத்திட்டு-ஒவ்வொன்றிலும் - நாலுபடிசலம்விட்டுக் - கரைத்துவைத்
துநாலாநாள் - தெளிவிறுத்துக்காய்ச்சிக்குழம்புப்பதத்தில் - பீங்காணி
ல்விட்டுமோர்தெளித்து - இரவில்பனியில்வைக்க - உப்புறைந்திருக்கு
ம்- அதைரவியில்காயவைத்து வகைக்குப்பலம் (ரு) கல்லுப்பு - வளைய
லுப்பு-இந்துப்பு நவாச்சாரம் -வெண்மையாய்வறுத்த-துருசு - துத்தம்-
பூநீர் -வகைக்குப்பலம்-ரு-சிவக்கவறுத்த அன்னபேதி - பலம்-ய௩-ச
வட்டுப்பு - பலம்-உய-சீனம்பலம்-எய-ஐந்தாங்காச்சல் - வெடியுப்பு-ப
லம்-க - இவைகளைப்பொடித்து - மூன்றுபங்குசெய்து - ஒருபங்கைக்க
லசத்திலிட்டு -நன்றாய்வெந்தசெங்கல்லை - வட்டமாயுரைத்து - அதின
டுவில்- பெருவிரல்வோட்டத்தக்கத்தமரிட்டு- அதைக்கவசவாயிற - பொ
ருந்தமூடி - ஏழுசீலைமண்செய்து - காயவைத்ததின்மேல் தூர்பெத்தா
சீசாவைத்துச் சீலைசெய்து - அடுப்பேற்றித் -தீயெரிக்க -திராவகமிறங்
கும் - அதைமற்றொருபங்கில்விட்டு - ரவியுலர்த்திப்பொடித்துக்- கலச
த்திலிட்டுத் - திராவகம்வடித்து - மூன்றுவதுபங்கில் -விட்டுலர்த்திப்
பொடித்துத் - திராவகம்வடித்துச் சீசாவிலடைத்துக்கொண்டு (க) மு
தல்(ரு) துளிவரைதண்ணீர் கஷாயமுதலான - அனுபானங்களிலிட -வு

யிற்றுவலி-குன்மம்-பீலிகை-நீராமைகவுசி-கெண்டை பெருவயிறு-வாயுத்திரட்சி-காசுக்கட்டி-சூதகவாயு-சூதகத்திரட்சி - மகோதாமுதலான உதாரோகங்கள் தீரும்.

உவர்மண்ணுஞ் சுண்ணும்பும் தண்ணீரிற் கரைத்து அதில்முதிர்ந்த காககாச்சிப்பியைப்போட்டு வெளுக்கும்வரைகாய்ச்சி சுத்திசெய்து பொடித்து மேற்படிதிராவகத்திலிட்க கரைந்துசெலமாகும் அந்தச்செலத்தை யிறுத்துக்கொண்டு அடியிலுறைந்திருக்கும் மஷடியைச் சாரநிற்கு அக்கிபூட்டிப் புடம்போட்க்கட்டும் அதைமேற்படி சிப்பிநீரால அரைத்து வீரதுக்குப்பூசி அய்பிரகப்பொடியில்வைத்துப் புடம்போடக்கட்டும் கட்டினவீரம-சாரம் வகைக்குப்பணவிடை-க-சூதம்பலம்-க-இவை மேற்படி நீராலாட்டிக் குகையில்வைத்தூதக்கட்டும்.

காயுருவி-தாழை-மேனி-சிறுசின்னிவாழை - தென்னைவெள்ளறுகு உமுரி-கள்ளி இவைகளின் உப்புவகைக்குப்பலம் - க - சவுட்டுப்பு வெங்காரம்-கல்லுப்பு- இந்துப்பு வகைக்குப் பலம்-க-வெடியுப்புப் பலம்-ய-சீனம் பலம்-ரு-பூநீர்-சூடன்-சாரம்-வெளுக்கவறுத்ததுருசு- சிவக்கவறுத்த அன்னபேதி-பாஷாணம் வகைக்குப்பலம் - உ - சுத்திசெய்த சிப்பிபலம்-வ-இவைகளைப் பொடித்து மூன்றுபங்குசெய்து முன்போல் திராவகமிறக்கவும் இதில் நவலோகமும்நீறும் செந்தூரமாகும்.

சங்கத்திராவகம்.

அஞ்சாங் காய்ச்சல் வெடியுப்பு பலம்-சு- சீனம் - இந்துப்பு- வகைக்குப்பலம்-ரு-சிவக்கவறுத்த அன்னபேதிபலம்-எ உ-வெளுக்கவறுத்த துருசு-கரியுப்பு வகைக்குப்பலம - உ- சாரம்-பூநீர் வகைக்குப்பலம் (க)பொரிகாரம்பலம்-உ- இவைகளைப் பொடித்து மூன்று பங்குசெய்து முன்போல் திராவகம்வடித்து அனுபானங்களிலிட மேற்படி வியாதிகள் தீரும் நவலோகம்-பாஷாணச்சரக்கு நீறும்.

சீனத்திராவகம்.

அஞ்சாங் காய்ச்சல் வெடியுப்பு பலம்-யரு-சீனம் பலம்-ய - கல்லுப்பு-சவுட்டுப்பு-வளையலுப்பு-பூநீர் வகைக்குப்பலம்-உ-இந்துப்பு - சாரம் வகைக்குப்பலம்-உ-காயுருவியுப்பு பலம்- ரு- சிவக்கவறுத்த அன்னபேதிப்பலம்-ரு-இவைகளைப்பொடித்து மூன்றுபங்குசெய்துமுன்போல் திராவகம்வடித்து அனுபானங்களிலிட மேற்படி வியாதிகள்தீரும். நவலோகச்சத்துக்களில் வீரஞ்சேர்த்து மேற்படி திராவகம் விட்டரைக்க ரசமாகும்.

கெந்தகத்திராவகம்.

கெந்தகம்-பூநீர் வகைக்குப்பலம்,ய-சீனம்பலம்- உய- வெடியுப்பு பலம்-சுய-கல்லுப்புபலம்-ஐந்து-இவைகளைப் பொடித்துப்பனியில்வைத்து மெழுகுபோலாட்டி உலர்த்திப்பொடித்து மூன்றுபங்கு செய்து முன்போல் திராவகம்வடித்து அதில்துருசைத்துவைத்து ரவியில்வைக்கநீரும் அதற்குமிகர்சாரஞ்சேர்த்து அரைக்கச்செயநீராகும் வீரத்தைத்துவைத்து வாட்டமெழுகாகும்.

பஞ்சலவணத்திராவகம்.

வெடியுப்பு-சீனம்-கரியுப்பு வகைக்குமபலம்- ௩- நவாச்சாரம்வெண்காரம் வகைக்குப்பலம்-௧௦-இவைகளைப்பொடித்துத் திராவகம் வடித்து குருவைநெற்புழுங்கலரிசிப்பொரிமாவிலாவது நில்வாகைச்சூரணத்திலாவதுகொடுக்க வயிற்றுப்பொருமல்-வலிவாயுத்திரட்சி முதலான உதரரோகங்கள்தீரும்.

மெழுகுத்திராவகம்.

சாம்பிராணிபலம் - ௨ - வெள்ளைமெழுகுபலம்-௧-கரியுப்புபடி அரைக்கால் சாதிக்காய்-சாதிப்பத்திரி-கிராம்பு வகைக்கு விராகன் (௨) இவைகளில் மெழுகைக்காண்டியிலுருக்கி அதில் மற்றவைகளைப் பொடித்துத்தூவிக்கிண்டி ஆற்றிப்பொடித்து அதில் நாலுசிரங்கைபொடி மணலுஞ்சேர்த்து கலசத்திலிட்டு திராவகம்வடித்து தேகத்திற்பூசி, மாலையில்சாப்பிட்டுவர சொரி-சிரங்கு-மேகச்சொரி-ரணம்-குஷ்டமதீரும் காசளவுவெற்றிலையில் வைத்துக்கொடுக்க குன்மவயிற்றுவலிதீரும்,

கரியுப்புத்திராவகம்.

சுத்திசெய்த கரியுப்புப் பலம் (அ) படிகாரம்பலம் (௧) இவைகளைப்பொடித்து எட்டுபலக் கடலைப்புளிப்புடன்கலந்து திராவகமவடித்து அஞ்சுதுளி தண்ணீரிற்கலந்து சாப்பிட்டுவர தீபனசத்தியையும் தேகபலத்தையுங்கொடுக்கும் வாயு-மந்தம்-அஜீரணம் நீங்கும்.

வெடியுப்புத்திராவகம்-

வெடியுப்புப்பலம் (௨௰) சீனம்பலம்(௰௬) இவைகளைப்பொடித்து எட்டுபலக் கடலைப் புளிப்பிற்கலந்து திராவகம்வடித்துத் தண்ணீரில் அஞ்சுதுளிவிட்டுக்குடித்தசாத்தினால் பலயீனமுடையவர்களுக்குக்கொடுத்தால் பலமுண்டாகும் காசக்கட்டிகரையும்.

எட்டாங்காய்ச்சல் வெடியுப்பு-சீனம்-சிவக்கவறுத்த துருசு வகைக்குப்பலம்(௬)இவைகளைப்பொடித்து மூன்றுபங்குசெய்து முன்போற் றிராவகம் வடித்துக்கொள்ளவும்.

எட்டாங்காய்ச்சல் வெடியுப்புப்பலம் முப்பது சிவக்கவறுத்த அன்னபேதி பலம் முப்பது அல்லது இருபதுசேர்த்துப் பொடித்து மூன்றுபங்குசெய்து முன்போற் றிராவகம் வடித்துக்கொள்ளவும்.

வறுத்த கரியுப்பு பலம் ஐந்து சிவக்கவறுத்த அன்னபேதி பலம் பத்துசேர்த்துப் பொடித்து மூன்றுபங்குசெய்து முன்போற் றிராவகமிறக்கிக்கொள்ளவும் சிவக்கவறுத்த அன்னபேதியை மட்டும் திராவகம்வடித்து அதில் பலம் (௧) வறுத்த ஒருபலம் கரியுப்பைப்பொடித்துப்போட்டு உலர்த்தித் திராவகம்வடித்துக்கொள்ளவும் இத்திராவகமொருபங்கும் முன்சொல்லியவெடியுப்புத்திராவகம் இரண்டுபங்குஞ்சேர்த்துத்திற்போட நவலோகங்கரையும்.

திராவகப்படலம்-முற்றிற்று.

உ

சிவமயம்.

விரோசனப்படலம்.

விருத்தம்.

அறைந்திட்டோம்பண்டிதற்கு யிந்தநூலை
அப்பனேசாத்தியங்க ளசாத்தியங்கள்
நிறைந்திட்டகுடிநீர்கள் விரோசனந்தான்
கோரானசுகபேதி யிதிலடக்கம்
துறந்திட்டேன்கைபாகஞ் செயபாகந்தான்
சூட்டினேன்மானிடர்கள் பிழைக்கவென்று
மறைந்திட்டவயித்திய சாரமென்று
மண்டலத்தில்முனிவர்களும் வகுத்திட்டாரே.

குடிநீர்.

பிரமியிலைபிடி (௧) விளாபோக்கிய கடுக்காய்க்கழஞ்சு (௪) களிப்பாக்குக்கழஞ்சு (௩) சுக்குக்கழஞ்சு (௨) இந்துப்பு அல்லது முந்திரியுப்புக் கழஞ்சு (௧) இவைகளைச் சிதைத்து ஒருபடி தண்ணீரிற்போட்டு எட்டொன்றாய் வற்றவைத்து மூன்றுதரம் வடிகட்டிச் சாப்பிட நன்றாய் விரோசனமாகும் பிரமியிலையைநீங்கிமற்றமருந்துகளை மயனமாய்ப்பொடித்து அரைக்காற்படி இஞ்சிச்சாற்றிற் கலந்து கொடுக்கப் பழமலமும் மலபந்தமும் வாயுவும்நீங்கும் குளித்துமோரசனஞ்செய்யவும்.

தேங்காய்ப்பூவும் முடக்கொத்தானிலையும் ஓர்நிறையால் பிட்டவித்து அரைக்காற்படி சாறுபிழிந்து வடிகட்டிச்சாப்பிட விரோசனமாகும் அல்லது ஒருபிடிமுடக்கொத்தானிலையை அவித்துப்பிழிந்த தண்ணீரிற் கொஞ்சம்பழம்புளி-கடுகு-சீரகம்- மிளகுஞ்சேர்த்து ரசஞ்செய்து அரைக்காற்படியில் அரைவீதப்படி சிற்றாமணக் கெண்ணெய்விட்டு மத்தித்துச்சாபபிட விரோசனமாகும் குளித்து அசனஞ்செய்யவும்,

இந்துப்பு விராகனிடை(௧)களிப்பாக்கு விராகனிடை(௨)கடுகுரோகணி விராகனிடை (௩) கடுக்காய்விராகனிடை (௪) நிலவாகைவிராகனிடை(௫)கருவேலங்கொழுந்து விராகனிடை(௬)கற்றாழஞ்சருகு விராகனிடை(௭)பிரமியிலை விராகனிடை(௮)இவைகளைச் சிதைத்து அரைப்படி தண்ணீரிற்போட்டு நாலிலொன்றாய் வற்றவைத்து நாலுதரம்வடிகட்டிக்கொடுக்க நன்றாய்விரோசனமாகும்,

தேங்காய்ப்பால் படி மாகாணி மிதிபாகற்சாறு அரை மாகாணிப்படி இவைகளைமத்தித்துச் சாப்பிட விரோசனமாகிக் கிருமிகள்விழும் மேகநீர்-மேகப்புண்நீங்கும் குளித்தன்னி நீர்க்கஞ்சிகொள்ளவும்,

பூவாசம் பட்டையில் ஆவின்பால்விட்டிடித்து நாலாறுதரம் வடிகட்டி உட்கொள்ள விரோசனமாகும் புளித்தள்ளி நீர்க்கஞ்சிகொள்ள மலக்கட்டு நீர்க்கட்டுநீங்கும்.

சிறுசெருப்படையையும் ஈருள்ளியையும் யிடித்துச் சாறுவாங்கி ஆறுதபா வடிகட்டிச் சாப்பிட பேதியாகும் மேகச்சிரங்கு முதலானவைகள் நீங்கும்,

சூரணம்,

சிறுநாகப்பூ-ஏலம்-லவங்கப்பட்டை-லவங்கப்பத்திரி-வாய்விளங்கம்-திரிகடுகு-மூந்திரியுப்பு அல்லது-இந்துப்பு-இவைகளை-ரவியுலர்த்தி வடிகட்டினசூரணம் வகைக்கு விராகனிடை (எஉ) சேர்த்துத்திரிகடி சீனியிலாவது-வெந்நீரிலாவதுகொள்ள விரோசனமாகும் குளித்து மோரசனங்கொள்ளவும்,

பாலிலவித்துச்சுத்திசெய்துலர்த்தி இடித்தஅதிமதூரம் விராகனிடை மூன்றுதிப்பிலித்தூள் விராகனிடை (கூ) இவைகளை ஆவினெய்யிற்குழைத்து அசனத்தின்பேரில் இராவிற் சாப்பிட்டுவா மலபந்தம் நீங்கும்,

கருஞ்சீரகப்பொடி-மூந்திரியுப்பு வகைக்கு விராகனிடை(உச)சுக்குப்பொடி விராகனிடை (உ) ஒன்றாய்க் கலந்து ஒருவிராகனிடை இரவில் அசனத்தின்பேரில் சாப்பிட்டுவர காலையில் மலவிர்த்தியாகும் மலக்கட்டுநீங்கும்.

ஜாலபலத்தூள் விராகனிடை(உச)மூந்திரியுப்பு விராகனிடை(அ) சுக்குப்பொடி விராகனிடை (உ) இவைகளை ஒன்றாய்க்கலந்த பொடி விராகனிடை (க) கற்கண்டு பொடியிற்கொள்ள விரோசனமாகும்-சுக்கு-பெருங்காயம்-கருவேப்பிலை வகைக்குத்துலாம்(க) திப்பிலி-நற்சீரகம்-இந்துப்பு வகைக்குத்துலாம் அரைக்கால் இவைகளை ரவியுலர்த்திப்பொடித்து நெய்யில்மத்தித்து போசனத்தின்பேரில் சாப்பிட்டுவா வாயுவும் மலக்கட்டும்நீங்கும்,

கருவேப்பிலையும்-நிலாவகையிலையும் ஓர்நிறையாய்ப் பொடித்துத் திரிகடி தேனில்மத்தித்து அசனத்தின்பேரில் சாப்பிட்டுவா வாயுவும் மலக்கட்டும்நீங்கும்.

திரிகடுகு-சீரகம்-இந்துப்பு-கருவேப்பிலை-பெருங்காயம் ஓர்நிறையாய்ச் சூரணித்து திரிகடி ஆவினெய்யில்மத்தித்து இரவில் அசனத்தின்பேரில் சாப்பிட்டுவா மலக்கட்டுநீங்கும்.

திருகுகள்ளிவேர்ப்பட்டையை ஆவின்பாலிலவித்துக்கழுவி நிழலிலுலர்த்திக் கால்விராகனிடையைத் தாம்பூலம் அருந்தும்போதுகூடப்போட்டுமென்று அமிர்தத்தை உட்கொள்ள நன்றாய் விரோசிக்கும் சந்தனத்தைத் தேகத்திற்பூசிக்கொள்ள நிற்கும் வாயுமலபந்த நீங்கும்

கடுக்காய்பலம்-ச- அதற்குநிகர் திரிகடுகுசீரகம்ஓமம் இந்துப்பு நறுக்குமூலம் ஓர்நிறையாய்ப்பொடித்து திரிகடிப்பிரமாணஞ் சாப்பிட்டு வெந்நீர்கொள்ள மலசுத்தியாகும்:

கிருமிவிரோசனம்:

ஒருநாரத்தங்காயைச்சிறுக அரிந்ததில் திரிகடுகு இந்துப்புகாய்ம் கருஞ்சீரகம் நற்சீரகம் வகைக்கு விராகநிடை-க-இவைகளைச்சூரணித்துத்தூவிக் கள்ளிப்பால்விட்டுப்பிசறி எட்டுநாள்வரையில் ரவியிற்காயவைத்துப் பொடித்துப் பணவிடை வெல்லத்திலாவதுவாழைப்பழத்திலாவது வைத்துக்கொடுக்க விரோசனமாகும் வாயுமலக்கட்டு பொருமல்தீரும்.

கிருமிகள் பந்துபந்தாய்விழும் மாதுளைவேர்க்கஷாயத்திலும்கிருமிவிழும்.

ஏழுமிளகும் மிதிபாகவிலையும் அரைத்துஒருகொட்டைப்பாக்குப்பிரமாணங்கொடுக்க பொடிசகிருமிகள் கூட்டோடுவிழும்.

வெப்பீர்க்கு (ம) கடுக்காய் (ச) இவைகளைப்பிரண்டைச்சாற்றால் மயனமாயாட்டி விளக்கெண்ணெயில் மத்தித்துக்கொடுக்க கிருமிகள்விழும்.

ஓமம்புரசவிரை வேப்பீர்க்கு பிரண்டை இவைகளைவெள்ளாட்டுநீரிற் கஷாயஞ்செய்து வடிகட்டிக்கொடுக்கப் பந்துபந்தாய்க் கிருமிகள்விழும்.

இரண்டு புரசவிரையை எருமைச்சாணியிற்பொதிந்து வைத்திருந்து காலையில் தோலைநீக்கி ஆவின்பாலிலரைத்துக் கலக்கிக்குடிக்கக் கிருமிகள் கூட்டோடேவிழும்.

சரக்கொன்றைக் கொழுந்தை அவித்துப்பிழிந்த தண்ணீரிற்சீனி கலந்து அரைக்காற்படி சாப்பிடக் கிருமிகள்விழும்.

ஒருவிராகநிடை பேய்ப்பீர்க்கம் விரைப்பருப்பையரைத்துவெந்நீரிற்கலக்கிக்கொடுக்க விரோசிக்கும் கிருமிகள் நீங்கும்.

அரைவிராகநிடை மாம்பருப்பையாவது பூனைக்காலியையாவது தேன்வெல்லத்தில் கொடுக்கக் கிருமிகள் நீங்கும்.

எ ண் ெ ண ய்.

ஆவின்பால்படி • ௭ - சிற்றாமணக்கெண்ணெய்ப்படி-வ-இவைகளையொன்றாய்க்கலந்து அதில்வேலிப்பருத்திவேர்ப்பட்டை ஒருஎலுமிச்சங்காய்ப்பிரமாணம் உள்ளி பலம்-ச-அரைத்துப்போட்டுக் காய்ச்சிப் பதத்தில் வடித்து நாலுபுரசவிரையைமயனமாய்பொடித்துப்போட்டு ஐந்துநாட்சென்றபின்பு காசளவுசாப்பிடபேதியாகிக்கிருமிகள்விழும் சுடுகஞ்சிகொள்ளவும்.

சிற்றாமணக்கெண்ணெய்ப்படி-க-ஆவின்பால்பலம்-ச- ஒன்றாய்க்க

லத்து அதிமதுரம் -இந்துப்புகடுக்காய் - கடுகுரோகணி வாளப்பரு ப்பு-வகைக்குக்கழஞ்சு-ச-அரைத்துப்போட்டுப் பதமாய்க்காய்ச்சி வடித்து சிறுபிள்ளைகளுக்கு ஒருகாண்டியும் பெரியோர்களுக்குமூ ன்றுகாண்டியும் கொடுத்து -ஒருநாழிகைக்குப்பின்பு வெந்நீர்கொ ள்ள நன்முய் விரோசனமாகி வாயுவாதம் சிரங்குசொரிகரப்பன் க ணைமாந்தம் அஸ்திசுரம் அஸ்திவெட்டை - தேகவலிகடுப்புவாதநீர்ச் சுரப்பு பித்தம் நீங்கும் பத்தியம் உப்புசேர்த்து நீர்க்கஞ்சிகொண் டு மாலையில் சீரகம் மிளகு சுக்கு இவைகளைக் கஷாயஞ்செய்துசா ப்பிட்டு இரவில் மோரசனஞ்செய்யவும்.

ஈருள்ளி இண்டங்கொழுந்து கடுக்காய்த்தோல் இவைகளைச்சிதை த்து விளக்கெண்ணெயிற் போட்டெரித்து சிறுகுழந்தைகளுக்கு ஒ ருசங்கு கொடுக்கவிரோசனமாகிக்கிருமிவிழும்,

விளக்கெண்ணெய்படி(൧)கள்ளிப்பால்படி - அரிக்கால் முற்றின தேங்காய்ப்பால்படி-ச-சிறுகஅரிந்தவெள்ளைப்பூடுபடி - அரிக்கால் இந்துப்பு பெருங்காயம்-சவுக்காரம்வகைக்குக்கழஞ்சு-க-மயணமா யாட்டிப்போட்டுக் காய்ச்சிவடித்து - காசிடைகொடுக்க கிரிமிகூட் டோடே விழுந்துவாயுப்பொருமல் மேகசூலை-முடக்குசொரிசிரங் குதீரும்.

உப்பு.

சிறுசின்னியைச் சுட்டசாம்பல்படி-க-நாலுபடி சலத்திற்கரைத் துவைத்து நாலாநாள் தெளிவிறுத்துக்காய்ச்சி உப்பெடுத்து பண விடைகொடுக்க விரோசனமாகிநீர்க்கட்டு வாயுகுன்மம் வாதம்அ க்கினிமந்தம் கைகால்பிடிப்பு சூலைசோகை-பாண்டுகாமாலைவீக்கம் பொருமல் பயித்தியவாயு நீங்கிப்பசியுண்டாகும் தாதுவிர்த்தியுண் டாகும்.

நாபிவிரோசனம்.

இரதம் கெந்தகம் வகைக்குவிராகநிடை-க-வாளம் விராகனிடை ங-அழிஞ்சிவிரைப்பருப்பு விராகநிடை-ச-வெங்காரம்விராகநிடை- டு-சிற்றாமணக்கின்பருப்பு விராகநிடை-சு-காட்டாமணக்கின் பரு ப்பு விராகநிடை-எ-கொன்றைப்பழத்தின்பருப்பு விராகனிடை-அ கடுக்காய்த்தோல் விராகநிடை-கூ-முருக்கின்பருப்பு - விராகனிடை ய-இவைகளைக் கள்ளிப்பாலால் மூன்றுநாளரைத்து முற்றினதேங்கா ய்க்குள்ளடைத்து பதினைந்துநாள் தானியபுடம்வைத்தெடுத்துச்சி ரட்டைநீக்கியரைத்து வெங்கலப்பாத்திரத்திலப்பிச்சூரியபுடம்வை க்க தயிலமிறங்கும் அதைச்சிமிளிலடைத்து அணுப்பிரமாணம் நா பியில்வைக்க விரோசனமாகும் குளிர்ந்ததண்ணீரிற்குளித்துத்மோ ரசனஞ்செய்து சந்தணத்தை நாபியிற்பூச பேதிநிற்கும் எலுமிச்ச

ம்பழம்மல்லிகைப்பூஇவைகளிற்றடவிமுகந்தால்விரோசனமாகும்.

பூவிரோசனம்

இரதம் -கெந்தகம் -வெங்காரம்-வகைக்குவிராகனிடை-௧-வாளம் விராகநிடைஐந்து-ஆமணக்கின்பருப்பு விராகனிடை-௬-கார்கோலரிசிவிராகனிடை-௭-புரசம்விரைவிராகனிடை-௮-கடுக்காய்த்தோள்விராகனிடை-௯-சிவதை விராகநிடை-பத்து புங்கம்பருப்பு விராகனிடை-௰௧-இவைகளைக்கொடிக்கள்ளிப்பாலால் மூன்றுநாளாட்டி-தேங்காய்க்குள் ளடைத்து -௰௫-நாள் நெல்லுக்குள்வைத்துச்சிரட்டைநீக்கி அரைத்துப் பீங்கானிலப்பி ரவியில்வைக்கத்தயிலம்வடியும்அதைமல்லிகைப்பூச்செண்டில்தடவி முகரவிரோசனமாகும் சந்தனத்தைப்பூசிக்கொள்ள நிற்கும்.

வெள்ளைக்குங்கிலியத்தை கழிக்குள்வைத்துஒருபட்சஞ்சென்றெடுத்துலர்த்திப் பொடித்துத் தணலிலிட்டுப் - புகையில்- அலரிப்பூச்செண்டிற்பிடித்து முகர்ந்துபார்க்கபேதியாகும்,

அழிஞ்சிநேர்வாளம் - இவைகளின்பருப்பு வகைக்குப்படி-௧-அரைத்துக்கலக்கிக் காய்ச்சியெண்ணெய் எடுத்துசெவ்வலரிப்புஷ்பத்திற்றடவி பனியில்வைத்துக்காலையில் முகர்ந்துகொண்டிருக்கவிரோசனமாகும் குளிர்ந்த சலத்திற் - ஸ்நானஞ்செய்து -சந்தனம்பூசிக்கொள்ள நிற்கும்.

மாத்திரை.

எருமைச்சாணிப்பாலும் எலுமிச்சம்பழச்சாற்றிலும் ஆவின்பாலிலும் அவித்துச்சுத்திசெய்து மேற்றோலிஇதழ்நீக்கினவாளம் - விராகன்-௬-காசுக்கட்டிவிராகன் பனிரண்டுதேன்விட்டு நன்றாய்அரைத்து ஒருகுன்றிமணியிடையாய் - மாத்திரைசெய்து - ஒருமாத்திரைகொடுக்கவிரோசிக்கும் வயிற்றுவலிஅதிகவாந்திகடினபேதிகண்டால் எலுமிச்சஞ்சாற்றைக்கொடுக்க நிற்கும்குளித்துமோரசனஞ்செய்யவும் அசதிசன்னி-சன்னியிழுப்பு கடின சுரத்துக்குங் கொடுக்கலாம்.

சுத்திசெய்தவாளம்விராகன்-௭-சாதிலிங்கம் - இரசபற்பம் திரிகடுகு சிற்றாமணக்கின்பருப்பு வெங்காரம்வகைக்குவிராகன்-௧-குளிர்ந்தசலத்திலாட்டிக் குன்றிபோலுண்டைசெய்து - வாழைப்பழத்துக்குள்வைத்து உண்டுகொஞ்சங் குளிர்ந்தசலங்குடிக்க -விரோசனமாகும் சுடுதண்ணீர்குடிக்க நிற்கும் வெந்நீர்குளித்து மோரசனஞ்செய்யவும் அதிகமானால்நெல்லிப்பருப்பை மோரிலரைத்துக்குடிக்க நிற்கும்.

சுத்திசெய்தநேர்வாளமுத்து-௨௰-எலுமிச்சம்பழச்சாற்றில் - மூன்றுநாளூறவைத்துக் கழுவில்கல்வத்திலிட்டு - கடுக்காய் பத்துமிளகு

௰சு. சுக்கு-திப்பிலி-நற்சீரகம் வகைக்குவிராகனி-௨ ட-௬-பழச்சாற்ற
லாட்டி சுண்டைக்காய்போலுண்டைசெய்து வெந்நீரிலிடவிரோச
னமாகும்-வாயுவாதம்கிருமிநீங்கும் அதிகப்பட்டால்வசம்புச்சாம்ப
லைத் தண்ணீரிற்கரைத்துக்கொடுக்கநிற்கும்,

இரதம்விராகன்-க-கெந்தகம் விராகன் (௨) பொரிகாரம்விராகனி
டைமூன்று மிளகுவிராகனிடை (ச)சுக்குவிராகனிடை ஐந்து கடுக்
காய்விராகனிடை(௬)வாளப்பருப்பு விராகனிடை(அ)வெல்லம் வி
ராகனிடை முப்பதுசேர்த்து சுண்டைக்காய்ப் பிரமாணஞ்சாப்பி
டவிரோசனமாகும் மோரசனஞ்செய்ய வாயுசுரம்நீங்கும்.

சூதபற்பம்லிங்கம் வெங்காரம் - இந்துப்புகடுக்காய் கடுகுரோக
ணி வெள்ளைக்காக்கணன்வேர் வகைக்குவிராகனிடை மூன்றுசுத்தி
செய்த வாளம்விராகனிடை-அ- இவைகளைப்பிரண்டைச்சாற்றால் இ
ரண்டுசாமமாட்டிக் கடலைபோலுருட்டி இஞ்சிச்சாற்றிலாவதுகொ
டுக்க விரோசனமாகும் மிளகுரசனஞ்செய்ய வாயுசுரம்நீர்க்கோ
ர்வை வயிற்றுப்பொருமல் தீரும்.

கடுகுரோகணி வெள்ளைக்காக்கணன்வேர்ப்பட்டை சாரணைவேர்
மிளகுதிப்பிலி வெங்காரம் சிவதைவகைக்கு விராகனிடை-ச- சுத்தி
செயத நேர்வாளப்பருப்பு விராகனிடை - ௰ச-பிரமியிலைச்சாற்றால்
மெழுகுபோல் மூன்றுநாளரைத்து இஞ்சிச்சாறு புனைவெல்லமவெ
ந்நீர் இவைகளிற்கொடுக்க விரோசனமாகும்.

சுத்திசெய்ததவாளம்விராகனிடை-அ-சாஸ்திரவேதி சிற்றாமணக்
கின்பருப்பு சாரம்வகைக்குவிராகனிடை-௨-சாதிலிங்கம் -விளாவரிசி
கடுகுரோகணி வகைக்குவிராகனிடை-க-கடுக்காய் விராகனிடை-௨-
கற்றாழம்பாலால் ஒருநாளாட்டி தூதுளங்காய்போலுருட்டி ஒருகு
ளிகைவாழைப்பழத்திற்பொதிந்து கொடுக்கவிரோசனமாகும வெ
ந்நீர்குடிக்க விரோசனம் அதிகப்படும் - தண்ணீர்குடிக்க - நிற்கும்
மோரசனஞ்செய்யவும்.

சுத்திசெய்ததாளகம் திரிகடுகு திரிபலைசிவதை வகைக்குவிராகனி
டைமூன்று நேர்வாளம் விராகனிடை (௬)இரதம் கெந்தகம் வகை
க்குவிராகனிடை-க-இஞ்சிச்சாற்றி லொருநாளாட்டிக் குன்றிபோ
லுண்டைசெய்து இஞ்சிச்சாற்றிலாவது வெல்லத்திலாவதுகொடுக்
கவிரோசனமாகும் சுரம்நிற்கும்.

ஏலம்லவங்கம் அதிமதுரம் கடுகுரோகணி திப்பிலிதிப்பிலிமூலம்
சாத்திரவேதி சண்டகமொட்டு இரதபற்பம்வகைக்குவிராகனிடை
க-நேர்வாளப்பருப்பு விராகனிடை (௯) வெந்நீரிலரைத்துக்குன்றி
போலுண்டைசெய்து வெல்லத்திற்கொடுக்க விரோசனமாகும்சுர
ம்நீங்கும்.

திரிகடுகு சீரகம்கடுகுரோகணி முருங்கைப்பூ சுத்திசெய்தபூரம் வகைக்குவிராகனிடை(௧)நேர்வாளப்பருப்புவிராகனிடை(௭)குளிர்ந்தசெலத்திலாட்டி குன்றிபோலுண்டைசெய்து தேன்-பால்- வாழைப்பழம்-சீனி இவைகளில் வியாதிக்குத்தகுந்தபடிகொடுக்க கிரிமி-வாயு-மந்தம்-பழஞ்சுரம்-சோகை-காமாலை-பாண்டு- பித்தவெரி குன்மம்-குடல்வாதம்-வாயுக்குத்து- கெண்டைகவுசி நீங்கும் மோசனஞ்செய்யவும்.

விரோசனப்படலம்-முற்றிற்று.

௨

சிவமயம்.

உ த ர ரோ க ப் ப ட ல ம்.

அதாவது இரத்தம் அதிகமாகி நரம்புவழிகளிலும் பெருங்குடலைப்பற்றி வாயால்வுதரம்பெருகுவித்தலாம்,

அவிரி-திருகுகள்ளி-வீழி கரிசாலை-கழற்சி-முடக்கொத்தான்- வேம்பு இவைகளின்சாறு வகைக்குப்படி (௧) பேய்க்குமட்டிக்காய் ஆடாதோடை இலைகளின்சாறு சிற்றாமணக்கெண்ணெய் வகைக்குப்படி(௨)வெள்ளாட்டுநீர்-எருக்கம்பழுப்புச்சாறு- திருகுகள்ளிச்சாறு வகைக்குப்படி(௪)ஒன்றாயக்கலந்து திரிகடுகு-திரிபலை- வெங்காரம்-வாய்விளங்கம்-வெண்கடுகு-கடுகுரோகணி-கருஞ்சீரகம்-நவச்சாரம்-பஞ்சலவணம்-ஆனைத்திப்பிலி- திப்பிலிமூலம் - மரமஞ்சள் வகைக்குப்பலம் (௧) பொடித்திட்டுக்கிண்டி மெழுகுபதத்தில் எண்ணெயைவடித்து ஒருமண்டலம் நெல்லுக்குட்புதைத்தெடுத்து நாளொன்றுக்கு ஒருகரண்டிவீதம் மூன்றுநாட் கொடுத்து ஆறுநாள்வரை மருபத்தியமிருந்து ஏழாநாள் தலைக்குத்தண்ணீர்வார்த்து உப்புகூட்டிக்கொள்ள மேற்படிவியாதிகள் தீரும்.

நொச்சிவதை முருங்கைசாரணை-ஆயிலியம்-சங்கு - மாவிலிங்கு-முக்காவேளை இவைகளின்வேர்ப்பட்டை வகைக்குப்பலம்(௨)வீதமிடித்துப் பதக்குநீரிற்போட்டு வற்றவைத்து வடித்தகஷாயம் படி(௧)ஆவினெய்படி(௧)திருகுகள்ளிப்பால்படி அரிக்கால் பேய்க்குமட்டிக்காய்ச்சாறுபடி (௪) ஒன்றாய்க்கலந்ததில் வாளம் விராகனிடை (௮)பெருங்காயம்-விராகனிடை (௬) இந்துப்பு - வெங்காரம்-கடுகுரோகணி-வெள்ளுள்ளி-சவுக்காரம் - சீனம்-வெப்பாலையரிசி வகைக்குவிராகனிடை(௫) அரைத்துப்போட்டு நாலுநாள்வரை சிறுதீயாயெரித்து அஞ்சாநாள் பதமாய்க்காய்ச்சிவடித்து நாளொன்றுக்கு ஒருகரண்டிவீதம் சாப்பிட்டுப் பத்தியம் சுண்டைவற்றல்-மோர்மிளகு-நீர்க்கோழிச்சாறு கூட்டிக்கொள்ளவும்.

கோசலம்-பால்-நெய் - பேய்க்குமட்டிக்காய்ச்சாறு வகைக்குப்படி(க)சுக்கு-திப்பிலி-கோஷ்டம் சிவதை- வெள்ளைக்காக்கணான்வேர்-கற்கடகச்சிங்கி-சாரணைவேர்-பெருங்காயம்-ஓமம் - இந்துப்பு-கடுகு வகைக்குக்கழஞ்சு(க)வீதம் அரைத்துப்போட்டுக்காய்ச்சிவடித்து நாளொன்றுக்கு இரண்டுகாசிடைவீதஞ் சாப்பிட்டுவரத் தீரும்.

சாரணைவேர்ப்பட்டைத்தூள் படி(க)மேற்படியிலைச்சாறுபடி-(க)இலைக்கள்ளிப்பால்-ஆவினெய் வகைக்குப்படி(வ)மேற்படிநீர்படி (உ) ஒன்றாய்க்கலந்து அதில்கல்லுப்புப்படி அரிக்கால் பொடிபோலரைத்துச் சிமிளிலடைத்துக்கொண்டு வேளை யொன்றுக்குச் சுண்டைக்காய்ப்பிரமாணஞ்சாப்பிட்டுமோரசனஞ்செய்யத்தீரும்.

ஐம்பதுவரிக்குமட்டிக்காயை இடித்துப்பிழிந்த சாறுடன் ஆவின்பால்-கோசலம் வகைக்குப் பதக்குவிட்டு ஒருநாள்காய்ச்சிக்குறுகிவரும்போது பனிரெண்டுபலவெல்லத்தைக்கரைத்துக் காய்ச்சிப் பாகுப்பருவத்தில் திரிகடுகு-வெள்ளுள்ளிக்- காந்தம் - சீனக்காரம்-வெங்காரம்-வெடியுப்பு-சவுக்காரம்-கரியசீரகம் - இந்துப்பு வகைக்குவிராகனிடை(க கெந்தகம்-வாளம் வகைக்குவிராகனிடை (௨) இவைகளை அரைக்காற்படி கள்ளிப்பாலலாட்டிப் போட்டுக்கிண்டி ஆவினெய்-விளக்கெண்ணெய் வகைக்குப்படி(க) விட்டு நீரில்லாமற் பதமாய்க்காய்ச்சி நெல்லுக்குள் பத்துநாள் வைத்தெடுத்து ஒருசுண்டைக்காய்ப் பிரமாணம் வெல்லத்திற்பொதிந்து சாப்பிட்டு வரத்தீரும்.

ஐம்பதுவரிக் குமட்டிக்காயை யிடித்துப்பிழிந்தசாற்றில் கல்லுப்பு படி(க)வெடியுப்பு-வளையலுப்பு-இந்துப்பு-காந்தம்- சுக்கு-திப்பிலி-வெள்ளுள்ளி-வகைக்குப்பலம்(௨)பெருங்காயம்பலம்(வ)வாளம்-சாதிலிங்கம் வகைக்குப்பலம்(க)பொடித்துப்போட்டு இலைக்கள்ளி பால்படி(க)கூடவிட்டுக்காய்ச்சி மெழுகுபதத்திலெடுத்துநாளொன்றுக்கு ஒருவிராகனிடை வீதம்கொடுத்து உப்புப் புளி நீக்கி நீர்க்காஞ்சி கொள்ளத்தீரும்.

ஒருபலஇலுப்பையரப்பையிடித்துச் சட்டியிலிட்டுமயில்நிறமாகவறுத்துக்கொண்டு அன்னபேதி-கடுகுரோகணி - குருசாணியோமம் வகைக்குப்பலம்-கால்வீதம் ஒருபாத்திரத்திற்போட்டு அதில்பிரண்டை-மேனி-தைவேளை இவைகளின்சாறு வகைக்குப்படி(௨)விட்டு நவியிலுலர்த்தி யிடித்து அரப்புத்தூளுடன் கலந்து அத்துடன் ஒருபலவெல்லஞ்சேர்த்து மெழுகுபோலுருட்டிவைத்துக்கொண்டு வேளையொன்றுக்கு ஒருபுன்னைக்காய்ப்பிரமாணம் சாப்பிட்டுவர பெருவயிறு குன்மம் பீலிகைதீரும்.

பேய்ப்பீர்க்காயை யிடித்துப்பிழிந்தசாறு பதக்கில்பெருங்காய

ம்-கழஞ்சு(க)பொடித்துப்போட்டுக் காய்ச்சிக்குழப்புபோல்வற்றவைத்துக்கல்வத்திட்டு மெழுகுபோலரைத்து கொட்டைப்பாக்குப்பிரமாணமாக உருட்டிவைத்துக்கொண்டு வேளையொன்றுக்கு ஒருண்டைவீதம் சாப்பிட்டுவரத்தீரும்.

நீர்வற்றினதேங்காய்க்குள் லிங்கம்விராகனிடை(௬) கெந்திவிராகனிடை(வ)பொடித்து ஒருசிரங்கை கள்ளிப்பாலடைத்து அதற்கு மூன்றுசீலைமண்செய்து மூன்றுநாட்காயப்போட்டு எழுஎருவிற்புடம்போட்டுச் சிரட்டைநீக்கித் தாழைத்தலைமுடிச்சில்வெட்டி இலையைத்தள்ளி முடிச்சையெடுத்து மேற்றோலியைச்சீவி உட்பருப்பை வில்லைவில்லையாய் நறுக்கி சற்றுநேரம் ரவியிற்காயவைத்து இதை முன்மருந்துக்குப் பாதிசேர்த்து ஒன்றாயிடித்துச் சற்றுநேரம் ரவியில்வைக்க லேகியமாகும் அதில்சுண்டைக்காய்ப்பிரமாணம் கொள்ளபேதிக்கும் அதிகப்பட்டால்தண்ணீரிற் பழச்சாறுபிழிந்து கொடுக்கநிற்கும் கவுசிகெண்டை பெருவயிறு பாண்டு பாரிசவாயு பக்கவாயு குன்மந்தீரும்.

ஒருபடி சிற்றாமணக்கெண்ணெயில் கொல்லங்கோவைக்கிழங்கு சுருள்ளி-வெள்ளறுகு வகைக்குப்பலம்(உ)வீத மிருத்துப்போட்டு மூன்றுநாள்வரை ரவியில்வைத்து நாலாநாள் காய்ச்சிவடித்து வேளையொன்றுக்கு ஒருகரண்டிவீதம் சாப்பிட்டுவர் கெண்டைபெருவயிறு குன்மம் நீரும்.

கெந்தி-வெடியுப்பு-இந்துப்பு-சவுக்காரம்-சீனம்- பெருங்காயம் வகைக்குப்பலம் கால் வீதம்பொடித்து எலுமிச்சம்பழச் சாற்றில் விரவி மூன்றுநாட் காயவைத்து மெழுகுபோலரைத்துக்கொண்டு வேளையொன்றுக்கு ஒருபணவிடைவீதம் தேனில்மத்தித்து(௰க) வேளைகொடுக்க கவுசி-குன்மம்-வெடியுப்புப்பாவை-சோகைதீரும்

மூன்றுபடி ஆவினீரில்பஞ்சலவணம் வகைக்குப்பலம் (க) வீதம் பொடித்துப்போட்டுக்காய்ச்சி வற்றவைத்து அப்பால் பேய்க்குமட்டிக்காய்ச் சாறுவிட்டு வற்றவைத்து மெழுகுபோலரைத்து நாளொன்றுக்கு சுண்டைக்காய்ப்பிரமாணஞ் சாப்பிட்டுவர உதரரோகங்கள் தீரும்

வெள்ளுள்ளித்தயிலம்-இஞ்சிச்சாறு-திருகுகள்ளிப்பால்கொள்ளவித்த தண்ணீர் முடக்கொத்தான்சாறு வகைக்குப்படி (வ) நல்லெண்ணெய்படி(க)ஒன்றாய்க்கலந்து அதில் இந்துப்பு-சிவதை-செவ்வள்ளிக்கொடி-கடுகு-நிலவாகைவேர்ப்பட்டை வகைக்குவிராகனிடை மூன்றுவீத மரைத்துப்போட்டுக்காய்ச்சி வைத்துக்கொண்டு வேளை ஒன்றுக்குஒருகரண்டிவீதஞ்சாப்பிட்டுவர கெண்டை குன்மந்தீரும்

பெருங்காயம்-இந்துப்பு-திப்பிலி வகைக்கு விராகனிடை (க௨)

கருஞ்சீரகம்-வசம்பு-கோஷ்டம் வகைக்குவிராகனிடை(சு)வெங்காரம்-வெள்ளுள்ளி-ஓமம்-சுக்கு வகைக்குவிராகனிடை(ய)முருக்குளருக்கு-வேலிப்பருத்தி இவைகளின் வேர்ப்பட்டை வகைக்குவிராகனிடை(உய) இவைகளைக் குப்பைமேனிச்சாற்றால் மயனமாயொருநாளாட்டி காற்படி கொடிக்கள்ளிப்பாலிற் கரைத்துக் காய்ச்சிக் கிண்டிவைத்துக்கொண்டு நாளொன்றுக்கு ஒருசுண்டைக்காய்ப்பிரமாணம் சாப்பிட்டுவர உதரரோகங்கள் தீரும்.

பாக்கு-கடுக்காய் வகைக்குப்பலம்(ரு)சிவதைபலம்(சு)மிளகாய்பலம்(ங)சுக்கு-திப்பிலி-காயம்-கடுகு-இந்துப்பு-ஓமம்- அதிவிடையம்-அரத்தை வகைக்குப்பலம்(உ)காந்தம்-அரப்பொடி கொடுவேலிவேர்-திப்பிலிமூலம்வகைக்குப்பலம்(ச)இவைகளைச் சூரணஞ்செய்து திரிகடிப்பிரமாணம் இளநீரில்மண்டலங்கொள்ள மகோதரமுதலான உதரரோகங்கள்தீரும்.

மூன்று முற்றினதேங்காயைப் பால்பிழிந்து அதில்நேர்வாளப்பருப்பு-௱-ரசகர்ப்பூரம் கழஞ்சு-க-வெள்ளைப்பாஷாணம் கழஞ்சு-½-ஆவின்பால்-கள்ளிப்பால் வகைக்குப்படி-வ-கூடவிட்டுக்காய்ச்சிநெய்யைவடித்துஇரண்டுகாசிடைகொடுக்கமேற்படிரோகங்கள்தீரும்,

கொப்பரோகத்தில்சொல்லிய போக்கு மட்டிக்காய் பிரயோகங்கள் இந்த உதரரோகங்களுக்கும் உபயோகப்படும்.

உதரரோகப்படலம்-முற்றிற்று.

சிவமயம்.

பாண்டுரோகப்படலம்.

அதாவது இரத்தம்கெட்டு பலவாறுனரோகம் சம்பவித்தலாம்.

மேற்படி வியாதியின் குணம்.

தேகம்பசியநிறமாய் பளபளத்து முகங்குளுப்பையிட்டுஇருவிழியும்நீலநிறமாய்இடுப்புக்கனத்து நீர்பொன்னிறமாயிறங்கினல்பாண்டின்குணமென்றும் தேகம்வெந்தனைத்து நெஞ்சிற்குத்தல் துடிஇருமலிளைப்பு-நடக்கற்றிகைப்பு-எய்ப்பு-கிறுகிறுப்புத் தோன்றிடிற் பித்தபாண்டென்றும் அதுமுற்றினல்நாளுக்குநாள்சரீரம்வற்றிதலைவலி அரோசியம் குரல்கம்மல்வயிற்றுக்கடுப்பு உளைவு கைகால்நாவில்வெடியுப்பு-வாயாலிரத்தங்கக்கல் முதலான வேதனைகளுண்டாகுமென்றும்உடல்வெளுத்தனைத்துஇடுப்புளைந்து அன்னங்குறைந்து அபானஞ்சுருக்கிமலம்வரண்டுபலங்குறைந்துநகக்கண்முகம்மலம் நீர்மஞ்சணித்தால் மூலபித்தபாண்டென்றும் உடல்காய்ந்து அனை

த்துவெளுத்துப்பலங்குறைந்துகைகாலோய்ந்துசூலைமேற்கொண்டு அன்னஞ்சுருங்கினால்மூலபாண்டென்றும்தாகம்பசிநீங்கிச்சரீரம் கண்உதடு-நாவு-நீர்மலம்-தன்னிறங்கெட்டுக்கருகி-வயிறுபொருமிவிரோசிக்கும்-புறங்கால்வீங்கிக்கைகாலோய்ந்தால் -வாதபாண்டென்றும்-உடல்வெளுத்து-ஒருபக்கம்வீங்கிவற்றி- கண்ணிலிரத்தம்வற்றிவெளுப்பேறி அசதிதாகம்-சிரோபாரம் - அன்னத்துவேசங்கண்டுவாயுவிஷம்போலேறினால்- விஷபாண்டென்றும்சொல்லப்பட்டிருக்கின்றன.

நிவர்த்தி.

முப்புரமெரித்தான்சமூலம்- மூக்கரைச்சாரணைவேர்-நெருஞ்சிசமூல, நீர்-முள்ளியிலை-வ்ழியிலைமுசுட்டையிலை வகைக்குப்பிடி-௩-விளாங்கிய-கடுக்காய்(௨௧)களிப்பாக்கு(௨௰)இரும்புக்கிட்டம்-வெள்ளைப்பூடு-வகைக்குப்பலம்(௧)அரிசிசிவதைகடுகுரோகணி - இந்துப்பு-இஞ்சிவகைக்குப்பலம்-௩-இவைகளைச்சிதைத்து - பதக்குத்தண்ணீரிற்போட்டு இரண்டுபடியாய் வற்றவைத்து அடைகஷாயமாய் வைத்துக்கொண்டுவேளையொன்றுக்குக்காற்படிவீதம்மூன்றுநாளாறுபோதுகொடுக்கபாண்டு விஷபாண்டு-முதலான-எவ்வகைவீக்கமுந்தீரும்

சங்குநெருஞ்சி-சத்திச்சாரணைகோவை-நீர்முள்ளி-திரிபலை-வேப்பந்தோல்பழங்கிட்டம் இரும்புமணலிபிரமிசுரைக்கொடி-ஈருள்ளிபங்கம்பாளைசெங்கத்தாரி - சிறுகுருஞ்சாவன நெத்துமயிர்மாலைவகைக்குப்பலம்(௬)வீதஞ்சிதைத்து நாலுபடிகோசலத்திற்போட்டு நாலுபடிபழங்காடியுங்கூடவிட்டு ஒருபடியாய்வற்றவைத்துக்கொண்டுநாளொன்றிற்குக்காற்படிவீதம் மூன்றுநாட்கொடுக்க பாண்டுமுதலானஎவ்வகைவீக்கமுந்தீரும்;

நீர்முள்ளிகீழ்க்காய்நெல்லி வீழிவேர்-கோவைத்தண்டு- பூவரசம்பட்டை கையாந்தகரைசெந்தொட்டிவேர்-சிறுபூளைவேர்-நல்வற்றுளிர்நெருஞ்சிவேர்-சிறுகீரைவேர்நிலவாகை-உசிலம்பட்டை- வகைக்குப்பலம்(௬)கடுக்காய்கடுகுரோகணிகருஞ்சீரகம் காட்டுச்சீரகம்திப்பிலிவகைக்கு விராகனிடை(௬)இவைகளையிடித்து- ஆறுபங்குசெய்துநாளொன்றுக்கு ஒருபங்கில் நாலுபடிசலம்விட்டு- அரைப்படியாய்வற்றவைத்து வேளையொன்றுக்குக்காற்படிவீதம் - கொடுக்கவும் இந்தப்படிஆறுநாட்கொடுக்க எவ்வகைவீக்கமும் வயிற்றுப்பொருமலுந்தீரும்-உப்புப்புளி-நீக்கிப்-பத்தியங்கொள்ளவும்.

சுடுதூரத்தியிலைச்சாறு-தேங்காய்ப்பால்-வகைக்குப்படி- அரிக்கால்வீதம்-ஒன்றாய்க்கலந்து வேளையொன்றுக்குக் காற்படிவீதம்ஏழுநாட்சாப்பிட்டுபாசிப்பயறும் -தேங்காயுங்கறிசெய்துகொள்ள பாண்டுவிஷபாண்டுந்தீரும்.

பொற்றலைக்கரிப்பான்-நெருஞ்சி-வகைக்குச்சாறுபடி (௨) சிறுகீரை-பொடுதலை-கீழ்க்காய்நெல்லி -சிறுசெருப்படை - வகைக்குச்சாறுபடிநவ்வல் கருங்காலி அத்தியிவைகளின்பட்டை- தென்னம்பூ-மஞ்சள்வகைக்குஒருபலமிடித்துத் தண்ணீரிற்போட்டு வற்றவைத்தகஷாயம்படி(௨)மிளகுமிளகரணைவேர் அவிரிசிற்றாமுட்டி -பேராமுட்டிவிலாமிச்சுவகைக்குப்பலம் மூன்றுவீதமிடித்துத் - தண்ணீரிற்போட்டுவற்றவைத்தகஷாயம்படி(௨) ஆவின்பால்படி (௪) இவைகளைக்கலந்து கருப்புக்கட்டிவெல்லம்வகைக்குப்பலம்(௮) கலாத்துக்காய்ச்சிப் பாகுசெய்துசீரகம்கிராம்பு ஏலம்சாதிக்காய் சாதிப்பத்திரிஓமம் குருசாணிஓமம்சிறுநாகப்பூ கற்கடகச்சிங்கி கோஷ்டம்அக்கிராகாரம் அதிமதுரம்தாளிசப்பத்திரி-திரிகடுகு-திரிபலாதிவகைக்குஒருபலவீதஞ் சூரணித்துத்தூவிக்கிண்டி ஆவிநெய்படி(௭) தேன்படி-௧-கூடவிட்டு லேகியஞ்செய்து திரிலோகசெந்தூரம் மண்டூரசெந்தூரம் - வகைக்குப்பலம்-௧-போட்டுப்பிசைந்துகொண்டு வேளைஒன்றுக்குப் புன்னைக்காய்ப்பிரமாணஞ்- சாப்பிட்டுவர சகலபாண்டுவீக்கம்கிராணி அரோசியந்தீரும்.

பொற்றலைக்கரிப்பான்சாறு-பெருந்தும்பைச்சாறு தென்னைகமுகு இவைகளின்பூவையிடித்துப் -பிழிந்தசாறுவகைக்குப்படி-௧-பொடுதலை எலுமிச்சம்பழம்சிறுகீரை நெல்லிக்காய் சிறுபுள்ளடிநெரிஞ்சிஇஞ்சிஇவைகளின்சாறுவகைக்குப்படி-௭-இளநீர்படி(௰)நொச்சிவிலாமிச்சு மரட்கிழங்குபிரண்டை நிலவாகைசித்திரமூலம் நன்னாரிகீழ்க்காய்நெல்லிமலைதாங்கி- இவைகளின்மூலம்பெருமரத்துப்பட்டை கடுக்காய்மண்டூரம்-வில்வப்பழத்தோடு வகைக்குப்பலம்-௧-வீதம்இடித்து-௨௪ படிதண்ணீரிற்போட்டு -வற்றவைத்தகஷாயம்படி௪-ஒன்றாய்க்கலந்துகருப்புக்கட்டிவெல்லம் வகைக்குப்பலம் (௮)சிதைத்துப்போட்டுக்காய்ச்சிக் குறுகிவரும்போது திரிகடுகுஓமம்மஞ்சள்கீழ்க்காய் நெல்லிவேர்சிறுதேக்கு சிற்றரத்தைகற்கடகச்சிங்கி. சடாமாஞ்சி ஏலம்சிறுநாகப்பூபெருஞ்சீரகம் பொரிகாரம்சீரகம்மதுரம்சாதிக்காய் வால்மிளகு பேரீத்தங்காய்தாளிசபத்திரி சாதிப்பத்திரி-கிராம்புகருவாப்பட்டை வகைக்குக்கழஞ்சு-௬-வீதம் இரவியிலுலர்த்தி-இடித்துவடிகட்டின சூரணத்தையும் - கோஷ்டம் - மாங்கொட்டைப்பருப்பு அத்திப்பிஞ்சு இவைகள்வகைக்குப்பலம்-௧-வீதம்நெய்விட்டு- வெதுப்பிப்பொடித்தசூரணத்தையும் தூவிக்கிண்டிநெய்படி-௨-தேன்படி-௧-கூடவிட்டு மெழுகுபதமாய்லேகியஞ்செய்துவேளையொன்றுக் - கொட்டைப்பாக்குப்பிரமாணத்தில் திரிலோகம்-அப்பிரகம் காந்தம் அயம் இவைகளின்செந்தூரம் வகைக்குஒருபணவிடைவீதம்-வைத்து அரைமண்டலங்கொள்ள சகலபாண்டுசோகைகாமாலைகிருணிதீரும்.

எலுமிச்சம்பழம்- பொற்றலைக்கரிப்பான்-நெல்லிக்காய் பேய்ப்புடல்-பூசுணை-சுக்கை கிழ்க்காய் நெல்லிஆவின்பால், வகைக்குப்படி க-சீனிபலம்-ஐந்து-ஒன்றாய்விட்டுக்காய்ச்சி குறுகிவரும்போது கொடுவேலி-சீரகம்-திரிகடுகு திரிபலை இவைகளின்சூரணம் வகைக்குப்பலம்-க-தூவிக்கிண்டி ஆவினெய்படி-உ-தேன்படி-வ - விட்டுமெழுகுபதமாய்லேகியஞ்செய்து வேளையொன்றுக்குக் கொட்டைப்பாக்குப்பிரமாணத்திற் காந்தசெந்தூரம் அயசெந்தூரம்வைத்து அரைமண்டலஞ்சாப்பிட்டு ஒருபடி ஆவினெய்யில்ஒருபலகொடுவேலிவேர்ப்பட்டையை ஆவின்பாலிலு மூன்றுபல - திருப்பலையமுலைப்பாலிலுரைத்துப்போட்டுக்காய்ச்சிவடித்து - வாரத்துக்கிரண்டுமுறை ஸ்நானஞ்செய்துவர - விஷபாண்டு-பித்தகாமாலை குன்மம் வாயு-வண்டுகடி தீரும்.

இருபத்தஞ்சுபல கரிப்பானைச் சிதைத்துப் பதினாறுபடிதண்ணீரிற்போட்டு ஒருபடியாய்வற்றவைத்து வடித்தகஷாயத்தையும்(உ) பலமிளகைச்சிதைத்து -அ-படி தண்ணீரிற்போட்டுஒருபடியாய்வற்றவைத்தகஷாயத்தையும் ஒன்றாய்க்கலந்து அதில் சீனிபலம்-எ-போட்டுப்பாகுசெய்துவைக்கொன்றைப்பூ புளியாரைசமூலம் தூதுளையிலைநாராகரந்தையிலை பொற்றலைக்கரிப்பான் வகைக்குப்பலம்-க-திரிகடுகுமல்லி-சீரகம்-கருஞ்சீரகம்-சடாமாஞ்சில் வெப்பாலையரிசி வகைக்குப்பலம்-வ-குங்குமப்பூ-கோரோசனையேலம் - வகைக்குவிராகனிடை-க-இவைகளைத் தனித்தனியே -யிடித்துவடிகட்டின சூரணத்தைத்தூவி ஆவினெய்படி அரிக்கால் கூடவிட்டுக்கிண்டி யிறக்கிஅயச்செந்தூரம் மண்டூரச்செந்தூரம் வகைக்குப்பலம்-க-போட்டுப்பிசைந்துவேளையொன்றுக்கு ஒருகொட்டைப்பாக்குப்பிரமாணம்சாப்பிடத்தீரு .

பேய்க்கொமட்டிக்குழம்பு:

பேய்க்கொமட்டிக் காய்ச்சாறுபடி-க-காயம்விராகனிடை-ய-கடுகுரோகணிகருஞ்சீரகம் வால்மிளகு-இந்துப்பு-வெங்காரம் -வகைக்குவிராகனிடை(உ)பேய்க்கொமட்டிக்காய்ச்சாற்றைக் குழம்பாய்க்காய்ச்சிக் கல்வத்திட்டு மற்றமருந்துகளையும் பொடித்துப்போட்டு அதைச்சிமிளில்வைத்துக்கொண்டு - குன்றியிடை பனைவெல்லத்திற்பொதிந்து கொடுக்கவிரோசனமாகி வாதம்-அய-ம்-வாயு அஷ்டகுன்மம்-சூலை-கை-கால்முடக்கும்-தீரும்மோரசனங்கொள்ளவும்.

ஒருபடிபேய்க்குமட்டிக்காய்ச்சாற்றைக் குழம்புபோற்காய்ச்சிக் கல்வத்திட்டு அதில்கருஞ்சீரகம் சுத்திசெய்தநேர்வாளப்பருப்புகடுகுரோகணிகடுக்காய் வெங்காரம் இந்துப்புகாயம் திப்பிலிவகைக்குக்கழஞ்சு-க-கருப்புக்கட்டிக்கழஞ்சு-ரு - மயனமாய்ப்பொடித்துப்போட்டு அதைத்துச்சிமிளில்வைத்துக்கொண்டு - குன்றியிடைபனை

வெல்லத்திலிட விரோசனமாகிகவுசி-கெண்டை - அகுவைவெப்புப் பாவை பெருவயிறுமகோதரம் - பீலிகைஉளைமாந்தபுரநீர்க்கோவை சோகைகுன்மம்வலிவீக்கம்வாயுதீரும் குளிர்ந்தசலத்திற்குளித்துமோரசனஞ்செய்யவும்.

நாரத்தங்காய்க்குழம்பு.

கச்சுநாரத்தங்காய்ச்சாறுபடி(ஞ)காடிபடி (உ) ஒன்றாய்க்கலந்து அதில் துருவுள்ளஜம்பதுஇரும்பைப்போட்டு எட்டுநாளூறவைத்து இரும்பையெடுத்துப் போட்டுகுப்பைமேனி அவுரிசாரணைகையாந்தகரைபொன்னாங்காணிபிரமிவகைக்குச்சாறுபடி-உ-ஒன்றாய்விட்டு வெள்ளுள்ளி சுக்குகடுக்காய சதகுப்பைஓமம் நற்சீரகம் திப்பிலிகடுகுகழச்சிப்பருப்பு கச்சோலம் - அதிமதுரம்மிளகு அதிவிடையம் நெல்லிமுள்ளிதான்றிக்காய் சாத்திரவேதி-ஏலம்-இந்துப்பு -வெடியுப்புசாரணைவேர் குருந்தொட்டிவேர் - வகைக்குப்பலம்-க-சவுக்காரம்பலம்-ங-அரப்பொடிகிட்டம் வகைக்குப்பலம் - உ-கடுக்காய்-சமபெருங்காயம்பலம்-வ-இவைகளைமேற்படி சாறுகளைத்துப்போட்டுக்காய்ச்சிக் குழம்புப்பருவத்தில்நறுநெயதேங்காய்நெய்நல்லெண்ணெய் வகைக்குப்படி-உ - விட்டுக்குழம்புபோற்கிண்டி வேளைக்குஒருபாக்களவு மண்டலஞ்சாப்பிட்டுமோர்குடிக்க நீர்க்கட்டுமலக்கட்டு நீங்கும்மகோதரம்பெருவயிறு நீர்க்கோர்வைவாயுத்திரட்சிஅகுவைசோகைப்பாண்டு காமாலைகுளப்பைவயிறுவிப்புருதி சூலைவாயுகுன்மம் வெப்புபாவை காச்சக்கட்டிகவுசிதீரும்.

நவச்சாரக்குழம்பு.

நவச்சாரத்தைக் கொடிக்கள்ளிப்பாலாலாட்டிச் சிமிளிலடைத்து கொண்டு குன்றியிடைகொடுக்க விரோசிக்கும்அதிகப்பட்டால் எலுமிச்சம்பழச்சாற்றைக்கொடுத்து மோரசனஞ்செய்யநிற்கும்பெருவயிறுவாயுக்கட்டி மகோதரம்தீராம்பல்தீரும்.

லிங்கக்குழம்பு சாதிலிங்கமவெங்காரம வகைக்குக்கழஞ்சு-க- சுத்திசெய்தவாளம - இந்துப்புவகைக்குக்கழஞ்சு-உ-சிற்றாமணக்கின்பருப்புகழஞ்சு-ச-மெழுகுபோலரைத்துக் குன்றியிடை இஞ்சிச்சாற்றிலாவதுமிளகுக்கஷாயத்திலாவது கருப்புக்கட்டியிலாவதுகொடுத்து ஒருநாழிகைக்குமேல் வெந்நீர்க்கொள்ள விரோசிக்கும குளிர்ந்ததண்ணீர்குடிக்கநிற்கும உப்பிட்டுக்கஞ்சிகொள்ளவும்.

லிங்கமவிராகனிடை-க-பொரிகாரமவிராகனிடை -உ- சுத்திசெய்புவாளம விராகனிடை-ச-ஆமணக்கின்பருப்பு விராகனிடை-அ-முப்புவிராகனிடை-க-இவைகளையரைத்துக் குன்றியிடை கொள்ளமலசலமீங்குமமோரசனஞ்செய்யவும.

சுத்திசெய்த லிங்கமபலம-க-ரசகர்ப்பூரம வெங்காரம வகைக்குப்பலம- உ-சுத்திசெய்ததோலுமுளை நீக்கினவாளமபலம-உ- சிற்று

மணக்கின்பருப்புபலம்-௧-இவைகளையரைத்துக் கொம்புச்சிமிளில்
வைத்துக்கொண்டு பணவிடைசித்திரமூலக்கஷாயத்தி லுண்ண கு
ழைமுடக்கும நொச்சிச்சாற்றில் -வாதசுரமும -கொடுவேலிகுப்பை
மேனிநத்தைச்சூரி இவைகளின் சாறுபடி- அரிக்கால்எண்ணெய்படி
(௨)ஒன்றாய்க்கலந்து காய்ச்சி வடித்தஎண்ணெயிற்கிரந்தியும- ஏலம
அதிமதுரம மல்லி-தக்கோலம அரத்தைகோஷ்டம -வாசக்குப்பல
ம்-௧-நாலுபடிதண்ணீர்விட்டுவற்றவைத்தகஷாயத்திற்கொள்ளதொ
ந்தசுரமுமவேலிப்பருத்தியிலைச்சாற்றில் திமிர்வாதமும கடுக்காய்ப்
பூகழற்பருப்புவெள்ளுள்ளிசுக்குவகைக்குவிராகனிடை-௧-அரைத்து
அரைப்படிதண்ணீரிற்போட்டு அரைக்காற்படியாய் வற்றவைத்த
கஷாயத்தில் வாயுவு-அண்டவாயுவும்- சங்கவேர்க்கஷாயத்தில்மேகச்
சொறி-விஷகருப்பனும்-நிலவாகைக்கஷாயத்தில்-வலி - குன்மமும்
செங்கடுக்காயும் - பூவரசம்பட்டையுஞ்சேர்த்துச்செய்த கஷாயத்
தில் ஊதுகாமாலையும்-சிறுசின்னிச்சாற்றில்செய்யான்கடியும்-படர்
தாமரையும்-காந்தைச்சாற்றில் கெர்ப்பரோகமும்- வெல்லத்திலிட
கிருமியும- நீங்கும்-வெந்நீர் ஆவின்மோர்கூட்டி அசனஞ்செய்யப்
பேதிநிற்கும் குளிர்ந்த தண்ணீர்குடித்தால் பேதியதிகப்படும் இல்
லாவிட்டால் வசம்பைச்சுட்டசாம்பலை சுடுதண்ணீரிற் கலக்கிக்கொ
டுக்கநிற்கும்:

எள்ளுப்பிரமாணம் வெற்றிலைச்சாற்றில் மத்தித்துக் கண்ணிலி
ட வலிப்பு-சன்னி-தோஷம்-தீரும்.

எருக்கம்பழுப்புச்சாற்றி லுரைத்துக் கண்ணிலிட விஷம்நீங்கும்
தைவேளைச்சாற்றிலிட எலிகடியும்தீரும்.

பெருங்காயம்-இந்துப்பு-கடுகுரோகணி-வெங்காரம் கருஞ்சீரக
ம்-திப்பிலி-சுத்திசெய்தஇரதம்-நாபிக்கிழங்கு - மனோசிலைதாரம் வ
கைக்கு விராகனிடை (௧)சுத்திசெய்தவாளப்பருப்பு விராகனிடை
(௰)காட்டாமணக்கின்முத்துப்பருப்பு விராகனிடை ஐந்து இவைக
ளையரைக்க மெழுகாகும் அதைச்சிமிளிலடைத்துக்கொண்டு பண
விடை இஞ்சிச்சுரசத்திலாவது-சுக்குக்காயத்திலாவது-குளிர்ச்சுரம்-
சன்னி-வாதசுரம்-அண்டவாதம்-வாயு-மூலவாயுவும் கடுக்காயில் இரு
மலும் கடுக்காய்க்கஷாயத்தில் பித்தசுரமும்-திப்பிலிகஷாயத்தில் சி
லேத்மசுரமும் கிராபயும்-மலைதாங்கிவேரும் சேர்த்துசெய்தகஷா
யத்தில் பேதி-சுரமும்-சுக்குமிளகுக் கஷாயத்தில்- குளிர்சுரமும் ஆ
வினெய்யில் இரத்தமூலமும் ஆவின்பாலிற்பாண்டும் மிளகுத்தூள்
வெள்ளுள்ளியில் மகோதரம்-பெருவயிறு-நீராமை-குன்மம்-தேன்
இஞ்சிச்சாற்றில் சன்னியும் சுக்கும்நொச்சியுஞ்சேர்ந்த கஷாயத்தி
ல் வாயுவும் சங்கங்குப்பிச்சாற்றிலாவது மிளகுபொரித்த பொரிகா
ரம்-கற்கண்டு அவைகளைப்பொடித்து நெய்யில் மத்தித்து அதிலா

வது-வெள்ளரிப்பிஞ்சிச்சாற்றிலாவது இளநீரிலாவது காடியிலாவது கொடுக்க நீர்க்கடுப்பு-நீர்ச்சிறுப்பு-கல்லடைப்பு வெள்ளுள்ளித் தயிலத்தில் அல்லது வெள்ளுள்ளிகழற்சி- மொசுமுசுக்கை கஷாயத்தில் சன்னி(௰௮)அரசங்கொழுந்தை ஆவின்பால் விட்டரைத்துக் கொட்டைப்பாக்குப் பிரமாணம் மூன்றுபங்குசெய்து நாளொன்றுக்கு ஒருபங்கிற்கொள்ள கெர்ப்பரோகமும் நவ்வற்பட்டையில் வெள்ளாட்டுப்பால்விட்டிடித்துப் பிழிந்தசாற்றில் சீரகப்பொடிதூவி அதிலாவது அல்லது நொச்சிவேர்-பங்கம்பாளைவேர்-சுக்கு-மிளகு இவைகளைச்சேர்த்துச்செய்த கஷாயத்திலாவது கொடுக்க சூதகவாயும்-வாயுவுகட்டியும் இஞ்சி-வெள்ளுள்ளி-முருங்கப்பட்டை - எருக்கம்வேர்-திருகள்ளிவேர்- புங்கம்வேர் இவைகளைத் தட்டிப்பிழிந்த கஷாயத்தில் உட்குத்து-புறவீச்சும்- கருப்புக்கட்டி- சித்தரமூலம் இவைகளைக் குப்பைமேனிச்சாற்றாலாட்டி தேன்விட்டுமத்தித்து அதிலாவது வில்வம்-லவங்கப்பத்திரி-கிராம்பு-அதிமதுரம்-தாளிசபத்திரி இவைகளைச்சேர்த்துச்செய்த கஷாயத்தில் வெண்ணெய்போட்டுக் கொடுக்க நெஞ்சுவலியும்-தாளியிலையும்-அவுரியிலையும் - வெண்ணெயுஞ்சேர்த்தரைத்து கொட்டைப்பாக்குப் பிரமாணத்தில் திரியகடியும்-நவ்வற்கொழுந்து- மிளகு-வெற்றிலையுஞ்சேர்த்தரைத்துக் கொட்டைப்பாக்குப் பிரமாணத்தில் நல்லரவின்விஷமும் ஈருள்ளிச்சாற்றில் உள்ளுக்குக்கொடுத்துக் கடிவாயில்தடவ தேட்கடியும்-வெல்லம்புகையூறல்-பேய்ப்பீர்க்கம்வித்து இவைகள் மேனிச்சாற்றாலரைத்துக் கொட்டைப்பாக்குப்பிரமாணத்தி வளலைகடியும் - நொச்சிச் சுரசத்தில் கடுகுப்பொடிதூவிக்கொடுக்க வீக்கம்- விஷபாகவீக்கம் காடியில்சத்தியெடுத்தாலும் ஆவின்பாலிலாவது வெள்ளாட்டுப்பாலிலாவது மூலவியாதியினால் சீதம்விழுதலும் கெர்ப்பவிப்புருதியும் கெர்ப்பரோகமும்-ஆவினெய்யில் மூலத்தினாலிரத்தம்விழுதலும் அத்தியிலைச் சாற்றில் மகோதரமும் - வெட்டையும் - விளாக்கெண்ணெயில் வாயுத்திரட்சியும் தேங்காய்ப்பாலிற்கழல்வாதமும் கருப்புக்கட்டியில் ஆனந்தவாயு-சுரமும் ஆவின்பாலிற் பித்தமும் பஞ்சமூலக்கஷாயத்தில் சன்னி (௰௩) ம் - இஞ்சிச்சுரசத்தில் குன்மமும்(௮) ம்-வெல்லத்தில் தாபசுரமும் நொச்சிச்சாற்றில் வாதசுரமும் கொத்தமல்லிக்கஷாயத்தில் பித்தசுரமும் தயிரில் வயிற்றுக்கடுப்பு மகருப்புக்கட்டியில்சூலை(௰௮) ம்-கிரந்தியும் ஆவின்தயிரில் சூதகவாயும், விலாமிச்சவேர்க்கஷாயத்தில் பித்தவெட்டையும் செம்மறியாட்டுப்பாலிலாவது சாம்பிராணித் தயிலத்திலாவது திரளாதபெண்ணுக்கு (௧) நாளும் திரிகடுகில் பலரோகங்களும் - வெற்றிலைச் சாற்றில் விஷமும் - சாதிக்காய்ப் பொடியில் அசாத்திய சுரமும் நீங்கும்,

மேற்படிகுழம்பைநல்லெண்ணெயில்மத்தித்துப்போடரணநீங்கும்
வேப்பெண்ணெயும் நல்லெண்ணெயுங்கலந்து அதிற் குழம்பை மத்தித்துப்போட ஆறுதாணம் ஆறும்.

சிலந்தி அரையாப்பு-பிளவைப்புற்றுக்கு உமிநீரிலாவது தேனிலாவது குழம்பைமத்தித்துப்போடத் தீரும்.

முலைப்பாலில் மத்தித்து நாசியில் நசியமுடதலையிடிநீங்கும். முலைப்பாலில் மேற்படி மருந்தைமத்தித்து தெரிகளிற்பூசநீங்கும்.

மரங்களிலேறிவிழுந்து மயங்கின பேர்களுக்கும் மண்ணீரிற் அமிழ்ந்து மயங்கினவர்களுக்கும் கடுகுப்பிரமாணம் முலைப்பாலில் மத்தித்துக் கண்ணிற்போடநீங்கும்.

குழம்பைத்துணியிற்றடவி புகைபிடிக்க மூகவாதசன்னி பற்கிட்டு விஷசுடி-கபாலவலி-பேய் பசாசு நீங்கும்,

வேப்பெண்ணெயிலாவது சுக்குக்கஷாயத்திலாவது எள்ளுப்பிரமாணம் உரைத்துக்கண்ணிலிட சன்னிநீங்கும்

கண்வீங்கி வேதனைக்கண்டால் சுடுசோறும் தயிரும் சந்தனமும் மத்தித்து கண்ணிற்கட்டநீங்கும்.

மேற்படிகுழம்பினுலும் மேற்கட்டிய மற்றவாளஞ்சேர்ந்த மாத்திரையினுலும்பேதியரிகரித்தால் அதற்குமாற்று வசம்பைச்சுட்டகரியையாவது ஒருபிடிமுருங்கைவீர்க்காவதுசஷாயஞ்செய்துகொடுத்தாலும் எலுமிச்சம்பழரசமும் ஆவின்பாலுங்கொடுத்தாலும் புளித்த மோர்காடியைக்குடித்தாலும்காட்டாமணக்கின்கொழுந்தைகாடியிலவித்து தொப்புளில்வைத்துகட்டினுலும் கோழிரசஞ்சாப்பிட்டாலும் பேதிநிற்கும். பாண்டுரோகப்படல முற்றிற்று.

சிவமயம்.

தயிலப்படலம்.

அதாவது பலபலமூலிகைகளாலும் பட்டைகளாலும்கற்வகைளாலும் பால்சேர்த்து எண்ணெயுடன் காய்ச்சுவதால் தயிலப்படலமெனப்பெயர்பெற்றது-கூ-திங்கள் பிரயோகிக்கலாம்.

சந்தனுதித்தயிலம்:

விருத்தம்.

தேர்ந்திடவேயிந்நாலின் வேதைமார்க்கம் தெரிவித்தாசித்தர்களானந்தங்கோடி, சேர்ந்திட்டதயிலங்கள் கைபாகந்தான் பேசினார் பலபேரும்பேசினர்கள், ஆர்ந்திட்டவாதிம ரட்சாமிர்தத்தை அவனியில்பண்டிதற்கு மற்றவர்க்கும், கூர்ந்திட்டேன்யிந்நூலே குருநூலாகக் கூறினர்மலயமுனி கூறினரே.

சந்தனத்தூள்பலம் (ய) நன்னாரி-நத்தச்சூரி - தண்ணீர்விட்டான் சாரடைஇருவேலி அமுக்கருசிந்திஇவைகளின்மூலம்முத்தக்காசுஅதிமதுரம்-செஞ்சந்தனம் - அதில்வில்வவேர்-தேவதாரம்- மதுரப்

கோஷ்டம்-லவங்கம்-லவங்கப்பத்திரி-கருவாய்ப்பட்டை- தக்கோலம் வகைக்குப்பலம்(௧)இவைகளையிடித்துத் தூணிநீரிற்போட்டு பதினாறிலொன்றாய் வற்றவைத்து வடித்து அதில் நல்லெண்ணெய்ப்படி(௪) மொசிமுசுக்கைச்சாறு-நெல்லிக்காய்ச்சாறு வகைக்குப்படி(௩) பொற்கையான்சாறுபடி(௨)ஒன்றாய்க்கலந்து வால்மிளகு - குக்கில் கோஷ்டம்-பச்சைபூலாக்கிழங்கு-அரத்தைசடாமாஞ்சில்-ஓமம்வெளிச்சிப்பிசின்-வேம்பாடம்பட்டை-ஏலம்-மல்லி-அபின்- சாதிக்காய் கருஞ்சீரகம்-கார்கோலரிசி-சாதிப்பத்திரி-மாசக்காய் - சண்பகப்பூ சிறுநாகப்பூ-கிராம்பு-கிளியூரம்பட்டை-நாகணம்-புனுகு வகைக்கு விராகனிடை(௨)ஆவின்பாலாலரைத்துப்போட்டுக்காயச்சிவடித்து முழுகிவர வாயுதந்தம்-மூத்திரநீர்ப்பாச்சல்-மண்டைநோய்- கபாலவலி-கண்ணோய்-செவிநோய்-வியர்வை-தாகம்-பீனிசம்- வரட்சி-ஈளை-சோகை-விஷபாகம்-குட்டம்-குன்மம்-தடிப்பு-க்ஷயம்- மேகம்-பிரமேகம்-கிறுகிறுப்பு-அபோசியம் நீங்கும்.

சந்தணத்தூள்பலம்(௨௰)விலாமிச்சுவேர்-வெட்டிவேர்- கோரைக்கிழங்கு-சீந்திற்தண்டு-சிற்றாமுட்டி-பேராமுட்டி-அமுக்கரா - நன்னாரி-பற்படகம் வகைக்குப்பலம்(௪)இவைகளையிடித்து இருதூணி நீரிற்போட்டு பதினாறிலொன்றாய் வற்றவைத்துவடித்தகஷாயத்தில் செவ்விளநீர்-பொன்னாங்காணிச்சாறு வகைக்குப்படி(௨) சிறுகீரை பொடுதலை-வல்லாரை-பொற்றலைக்கரிப்பான்-சிறுசின்னி- நெல்லிக்காய்-கர்ப்பூரவல்லி - தாமரைவிழுது இவைகளின்சாறு ஆவினெய்வகைக்குப்படி(௧)நல்லெண்ணெய்ப்படி(௩)ஆவின்பால்படி(௪) வெள்ளாட்டுப்பால்தயிர் தண்ணீர் வகைக்குப்படி (௨) கூடவிட்டு திரிகடுகு-திரிபலாதி-கஸ்தூரிமஞ்சள்-யேலம்-பூஞ்சாந்துப்பட்டை-கிளியூரம்பட்டை-லவங்கப்பட்டை-லவங்கப்பத்திரி-பச்சை பூலாக்கிழங்கு செவ்வல்லிக்கொடி-சண்பகப்பூ-சந்தணம்-கருஞ்சீரகம்- நற்சீரகம்-செங்கழுநீர்க்கிழங்கு-கோஷ்டம்-அக்கிராகாரம் - மந்திஷ்டிவேர்-கத்திரிமஞ்சள்-முத்தக்காசு- வலம்புரிக்காய் வகைக்குப்பலம்(௨)ஆவின்பாலாலரைத்துப்போட்டு காய்ச்சிவடித்து அதில்குங்குமப்பூ கோரோசனை புனுகு வகைக்குக்கழஞ்சு(௧)போட்டுத் தலைமுழுகிவர பிமேகம் நீரிழிவு நீர்ச்சிறுப்பு க்ஷயம் கண்ணெரிவுகண்புகைச்சல் கைகாலெரிவு புரமியம் கிரந்தி கற்றாழைநாற்றம் அஸ்திசுரம் அஸ்திவெட்டை பித்தம் மயக்கம் புண்புரைகள் புழுவெட்டு கண்டமாலை குஷ்டம் சொரி சிரங்கு தீரும்.

சிறுகீரை பொன்னாங்காணி ஆவரையிலை தாமரைக்கிழங்குதாமரைவிழுது இவைகளையோர்நிறையாயிடித்துப் பதக்குநீரிற்போட்டுநாலிலொன்றாய் வற்றவைத்துத் தயிர்போற்பிழிந்த சாறுபடி(௩) வெட்டிவேர் விலாமிச்சுவேர் சந்தணம்வகைக்குப்பலம்(௫)செங்கழுநீ

ர்க்கிழங்குபலம்-உ-இவைகளைசெவ்விளநீரால் மயனமாயாட்டிமுக்குறுணி சலத்திற்போட்டு எட்டொன்ருய் வற்றவைத்து வடித்தகஷாயம்படி-உவ-நல்லெண்ணெய்படி-க-ஒன்ருய்க்கலந்து லவங்கம் ஏலம்கோஷ்டம் சண்பகப்பூ - சாதிபத்திரி மஞ்சிட்டி சாதிக்காய்சடாமாஞ்சில் கிராம்பு சீரகம்கூகைநீர்வகைக்குக்கழஞ்சு (க) அரைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்து பச்சைகர்ப்பூரம் புனுகுசட்டம் கோரோசனைவகைக்குப்பணவிடை(உ)போட்டுத்தயிலமிட்டுச் சீய்க்காய்தேய்த்து ஸ்நானஞ்செய்துவர மேகமிருபதும்நீங்கும்.

செம்முள்ளித்தயிலம்.

செம்முள்ளி சமூலம்பலம் (உ)துணிநீரில்எட்டொன்ருய்க்கஷாயஞ்செய்து நல்லெண்ணெய்படி(உ) தாழைவிழுதுஏலம் கருஞ்சீரகம் கார்கோலரிசி - வகைக்குப்பலம்(க)அரைத்துச் சேர்த்துக்காய்ச்சிவடித்து முழுகிவர-காசம் - கண்ணீர்பாய்ச்சல்-அரையாப்பு-க்ஷயம்-ஈளைமந்தாரகாசம்-அண்டவாதம்-வீக்கம்-விஷவாதந்தீரும்

கொடுவேலித்தயிலம்;

கொடுவேலிவேர்பலம் க-பதக்குநீரிற்போட்டு எட்டொன்ருய்க்கஷாயஞ்செய்து கருஞ்சீரகம்-தாளிசபத்திரி தான்றிக்காய் வகைக்குப்பலம்(க)பால்விட்டரைத்து - நல்லெண்ணெய்படி (க) வெண்ணெய்புன்னைக்காய்ப்பிரமாணம் இவைகளைக்கஷாயத்தில் சேர்த்துப் பதமாய்க்காய்ச்சி வடித்து -முழுகிவர - ஆனந்தவாயுவாதம்-சிறுசொரி தினவுசிரங்கு குஷ்டம் அரையாப்பு கிரந்திசூலை புண்புரைகள்பிளவைவீக்கந்தீரும்.

நற்சீரகத்தயிலம்.

சீரகம்படி(உ)இடித்து பதக்கு நீரிற்போட்டு எட்டொன்ருய்க்கஷாயஞ்செய்து கார்கோலரிசிபலம்(உ)கற்கண்டு மிளகுகருவேப்பிலை சுருள்ளிவகைக்குப்பலம் (க) ஆவின்பாலாலரைத்து - நல்லெண்ணெய்ப்படி (க) கஷாயத்திற்சேர்த்துக்காய்ச்சிவடித்து முழுகிவர குன்மமெட்டுவாயுபத்திகுஷ்டம் தளுதணை குன்மவாயுவாந்திபித்தக்கிருகிருப்பு பாண்டு சோகை-உஷ்ணம்- கபாலச்சூடு கபநீர்க்கட்டுத்தீரும்.

கீழ்க்காய்நெல்லித்தயிலம்.

காற்றுலாம்கீழ்க்காய்நெல்லிசமூலத்தைதயிடித்துதுணிநீரிற்போட்டுஎட்டொன்ருய்வற்றவைத்துநல்லெண்ணெய்படி(உ)சர்க்கரைப

லம்(ரு)கடுக்காய்த்தோல்வேப்பம்பிசின்வகைக்குப்பலம்(க)ஆவின் பால்விட்டரைத்துக் கியாழத்தில்சேர்த்துக்காய்ச்சிவடித்து தலைமுழுகிவரபித்தக்கிறுகிறுப்பு வாய்நீரூறல்இரத்தபித்தம்எரிபித்தம்எய்ப்பிளைப்புகைகால்காந்தல் உடல்வெளுப்பு மற்றபித்தத்தி லெடுத்தசகலரோகமுந்தீரும்.

அகிற்கட்டைத்தயிலம்.

அகிற்கட்டைத்தூள்பலம்(ருய)தூணிநீரிற்போட்டுஎட்டொன்றுய்வற்றவைத்து வடித்து அதில்நல்லெண்ணெய்படி(க)கூடவிட்டுஅதிமதுரம் தான்றிக்காய் வகைக்குப்பலம்(க) ஆவின்பாலாலரைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்துமுழுகிவர நீர்த்தோஷம் மேகந்தீரும்.

வெட்டிவேர்த்தயிலம்,

வெட்டிவேர்த்தூள்பலம் (ய) பதக்குநீரிற்போட்டு எட்டொன்றுய்வற்றவைத்து நல்லெண்ணெய்படி(க)அதிமதுரம் ⊢ கருஞ்சீரகம் தேவதாரம் கடுக்காய் வகைக்குப்பலம்(உ) அரைத்துப்போட்டுக்காய்ச்சிமுழுகபீனிசம் மண்டைச்சூலை குஷ்டம் பிரநீர்க்கோர்வை கண்புகைச்சல் காதுமந்தம் தேகயெரிவு காந்தல்நீங்கும்,

இருவேலித்தயிலம்.

விலாமிச்சுவேர்பலம் (ரு) இடித்துத் தூணிநீரிற்போட்டு ஒருநாளூறவைத்து மறுநாள்எட்டொன்றுய் வற்றவைத்துவடித்தகஷாயத்தில்எள்ளெண்ணெய்படி (க)எலுமிச்சம்பழச்சாறு கையாந்தகரைச்சாறுதாளிச்சாறு வகைக்குப்படி(வ) கூடவிட்டுக்காய்ச்சிவடித்துமுழுகிவர ஊஷ்ணம்சிலேத்மம்பித்தம் கண்புகைச்சல்நீங்கும் தேகங்குளிரும்,

அறுகம்வேர்த்தயிலம்.

அறுகம்வேர்பலம் (ரு)இடித்துத் தூணிநீரிற்போட்டு எட்டொன்றுய்வற்றவைத்து வடித்த கஷாயத்தில்நல்லெண்ணெய்படி(க)கூடவிட்டு கோரக்கிழங்கு பூமிச்சர்க்கரைக்கிழங்கு அமுக்கறுக்கிழங்குவகைக்குப்பலம்(க)ஆவின்பாலா லரைத்துப்போட்டுக்காய்ச்சி வடித்துமுழுகிவர மூலச்சூடுகபாலச்சூடு மேககாங்கை பித்தம்-வாதம்அரிகிரந்திசூலைவயிறெரிவு நெஞ்சுநோய்தேகவரட்சி நீர்க்கடுப்புநீங்கும்தேகம்குளிரும்.

முன்போல்அறுகம்வேர்க்கஷாயஞ்செய்துஅதில்நல்லெண்ணெய்படி(க)வெட்டிவேர்-கார்கோல்வித்து கோஷ்டம்-வகைக்குப்பலம்(க) அரைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்து முழுகிவர மேற்படி வியாதிகள் நீங்கும்.

பொன்னுங்காணித்தயிலம்:

பொன்னுங்காணிச்சாறு-நல்லெண்ணெய் வகைக்குப்படி(க)ஒன்றாய்க்கலந்து அதில்-அதிமதுரம்-கருஞ்சீரகம் - செங்கழுநீர்க்கிழங்குகோஷ்டம் வகைக்குப்பலம்(க) ஆவின்பாலாலரைத்துப்போட்டுக்காய்ச்சிவடித்து-முழுகிவர உட்சுரம் ஊஷ்ணம்கைகால் உடம்பெரிவுகண்ணெரிவு கபாலசூடுதேகவடிவு குன்மம்நீங்கும்; பொன்னுங்காணிச்சாறுநல்லெண்ணெய் ஆவின்பால்வகைக்குப்படி(உ)பொற்றலைக்கரிப்பான்சாறு நெல்லிக்காய்ச்சாறு வகைக்குப்படி(க)ஒன்றாய்க்கலந்து அதிமதுரம்பலம்(உ)அரைத்துப்போட்டுக்காய்ச்சிவடித்து முழுகிவர மேற்காட்டிய ரோகங்கள்தீரும்.

வில்வாதித்தயிலம்:

வில்வவேர்விலாமிச்சவேர் கோரக்கிழங்கு வாழைக்கிழங்கு சீந்தி வகைக்குப்பலம்(அ)இவைகளையிடித்துப் - பதினறுபடிதண்ணீரிற்போட்டு இரண்டுபடியாய் வற்றவைத்து கியாழஞ்செய்துகொண்டு-கொம்பரக்குசேர்(உ)தூணிநீரிற்போட்டு எட்டொன்றாய்க்கியாழஞ்செய்துகொண்டு நல்லெண்ணெய்படிஐந்து ஆவின்பால்படி ஐந்து திரிகடுகுதிரிபலாதி கஸ்தூரிமதுரம்கோஷ்டம் கருஞ்சீரகம் நற்சீரகம் மஞ்சள்சந்தனம் - கிளியூரம்பட்டை - பூஞ்சாந்துப்பட்டை செவ்வள்ளி - லவங்கப்பட்டை - பச்சைபூலாக்கிழங்கு ஏலம்வகைக்குப்பலம்(க)ஆவின்பாலாலாட்டிக்கியாழத்திற் - கரைத்துமெழுகுபதமாய்வடித்து முழுகிவரமேகநீர்இருபதும் - பித்தம்நாற்பதுகுன்மமெட்டு சிரசுநோய்தீரும்.

வில்வவேர்பலம்(ய)இடித்துப்பதக்குநீரிற்போட்டுஎட்டொன்றாய்வற்றவைத்து வடித்த கியாழத்தில் நல்லெண்ணெய்படி (க) கூட்டிவிட்டு அதில்சந்தனம்பலம் (க) கடுக்காய் கஸ்தூரிமஞ்சள் ஏலம் வகைக்குப்பலம்(வ)வீதம் அரைத்துப்போட்டுக்காய்ச்சிவடித்து முழுகிவர பித்தம்தேககாந்தல் மேகம்கண்புகைச்சல் இருமல் இரத்தமூலம்-உட்சுரம்-வரட்சி-நீங்கும்,

குமரித்தயிலம்.

குமரிச்சாறுபடி (௨) ஆவின்பால்படி (௨) எள்ளெண்ணெய்படி (௨)திரிகடுகு கோஷ்டம் மாஞ்சில்திரிபலை சீரகம் மதுரம் பூச்சாந்துப்பட்டை ஏலம்பச்சைபூலா மூலம்லவங்கப்பத்திரி லவங்கப்பட்டை செவ்வள்ளி அக்கிராகாரம் கஸ்தூரிமஞ்சள் லவங்கம் கெந்தம் ரோகணிசண்பகப்பூ ஆனைத்திப்பிலி மந்திஷ்டி சோம்புமஞ்சள்வகைக்குப்பலம் (௨) ஆவின்பாலாலாட்டிக் கனாத்துப்பதமாய்க்காய்ச்சிவடித்து சீசாவிலடைத்து தானியத்துக்குள்வைத்து மூடிக்கால்மண்டலஞ்சென்றெடுத்து முழுகிவர சகலமேகமும் அஸ்திசுரம்பித்தவரட்சிகுன்மம் பாண்டுஉடல்வெளுப்புத்தீரும்.

கற்றாழஞ்சாறு செவ்விளநீர் வகைக்குப்படி (௪)பொற்கையான் நெல்லிக்காய்கரிசாலை எலுமிச்சம்பழம் இவைகளின்சாறு ஆவின்பால்-நல்லெண்ணெய் வகைக்குப்படி(௨) ஒன்றாய்க்கலந்து லவங்கம் சாதிக்காய்கோஷ்டம் தாமரைக்கிழங்கு சிறுநாகப்பூ வசவாசிவெட்டிவேர் அகில்லவங்கப்பத்திரி பச்சைக்கர்ப்பூரம் மதுரம்மஞ்சள் சிறுதேக்கு திப்பிலி வகைக்குக்கழஞ்சு (௧) அரைத்துப்போட்டுக்காய்ச்சிஸ்நானஞ்செய்ய சுரம்சயம்விக்கல்பித்தம்-ரணம்நேத்திரநோய்மூலம்வியர்வைதாகம் அரோசியம் விக்கல்பித்தம் ரணம்நேத்திரநோய் மூலம்வியர்வைதாகம் அரோசியம் கபாலச்சூடு தேககாந்தல்எரிவுநீங்கும்.

சகாதேவித்தயிலம்.

ஸ்ரீதேவியார் செங்கழுநீர் வல்லாரை-சிறுகீரை-பேய்மிரட்டிபொன்னாங்காணி சவுரிக்கொடி ஓரிலைத்தாமரை வகைக்குக்கால்தூக்கு வீதமிடித்துப்பதக்குநீரிற்போட்டு எட்டொன்றாய்வற்றவைத்து வடித்தகஷாயத்தில் நல்லெண்ணெய்படி (௨)கூடவிட்டு கோஷ்டம் லவங்கப்பட்டை லவங்கப்பத்திரி அரத்தை தேவதாரம் மதுரம்கச்சோலம் சண்பகப்பூமஞ்சிட்டி அகில்மரமஞ்சள் வகைக்குப்பலம்(௨) அரைத்துப்போட்டுக்காய்ச்சிவடித்துத் தலைமுழுகி உடம்பிற்பூசிவர தேகவலி சிரோபாரம் பாண்டுகாமாலை அஸ்திசுரம் வாதம் கடும்கைகாலெரிவு கண்ரோகந்தீரும்.

ஸ்ரீராசெங்கழுநீர்ச்சாறு ஆவினெய் வகைக்குப்படி (௧)ஒன்றாய்க்கலந்து அதில் ஏலம்மதுரம் சந்தனம் சிறுநாகப்பூவிலாமிச்சவேர்ஸ்ரீராசெங்கழுநீர்வேர் கோஷ்டம்கடுகுரோகணி லவங்கம் வகைக்குவிராகனிடை (௨)மேற்படிசாற்றால் அரைத்துப்போட்டுக்காய்ச்சிமுழு

கிவரசுரங்கள்-தேகளரிவு-காந்தல்-தலைபெரிவுநீங்குப் தேகத்தில் இர த்தம் ஊறும்.

கொம்பரக்குத்தயிலம்.

கொம்பரக்குப்பலம்(அ)தாணிநீரிற்போட்டுஎட்டொன்றாய்க்கி யாழஞ்செய்து வடித்துக்கொண்டு அதில்எள்ளெண்ணெய்படி-ஐந் து காடிபடி(உ)தயிர்தண்ணீர்படி(க)பால்படி-ஐந்து-சதகுப்பைக டுகுரோகணிகிளியூரம்பட்டை-பூஞ்சாந்துப்பட்டைபச்சைபூலாக் கிழங்கு-செவ்வள்ளிக்கிழங்கு-லவங்கப்பத்திரி- லவங்கப்பட்டை-மா ஞ்சில்-கோஷ்டம்-கஸ்தூரிமஞ்சள்-மதுரம்- கெந்தம் கருஞ்சீரகம் ஏலம் வகைக்குக்கழஞ்சு(உ)ஆவின்பாலாலாட்டிச் சேர்த்து மெழு குபதத்தில் வடித்து ஒன்றைவிட்டொருநாள்முழுகிவர பித்தவெட் டை-அஸ்திசுரம்-தலைமயக்கம்-வாயூறல்-சீதசுரம்-வெட்டை-கனசுர ம்-கனபாண்டு-தேகவெளுப்பு-சூலை- தழுவணை-காசம்-கற்றாழைநா ற்றந்தீரும்.

ஆமலகத்தயிலம்.

நெல்லிக்காய்ச்சாறு- பொன்னாங்காணிச்சாறு- குமரிச்சாறு-செ வ்விளநீர்-சிறுகீரைச்சாறு-ஆவின்பால் வகைக்குப்படி (உ) எள்ளெ ண்ணெய்படி(௬)மதுரம்-கோஷ்டம்-ஏலம்-குருசாணி-பச்சைபூலா க்கிழங்கு-கஸ்தூரிமஞ்சள்சடாமாஞ்சி-சீரகம்-சாதிப்பத்திரி-சாதிக் காய்-லவங்கப்பத்திரி-லவங்கப்பட்டை- திரிகடுகு- திரிபலாதி -பூஞ் சாந்து-சோம்பு-வால்மிளகு வகைக்குக்கழஞ்சு(௬) ஆவின்பாலாலா ட்டி எண்ணெயிற்சேர்த்துக் காய்ச்சிப் பதமாய்வடித்து முழுகிவ ர கண்காசம்-அந்திமாலை-நேத்திரநோய் தொண்ணூற்றாறும் பித்த வெட்டை-பித்தவாயு-அஸ்திவெட்டை-உடம்பெரிவு- கைகால்காந்த ல் ஊஷ்ணரோய் தீரும்.

கீழ்க்காய் நெல்லித்தயிலம்;

கீழ்க்காய்நெல்லி-சமூலம்துலாம் (வ) யிடித்துத்தாணிநீரிற்போ ட்டு எட்டொன்றாய்க் கியாழஞ்செய்து எள்ளெண்ணெய் ஆவின் பால் வகைக்குப்படி(உ)சீரகம்பலம்(உ)அரைத்துப்போட்டுக்காய் ச்சி மெழுகுபதமாய்வடித்துமுழுகிவர பித்தவெட்டை-மஞ்சட்கா மாலை-வாந்தி-தலைமயக்கம்-வாயூறல்-உட்சுரம் நடுக்கந்தீரும்.

ஆதண்டைத்தயிலம்.

ஆதண்டை-சங்கு- நொச்சி-எருக்கு-சிற்றாமுட்டி வகைக்குப்பல ம்-ய-இடித்துத் தாணிநீரிற்போட்டு எட்டொன்றாக்கி பெருக்கின்ப

ரூப்புச்சாறு-பழச்சாறு வகைக்குப்படி (௧) எள்ளெண்ணெய் படி (௧) வேப்பெண்ணெய்படி(௨)திரிகடுகு-ஓமம்-பூடு-வசம்பு ஏலம்-மஞ்சள்வகைக்குப்பலம்(௧) அரைத்துச்சேர்த்துக்காய்ச்சி முழுகிவர சிரசுச்சூலை-சூலைவாயு-வாதசூலை-திமிர்வாதம்-இரைப்பு-வயிற்றிலுள்ளவாயு- சிறுகடுப்பு-நேத்திரக்குத்து-சொரி-சிரங்கு-ரணங்கள்தீரும்.

சிறுசந்தனாதித்தயிலம்.

சந்தனம்-விலாமிச்சம்வேர் - ஆவரையின்பட்டை வகைக்குப்பலம் (௰) இடித்துத்தூணிநீரிற்போட்டு எட்டொன்றாய்வற்றவைத்து வடித்தகஷாயத்தில் நல்லெண்ணெய்படி(௧)கூடவிட்டு அதில் நன்னாரிவேர் பட்டைபலம்(௧) அரைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்து முழுகிவர மேகந்தீரும்-தேகமிறுகும்.

நல்லெண்ணெய்-ஆவின்பால் வகைக்குப்படி(௧) ஒன்றாய்க் கலந்து அதில் சந்தனத்தூள்பலம்(௨)திருமஞ்சனத்திரவியம்பலம் (வ) ஆவின்பாலாலரைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்து முழுகிவர பித்தமேகம்-உடம்பெரிவு-வெட்டை-கண்ணெரிகால்-காந்தல்நீங்கும்,

சங்கவேர்த்தயிலம்.

கால்துலாம் சங்கவேரையிடித்துத் தூணிநீரிற்போட்டு யெட்டொன்றாய்க் கியாழஞ்செய்து நல்லெண்ணெய்படி (௨) மிளகு-கருஞ்சீரகம்- ஏலம்- மாசக்காய் வகைக்குப்பலம்(௧) ஆவின்பாலாலரைத்துச்சேர்த்துக் காய்ச்சிவடித்து முழுகிவர குட்டம்- சொரி-சிரங்கு-கிரந்தி-சூலை-செங்கரப்பன்- வண்டுகடி -சில்விஷம்-க்ஷயம்-இருமல் தீரும்.

சங்கவேர்பட்டைபலம்-௬-இடித்துஎட்டுப்படி நீரிற்போட்டு ஒருபடியாய் வற்றவைத்த கஷாயத்தில் ஆவின்பால் இளநீர் நல்லெண்ணெய் வகைக்குப்படி-௧-கூடவிட்டு மிளகு விராகனிடை- ௰- பூலாக்கிழங்கு-சீரகம்- கஸ்தூரிமஞ்சள் வகைக்கு விராகனிடை ஐந்து அரைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்து முழுகிவர மேககாங்கை-சொரி மற்றமேகத்திலெடுத்த வியாதி-வாயுமுதலானரோகம்தீரும்

சங்கவேர்ப்பட்டைபலம் - ௰ - இடித்து யெட்டுபடிதண்ணீரிற்போட்டு ஒருபடியாய் வற்றவைத்ததில் நல்லெண்ணெய்படி-௧-கூடவிட்டு அதில் அழிஞ்சிவிரைப்பருப்பு-மிளகு- செங்கழுநீர்க்கிழங்கு-கோஷ்டம் வகைக்குப்பலம்-௧- ஆவின்பாலாலரைத்துப் போட்டுக்காய்ச்சி வடித்துமுழுகிவர-தலைப்புழுவெட்டு-தலைமயிருதிர்தல் இனவு செம்பட்டமயிர்மாறும்,

அசுவகெந்தித்தயிலம்.

அறுகம்வேர்பலம்(ம) தூதுளைவேர்-குருந்தொட்டிவேர்வகைக்குப்பலம்(அ)குருஞ்சாவேர்-சிறுவழுதலைவேர்-ஆவரைவேர் வகைக்குப்பலம்(சு)சீந்திற்கொடிபலம்ஐந்து- அமுக்கிருக்கிழங்குபலம்(ச) கோரக்கர் மூலிசாரணைவேர்வகைக்குப்பலம்(ரு)ஈருள்ளிபலம்(உ) இவைகளையிடித்துத் தூணிநீரிற்போட்டு எட்டொன்றாய் வற்றவைத்துவடித்தகஷாயத்தில்சீனிநிகர்ஆவிநெய்விட்டு அதில்தொலிநீக்கி வறுத்திடித்த இஞ்சித்தூள்பலம்(சு)சாதிப்பத்திரிபலம் (உ) சாதிக்காய்-அபின் வகைக்குப்பலம்(க)குருசாணியோமம்-வால்மிளகு-பச்சைசூலகநீர் வகைக்குக்கழஞ்சு உ)இவைகளை அரைத்துப்போட்டுக்காய்ச்சிவடித்து முழுகிவர கரப்பான்-சொறிசிரங்கு-ஆறுப்புண்-விஷகடி-பாண்டுபித்தம்-சூலைக்கட்டு நீங்கும் கண்தெளிவுண்டாகும் தேகமிறுகும்.

துளசித்தயிலம்.

துளசிச்சாறு- திருநீற்றுப்பச்சைச்சாறு - நல்லெண்ணெய் ஆவிநெய் வகைக்குப்படி(க)மேற்படிபால்படி (ச) சிற்றாமணக்கெண்ணெய்படி(உ)ஒன்றாய்க்கலந்து அதில் மஞ்சள்-மரமஞ்சள்- சுக்கு முத்தக்காசு-வெட்டிவேர்-விலாமிச்சவேர்-சீரகம்-அதிமதுரம்- கற்கடகசிங்கி-சன்னலவங்கப்பட்டை-வலம்புரிக்காய் - சாதிக்காய்-தக்கோலம்-சடாமாஞ்சில்-ஓமம்- பறங்கிப்பட்டை- சண்பகப்பூ-கசகசா-அதிவிடையம்-கடுகுரோகணி-பீதரோகணி-தேவதாரம்-சந்தணக்கட்டை-அபின்- சிறுநாகப்பூ வகைக்குவிராகனிடை (ரு)இவைகளை ஆவின்பாலாலரைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்துமுழுகிவர சயம் காசம்- பீனிசம்-குன்மம்-கிராணி-பாண்டுமெண்டையிடி-சூலை- காதுமந்தம்-கண்புகைச்சல்- தேகவலிநீங்கும்.

அயனவில்வாதித்தயிலம்.

அயனத்தின் வயிரச்சிராய்-வில்லைவேர் - சிறுகீரைவேர்-சிற்றாமுட்டிவேர்-சீந்திக்கொடி-அமுக்கருக்கிழங்கு-மிளகு-திரிபலை-நன்னாரிவேர் வகைக்குப்பலம் (அ) இடித்து யெட்டுமரக்கால் சலத்திற்போட்டு எட்டொன்றாய்வற்றவைத்துவடித்தகஷாயத்தில் ஆவினெய்-இளநீர்வகைக்குப்படி(ச)ஒன்றாய்க்கலந்துவிலாமிச்சவேர்-விளாவரிசி-சிற்றரத்தை-மஞ்சிட்டிவெட்டிவேர்- அதிமதுரம்-பச்சைவெப்பாலையரிசி-சந்தணம்-திரிகடுகுகர்ப்பூரம்-குக்கில்-கச்சோலம்-தேவதாரம்-சிறுநாகப்பூ-செஞ்சந்தணம்-சடாமாஞ்சில்-நறுக்குமூலம்

கோஷ்டம்-தேட்கொடுக்கு- திப்பிலிமூலம் வகைக்குக்கழஞ்சு (அ) ஆவின்பாலா லரைத்துக்கலக்கிக் காய்ச்சிவடித்து முழுகிவர ஈளை- இருமல்-கண்ணோய்-பித்தசன்னி-சலதோஷம்- மந்தம்-காச்சல்-பீனிசம்-செவியடைப்பு-வாயு-உதரவாயு- வாயுரோகம்- மண்டைச்சூலை தீரும்.

சுரநாசத்தயிலம்.

அரத்தை-அமுக்கராக்கிழங்கு- சதகுப்பை- கோஷ்டம்-மரமஞ்சள்-கொம்பரக்கு-திரிகடுகு-மதுரம்-திரிசாதம்-கடுகுரோகணி-மூத்தக்காசு வகைக்குக்கழஞ்சு(உ)இடித்து ஒருபடி நல்லெண்ணெயிற் போட்டுக்காய்ச்சிவடித்து முழுகிவர சுரம்-காந்தல்-வெப்பு-பழஞ்சுரம்-சுரத்தினாலுண்டாகும் பலபிணிகளும் நீங்கும்.

கரிப்பான்தயிலம்.

கரிப்பான்சாறு-நல்லெண்ணெய் வகைக்குப்படி (க) கற்றாழைஞ்சாறு - நெல்லிக்காய்ச்சாறு வகைக்குப்படி (வ) கஸ்தூரிமஞ்சள் சாதிக்காய் வகைக்குப்பலம் (க) ஆவின்பாலாலரைத்துச் சேர்த்துக் காய்ச்சி வடித்து முழுகிவர கண்ணோய்-தலைநோய்-செவிநோய்-பித்தம்-உஷ்ணம்-பீனிசம் தீரும்,

சம்பீரத்தயிலம்.

எலுமிச்சம்பழச்சாறுபடி(கூ)நல்லெண்ணெய்படி(க) கர்ப்பூரசலாசத்து-கல்நார்-அதிமதுரம்-அக்கிராகாரம்- லவங்கப்பத்திரி-சாத்திரவேதி-கோஷ்டம்-வாய்விளங்கம்- சாதிக்காய்- லவங்கப்பட்டை கருஞ்சீரகம்-நற்சீரகம்- கோரோசனை-பூலாக்கிழங்கு- மரமஞ்சள் வகைக்குப்பலம்(வ)அரைத்துப்போட்டுக்காய்ச்சி வடித்து ஸ்நானஞ்செய்து உள்ளுக்குஞ்சாப்பிட்டுவர மேகம்-பித்தம் - நச்சுவலி நீங்கும்,

கஞ்சா-அவுரி-புளிமகிழ் இவைகளினிலைச்சாறு எலுமிச்சு - நாரத்து-சங்கு இவைகளின்பழச்சாறு முத்தக்காசுகஷாயம் வகைக்குப்படி-க-நல்லெண்ணெய்படி(உ)ஒன்றாய்க்கலந் ததில் மதுரம் காட்டாத்திப்பூ கோஷ்டம்திரிபலை அழிஞ்சிவிரை தக்கோலம்ஜாதிக்காய் அகில் மிளகு சந்தனம் வெட்டிவேர் விலாமிச்சுவேர் பெருமரப்பட்டை வகைக்குப்பலம் (கூ) இவைகளை இரண்டுபடி ஆவின்பாலிலரைத்துக் கலக்கி கூடவிட்டுக்காய்ச்சி வடித்து முழுகிவர நேத்திரவியாதி பீனிசம் பொடுகு புழுவெட்டு புண் மற்றசிரசு வியாதிமேகரோகந்தீரும்.

வங்குமநீசத்தியிலம்,

கஞ்சாவிலைச்சாறு நல்லெண்ணெய்வகைக்குப்படி-க- ஒன்றாய்க் கலந்து அதில்மிளகுபலம்(உ)அரைத்துப்போட்டுக்காய்ச்சிவடித்து முழுகிவர சகலபீனிசமுந்தீரும்.

எட்டிக்கொழுந்தும் மிளகுந்தட்டிநல்லெண்ணெயிற்போட்டுக் காய்ச்சிவடித்து முழுகிவர தலைவலிநீங்கும்.

மிதிபாகல்தயிலம்.

மிதிபாகல்-கருக்குவாச்சி- துளசிநொச்சி இவைகளினிலைச்சாறு- எருக்கம்பழுப்புச்சாறு-ஆதளம்பழுப்புச்சாறு வகைக்குப்படி (வ) நல்லெண்ணெய்படி(க)ஒன்றாய்க்கலந்து அதில் திரிசாதம்- கருஞ்சீரகம்-நற்சீரகம்-மிளகு-அபின்-சுக்கு-அதிமதுரம்-அதிவிடையம்- சன்னிநாயகம் வகைக்குக்கழஞ்சு(க)தேவதாரம்-கழஞ்சு(அ)இவை களையரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்துமுழுகி வரத்தலையிடி-பீனிசம்-வாயு-கபாலவாய்வுதீரும்,

கரத்தொட்டித்தயிலம்:

கரத்தொட்டி-முசுமுசுக்கை-கரிப்பான்-அவரி-வெற்றிலை-நொச்சி காஞ்சிரை-கருஊமத்து-கஞ்சா-இவைகளின்கொழுந்துச்சாறு- எருக்கம்பழுப்புச்சாறுஇஞ்சிச்சாறுவகைக்குப்படி(வ) நல்லெண்ணெய்வெள்ளாட்டுப்பால்வகைக்குப்படி(கவ) இவைகளையொன்றாய்க்கலந்து பத்துநாள்ரவியில்வைத்திருந்து பதிநோராநாளில்திரிகடுகு- கோஷ்டம்-அக்கிராகராம்கருஞ்சீரகம் ஓமம்-குருசானியோமம்சாம்பிராணிபூலாக்கிழங்குவகைக்குவிராகனிடை(உ)வெள்ளாட்டுப்பாலாலரைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்து முழுகிவரமேகம்(உக)ம்- சகலபீனிசம்கபாலக்குத்து-க்ஷயம்-மேககாங்கையும் நீங்கும்.

சவுரித்தயிலம்,

ஆனைதந்தப்பொடிபலம்ஐந்து எட்டுப்படி தண்ணீரிற்போட்டு வற்றவைத்தகியாழம்படி(க)நல்லெண்ணெய்படி(க)சிவந்த ஆலமுகிழ்-சவுரிக்கொடி-அவுரிகையாந்தகரை இவைகளின்சாறு வகைக்குப்படி(வ)ஒன்றாய்க்கலந்து காய்ச்சிவடித்து சிரசிற்பதமிட்டு மயிர்கறுத்துவளரும்;

சவுரிபலம்(ஈ)இடித்துத்தணிரீற்போட்டு எட்டொன்றாய் வற்றவைத்து நல்லெண்ணெய்படி(க)கருஞ்சீரகம்பலம்(க)அதிவிடையம்-மரமஞ்சள் வகைக்குப்பலம்(உ)ஆவின்பாலா லரைத்துச்சேர்த்துக்காய்ச்சிமுழுகிவர குட்டம் - வாதகரப்பன்-கழலை காய்ப்பு கண்டவீக்கந்தீரும்:

வேங்கைத்தயிலம்,

வேங்கைப்பட்டைபலம்(௰)இடித்துமுன்போற் கியாழஞ்செய்து நல்லெண்ணெய்படி (௧) கூடவிட்டு விலாமிச்சம்வேர்- மிளகு-வெள்ளுள்ளி-நற்சீரகம் வகைக்குப்பலம்(௧) அரைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்து முழுகிவர வாதம்-சூலை-பித்தம்-பீனிசம் - மண்டையிடி-தேகவீக்கம் நீங்கும்,

வேப்பம்பட்டைத்தயிலம்.

நூறுவருடஞ்சென்ற வேப்பம்பட்டை துலாம் (வ) இடித்துமுன்போற்கியாழஞ்செய்து நல்லெண்ணெய் படி(௨)கூடவிட்டு ஏலம்பலம்(௨)இலந்தவேர்-பழம்பாசி-அக்கராகாரம் வகைக்குப்பலம் (௧)அரைத்துப்போட்டுக்காய்ச்சிவடித்துமுழுகிவரவாதம்-குட்டம் தேகக்கடுப்பு-செங்கரப்பன்-புண்புரைகள் சொறி சிரங்கு நீங்கும்

குருந்தொட்டித்தயிலம்:

குருந்தொட்டிவேர் துலாம் (வ) இடித்துத் தூணிநீரிற்போட்டு முன்போற்கியாழஞ்செய்து அதில் சுக்கு-மிளகு ஏலம் வகைக்குப் பலம்(௧)அரைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்து முழுகிவர வாதம். (௮௰)-ம்-தீரும்.

தயிலப்படலம்-முற்றிற்று.

உ

சிவமயம்.

ஊழிக்காற்றுப்படலம்.

அதாவது துற்கந்தங்களால் புலால் - கவிச்சி நாசிவழிகளால் பிரவேசித்து சிரோபாரத்தின் மயிர்க்கூச்சலினுல் இரத்தம்கெட்டுவிஷக்காற்றுப் படலமென வகுக்கப்பட்டது இது தொற்றுபிணியெனப்படும்:

விஷக்காற்றினுல் இரத்தமுறிந்து நீராகிக் கொம்பனென்றும்- குடற்படுவனென்றும்- அக்கரமென்றுஞ் சொல்லப்பட்ட மூன்றுவிதபேதியுண்டாகின்றன,

அவற்றுள் கொம்பனென்ற பேதிகண்டால் வாந்தி-பிராந்தி-குளிர்ச்சி-வியர்வை-தேகத்திற்கடுப்பு-உளைவு-நாவரட்சி-விக்கல்- வயிற்றுவலி-சன்னிதோன்றும் தேகமெல்லாம் பிசின்போலிருக்கும் நாடியடங்கும் முப்பதுநாழிகையிற்கொல்லும்:

குடற்படுவலிகண்டால் தாங்காதபேதி- காதடைப்பு - மூர்ச்சை அடிவயிற்றில் வலிமயமில்லாக்கழிச்சல்கண்டு சீதரத்தம்விழும்- நரம்பிழுக்கும்-உடல்குளிரும்-சத்துவிடும் நாள்மூன்றுசென்றால் சடமழியாது அக்கரம்கண்டால் சேறுபோல் பேதிகாணும் சோறுவிழும்தாகிக்கும்தேகங்குளிரும்நெஞ்சுமுதல்கைகால்கடுப்புக்காணும்

வேறு;

முதலாவது ஒரேதடவை பேதிப்பதுடன் மயக்கத்தைக்கொடுத்துப் படுக்கையிற்றாழ்த்திவிடுவது.

௨-வது. சுத்தசலம்போல் அடிக்கடி பேதித்துக்கொண்டிருந்து வயிற்றைப்புரட்டி வாந்திசெய்து சயித்தியத்தைக்கொடுப்பது.

௩-வது அஜீரண பேதிபோற்றோன்றி வயிறுபொருமி மெல்லமெல்லத் துர்க்குணங்களை வெளிவிடுவது.

தாகம்-மயக்கம்-குளிர்ச்சி-இசிவு-அதிகசுவாசம்-காதடைப்புதொனிவேற்றுமை-ஈரல்வலி-வியர்வை- நகங்கறுத்தல் - நாடியடங்கல்-கண்குழிதல்-கன்னஞ்சுருங்கல்- நீரைத்தூக்கல்- முதலியன அம்மூன்றின் பொதுக்குணங்களா யிருக்கின்றன சிலருக்கு வாந்தியிராந்தியிற் கிருமிகள் விழுதலுமுண்டு.

நிவர்த்தி.

எட்டாங்காய்ச்சல் வெடியுப்பை அயற்சட்டியிலிட்டு அடுப்பேற்றியுருகும்போது அதற்குநிகர் தலைப்பிள்ளை நஞ்சுக் கொடியைத்துண்டுதுண்டாய்த் தரித்து அதி லொவ்வொருதுண்டாய்க் குளிரவைக்கச் சுண்ணமாகும் அந்தச்சுண்ணம் சுத்திசெய்தவீரம்-பூரம்-லிங்கம்-சூடன்-அபின்-சுக்கு-மிளகு-கஸ்தூரி-கஞ்சாவித்து - குங்குமப்பூ- வகைக்குக்கழஞ்சு (௧) இவைகளைக்கஞ்சாக்கியாழத்தில் இரண்டுசாமமுங்கொடுவேலி கியாழத்தில் நாலுசாமமும் ஊமத்தஞ்சாற்றில் இரண்டுசாமமு மரைத்து மிளகளவாயுண்டைசெய்து ஒருண்டையைச் சாராயத்திற்கொடுக்கக் கொம்பனென்னும் பேதியும் மஞ்சளைப்பொடித்துச் சுடுதண்ணீரிற்போட்டுத் தெளிவை யிறுத்துக்கொடுக்கக் குடற்படுவனும் மிளகைச்சிறுகவறுத்துக்கடைந்து தண்ணீர்விட்டு வைற்றவத்த கியாழத்திலிட அக்கரத்தின் கழிச்சலும் நீங்கும்,

மிளகு-சூடன்-சாதிக்காய்-கருவேலப்பிசின்-அபின்-ரசகர்ப்பூரம் நெல்லிவற்றல்- வெந்தயம் - கிராம்பு-பெருங்காயம் வகைக்குக்கழஞ்சு(௧) சடைக்கஞ்சாச்சாற்றாலாட்டிக் கடலைப்பிரமாண முருட்டி

யுலர்த்தி வேளையொன்றுக்கு ஒருண்டைவீதம் தேனிலாவது வஸ்து விலாவதுகொடுக்க அக்கரத்தின் கழிச்சலும்குடற்படுவனுந்தீரும்.

மிளகு-கடுக்காய்-ஓமம்-சுக்குக்-காயம்-வெள்ளுள்ளி- வெந்தயம்-சீரகம்-கருவேப்பிலைஇவைகளை யோர்நிறையாய் சங்கபழச் சாற்று லாட்டிப் பாக்களவாயுண்டைசெய்து மிளகுக்கியாழத்தில் மூன்று வேளைக்கொடுக்க இருவகைப்பேதியுந்தீரும்.

சுக்கு-குருசாணிஓமம்-சித்திரமூலம்-மிளகாய்-சாதிக்காய்சாதிப் பத்திரி-கிரும்பு-இருவெலிவேம்பின்பிசின்- ஆவாரம்பிசின்-விளாம் பிசின் வகைக்குக்கழஞ்சு(க)சுத்திசெய்தகஞ்சாபலம்(க)இவைகளை வெதுப்பிப்பொடித்துத் தேன்விட்டரைத்து சுண்டைக்காய்ப் பிர மாணம் உண்டைசெய்து கொடுக்கத்தீரும்.

வெங்காரம்-கர்ப்பூரசலாசத்து- பூலாக்கிழங்கு - சுக்கு-திப்பிலி- மாங்கொழுந்து - அத்திக்கொழுந்து வகைக்குவிராகனிடை ஐந்து கோரோசனை-அதிவிடையம்-கோஷ்டம் வகைக்குவிராகனிடை (உ) கிராம்பு விராகனிடை (க) மல்லி - நாவற்பட்டை-அரசம்பட்டை வகைக்கு விராகனிடை (ய) பொன்முசுட்டைவேர்பலம்(உ)இவை களைப்பொடித்துசுத்தசலத்தால் ஒருநாளாட்டி நெல்லிக்காய்ப் பிர மாணம் உண்டைசெய்துலர்த்தி மாட்டுக்கொம்பு சிமிளில்வைத்து க்கொண்டு ஒருதபா பேதியானவுடன் ஒருண்டையும் (உய) மின் கும் பொடித்துக்கொடுக்க நிற்கும்.

அதில்நில்லாவிட்டால் அரையுண்டையும் ஒருவிராகனிடை சூட னும்பொடித்துத் தேநில்மத்தித்துக் கொடுக்கநிற்கும், அதையும் மீறினால் ஒருண்டையைசாறுயற்றிலுரைத்துக் கொடுக்கநிற்கும் இ ந்தமாத்திரையினால் சலவைவாந்திகாணாது வயிற்றில் பொருமல்க ண்டால் சாரணைவேரும் ஓமமும் கியாழஞ்செய்து கொடுக்கவும்.

திருகடுகு-ஓமம்-வெள்ளைப்பூண்டு-பெருங்காயம் வகைக்கு விரா கனிடை ஐந்து காஞ்சிறைப்பட்டைவேர் விராகனிடை முப்பது இவைகளை எலுமிச்சம்பழச்சாற்றால் மூன்றுசாமமாட்டிக் கடலைப் பிரமாணம் உண்டைசெய்து குப்பைமேனியும் சேர்த்துச்செய்த கியாழத்தில் மூன்றுதபா கொடுக்கத்தீரும்.

வெள்ளைப்பூண்டுத் தயிலமும்தேனும் ஒன்றாய்க்கலந்து அதில்சு க்கு மிளகு வேப்பம்பூ பெருங்காயம் வசம்பு அலவகளை ஓர் நிறை

யாய் வெதுப்பிப்பொடித்ததுள் திரிகடுதூவி மத்தித்து அடிக்கடி கொடுக்கத்தீரும்.

சுக்கு மிளகு சீரகம் வகைக்குப்பலம் - க- திப்பிலிஓமம் குருசாணிஓமம் கசகசா சடாமாஞ்சில் ஏலம்கிராம்பு தாளிசபத்திரி மல்லிகாட்டாத்திப்பூ கூகைநீர் சமுத்தருப்பழம் மகரப்பூகர்க்கடகசிங்கி திரிபலைவாலுழுவையரிசி வெட்பாலையரிசி சாரப்பருப்பு அதிமதுரம் அக்கிராகாரம்-கோஷ்டம் வால்மிளகு - வாய்விளங்கம் -மாசக்காய் குங்குமப்பூ கோரோசனை-கஸ்தூரி - லவங்கப்பத்திரி - அதிவிடையம் - சிற்றரத்தை சிறுதேக்குசெவியம் - திப்பிலிமூலம்-மஞ்சிட்டிவகைக்குவிராகனிடை-ரு-குடன்விராகனிடை-உ-வெல்லம்பலம் சு-சுத்திசெய்த கஞ்சாபலம்-ச-இவைகளைவெதுப்பிப்பொடித்து வடிகட்டிதேன்படி-வ-விட்டுமெழுகுபோலனாத்துச் சிமிளில்வைத்துக்கொண்டு கொட்டைப்பாக்குப்பிரமாணம் -மூன்றுவேளைகொடுக்க-மூன்றுவகைப்பேதியுந்தீரும்.

மேற்படிகாட்டிய அவுழ்தங்களி லொன்றைக்கொடுத்து இதனடியிற்கண்டிருக்கிற கியாழத்தைஅடிக்கடி கொடுக்கவேணும்.

நாயுரிவிபுளியம்பட்டை - முருங்கைப்பட்டை மாவிலிங்கம்பட்டை-கொடுவேலிவேர்-சிவன்வேம்பின்வேர்-எருக்கம்பூ-தென்னம்பிஞ்சுவகைக்குப்பலம்-க இடித்து- நாலுபடிதண்ணீரிற்போட்டு-ஒருபடியாய்வற்றவைத்து - அடிக்கடிகொடுத்துக்கொண்டிருக்க - சன்னிரூட்சைதாகம் - வயிற்றுப்பொருமல் அணுகாது.

தேகத்தில் குளிர்ச்சிகண்டிருந்தால் - கர்ப்பூரத்தயிலத்தை தேகமெங்கும் அடிக்கடி பூசிக்கடுகுவெள்ளைப்பூண்டு கூடன்முருங்கப்பட்டை இவைகளைசாராயத்திலரைத்துப் பதைப்புள்ளதானம்கைகால்முதலான இடங்களிற்றடவிக்கம்பிளியாற்போர்க்கச்சூடுண்டாகும்.

அரிசியைப்பொரித்துக் கஞ்சிசெய்து கருவேப்பிலை மிளகுஉப்புஇவைகளைப்பொடித்துப் பத்தியங்கொடுக்கவும்.

ஊழிக்காற்றுப்படலம்- முற்றிற்று.

சிவமயம்.

மருந்துமுறிவுப்படலம்.

அதாவதுசகலவிதமானபாஷாணங்களுக்குமித்துருசொல்லுதலாம் மருந்துமுறிவு.

அவுரிவேர்பிரமியிலை மிளகு இவைகளையோர்நிறையாய்ச்சிதைத்துக் கியாழஞ்செய்து ஆறுவேளைக்கொடுக்கமருந்தின்வீறு தணியும்.

அறுகம்வேர்பலம்-௧-மிளகு-௫௰-இவைகளைச்சிதைத்து - இரண்டுபடிசலத்திற்போட்டுக்காற்படியாய்வற்றவைத்து வடிகட்டி-அதில் மாதுளம்பூ-அதிமதுரம்-கூகைநீர்வகைக்கு விராகனிடை-௧- அரைத்துக்கலக்கிக்கொட்டைப்பாக்குப்பிரமாணம் - ஆவின்வெண்ணெய் போட்டு மூன்றுநாள் கொடுக்கச்செந்தூரபற்பங்களின்வீறும் உஷ்ணமுந்தீரும்.

பருத்திக்காய்ச்சாறு எலுமிச்சம்பழச்சாறு-ஆவின்பால் இவைகளையோரளவாய்க் கலந்து அதில்சீனிகலந்து மூன்றுநாள்கொடுக்கப் பலசெந்தூரங்களின் வீறுதணியும்.

சுரைக்குடுக்கை சுட்டகரியை புளித்தமோரிற்கரைத்துமூன்றுநாள்கொடுக்க ரசவீறுதணியும்.

முருங்கையீர்க்குப்பலம்-௨-ஆவாரைவேர்ப்பட்டைபலம்-௧-ஈருள்ளிபலம்-௰-இவைகளைசிதைத்துக்கியாழஞ்செய்து -அந்திசந்திஐந்துநாள்கொள்ள மருந்துகளினாற்காணும்பேதி வயிற்றுக்கடுப்பு இரத்தக்கடுப்புநீங்கும்.

பாஷாணத்திற்கு மிளகுசிறுகீரை நீலி துளசிபாகலிலை கொடுப்பைகோவை பசலிவரண்டம் எலுமிச்சிலையையும் நாவிக்கு சிறுகீரையையும்- சிவதைக்குவெள்வேலம்பட்டையும் கள்ளிக்கு ஆவாரைவேரையும் மருதோன்றிக்குத் தான்றிக்காயையும் ஊமத்திற்குத்தாமரைக்கிழங்கையும் அலரிக்குகடுக்காயையும் சுண்ணாம்புக்கு மஞ்சளையும்பேய்ப்பீர்க்கு முத்தக்காசையும் எட்டிக்கு நாவற்கொழுந்தையும் அரைத்துவெந்நீரிற்கலக்கிக்கொடுத்தாலும் அல்லது கியாழஞ்செய்து கொடுத்தாலும் - முறிந்துமுறிந்து - அவைகளின்வீறுதணியும்.

அபினுக்கு ஆவினெய்யையும் -கழுதைவண்டுக்கு சங்கம்பழரசத்தையும் நெய்தேனுக்கு வெந்தகரியையும் எருக்கிலைக்கு எள்ளும் சருக்கரையையும் - குண்டுமணிக்குப் பொரித்தவெங்காரத்தையும் வெற்றிலையையரைத்து நல்லெண்ணெயிற்கலந்து குடித்தவர்களுக்குத்தேங்காய்ப்பாலையையும் கஞ்சாவுக்கு ஈருள்ளிரசத்தையும் கள்ளிப்பாலுக்கு வாழைப்பட்டைரசத்தையும் எருக்கம்பாலுக்குஆவின்மோரையும் கருவேற்பட்டைக் கியாழத்தையுங்கொடுக்க அவைகளின்வீறுதணியும்,

சேங்கொட்டைக்குப் பூவரசம்பட்டைரசம் அல்லதுபுளியிலையின்ரசம் அல்லதுநல்லெண்ணெயிற் - பழம்புளியைக் கரைத்து உள்ளுக்குக்கொடுத்து தான்றிக்காயும் புளியிலையும் மோர்விறையாயரைத்து உடம்பிற்பூச அதன்வீறுதணியும்.

பாஷாணம்தின்றவர்களுக்கு மிளகை - யரைத்து எருமை வெண்ணெயில்மத்தித்து உள்ளுக்குக் கொடுத்து - எருமைத்தயிரிற் சந்தனத்தைக்கரைத்து உடம்பிற்பூசவீறுதணியும்.

வீரத்திற்கும் ரசபற்பத்திற்கும் பனிரண்டு கோழிமுட்டைவெள்ளைக்கருவைத் தண்ணீரிற்கலந்து அடிக்கடி கொடுத்துக்கொண்டிருக்க அவைகளின்வீறுதணியும்,

அவுரிக்கும் முற்றினசாரடைசமூலத்திற்கும் சகலநஞ்சு வஸ்துக்களின்வீறுஅடங்கும்.

பலரோகநிவாரணம்.

சிரத்துப்புழுவெட்டு முதலானவைகளினுல்மயிருதிர்ந்தால்

ஆனைத்தந்தத்தைச்சுட்டுப் பொடித்துத்தேனில் மத்தித்துஎட்டு நாள்பூசிவைத்தால் புழுவெட்டுநீங்கி மயிர்முளைக்கும்.

மா-எலுமிச்சுநாரத்து கொழுஞ்சுமாதுளைவிளா இவைகளின்வித்துப்பருப்புகளை ஓர்நிறையாய் - ஆவின்பாலிலரைத்துக்கொதிக்கவைத்து ஒருமண்டலம்வரைகாலையிற் சிரசிற்றேய்த்துமாலையில் ஸ்நானஞ்செய்து வரதலைமயிர்கழிதல்மாறும்.

நெஞ்சுத்தடுமனுக்கு.

காற்படிஆவின்பாலில் முசுமுசுக்கைவேர் விராகனிடை (௧)மூக்காவளைவேர்விராகனிடை(௨) தட்டிப்போட்டுக்காய்ச்சிச் சாப்பிட நீங்கும்.

சாதஞ்செரியாமற் சோறுசோறாய் மலங்கழிந்தால்.

ஒருபிடிபிரண்டைத்தண்டைச் சிறுகநறுக்கிக்கஷாயமிட்டுஇரண்டுவிராகனிடை ஓமத்தைக்கூடப்போட்டுப் பொரியும்போது ஒருபடிதண்ணீர்விட்டு அரைக்காற்படியாக வற்றவைத்துக்கொடுக்கத்தீரும்.

அரைவீட்டில்வயிற்றிற்சீய்க்கட்டிவரட்சிதோஷங்கண்டால்.

திரிகடுகுஅக்கிராகாரம் அதிமதுரம் நற்சீரகம் சாதிக்காய்சாதிப்பத்திரிகிராம்பு மாசக்காய் வகைக்குவிராகனிடை(உ)இவைகளைவெதுப்பிகஸ்தூரி விராகனிடை(வ)கோரோஜனைவிராகனிடை(ம)கூடப்போட்டுத்தேனில்மத்தித்துச் சிறுகழற்காய்ப்பிரமாணம் உள்ளுக்குக்கொடுத்து நாலுநாழிகைக்குப்பின்பு முற்றினவேப்பம்பட்டை பலம்(க)மஞ்சள்பலம் ௨)இடித்து இரண்டுபடிதண்ணீர்விட்டுஅரைக்காற் படியாய்வற்றவைத்து இந்தப்படி ஐந்துநாள்கொடுக்கச்சீய்க்கட்டு நாவரட்சிதோஷிமுதலான குற்றங்கள்நீங்கும்.

தலைப்பேனுக்குமாரணம்.

இரதத்தைகருஊமத்தைச்சாற்றினாலாவது மேனிச்சாற்றினாலாவது அரைத்துப்பழந் துணியிலாவது நூலிலாவது . தடவிதிழலிலுலர்த்திசிரசிற்சுத்திவைக்க மூன்று சாமத்திற்குள் பேனெல்லாம்உதிர்ந்துபோகும்.

மேகப்புண்முதலானரணங்களுக்குத்தயிலம்.

சங்கம்வேர் பூவரசம்பட்டை சிவன்வேம்பு வாலுளுவையரிசி இவைகளைஓர்நிறையாய்க் குழித்தயிலமிறக்கி உள்ளுக்குக்கொடுத்துஉடம்பிலும்பூச மேகத்திற்பிறந்த சகலபுண்புரைகள்ஆறும்.

நாக்கிலும்உதட்டிலு முண்டாகுபுண்ணுக்கு.

ஆவின்பால் சிற்றாமணக்கெண்ணெய் வகைக்குப்படி (ம)கலந்ததில்வெந்தயம் வெங்காயம் மயிர்மாணிக்கமூலிவகைக்குப்பலம்(ச)அரைத்துப்போட்டுக்காய்ச்சி வடித்துக் காலையில் ஒருகரண்டிவீதஞ்சாப்பிட்டுவர மூலச்சூடுதணிந்து புண்ஆறும்.

எச்சிற்றழும்புபடர்தாமரைதளுவணைக்குப் பற்று

புரசம்விரையை எலுமிச்சம்பழச்சாற்றி லரைத்துப்போடக்கொப்பளித்துநீராய்வடித்துமாறிப்போகும்.

எருக்கம்வேர்ப்பட்டையையும் தகரவிரையையும் யெலுமிச்சம்பழச்சாற்றிலரைத்துப்பூசிவர மாறும்,

மருந்துப்படலம்-முற்றிற்று.

௨

கடவுள் துணை.

பிளாஸ்திரிப்படலம்.

அதாவது சகலரணங்களையாற்றுதலாம்.

௰-திக்களபிரயோகக்கலாம்.

வெள்ளைக்குங்கிலியத்தையும் வெள்ளைமெழுகையும் ஓர் நிறையாய்ச் சட்டியிலிட்டு உருகும்போது தேங்காயெண்ணெய்வார்த்து உருக்கித் தண்ணீரில் வடிகட்டி எடுத்து வைத்துக்கொண்டு துணியிற்பூசி அனலில் வாட்டிப்போட ரணங்கள் சிரங்கு புண் தீரும்.

வெள்ளைக்குங்கிலியம்-பலம்-௫, ரசகர்ப்பூரம் விராகனிடை-௫, தேங்காயெண்ணெய்விட்டு அரைத்து அப்பால் தண்ணீர்விட்டு கவளம்போலாகும்வரை குழவியாலமத்தித்துப் புண்ணிற்போட ஆறும்.

ரசம்-விராகனிடை-௧, கெந்தகம் விராகனிடை-௧, மிருதார்சிங்கி இந்திரகம் வகைக்கு விராகனிடை-௨, கருஞ்சீரகம் விராகனிடை-௧, துத்தம் விராகனிடை-௨, இவைகளை வெண்ணெயில் மெழுகுபோலாட்டிச் சிரங்கிற்பூச ஆறும்.

நல்லெண்ணெயும் மெழுகும் உருக்கி அதில் வங்கசெந்தூரம் விராகனிடை-௩, காவிக்கல் மிருதார்சிங்கி மிளகு வகைக்கு விராகனிடை-௧, துத்தம் விராகனிடை-௨, இவைகளைப்பொடித்துத் தனியே போட்டுக்கிண்டி எடுத்துக்கொண்டு சீலையிற்தடவிப்போட சகலரணமும் நெருப்புப்பட்ட புண்ணும் ஆறும்.

தேங்காயெண்ணெயும் வெள்ளைமெழுகையும் சேர்த்துருக்கியதில் ரசகர்ப்பூரம்-துருசு-மிருதார்சிங்கி-சமமாய்ப் பொடித்துத் தூவிக்கிண்டியெடுத்துப்போடத் தீராத சிரங்குந் தீரும்.

நல்லெண்ணெயில்-௰௨-விராகனிடை தேன் மெழுகைப்போட்டு உருக்கியதில் வெள்ளைக்குங்கிலியம் விராகனிடை-௧, மிருதார்சிங்கி விராகனிடை-௧௰, துருசு-விராகனிடை-௨, இவைகளை வெவ்வேறேபொடித்துத் தூவிக்கிண்டிக் கல்வத்திட்டு தண்ணீர்விட்டரைத்து காலாறுதபாகழுவிச் சிமிழில்வைத்துக்கொண்டு துணியிற்தடவிப்போட சகல புண்ணும் ஆறும்.

எருக்கம்வேர்ப்பட்டை-அவுரிவேர்ப்பட்டை-வெண்தோன்றிக்கிழங்கு-குன்றிமணிப்பருப்பு-காஞ்சிரைவிரை-தலைச்சுருளிவேர்-கஞ்சாயிலை-வசம்பு-பெருங்காயம்-இவைகளை-ஓர்-நிறையாய் வெள்ளுள்ளித்தயிலத்தாற்களிம்புபோலாட்டிச் சிமிழில்வைத்துக்கொண்டுபூச கண்டமாலை-பவுத்திரம்-விப்புருதி-வீக்கம்-புடைப்பு-தொடைவாளை-அரையாப்பு முதலியனவற்றும் உடையும்.

வேப்பெண்ணெயில்-உள்ளி-வேம்பாடம்பட்டை-துத்தம்-கெந்தகம்-சூதம்-காலக்கட்டி-துருசு-நாவிக்கிழங்கு-குங்கிலியம்-குக்கில்-மிருதார்சிங்கி-தாரம்-இவைகளைப்பொடித்துப்போட்டுக் காய்ச்சி மேற்படி ரணங்களிற்தடவ ஆறும்.

அக்கிக்கு.

ஊமத்திலையை அரைத்து எருமைவெண்ணெயிற் குழைத்து அக்கியேற் பூசிவர மாறும்,

காதுவளர,

நிலப்பனைக்கிழங்கு-அமுக்கராக்கிழங்கு-ஆனைத்திப்பிலி-செங்கழுநீர்க்கிழங்கு-இவைகளை ஓர் நிறையாய் எருமைவெண்ணெயிற்களிம்புபோலரைத்து காதிற்றடவிவர காது நன்றாய் வளரும்,

மயிர்க்கூருக்கு,

மயிலைக்கரிக்கி எருமைவெண்ணெயிற்குழைத்துப்போட்டாலும் பசலியிலையரைத்துஎருமைவெண்ணெயிற் குழைத்துப்போட்டாலும் பஞ்சளைச்சுட்டு நல்லெண்ணெயிலுரைத்துப்போட்டாலும்நீங்கும்.

தீச்சுட்டபுண்ணுக்கு,

சுண்ணாம்பும் எருக்கன்பூவும்-ஓர்-நிறையாயரைத்துப் பூசதீச்சுட்டகாந்தல்நீங்கும், திருவாத்தியிலையை வறுத்துப் பொடித்துப் புண்ணிற்போட ஆறும், ஒருசட்டியில் நீர் புளித்தண்ணீர்விட்டு வேடுகட்டி திருவாத்தியிலையை யிடித்து அதன்மேல வைத்துப் பிட்டவித்துப் புண்ணில்வைத்துக் கட்டத்தீரும்,

வேப்பங்கொழுந்தைச் சிதைத்து ஆமணக்கிலையிற்பொதிந்து உமிக்காந்தலிற்புதைத்து வெதுப்பத்திலெடுத்துக் கட்டிவரத்தீச்சுட்டபுண்ணு நீங்கும்,

நரம்புச்சிலந்திக்கு,

மிளகு-அவுரிவேர்ப்பட்டை-அதன்இலை-வகைக்குப்பலம்-கறுபெருங்காயம்-விராகனிடை-க. இவைகளையரைத்துப் புளியங்கொட்டைப்பிரமாணம் ஆறுநாளந்திசந்தி உள்ளுக்குக்கொடுத்து ஒரு உண்டையையுரைத்து நரம்புசிலந்தியின்பேரிற் போட்டுகாலையில் வெந்நீர்விட்டுக்கழுவி வரநீங்கும் சுபத்தியம்,

பித்தவெடிப்புக்கு,

உப்பு-செம்மரிச்சாணி-அரசம்பட்டை-வகைக்குப்பலம்-க, எருக்கம்பூபலம்-உ, இவைகளையிடித்து வடித்துத் துணியில்முடிந்துலைத்தணஞ்செய்து சிரகம்-விராகனிடை-க, சுண்ணாம்பு விராகனிடை-உ, துருசுவிராகனிடை-ரு. இவைகளை எருமைவெண்ணெயிற் களிம்புபோலரைத்து வெடிப்பிற்போட்டுவர நீங்கும்,

மருதிலையில் ஆவின்பால்விட்டிடித்துப் பிழிந்தசாறு காற்படிவீதம்மூன்றுநாள்காலையிலகொடுத்து பத்தியம் பாலும்அன்னமுங்கொடுத்து ஏழுநாள் தலைகுத்தண்ணீர்வார்க்கத்தீரும்,

கணைவீக்கத்திற்கு,

சிற்றகத்தியிலையும்-வசம்பும்-அரிசியும்-ஓர்-நிறையா யரைத்துப் பூசினாலும்-அமுக்கராவேரும்-அரிசியும் ஓர் நிறையாயரைத்துப் பூசினாலும் வற்றும்,

கருவங்கு-பருப்பிவைனுக்கு,

புழுங்கலரிசியுப்-காசொள்ளும-சமன்சேர்த்து வெள்ளாட்டுப் பாலலரைத்து கருவங்கிறப்பூசிவர மாறும்,

சங்கு-எலுமிச்சு-வெற்றிலே-பெருங்காயம்-இவைகளைச்- சிதைத்துப்பிழிந்தசாற்றைக்-காதிலும்-நாசியிலும்பிழிந்து-உச்சியிலுந்தேய்க்கமண்டைப்பருநீங்கும், முகத்திற்காணும் பருவின்மேல் மேற்படிசாற்றைத்தடவினுலும் அகத்தியிலேயைக் கசக்கிப்பிழிந்தசாற்றையாவது திருநீற்றுப்பச்சையின் சாற்றையாவது வஞ்சி னூட்டிப்போட்டாலும புனுகைமேற்படி சாற்றிலமைத்திததுப்போட்டாலும் நீங்கும்,அவுரிவெப்பாலேகொடுவேலி இவைகளின்வேர்ப்பட்டைகளை ஆவின்பாலாலரைத்துக்கலக்கி உள்ளுக்குக்கொடுத்து மேலிலும்பூச சகலவித பருப்படுவனும்நீங்கும்,

குத்து-வெட்டு-விஸ்லுண்டை-கல்லெறி காயத்திற்கு,

எலுமிச்சம்பழத்தை யிரண்டாய்நறுக்கிச் சட்டியிலிட்டு கல்லெண்ணெய்கொஞ்சம்விட்டு முறுகக்காய்ச்சியெடுத்துத் துணியில்வைத்துமூன்றுநா ளொத்தனஞ்செய்து அப்பால் நூடரி-முட்பூலா-நிலக்குமிழ்- ஆவாரை-சிறுகளா-கத்தைச்சூரி-நாயுருவி-இவைகளின்-வேர்ப்பட்டை வேம்பாடம்பட்டை இலந்தைத் தம்பலம-கடுக்காய்- கோஷ்டம்அதிமதுரம செவ்வல்லிக்கொடி-கரியபவளம-குங்கிலியம்- கரியுப்புசதகுப்பை-சிறுவழுதலே-முள்ளி இலவங்கம் இவைகளை யோர் நிறையாய்நல்லெண்ணெயிலிட்டுக் களிமபுபோலரைத்துப்போட்டாலும்மேற்படி எண்ணெய்மகாய்ச்சிவடித்துப் போட்டாலும் நீங்கும்,

பிளாஸ்திரிப்படலம் - முற்றிற்று.

முப்புப் படலம்.

அதாவது- சகலவித அவிஷதங்களுக்கும் குருபற்ப மென்றுஞ்சொல்லப்படுகலசம்.

ஸ்ரீ-மாசி-பங்குனி- மாதமூன்றில்-விளைகின்றகாரமான பூநீரைப்பிடித்துவிசை சுத்தசலத்திற்கரைத்தது தெளிவிறுத்து ரவியிற் காயவைக்கச்சுத்தியாகும், அதுபோற்கரியுப்பும் சுத்தமாகும்அமுரியில்பூநீரைக்கரைத்துஅதில் பாறையுப்பைப் பாக்களவாயுடைத்துப்போட்டுக்காய்ச்சிவற்றவைத்து சுத்தசலத்திற்கழுவி யுலர்த்திக் கல்வத்திலிட்டு அண்டவெள்ளைக்கருவால மெழுகுபோலாட்டி அட்டிகை வில்லேத்தட்டிக்காயவைத்து ஒட்டிவிட்டு மேலோடுமூடி எழுசிலேசெய்து உலையில்வைத்தூதச் சுண்ணமாகும், அதைப்பிங்காணிலிட்டுச் சுத்தசலம்விட்டுமண்டலம்வைத்தெடுக்க உப்புவிளைந்திருக்கும் இந்தமூன்றுவகைப்புப்புச்ஞ்சகர்ப்பூரம் வகைக்குப்பலம்௧,இவைகளை வெண்கருவால்லு

ரண்டுசாமமாட்டி வில்லைசெய்துகாயவைத்து ஒட்டிலிட்டு மூடிஎழுசீ
லைசெய்து ஐம்பதெரிவிற்புடம்போட்டு அதில்-வீரம்-பூரம்-புனுகு-கு
ங்குமப்பூ-நாவி- வகைக்குக்கழஞ்சு-க, சேர்த்து எலுமிச்சம்பழச்சாற
ற்றால்இரண்டுசாமமாட்டி-வில்லைசெய்துகாயவைத்துஒட்டிலிட்டுமூடிஎழு
சீலைசெய்துகோழிப்புடம்போட்டெடுத்துக்கொண்டுஅதில்கழஞ்சுவெ
ள்ளங்காயத்திற்பூசி அதற்குஅநந்தரத்தாமரையையரைத்து அங்கிபூட்டிப்
புடம்போடச் சுண்ணமாகும் அதினாற சகலரோகங்களும் தீரும்,

இங்கிச்சுண்ணம்,

நாலுபடி அமுரியில் ஒருபடி பூநீறைக்கரைத்துவைத்து நாலுநா
ள்தோறும்படி தெளிவிறுத்துப் பிங்கானில்விட்டதில்-வீரம்-சாரம் சீனம்-
வகைக்குப் பலம்-க, மிருதார்சிங்கிபலம்-உ, முப்புச்சுண்ணம்-கழஞ்
சு-க, இவைகளை மயனமாய்ப்பொடித்துப்போட்டு அயக்காம்பாற்கண
டிராவிபிலவைக்க நீரெல்லாம்வற்றும் அதின்மேலில் ஒருபட்சம் ரவியி
ல்வைக்கமுத்துப்போற் பிங்கானில்விளையும் அப்படிவிளைவதையெல்
லாம்வழித்துப் பிங்கானிலிட்டு ரவியிலவைக்கச் சுத்தவெள்ளையாய்
நீற்ச்சுண்ணமாகும், இதினாற்சகலரோகங்களும் சினச்சாரக்கறுபத்து
நாலும் தீரும்,

லோகமாரணம்,

பாஷாணம்-நவாச்சாரம்-சீனம்-வீரம்-பூரம்புனுகு-வெடியுப்பு கா
ரம்-சூதம்-கெந்தி-துருசு-சுண்ணம்-இவைகளையோர்நிறையாம் எலுமி
ச்சம்பழச்சாற்றால் மெழுகுபோலாட்டி நவலோகத்தகட்டில் இடைக்கி
டைமருந்தைப்பூசி அவைகட்குரிய மூலியையரைத்துஅங்கிபூட்டி ஒ
ட்டிலிட்டுமூடிச் சீலைசெய்து கெஜபுடம்போட நீறும்,

எரிப்புத்திட்டம்,

இரண்டுவிராற்கனவிற்கு-க, தீபம்-விறகு-ரு, கமலம்விறகு-ச, அ
ல்லது-ரு, காடாக்கினியாம்,

புடத்திட்டம்,

ஒருபலங்கொண்ட காட்டெரு-க, அல்லது-உ, காடையெருமூன்
றுகவுதாரியெரு ௰, குக்குடம எரு-௰௰, வாரகமஎரு-௱, கெசமஎரு-ஆ
யிரம் கஜபுடம்,

ஊதுதத்திட்டம்,

சுண்ணத்திற்குத் துருத்தி-க, உருக்கினதிற்குத்துருத்தி உ, சத்
துக்குத்துருத்தி-ச,

குன்றிமடி என்பது - மூன்றுவிரற்கடைப்பிரமாணம்
கழஞ்சி என்பது - கவ, விராகனிடை
கழற்சிக்காய்என்பது- கெச்சைக்காய்ப்பிரமாணம்
துலாம் என்பது - ரூபா எடை,

ஆத்மரக்ஷாமிர்தமென்னும்

வயித்தியசாரசங்கிரகம்.

முற்றிற்று,